# சடத்தலம்

(வீர சைவ தத்துவம்)


பதிப்பாசிரியர்

மு. கருணாநிதி



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சி.ஐ.டி. வளாகம் தரமணி

சென்னை - 600 113.

# சடத்தலம்

(வீர சைவ தத்துவம்)

பதிப்பாசிரியர்

மு. கருணாநிதி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | | Sadathalam |
| Edit | : | M. Karunanidhi |
| Publisher & copy right | : | International Institute of Tamil Studies, CIT Campus, Taramani, Madras-600 113. |
| Publication No. | : | 252 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | 1996 |
| Edition | : | First |
| Paper used | : | Tamilnadu 60 GSM wight printing |
| Size of book | : | 22 x 15 cm. |
| Printing types used | : | 10, 12 pts. |
| No.of copies | : | 1,000 |
| No.of pages | : | 176 |
| Price | : | Rs.40/- |
| Printers | : | **Shri Vignesh Prints** Madras-600 033. ✆ 484 84 86 |
| Subject | : | Religion - Veera Saivam |

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ,
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-600 113.

# அணிந்துரை

பேரறிஞர் அண்ணா அவர்களின் பெருமுயற்சியால் உருவாக்கப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1979 முதல் சுவடியியல் பட்டய வகுப்புகளை நடத்தி வருகிறது. ஆண்டுதோறும் சுவடியியல் பிரிவில் முதுகலைப் பட்டய வகுப்பில் பயிற்சி பெறும் மாணவர்கள் தேர்வு எழுதுவதோடு பதிப்பாய்வேடு ஒன்றினையும் வழங்கி வருகின்றனர். அவ்வடிப்படையில் மு. கருணாநிதி அவர்களால் வழங்கப்பட்ட வீர சைவ சமயத்தைச் சேர்ந்த சடத்தலம் என்ற பதிப்பாய்வேடு நூலாக வெளிவருவதை எண்ணி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பெருமகிழ்வு எய்துகிறது.

பக்தி மொழி எனப் போற்றப்பெறும் வகையில் செறிவுடைய பல பக்தி இலக்கியங்களைக் கொண்டது தமிழ்மொழி. சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறித்துவம், இசுலாமியம் போன்ற சமயங்களைச் சேர்ந்த பல இலக்கியச் செல்வங்கள் இதனுள் பொதிந்து கிடக்கின்றன. இவற்றுள் சைவஞ் சார்ந்த நூல்களும் பல. இதன் ஒரு பிரிவாக அமைவது வீர.சைவம். சைவ சமயத்தின் தத்துவங்கள் சாதீய பிரிவுகளையும் வருணாசிரம ஏற்ற தாழ்வுகளையும் கண்டிக்கும் நோக்குடையதாகத் திகழ்ந்து இருப்பதைக் காண்கிறோம்.

"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்"

என்று திருநாவுக்கரசரும்

"சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத்தாட் கொண்டு

பேதைகுணம் பிறர் உருவம் யான் எனது
என்னுயிரை மாய்த்துக்
கோதில் அமுதானானைக் குலாவு தில்லைகண்டேனே''

என்று மாணிக்கவாசகரும் பாடும் பாடல்கள் இதனை வெளிப்படுத்துகின்றன. ஆயின் வீர சைவம் சார்ந்த இலக்கியங்கள் தீவிரமான சிவ பக்தியைக் கொண்டு அமைவன என்ற எண்ணத்தை இந்த ஆய்வு தருகிறது.

இந்நூல் பரம இரகசிய சடத்தலம், இரேவண சித்தய வீராகம சடத்தலம் ஆகிய இருபிரிவாக அமைந்துள்ளது.

இந்நூலினுள் வீரசைவம் தொடர்பான கோட்பாடுகள் பல பொதிந்து கிடக்கின்றன. சிவனை யன்றிப் பிற தெய்வங்களை வணங்குதல் பாவம் என்பன போன்ற கோட்பாடுகளைக் கொண்ட பாடல்களை இதனுள் காண முடிகிறது.

''பல்லுயிர் செருக்க லாகாப் பரமனே யல்லால் வேறு
புல்லிய தெய்வந் தன்னைப் போதவே தோத்தி ரங்கள்
சொல்லியே பரவா லாகா துணிந்திவை செய்யில் மாதே
அல்பயி லான்பாவத் தழுந்துவன் பத்த னன்றே (*109*)

குருவின் எச்சிலை உண்டவன் கோடி இலிங்கத்திற்கு அர்ச்சித்த பயனைப் பெறுவான் என்ற பொருளில் அமைந்த பாடல் காணப்படுகிறது.

''சங்கமர் வாயி னாலுஞ் சற்குரு வாயி னாலும்
பொங்கவே எடுத்த வந்தப் பொலிவுடைப் பிரசா தத்தைத்
தங்கிடா துகந்து கொண்டோன் றான்பிர சாதி யாவோன்
அங்கையாற் கோடி லிங்க மற்சித்த பலனே யாகும்'' (129)

குருவின் பாதத்தைக் கழுவிய நீரை விருப்போடு அருந்துபவன் எண்ணிய எண்ணம் நிறைவேறும் என்ற பொருளில் அமைந்த பாடல் காணப்படுகிறது.

''அந்தநற் சங்க மத்தி னருடரும் பாத தீர்த்தம்
பந்தமில் பிரசா தந்தான் பரிவுடனி லிங்கத் துக்கு
நந்தமா ரவிடே கம்நை வேத்திய மாகு முன்யாஞ்
சிந்தையால் நவின்றோ மென்று சேலெனும் விழியி னாளே.''
(130)

இத்தகைய பாடல்கள் மூட நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன என்றாலும் அவர்தம் கொள்கையை அறிந்து கொள்ளும் வகையில் அமைந்திருத்தல் சமய ஆய்வுகளுக்குத் துணை புரிவதாக உள்ளது.

அரிய நூல்களை வெளியிடும் திட்டத்தில் தமிழ் வளர்ச்சி இயக்ககம் இந்நூலை வெளியிட நிதி உதவி வழங்கி உள்ளது. நூல் வெளியிட நிதி வழங்கிய தமிழ் வளர்ச்சி இயக்ககம் இயக்குநர் பொறுப்பு பன்னீர்செல்வம் அவர்களுக்கும், நிறுவன செயல்பாடுகளுக்குத் தொடர்ந்து ஆக்கமும் ஊக்கமும் வழங்கி வருகின்ற தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறைச் செயலாளர் வை. பழனிச்சாமி, இ.ஆ.ப., அவர்களுக்கும், நிறுவன வளர்ச்சியில் பெரிதும் ஈடுபாடு கொண்டு திகழும் தமிழ் ஆட்சிமொழி — பண்பாட்டுத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும் நன்றி.

நூலினைக் கவினுற அச்சிட்டு வழங்கிய ஸ்ரீ விக்னேஷ் அச்சகத்தாருக்கும், நூலின் அச்சுப் பிழைகளைத் திருத்தம் செய்த ம. வெண்ணிலா அவர்களுக்கும் நன்றி.

**இயக்குநர்**

# பொருளடக்கம்


| இயல் | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | பதிப்புரை | 7-12 |
| 2. | ஆய்வுரை | 13-51 |
| 3. | நூலும் நுவலும் பொருளும் | 52 |
| | 1. பரம இரகசிய சடத்தலம் | 53-95 |
| | 2. வீராகம சடத்தலம் | 96-142 |
| துணைநூற்பட்டியல் | | 143-145 |

**இணைப்புகள்**

| | | |
| --- | --- | --- |
| 1. | பாடல் முதற்குறிப்பகராதி | 146-149 |
| 2. | சொற்பொருளகராதி | 150-162 |
| 3. | அட்டவணைகள் | 163-171 |
| 4. | பத்தி நெறியில் ஆறு (6) | 172-175 |

# இயல் 1. பதிப்புரை

## 1: 0. முன்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1979இல் சுவடியியல் துறையைத் தோற்றுவித்து முதுகலைச் சுவடி இயல் பட்டய வகுப்பினைத் தொடங்கியது. "தமிழ்ச் சுவடிகள் தமிழரின் பல்துறை அறிவினையும் தம்மகத்துப் பெற்றவையாகும்."[1] உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சுவடி நூலக அறையில் சுவடிகளில் இருக்கும் தமிழரின் பலதுறை அறிவினைப் பலருக்கும் அறியச் செய்வதே சுவடிப் பிரிவின் நோக்கமாகும். அந்நோக்கத்தின் பொருட்டு 'சடத்தலம்' என்னும் தலைப்பில் வீர சைவ சமயத்தின் இரு நூல்கள் பதிப்பு நூலாக மலர்கின்றன.

## 1: 1. சுவடி பற்றிய செய்தி

சடத்தலம் என்ற இச்சுவடி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சுவடி நூலகத்தில் இருந்து ஆய்விற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது. சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலும் இந்நூல் தாள்சுவடியாக இருக்கின்றது. உ.வே. சாமிநாதையர் நூலகத்தில் இந்நூலுக்கான சுவடி இல்லை என்பது அந்நூலகத்திற்கு நேரில் சென்று பார்க்கும்போது அறியப்பட்டது. நிறுவனச் சுவடி நூலகத்திலேயே 'பரம இரகசிய சடத்தலம்' என நூலிற்கு வேறொரு சுவடியும் கிடைத்தது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## 1: 2. சுவடி அமைப்பு

ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்ட சுவடியின் நீளம் 18 செ.மீ. அகலம் 2.5 செ.மீ. அளவில் உள்ளது. சுவடியின் இரு பக்கங்களிலும் இரு சட்டங்கள் பொருத்தப்பட்டு நாடாவினால் நன்றாகக் கட்டப்பட்டிருக்கிறது. இந்நூல் 21ஆம் ஏட்டிலிருந்து 72ஆம் ஏடு வரையிலான 52 ஏடுகளில் உள்ளது. இந்நூலுக்கு முன்னர் 'சரஸ்வதி

---

1. சுவடிஇயல், ப. 17

நாமம்' என்ற பெயரில் ஒரு நூலும், பின்னர் 'சொருபானந்த உபநிடதம்' என்ற ஒரு நூலும் உள்ளன. நிறுவனச் சுவடி நூலகத்தின் அறையிலேயே பரம இரகசிய சடத்தலத்திற்குக் கிடைத்த வேறொரு சுவடி 31 செ.மீ. நீளமும், 4.2 செ.மீ. அகலமும் உடையதாக இருக்கிறது. இதை வேறொருவர் எழுதியதாகக் கையெழுத்தின் மூலம் அறிய முடிகிறது.

## 1: 3. மூல ஏடா? வழி ஏடா?

இந்த ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்ட சுவடி மூல ஏடு அல்ல. பிற சுவடியைப் பார்த்தோ, கூறக் கேட்டோ எழுதியதாக அறிய முடிகிறது. சுவடிக்கட்டில் உள்ள இவ்விரு நூல்கள் அல்லாத 'சரஸ்வதி நாமம்', 'சொருபானந்த உபநிடதம்' என்ற இரு நூல்களையும் சேர்த்து நான்கு நூல்களையும் ஒருவரே எழுதிடதாக அறியமுடிகிறது.

மேலும் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படும் நாலு, அஞ்சு ஆகியன இதில் காணப்படுகின்றன. 'ஆக நாலுக்குஞ் செய்யுள்' என்று குறிப்பிட்டிருப்பதால் பிறர் கூற வேறொருவர் எழுதியதாகவும் கொள்ளலாம்.

அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகச் சுவடி பெரிதும் வடமொழி எழுத்துகளுடன் எழுதப்பட்டுள்ளது. ஆனால் இந்தச் சுவடியில் அதற்கு இணையான தமிழ் எழுத்துப் பொருந்த எழுதப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (உ.ம்) | இஷ்டலிங்கம் | - | இட்டலிங்கம் |
| | பக்தன் | - | பத்தன் |
| | சடஸ்தலம் | - | சடத்தலம் |

இதன் மூலம் தனித்தமிழில் மிகவும் ஈடுபாடு கொண்ட தமிழறிஞர் எழுதிய வழி ஏடே இச்சுவடி என்பது தெளிவாகிறது. இதுபோன்ற பல்வேறு காரணங்களினால் இந்த நூலின் சுவடி, வழி ஏடுதான் என்பது உறுதியாகிறது.

## 1: 4. எழுத்து வடிவம்

பொதுவாகச் சுவடிகளில் காணப்படுவது போலவே மெய்யெழுத்துகள் புள்ளியில்லாமலும், குறில், நெடில் வேறுபாடுகளை உணர்த்தாத ஒற்றைச் சுழி கொம்புகளும், காலுக்கும் ரகரத்திற்கும் வேறுபாடு அறியாத வகையிலும், எழுத்துகள் காணப்படுகின்றன. எழுத்துகள் தெளிவாக இருந்தாலும் ஒன்றோடு ஒன்று சேர்ந்து மிகவும் நெருக்கமாக எழுதப்பட்டு உள்ளதால் படி எடுக்கும்போது சிரமத்திற்கு உள்ளாக நேரிட்டது.

## 1: 5. பாடல் அமைப்பு

பாடல்கள் சீர் பிரிக்கப்படாமல் சேர்த்தே எழுதியிருந்தமையாலும், பாடலுக்கான சொற்கள் 16ஆம் நூற்றாண்டிற்குரியதாக இருந்தமையாலும் பாடல்கள் எழுதுவதில் சிரமங்கள் ஏற்பட்டன.

## 1: 6. நூலமைப்பு

'பரம இரகசிய சடத்தலம்', 'வீராகமசடத்தலம்' என்ற இரு நூல்களிலும் 203 பாடல்கள் உள்ளன. அதில் 74 பாடல்கள் பரம இரகசிய சடத்தலம் என்னும் நூலிற்கும் எஞ்சிய 129 பாடல்கள் வீராகம சடத்தலம் என்ற நூலிற்கும் உரியனவாகும்.

பரம இரகசிய சடத்தலம் என்ற நூலிற்கு ஒரு பாடலின் அடியிலோ அல்லது இரண்டு, மூன்று பாடல்களின் அடியிலோ அல்லது அதற்கு மேற்பட்ட பாடல்களின் அடியிலோ மையக் கருத்தை விளக்கும் வகையில் குறிப்புகள் உள்ளன.

உ-ம் : 'இவை மூன்று திருவிருத்தமும் பஞ்சானனத்தின் விருத்தியும் பூசையும் நிறமும், திசையும் உணர்த்தியது'. (பாடல்.11)

வீராகம சடத்தலத்தில் பத்தன், மகேசுரன், பிரசாதி, பிராண லிங்கி, சரணன், அயிக்கியன் முதலான அங்கங்களின் நிலைகள் விதிகளாக விளக்கப்படுகின்றன. ஒவ்வொரு நிலைக்கும் கீழே மொத்தப் பாக்களும் கூட்டிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

(உ-ம்) 'பத்தன் விதி முற்றும். ஆக விதி
மூன்றுக்கும செய்யுள் 37'

இரு நூல்களிலும் விநாயகர் துதி, குரு மரபு, குரு துதி, நூல் மரபு, அவையடக்கம் என முதலில் பாடல்கள் அமைக்கப்பட்டுப் பின்னரே நூல் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

## 1: 7. நூல் ஆசிரியர்

நூலின் ஆசிரியர் இரேவணசித்தர் என ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டது. அவருடைய வரலாறு விரிவாக 'ஆசிரியர் வரலாறு' என்னும் தனித் தலைப்பின் கீழ் ஆய்வுரையில் விளக்கப்பட்டுள்ளது.

## 1: 8. சுவடியின் காலம்

நூல் ஆசிரியரான இரேவண சித்தரின் காலம் 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். மேலும் இந்தச் சுவடி, வழி ஏடு ஆதலால் 16ஆம்

நூற்றாண்டிற்குப் பின்னரே எழுதப்பட்டிருக்க வேண்டும். இந்தச் சுவடியை எழுதியவர் வடமொழி எழுத்துகளைத் தமிழ் எழுத்தில் எழுதியுள்ளமையால் வடமொழி எதிர்ப்புத் தோன்றிய காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் என யூகிக்க முடிகிறது.

## 1: 9. எழுத்துகளைப் பிரித்து அமைத்தல் - மாற்றம்

மொழிக்கு முதலாவதாக வராத ட, ண, ய, ர, ல, ள, ற முதலான எழுத்துகள் அவற்றிற்கு இயைந்த உயிரெழுத்துகள் பாடலின் முதலில் பிரித்து அமைக்கப்பட்டுள்ளன.

(உ-ம்) **மாசிலதோ முகத்தினிதா யிவ்வா றீச**
**னானனத்தி னறுசமைய மமருந் தானே**

(பாடல். 13)

என்று சுவடியில் இருந்தது.

ஆய்வேட்டில்,

**மாசிலதோ முகத்தினிதா யிவ்வா றீசன்**
**ஆனனத்தி னறுசமைய மமருந் தானே**

எனப் பிரித்து அமைக்கப்பட்டுள்ளது.

சுவடியில் தகர ஒற்றோ, தகரமோ இருக்க வேண்டிய இடத்தில் 'ற்' ஒற்றையும், றகர உயிர்மெய்யையும் எழுதியுள்ளனர். அவ்வாறே 'றகர' ஒற்றோ, றகர மெய்யோ வரவேண்டிய இடத்தில் தகர ஒற்றையும் தகர மெய்யையும் மாற்றிப் பல்வேறு இடங்களில் எழுதியுள்ளனர்.

(உ-ம்) 'மாற்றிய' என இருப்பதற்குப் பதில் 'மாத்திய' என இருந்தது. அது சரியாக 'மாற்றிய' என மாற்றம் செய்து அமைக்கப்பட்டுள்ளது.

'முத்தரென', 'சங்கமத்தில்' என இருப்பதற்குப் பதில் 'முற்றரென', 'சங்கமற்றில்' என இருந்தன. இவை சரியாக மாற்றியமைக்கப்பட்டன. இது போன்ற பல்வேறு எழுத்து மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

## 1: 10. சிதைவும் திருத்தமும்

'பரம இரகசிய சடத்தலம்' என்னும் நூலில் 29, 30, 31, 32 ஆகிய எண்ணுள்ள பாடல்கள் முற்றிலும் சிதைந்திருந்தன. அவை நிறுவனத்தில் கிடைத்த பிறிதொரு சுவடியின் மூலம் ஒப்பீடு செய்து சரி செய்யப்பட்டன.

இரண்டு நூல்களிலும் குரு மரபு, குரு துதியாக உள்ள பாடல்களை (1, 76, 77) ஒப்பீட்டுச் சுவடியின் மூலமும் கூடச் சரிசெய்ய இயலவில்லை.

மேலும் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உள்ள தாள்சுவடியில் எந்தப் பகுதி இல்லையோ அதுவே அந்தச் சுவடியிலும் இல்லை. மேலும் அந்தச் சுவடியை எழுதியவர் பெரும் தவறுகளோடு எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. 'சடத்தலம்' என நூலாசிரியரே நூல் மரபில் குறிப்பிட்டிருக்கும்போது இரண்டு நூல்களையும் சேர்த்து 'பரம இரகசியத் தலம்' என்றே எழுதியுள்ளனர்.

## 1: 11. தலைப்பு - பாடல் - உரை

'பரம இரகசிய சடத்தலம்' என்னும் நூலில் பாடல்களுக்கடியில் கொடுக்கப்பட்ட மையக் கருத்தின் விரிவையே சுருக்கி, பாடல்களுக்குத் தலைப்புகளாகப் பாடல்களின் மேல் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த மையக் கருத்தின் விளக்கம் பல்வேறு திருத்தங்களுடன் சுவடியில் உள்ளவாறே . பாடல்களுக்கடியில் அடைப்புக் குறியில் கொடுக்கப்பட்டுள்ளது. நூலில் உள்ள எந்தப் பாடலுக்கும் நூலாசிரியர் உரை எழுதியிருக்கவில்லை. அனைத்துப் பாடல்களுக்கும் தனித்தனியே விரிவான உரை எழுதி ஆய்வாளரால் அப்பாடலுக்குக் கீழேயே கொடுக்கப்பட்டுள்ளது.

## 1: 12. பாடவேறுபாடு

கிடைத்த இரண்டு ஒப்பீட்டுச் சுவடிகளிலும் பாடவேறுபாடுகள் அவ்வளவாகக் கிடைக்கவில்லை. ஒரு சில மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன.

## 1: 13. எண்கள்

சுவடியில் உள்ள இரண்டு நூல்களுக்கும் தமிழ் எண்களே கொடுக்கப்பட்டிருந்தன. அவற்றிற்கு இக்கால ரோமன் எண்கள் கொடுக்கப்பட்டன. 'பரம இரகசிய சடத்தலம்' என்னும் நூலில் விநாயகர் துதி பாடலுக்குச் சுவடியில் எண் இல்லை. காப்புச் செய்யுள் நூலுக்குப் புறம்பாகக் கருதப்படுதலால் எண் அவசியம் இல்லை என விடப்பட்டது. பாடல் எண் இந்த நூலுக்குக் தரப்பட்டுள்ளது.

'வீராகம சடத்தலம்' நூலிற்கு வரிசை எண் அந்த நூலில் உள்ளதைப் போலவே கொடுக்கப்பட்டுள்ளது. தனித்தனித் தலைப்புகளின் கீழ்த் தொடர் எண்கள் பாடல் எண்களாக நூலில் கொடுக்கப் பட்டுள்ளமையால் பாடல் எண்களும் பாடலின் முடிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

## 1: 14. தமிழ் இலக்கிய உலகம் அறியாத நூல்

வீர சைவ சமயத்தின் தமிழ் நூல்களாவன திருமந்திரம், திருவாசகம், விசுவ புராணம், பிரபுலிங்க லீலை, சித்தாந்த சிகாமணி, சிவப்பிரகாச விலாசம், அத்துவித வெண்பா, வீர சைவ தத்துவப் பிரகாசம், சிவஞான தீபம், வீராகமம், சடுத்தலம், சாந்தலிங்கர் நூல்கள் முதலியன வீர சைவ உண்மைப் பொருள்களைக் கூறுகின்ற தமிழ் நூல்களாகும். மேற்கூறிய 'சடுத்தலம்' என்னும் வீர சைவ நூல் சடத்தலம் என்பதே சரியானதாக ஆய்வில் கண்டறியப்பட்டது.

வீர சைவ சமயத்தினையும், பல்வேறு அறங்களையும் உரைக்கும் இந் நூல் இதுவரை அச்சில் வெளிவரவில்லை. மேலும் சடுத்தலம் என்றோ, சடத்தலம் என்றோ வேறு ஆசிரியர் எழுதியதாகவோ, பதிப்பித்ததாகவோ தமிழ் இலக்கிய வரலாற்றில் எங்கும் எவராலும் குறிக்கப்படவில்லை. மேலும் சடுத்தலம், அல்லது சடத்தலம் என்ற சொல்லை எவ்வித அகராதி நூல்களிலும் காணமுடியவில்லை.

இரேவண சித்தர் எழுதிய நூல்களாக இலக்கிய வரலாற்றாய்வாளர்களும், அறிஞர்களும் இவ்விரு நூல்களையும் குறிப்பிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர்கள் சடத்தலம் என்பது வீர சைவ நூல் என்பதையும் குறிப்பிடவில்லை.

அபிதான சிந்தாமணி மட்டும் இரேவண சித்தர் எழுதியதாகப் 'பரம இரகசியம்' என்ற நூலைக் குறிப்பிட்டுள்ளது. அந்தப் 'பரம இரகசியம்' உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி நூலக அறையில் முடங்கிக் கிடந்த இந்தப் பரம இரகசிய சடத்தலமாகத்தான் இருக்க வேண்டும்.

எனவே, தமிழ் இலக்கிய உலகமும் சமய உலகமும் அறியாத நூல் ஒன்றை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு அளிக்கப்படும் இந்தச் சுவடிப் பதிப்பாய்வேட்டின் மூலம் 'சடத்தலம்' என்ற வீர சைவ சமயஞ் சார்ந்த நூலைத் தமிழறிஞர்களுக்கும் தமிழார்வலர்களுக்கும் எடுத்துக்காட்ட முடிகிறது.

# இயல் 2. ஆய்வுரை


**2: 1. ஆசிரியர் வரலாறு**
2: 1. 1. ஊர் - பெற்றோர் - குரு
2: 1. 2. பெயர்க்காரணம்
2: 1. 3. குலம்
2: 1. 4. சமயம்
2: 1. 5. காலம்
2: 1. 6. சைவ குருமார்களில் ஒருவரா?
2: 1. 7. நூல்கள்
2: 1. 8. இரேவண சித்தரே எழுதினாரா?

**2: 2. சைவம் வீரசைவம் - அறிமுகம்**
2: 2. 1. பல்வேறு சமயங்கள்
2: 2. 2. சைவமும் சைவ சமயத்தின் தொன்மையும்
2: 2. 3. பழந்தமிழ் இலக்கியங்களில் சிவன்
2: 2. 4. வீரசைவம்

**2: 3. சடத்தலம் - நூலாய்வு**
2: 3. 1. நூற்பெயர்க் காரணம்
2: 3. 2. நூலின் பயன்
2: 3. 3. வீரசைவ நெறி
2: 3. 3. 1. ஐவகையொழுக்கம்
2: 3. 3. 2. எண்வகைக் காப்பு
2: 3. 3. 3. சடுத்தலம்

**2: 4. தொடை நயம்**

**2: 5. உவமை நயம்**

**2: 6. யாப்பு**

**2: 7. உத்திகள்**
2: 7. 1. மையக் கருத்தை உணர்த்தல்
2: 7. 2. நுதலிப் புகுதல்

**2: 8. சொல்லாய்வு**

**2: 9. வீரசைவம் வளராமை**

# 2: 1. ஆசிரியர் வரலாறு

'வீராகம சடத்தலம்' என்னும் நூலின் தலைப்பில் 'இரேவண சித்தய்ய சடுத்தலம்' என்று குறிப்பிட்டுள்ளதால் இந்நூலை 'இரேவண சித்தர்' எழுதியதாக அறிய முடிகிறது. சுவடியில் இதற்கு முன்பு உள்ள 'பரம இரகசிய சடத்தலம்' என்ற நூலும் அவர் எழுதியதாகப் பல்வேறு காரணங்களால் அறியப்பட்டது. எனவே 'இரேவண சித்தர்' வரலாறு இங்குத் தரப்படுகிறது.

## 2: 1: 1. ஊர் - பெற்றோர் - குரு

இரேவண சித்தர் ஊர் சிதம்பரம் என்றும், பேரளம் என்றும் கூறப்படுகிறது. இவர் 'பேரளத்தில் பிறந்து பின்னாளில் சிதம்பரத்தில் வாழ்ந்தவர்'[1] என்றும் சிலர் கூறுகின்றனர். சிதம்பர இரேவணசித்தர் என்பதில் உள்ள சிதம்பரம் என்பது இவர்தம் தந்தையாரைக் குறிக்கும் என்றும் கூறப்படுகிறது. அவர் தம் நூலான அகராதி நிகண்டின் தற்சிறப்புப் பாயிரத்தில்,

"புலியூர் சிதம்பர ரேவண சித்தன்"[2]

என்றும்

"தொண்டை நன்னாடு துலங்கிய புலியூர்
எண்டருஞ் சிதம்பர ரேவண னுரைத்த"[3]

"இதந்தரு புலியூர் சிதம்பர சிதம்பர ரேவணன்"[4]

என்றும் வரும் இப்பாடலடிகளை நோக்கினால் இவற்றில் 'புலியூர்' என்பது ஊரைக் குறிக்க, அடுத்துள்ள 'சிதம்பரம்' என்பது தந்தை பெயரைக் குறிப்பதாகக் கொள்ளலாம். இது பொருத்தமுடையதாகவும்

---

1. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி. 4, ப: 223
2. தமிழிலக்கிய வரலாறு, (16ஆம் நூற்.), ப. 166
3. மேலது, ப. 117
4. மேலது, ப. 117

இருக்கிறது. தாயாரின் பெயரை அறியும் வகையில் எவ்விதச் சான்றும் கிடைக்கவில்லை.

இவர் 'சித்திரசேனர்' என்பவருடைய புதல்வர் நால்வருள் ஒருவரான தன்மசன்மர் என்ற குணக்குருவினிடத்துக் கல்வி பயின்றார் என்பதையும் இவருடைய அகராதி நிகண்டின் சிறப்புப் பாயிரத்தின் மூலம் அறியமுடிகிறது.

"சித்திர சேனன் தனக்கொரு நாலு
புத்தி ரர்தரும் புனிதனைப் போற்றிப்
பகரா திப்பெயர்த் தொகுதியைப் பகர்வோம்"

"தன்ம சன்மனைச் சார்குணக் குருவினை
இம்மையர் சத்துபட் டீசரை யிறைஞ்சி
அகராதிப் பெயர்த் தொகுதியைத் தருவோம்"[1]

இவர் செய்த மற்றொரு நூலாகிய சிவஞான தீபத்தின் குருவணக்கப் பாடலில் ஆலநீழல் அறமுரைத்த பெருமான் அருளால் இருநிலத்தும் தம் குருவாய்த் தோன்றினார்' என்கிறார். மேலும்,

"குருபரனை மருளுலக வாதை நீக்குங்
குணக்கடலை மனத்திலுற வணக்கஞ் செய்வோம்"

என்று கூறுகிறார். நிகண்டில் குணக்குரு என்றும், தீபத்தில் குணக்கடலை என்றும் கூறியுள்ளதால் 'குண' என்பது குருவின் பெயருள் ஒரு பகுதி என்று நினைக்கச் செய்கிறது.

## 2: 1: 2. பெயர்க்காரணம்

இரேவண சித்தர் என்ற பெயருக்கு இலக்கிய வரலாற்றுப் பேரறிஞர் மு. அருணாசலம் அவர்கள் ஒரு காரணத்தைக் கூறுகிறார். 'ரேபணம்' என்பது மாடுகளின் கத்தல். இவர் ஒருகால் மாடுகளின் கத்தலைக் கேட்டு இரங்கினாரோ அல்லது அவருடைய குரல் மாடு கத்துவது போல் இருந்ததோ தெரியவில்லை. இது காரணமாக இவருக்கு இப்பெயர் வந்திருக்கலாம்"[3] என்பர். இக்கருத்து அவ்வளவு பொருத்தமாகப்படவில்லை.

1. தமிழிலக்கிய வரலாறு. (16ஆம் நூற்.), ப. 117
2. சிவஞானதீபம், குருவணக்கப் பாடல், ப. 4
3. தமிழ் இலக்கிய வரலாறு. (16ஆம் நூற்.), ப. 121

## வேறு பெயர்கள்

இவரின் வேறு பெயர்களாக 'இரேவணாத்தியர்'[1] என்று லெக்சிகனும், 'இரேவணராத்தியார்'[2] என்று அபிதான சிந்தாமணியும் கூறுகின்றன.

## 2: 1: 3. குலம்

இவர் வேளாளர் குலத்தைச் சார்ந்தவர். 'சர்வ கலாசாலையின் தமிழ்ப் பேரகராதியில் இரேவணசித்தர் பிராமணர் என்று எழுதியிருப்பது பிழை.'[3] மேலும் வருணாசிரம தர்மங்களை எதிர்த்துப் பல இடங்களில் பாடியுள்ளார். எனவே வேளாளர் என்று கொள்ளுதல் பொருத்தமுடையது.

## 2: 1: 4. சமயம்

சைவ சமயத்தைச் சார்ந்தவர், வீர சைவ சமயத்தவர் என்றும் கூறப்படுகிறார். இவர் பெயர் இரேவணாத்தியர் என்று வழங்கப்படுவதால் இவர் வீரசைவர் என்பதில் ஐயமில்லை. மேலும் சடத்தலமாகிய இவ்விரண்டு வீரசைவ நூல்கள் பாடியுள்ளமையாலும் இக்கருத்து மேலும் வலுவடைகிறது.

## 2: 1: 5. காலம்

இவருடைய காலம் கி.பி. 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பதை அகராதி நிகண்டின் பாயிரத்தின் மூலம் அறியமுடிகிறது. இதனை, "அரிய சகாத்தம் ஆயிரத்தைஞ்ஞூற் றொருபத் தாறென உரைத்திடும் யாண்டினில் செய்ததாக அவர் குறிப்பிடுவதால், அந்நூல் சாலியவாகன சகம் 1516இல் இயற்றப்பட்டதாக அறிகிறோம்"[4] எனச் சிவஞான தீபத்தின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2: 1: 6. சைவ குருமார்களில் ஒருவரா?

பரமசிவத்தின் ஐந்து முகங்களிலிருந்து வெளிவந்த 'இரேவணராத்யா, மருளராத்யா, பண்டிதராத்யா, ஏகோராமராத்யா, விசுவராத்யா போன்ற பஞ்ச ஆசாரிய மரபில் 'இரேவணராத்யா' என்பவரும் ஒருவர். இவர் பெயரும் இரேவண சித்தர் என்று

1. தமிழ் லெக்சிகன், தொகுதி. 4
2. அபிதான சிந்தாமணி, ப. 225
3. தமிழ் இலக்கிய வரலாறு. (16ஆம் நூற்.), ப. 117
4. சிவஞானதீபம், பதிப்பாசிரியர் முன்னுரை, ப. xi

வழங்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. இவரைப் பற்றி நம்ப இயலாக் கதைகள் வழங்குகின்றன.

"இரேவணராத்யா என்பவரே இரேவண சித்தர் இரேணுகாசார்யா என்று சொல்லப்பெறுபவர். இவரே அகத்தியருக்கு வீர சைவத்தை உபதேசித்ததாகச் சித்தாந்த சிகாமணி என்ற வீர சைவ தத்துவ நூல் கூறுகிறது. இவர் கொல்லிப்பாக்கை என்னுமிடத்தில் உள்ள சோமேசுவர இலிங்கத்திலிருந்து இந்தியாவின் பல பாகங்களிலும், ஈழத்திலும் வீர சைவத்தை உபதேசம் செய்தவர். இராவணன் தம்பியாகிய வீபீடணன் இவரிடம் வீர சைவ உபதேசம் பெற்று, மூன்று கோடி இலிங்கங்களை அமைத்தான் என்பது மரபு வழிச் செய்தி"[1]

மேலும் இரேவண சித்தர் "ஆதிசங்கராசாரியருடன் பரகாயப் பிரவேசம் (கூடுவிட்டுக் கூடுபாய்தல்) பற்றிச் சர்ச்சை செய்து அவருக்குச் சந்திர மௌலீசுவரர் என்ற இலிங்கத்தைக் கொடுத்தார்."[2]

மேற்கூறிய இந்தச் செய்திகளின் மூலம் வீர சைவ ஆசாரியரான இரேவணசித்தரின் காலமோ, வரலாறோ தெளிவாகத் தெரியவில்லை. இவரைத் தவிர 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்த இந்த நூலின் ஆசிரியர் இரேவணசித்தர் வேறானவர் என்பது தெளிவு.

## 2: 1: 7. நூல்கள்

இவர் அகராதி நிகண்டு, திருப்பட்டீச்சுரப் புராணம், திருவலஞ்சுழிப்புராணம், திருமேற்றளிப்புராணம், சிவஞானதீபம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். அகராதி நிகண்டு, சிவஞானதீபம் ஆகிய இவ்விரு நூல்களைத் தவிர புராணங்கள் எவையும் கிடைக்கவில்லை.

### அகராதி நிகண்டு

இந்நூல் சூத்திர அகராதி, இரேவணாத்தியார் சூத்திரம் என்னும் வேறு பெயர்களாலும் வழங்கப் பெறுகிறது. இவர் கி.பி. 1594ஆம் ஆண்டில் இதனை இயற்றினார் எனத் தெரிகிறது. தமிழில் அகராதி என்னும் பெயரை முதன்முதலில் உருவாக்கியவரும், அம்முறையில் அகராதி நூலினை இயற்றியவரும் இவரேயாவார். இக்கால அகராதிகளுக்கு இவரது நூல் முன்னோடியாக அமைந்தது எனில் மிகையாகாது. இந்நூலின் சொற்கள் அகரவரிசைப்படுத்தப்பட்டிருப்பதோடு, ஒரு பொருட் சொல், இரு பொருட்சொல் எனப் பொருள் பற்றியும்

1. வீர சைவம், ப. 2.
2. சைவ தத்துவம், ப. 298

வகைப்படுத்தப்பட்டுள்ளன. பத்துத் தொகுதியாக அமைந்த இந்நூலில் 3368 நூற்பாக்கள் உள்ளன எனக் கூறப்படுகிறது. எனினும் அச்சிட்ட நூலில் 3331 நூற்பாக்களே காணப்படுகின்றன. தமிழ் அகராதி வரலாற்றில் இவருடைய நூல் சிறப்பிடம் பெற்றுத்திகழ்கிறது.

### சிவஞான தீபம்

சைவ சித்தாந்த உண்மைகளைத் தெளிவுற விளக்கும் செய்யுள் நூலாகும். சிவாகமப் பொருள்கள் பலவற்றைக் கூறிச் செல்கிறார். திருமந்திரத்திலிருந்து பல செய்திகளைத் தம் நூலில் அமைத்துக் கொண்டுள்ளதையும் அறிய முடிகிறது.

## 2: 1: 8. இரேவணசித்தரே எழுதினாரா?

சிவஞானதீபம், பரம இரகசிய சடத்தலம், வீராகம சடத்தலம் ஆகிய மூன்று நூல்களையும் இரேவண சித்தரே எழுதினார் என்பது ஆய்வில் புலப்படுகிறது. அதற்கான சில காரணங்கள்.

1. சுவடியில் இரேவண சித்தய வீரகம சடத்தலம் என்று நூலின் பெயர் காணப்படுவதால், 'பரம இரகசிய சடத்தலம்' என்ற நூலையும் இவர்தான் எழுதியிருக்க வேண்டும். ஏனெனில் 'சடத்தலம்' என்ற நூலை வேறொரு ஆசிரியர் எழுதியதாகத் தமிழிலக்கிய வரலாற்றில் எங்கும் காண இயலவில்லை. 'பரம இரகசிய சடத்தலம்' என்ற நூலுக்குச் சுவடியில், ஆசிரியரான இவரின் பெயரை ஏடெழுதியவர் குறிக்கத் தவறியிருக்கலாம்.

2. சிவஞானதீபம் நூலில் வீரசைவ நூல்களைப் பற்றிக் குறிப்பிடும்போது சிவஞானதீபம் வீராகமம், சடுத்தலம் என்று வரிசைக்கிரமப்படி கூறியுள்ளதாலும், சிவஞானதீபம் இயற்றிய இரேவணசித்தரே ஏனைய இருநூல்களையும் இயற்றியிருக்க வேண்டும். மேலும் சிவஞானதீபத்தில் சைவசித்தாந்தத்தின் பொதுவுண்மைகளை விளக்கும் இவர் அந்நூலின் இறுதியில் வீர சைவத்தின் பெருமைகள் பற்றிச் சில நூற்பாக்களில் விளக்குகிறார். எனவே, ஆசிரியர் வீரசைவத்தின் மீது பற்றுக் கொண்டு இவ்விரு நூல்களையும் படைத்தார் என்று துணியலாம்.

3. மூன்று நூல்களிலுமே ஆசிரியர் தம் பெயரைக் குறிப்பிடவில்லை. ஆனால் மூன்று நூல்களிலும் நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறார். இதனை,

> "மேவரிய சிவஞான தீப மென்றே
> விளம்பியது வளந்தருபால் வேலை தன்னைத்"

**"நீதியினால் விளங்குசடத் தலத்தை யானும்"** (பாடல்.4)

**"ஒருமைபெறும் வழிபாடு முணர்ந்து துய்ய**
**உற்றசடத் தலப்பகுதி பத்தனாதி"** (பாடல்.79)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

4. இரேவண சித்தர் புலியூரில் பிறந்தார் என்பதை மேலே அறிந்தோம். அதற்கு அரண் செய்யும் வகையில்,

**"வாரணமாம் பெரும்பற்றப் புலியூர் வாழும்**
**அம்பலத்து ளாடுகுரு நாத னெந்தை"** (பாடல்.80)

என்ற அடி காணப்படுவதால் இந்தச் சடத்தலம் என்னும் நூலைச் சிவஞான தீபம் பாடிய இரேவண சித்தரே இயற்றினார் என்பதை உறுதி செய்கிறது.

5. இரேவண சித்தர் எழுதிய நூல்களைப் பற்றி அபிதான சிந்தாமணி 'பரம இரகசியம்[2] என்ற ஒரு நூலையும் குறிப்பிடுகிறது. அந்தப் பரம இரகசியம் என்ற நூல் இந்த 'பரம இரகசிய சடத்தலம்' என்ற நூலாகத்தான் இருக்க வேண்டும்.

6. மூன்று நூல்களில் உள்ள அனைத்துப் பாடல்களையும் இரண்டாம் எழுத்து ஒன்றிவர அடியெதுகையில் பாடியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. சிவஞான தீபம், பரம இரகசிய சடத்தலம் இவ்விரு நூல்களையும் எண்சீர் விருத்தத்தில் பாடியுள்ளார். வீராகம சடத்தலத்தை அறுசீர் விருத்தத்தில் பாடினாலும் எண்சீர் விருத்தத்திலும் பாடியுள்ளார்.

7. மூன்று நூல்களிலும் அவையடக்கம் பாடும்போது கடலினை உவமையாகக் காட்டிப் பாடியிருப்பதும் அவையடக்கத்தில் தெரிவித்துள்ள கருத்துகள் பெரும் ஒற்றுமையுடையவனாக உள்ளன.

8. பரம இரகசிய சடத்தலம் என்ற நூலில் கையாளப்பட்டுள்ள சொற்கள் சிவஞானதீபத்திலும் கையாளப்பட்டுள்ளன. அதே பொருளையும் உணர்த்துகின்றன.

(உ-ம்) தால் - நாக்கு, இரதம் - சுவை

ஆக்கிராணம் - மூக்கு, துவக்கு - உடல்

பரிசம் - ஊறு

---

1. சிவஞானதீபம், அவையடக்கம், பாடல். 5, ப. 4
2. அபிதானசிந்தாமணி, ப. 205

இதுபோன்ற பல சொற்களையும் காட்டலாம். எனவே, சொற்களை நோக்கும்போது மூன்று நூல்களையும் 16ஆம் நூற்றாண்டில் இரேவணசித்தர் என்பவரே எழுதினார் என்பது புலனாகிறது. அக்காலத்திற்குரிய சொற்கள் என்பதையும் அறிய முடிகிறது.

9. மூன்று நூல்களிலும் உவமைகள் காட்டுவதிலும், கருத்துக்களைத் தெரிவிப்பதிலும் பல ஒற்றுமைக் கூறுகள் காணப்படுகின்றன.

மேற்கூறிய காரணங்களால் சிவஞான தீபம் இயற்றிய இரேவண சித்தரே இவ்விரு நூல்களின் ஆசிரியர் என்பது வெள்ளிடைமலை.

# 2: 2 சைவம் - வீரசைவம் அறிமுகம்

வயிற்றை ஒதுக்கிவிட்டு மனத்திற்காக மனிதன் வாழத் தொடங்கிய பொழுதுதான், மதமும், சமயமும் தோன்றியிருக்க வேண்டும். மக்கள் கூட்டம் செலுத்திய அன்பு பல்வேறு வடிவங்களில் பல்வேறு உயிரினங்களின் மேலும் சென்றது. முதுகண்ணன் சாத்தனார் சோழன் நலங்கிள்ளியைப் பற்றிக் கூறும்போது,

> **"அறனும் பொருளும் இன்பமும் இம்மூன்றும்**
> **ஆற்றும் பெரும நின் செல்வம்"[1]**

என உரைப்பார். பொருளையும் இன்பக் காதலையும் அறநெறியில் பயன்படுத்தி வாழ்க்கை நடத்தும்போது, அவ்வாழ்க்கை அறநெறியில் பிறந்த சமய வாழ்க்கையாகக் கருதப்பெறும். இந்த அறநெறிக்கேற்பப் பலவடிவங்களில் பல்வேறு மதங்களும் சமயங்களும் நாட்டில் தோன்ற ஆரம்பித்தன.

## 2: 2: 1. பல்வேறு சமயங்கள்

உலகத்தில் பல திறப்பட்ட சமயங்கள் பல்வேறு காலங்களில் தோன்றின. வளர்ந்து செழித்தன; அழிந்து மறைந்தன பல. அவற்றுள் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற சமயங்களாகச் சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறித்தவம், இசுலாமியம் ஆகியவை குறிப்பிடத் தக்கவையாகும். பொதுவாக அனைத்துச் சமயங்களின் குறிக்கோளும் நோக்கமும் தொண்டு செய்வதாகவே இருந்துள்ளது.

இவ்வாய்வேடு 'வீரசைவம்' பற்றியது. ஆதலால் சைவ சமயம் பற்றி மட்டும் இங்கு விளக்கப்படுகிறது.

இப்பகுதியில் சைவமும் சைவ சமயத்தின் தொன்மையும், தமிழ் இலக்கியங்களில் சைவம், வீரசைவம் என்னும் மூன்று தலைப்புகளில் ஆய்வு அமைகிறது.

---

1. புறநானூறு

## 2: 2: 2. சைவமும் சைவ சமயத்தின் தொன்மையும்

சைவ சமயம் பிற்காலத்தில் ஒரு நெறியோடும் செழிப்போடும் வளர்ச்சி பெற்றிருந்தாலும் இதனுடைய தோற்றம், வழிபாட்டு முறைகள் என்பனவற்றைத் தெளிவாக அறிய முடியவில்லை. அதனை வரையறுத்தும் கூற இயலாது. ஆனால் சைவ சமயமும், அதன் வழிபாடும் மிகவும் தொன்மை வாய்ந்தவை என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

### சமயம்

சமைக்கப்பட்டது சமையம் என்று சொல்லலாம். சமயக் கொள்கைகளும், பழக்க வழக்கங்களும் அக்காலத்திலேயே பெரியோர்களால் நெறிப்படுத்தப்பட்டன.

### சிவம் - சைவம்

'சிவம்' என்ற சொல்லுக்கு நன்மை என்பது ஒரு பொருள். முத்தி என்ற ஒரு பொருளும் உண்டு; செம்மை என்றும் சொல்வர். எனவே, செம்மை என்பது எதுவோ அனைத்துக்கும் அப்பாலாய் நின்று, அனைத்தையும் படைப்பது எதுவோ - உலக உயிர்களுக்கு நன்மை தருவது எதுவோ - எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது எதுவோ அது சிவம் எனப்படும். அச்சிவ சம்பந்தமுடையதே சைவநெறி. எனவே, நாடெங்கும் நலம் பெற்று வாழ வழிகாட்டுவதே சிவநெறி. அதுவே 'சைவம்' எனலாம். அதனுடைய 'பக்தி' ஒழுகலாறுகளை நெறிப்படுத்துவதே சைவ சமயமாகும்.

### தொன்மை

சைவ சமயத்தில் கற்காலம் முதல் தமிழிலக்கிய வரலாற்றில் தொன்மை வாய்ந்த தொல்காப்பியத்திற்கு முன் உள்ள இதிகாச காலம் வரை நிலவி வந்த தன்மைகள் முதலிடம் பெறுகின்றன.

### கற்காலங்களில்

ஆராய்ச்சியாளர்கள் மனித வரலாற்றைப் பழைய கற்காலம், புதிய கற்காலம், இரும்புக்காலம், வெண்கலக்காலம் எனப் பலவகைப் படுத்துவர். இக்காலங்களில் எல்லாம் உலகத்தில் சைவம் இருந்தன என்பதை அறிய அக்காலத்து நூல்கள் நமக்குக் கிடைக்காமற் போயின. எனவே, அவர்கள் வழிபட்டு வந்த கல் முதலியவற்றாலான பொருட்களைக் கொண்டே அவர் தம் சமயத்தை அறிய வேண்டியுள்ளது.

"புதிய கற்காலப் பொருள்களுள் இலிங்கத்தைக் குறிக்கும் கற்களும் கிடைத்துள்ளன. சிவபெருமான் மலைவாழ் கடவுள்; மான் தோலையும், புலித்தோலையும் உடையவர். அவர் விலங்குகளுக்குத் தலைவர் என்று பொருள்பட 'பசுபதி' என்னும் பெயரால் அழைக்கப்படுகிறார். இவற்றையும், அவரைப் பற்றிய கதைகளையும் நோக்க, இக்கடவுள் பழைய கற்காலத்திலும், புதிய கற்காலத்திலும் மக்களால் வழிபடப்பெற்று வந்தவராவார் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்."[1]

## அயல்நாடுகளில்

வடஅமெரிக்காவில் 'கோலறடோ' என்னும் ஆற்றின் பக்கத்தில் உள்ள குன்றின் மீது சிவன் கோயில் என்ற ஓர் இடம் இருக்கிறது. அவ்விடம் பதினாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

அமெரிக்காவின் பல பகுதிகளிலும் இலிங்க வணக்கம் பண்டைக்காலம் முதலே இருந்து வந்தது. மேனாட்டார் அப்பகுதிகளை முதன்முதலில் பார்வையிடச் சென்றபோது அங்குப் பல நகரங்கள் இருந்தன. அங்கு வாழ்ந்த மக்கள் செல்வ வளத்துடனும், நாகரிகத்துடனும் இருந்தனர். அவர்கள் கோயில்களைக் கட்டி, இலிங்கங்களை வைத்து வழிபட்டு வந்தனர். இலிங்கத்தைத் தனியாகவும், இலிங்கத்தையும் ஆவுடையாரையும் சேர்த்தும் பலவாறு வழிபட்டனர் என்று அமெரிக்க வரலாறு கூறுகிறது.

மேனாட்டார், நடு அமெரிக்காவிலும் தென்அமெரிக்காவின் பல பகுதிகளிலும், மெக்சிகோவிலும் இலிங்க வழிபாட்டினைக் கண்டு எழுதியுள்ளனர். மேனாட்டார் கண்டறிவதற்குமுன் அமெரிக்காவிற்கும் பிற கண்டங்களுக்கும் எவ்வகையில் தொடர்பு இருந்தது என்பதை நாம் உணரக்கூடவில்லை. அமெரிக்கா உள்பட, உலகம் முழுவதிலும் பசிபிக் தீவுகளிலும் இலிங்க வழிபாடு இருந்தது என்றால், சைவத்தின் பழமையை என்னென்று கூறுவது!

நடுத்தரைக்கடலிலுள்ள 'க்ரீட்' என்னும் தீவில் வாழ்ந்த மக்கள் 'மீனவர்' எனப்பட்டனர். அவர்கள் காலத்தில் இருந்த நகரங்களுள் ஒன்று 'சிவன்' எனப் பெயர் பெற்றிருந்தது. அங்கு நிலத்தடியிலிருந்து எண்ணற்ற சிறிய சிவலிங்கங்கள் ஆராய்ச்சியாளர்களால் கண்டெடுக்கப்பட்டன.

---

1. The stone Age in India (p. 48-49)

சிறிய ஆசியாவும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் சிறந்த நாகரிக நாடாக இருந்தது. இடபத்தின் மீது வீற்றிருக்கும் தெய்வ வழிபாடும், இடப வழிபாடும் அங்கு இருந்தன என்பதை அங்குக் கிடைத்த புதைபொருள்கள் தெரிவிக்கின்றன. அங்கிருந்த பழைய நகரங்களுள் ஒன்றின் பெயர் 'சிவாஸ்' என்பது. அந்நாட்டில் ஹைட்டைட் (Mittite) என்பது ஒரு சிறு நாடு. அங்குக் கிடைத்த புதைபொருள்களுள் பழைய நாணயம் ஒன்றாகும். அதன்மீது சிங்க ஊர்தியில் வீற்றிருக்கும் அம்மையும் இடப ஊர்தியில் நிற்கும் அப்பனும் பொறிக்கப்பட்டுள்ளனர்"[1] இந்த அமைப்பு அம்மையப்பரை நினைவூட்டுகிறதல்லவா?

வடஆப்பிரிக்காவிலுள்ள லிபியாவின் பெரும்பகுதி பாலைவனமாகும். அப்பாலை நிலத்தில் பசுந்தரையொன்று உண்டு. அதன் பெயர் சிவன் என்பது. ஏறத்தாழ 6,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகரிகம் கொண்ட நாடு, வட அரேபியாவில் 'யுப்ரடீஸ்', 'டைகிரிஸ்' என்னும் இரண்டு பெரிய ஆறுகளுக்கு இடைப்பட்ட நிலப்பகுதியாகும். அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் மிகச்சிறந்த நாகரிகத்தைப் பெற்றிருந்தனர். அவர்கள் களிமண் ஏடுகளில் தங்கள் செய்திகளைக் குறித்துச் சூளையில் சுட்டுப் பாதுகாத்தனர். இன்று அவையும் அக்காலக் கோவில்களும், மட்பாண்டங்களும், பல்வேறு பொருள்களும் கிடைத்துள்ளன. அக்களிமண் ஏடுகளில் சிவன் தொடர்புடைய இடப் பெயர்கள் காணப்படுகின்றன. சிவன் மாதமும் குறிக்கப்பட்டுள்ளது. 'மோசே' என்பவர் 'ஏகோவா' அருளிய பத்துக்கட்டளைகளையும் சிவன் என்னும் மாதத்தில், ஆறாம் நாள் 'சினாய்' மலைமீது நின்று, மக்களுக்கு எடுத்துக் கூறினார் என்று கிறிஸ்துவ மறையின் பழைய ஏற்பாடு தெரிவிக்கின்றது. மோசேயின் காலம் ஏறத்தாழ கி.மு. 1500 எனலாம். அப்பண்டைக் காலத்திலேயே சிவன் என்பது ஒரு மாதத்தின் பெயராய் இருந்ததாயின் அப்பெயர் இதற்கு முன்பு எவ்வளவு பழமையுடையதாய் இருந்திருக்க வேண்டும் என்பதை நாம் ஒருவாறு உய்த்துணரலாம். இரண்டாம் 'கோஸ்ராரஸ்' என்னும் சுமேரிய அரசனது மனைவியின் பெயர் சிவன் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலே சொன்ன பழைய ஏற்பாடு, சியன் (chien) என்னும் கடவுளைப் பற்றிக் கூறுகின்றது. அக்கடவுளை நன்கு ஆராய்ந்த மேனாட்டு ஆராய்ச்சியாளர்கள் சியன் என்பது சிவன் என்பதுவே. அது பழைய ஏற்பாட்டில் சிறிது வேறுபாட்டுடன் திரித்து வழங்கப்பட்டது என்று குறித்துள்ளனர்.[2]

---

1. The Hittite Empire, p. 205
2. Faiths of Man, p. 308

இன்றைய ஈரான், சிரியா, பாலஸ்தீனம், ஈராக், முதலிய நிலப்பகுதிகள் சுமேரியர் காலத்தில் நாகரிக நாடுகளாக விளங்கியவை. அவற்றுள் 'அக்கேடியா' என்பது ஒன்று. அக்கேடிய மக்கள், ஏழு விண்மீன்களைச் சிறப்புடையனவாகக் கருதினர், அவற்றுள் மூன்றாம் மீன் சிவன் எனப் பெயர் பெற்றிருந்தது.[1]

ஜப்பானிய மக்களின் பழைய கடவுளருள் சுவா என்பது ஒன்று. அது வேட்டுவர் கடவுளாம். இச் 'சுவா' என்னும் வேட்டுவக் கடவுளும், யானை, புலி முதலியவற்றைக் கொன்ற நமது சிவனே என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

## அயல்நாடுகளில் லிங்கங்கள்

கி.மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த தியோபிரேசியஸ் (Theophrasius) கிரேக்க நாட்டில் பொதுவிடங்களில் எல்லாம் வழிபாட்டுக் கற்கள் நடப்பெற்றிருந்த வழியில் நடந்து செல்லும் கிரேக்கர்கள் அவற்றிற்கு எண்ணெய் முழுக்குச் செய்து முழங்காற்படியிட்டு வழிபட்டுச் செல்கின்றனர்.[2] என்று கூறியுள்ளார். இலிங்கத்திற்கு எண்ணெய் முழுக்குச் செய்தல் இன்னும் நம் நாட்டில் உண்டன்றோ?

இஸ்ரவேலரும் இலிங்க வழிபாட்டினரே. அம்மக்கள் இலிங்கத்திற்கு நரபலியிட்டனர். இஸ்ரவேலரும், எகிப்தியரும் இடபத்தையும் வழிபட்டனர். எகிப்திய சமாதிச் சுவர்களில் இலிங்கங்கள் வெட்டப்பட்டள்ளன.

இங்கிலாந்திலும், ஸ்காட்லாந்திலும் பழம்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பல இலிங்கங்களைக் கண்டுபிடித்துள்ளனர். ஜெர்மனியிலும் இவ்வணக்கம் தழைத்திருந்தது. இலுதுவேனியாவில் இவ்வணக்கம் கி.பி.14ஆம் நூற்றாண்டு வரையிலும் இருந்தது.

'ஷின்டோயிஸம்' என்னும் ஜப்பானிய சமயத்தில் இலிங்க வணக்கம் முதன்மையானது. ஜப்பானில் பொதுவிடங்களில் இலிங்கங்கள் வைத்து வழிபட்டனர். ஜப்பானிய அரசாங்க ஆணையால் சென்ற நூற்றாண்டில் அவை அகற்றப்பட்டன. ஆயினும் இலிங்க வணக்கம் இன்னும் ஜப்பான் நாட்டில் சில பகுதிகளில் தொடர்ந்து வருகிறது.[3] தென்கிழக்காசிய நாடுகளில் ஒன்றான தாய்லாந்திலும் இலிங்க

---

1. Historty of chrono of the myth, making Age, p. 85
2. Primitine Culture, Part 2, P 14
3. A.C. Underwood, The Indigenous Religion of Japan, p-41

வழிபாடுகள், சிவசக்தி வழிபாடுகள் இன்றும் அங்கு வாழும் மக்கள் செய்து வருகின்றனர்.[1]

இலிங்க வணக்கம் உலகம் முழுவதும் ஒரு காலத்தில் பரவியிருந்ததையும் இலிங்க வணக்கத்தை உயிர்நாடியாகக் கொண்ட சிவநெறி உலகம் முழுமையும் பரந்திருந்தது என்னும் உண்மையும் மேற்கூறிய சான்றுகளைக் கொண்டு அறியலாம். இந்த உண்மையை நன்கு அறிந்துதான் போலும் நமது மணிவாசகப் பெருமான்,

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"[2]

என்று பாடியருளினார்.

## இந்தியாவில்

சுமேரியர் நாகரிகம் சிறப்புற்றிருந்த காலத்திலேயே இந்தியாவில் சிந்து வெளியில் மிகச் சிறந்த நாகரிகம் விளங்கியிருந்தது என்பது, புதைபொருள் ஆராச்சியால் அறியப்பட்ட உண்மையாகும். சிந்துவெளியில் கிடைத்த முத்திரை ஒன்றில், 'சிவன் பசுபதி' என்பதை உணர்த்தும் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. மேலும், அங்கு இலிங்கங்கள் கிடைத்துள்ளன. சிந்துவெளி நாகரிகம், வேதகால ஆரியர்க்கு முற்பட்டது. எனவே, இந்தியாவில் ஆரியர் வருகைக்கு முன்னரே இலிங்க வணக்கம் இருந்தது என்பது தெளிவாகும். இப்புதை பொருள்களைக் கண்ட ஆராய்ச்சி அறிஞர் சர் ஜான் மார்ஷல் 'சிந்துவெளியில் கிடைத்த புதுமைகளுள் முதலிடம் பெறத்தக்கது சைவத்தின் பழமையேயாகும். அது மரக்கல் காலம் அல்லது அதனினும் முற்பட்ட காலத்திற்கும் நம்மை அழைத்துச் செல்கிறது. இன்றளவும் வழக்கிலுள்ள மிகப் பழைய சமயமாக இது விளங்குகிறது.[3] என்று வியந்து கூறியுள்ளார்.

## வேத காலத்தில்

இங்ஙனம் இந்நாட்டில் தொன்றுதொட்டு இருந்து வந்த இலிங்க வழிபாடு வேத கால ஆரியரால் தொடக்கத்தில் வெறுக்கப்பட்டது.

---

1. தாய்லாந்தில் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் சொற்பொழிவு, உ.த.நி. 22.2.93
2. திருவாசகம், போற்றித்திருவகவல் (164–165)
3. Mohenjo-daro and the Indus (vol-1), Preface, p. vii

அவர்கள், தங்கள் தீ வழிபாட்டிற்கும், இந்திர வழிபாட்டிற்கும் வேறாக இருந்த இலிங்க வழிபாட்டை வெறுத்ததில் வியப்பில்லை. அவர்கள் வழிபாட்டிற்கும் இலிங்க வழிபாட்டிற்கும் போர் நிகழ்ந்ததை ரிக்வேத சுலோகங்களே தெரிவிக்கின்றன. ஆரியர் ஒரு பால் இலிங்க வணக்கத்தையும், மற்றொருபால் கண்ணன் வணக்கத்தையும் எதிர்த்துப் போரிட்டனர். என்பது அச்சுலோகங்களால் அறியக் கிடக்கும் உண்மையாகும். இறுதியில், இலிங்க வணக்கமே வெற்றி பெற்றது. ஆரியர் தங்கள் வேதத்தில், தங்கள் கடவுளர்க்கும் மேம்பட்ட கடவுளாகச் சிவனை ஏற்றுக்கொண்டனர். அக்கடவுளுக்கு மகாதேவன் என்று பெயரிட்டனர்.[1]

சிவன் என்னும் சொல் எதன் அடிப்படையாகப் பிறந்தது என்பதை வடமொழி இலக்கண ஆசிரியர்கள் பொருந்தும் முறையில் கூடக் கூறவில்லை[2] அதை வடமொழி என்று கருதிச் 'சைவம்' என்று காலப்போக்கில் திருத்திவிட்டனர். ஆரியர் கலப்பினால் அவர்கள் வழிபட்ட 'ருத்திரன்' நம் சிவனோடு ஒன்றுபடுத்தப்பட்டார். நமது அம்மை 'துர்கை' ஆனாள். நமது 'முருகன்' சுப்பிரமணியனானார்.[3]

சிவன் என்பது சிவப்பு என்பதிலிருந்து வந்ததாகலாம். சிவப்பன், 'செம்மேனியெம்மான்' என்பது நம்மவர் கூற்று.

## பாரத காலம்

திருமாலின் அம்சமான கிருஷ்ணனும் சிவலிங்க பூசை செய்தார், அர்ச்சுனனை அழைத்துக் கொண்டு 'பாசுபதாஸ்திரம்' பெறச் சிவனிடமே சென்றார். பாண்டவரும் சிவனையே வழிபட்டனர் என்னும் விவரங்கள் மகாபாரத காலத்தில் சிவன் மகாதேவனாகக் கருதப்பட்டார் என்னும் உண்மையைத் தெரிவிப்பனவாகும்.

## இராமாயண காலம்

திருமாலின் அவதாரம் என்று கூறப்பட்ட இராமர் இராவணனைக் கொன்ற பிறகு, இராமேசுவரத்தில் இலிங்கத்தை வைத்து வழிபட்டார். அதுவே 'இராமலிங்கம்' (இராமரால் வழிபட்ட இலிங்கம்) எனப்பட்டது. இது இராமாயணத்தால் அறியப்படும் உண்மையாகும். இராமர் காலத்தில் வாழ்ந்த இராவணன் சிறந்த சிவ பக்தன் என்பதையே இராமகாதை

---

1. Dravidian India, PP. 102-106.
2. The Stone Age in India, p. 49
3. Dravidian India, pp. 110-116

எடுத்தியம்புகிறது. அசுரர்களும், இராக்கதர்களும் சைவர்களே என்றும் இதிசாகங்களும் புராணங்களும் கூறுகின்றன.

இதுவரை கூறப்பெற்ற உண்மைகளால், நமது சைவ சமயம், உலகத்திலேயே மிகப்பழமை வாய்ந்தது என்பது நன்கு விளங்குகிறதன்றோ? இத்தகைய பழமையும் பெருமையும் வாய்ந்த சமயத்தை இக்காலத்திற்கும் ஏற்றவாறு போற்றிப் பாதுகாத்து வளர்த்தல் நமது தலையாய கடமையாகும்.

## 2: 2: 3. பழந்தமிழ் இலக்கியங்களில் சிவன்

இலக்கியம் சமுதாய நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடி எனலாம். எனவே நம் பழந்தமிழ் இலக்கியங்களில் சிவபெருமானைப் பற்றி காணப்படும் செய்திகள் இங்கு விளக்கப்படுகின்றன.

### தொல்காப்பியத்தில் சிவன்

சிவனை வழிபடும் வழக்கம் நிலத்திற்குரிய வழிபாடாகத் தொல்காப்பியம் கூறவில்லை. மேலும் சிவனைக் குறிக்க சிவன் என்ற சொல்லாட்சியும் தொல்காப்பியர் காலத்தில் இல்லை. எனவே, தொல்காப்பியத்திலும் இல்லை. தொல்காபபியத்தில்,

> **"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற**
> **வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்**
> **கடவுள் வாழ்த்தோடு கண்ணிய வருமே"[1]**

இந்நூற்பாவில் இடம்பெறும் கந்தழி என்ற சொல் பல்வேறு வகைகளில் பொருள் பெற்று வருகிறது. நெருப்பு எனப்படுவதால் சிவபெருமானைத்தான் குறித்தது என அறுதியிட்டுக் கூற முடியாது. நிலத்திற்குரிய வழிபாடாகக் கூறாததற்குக் காரணம் நீர், நிலம், தீ, வளி, விசும்பு என்று ஐந்துமாய் எல்லாப் பொருள்களிலும் கலந்து நெடியவனாய் எங்கும் எதிலும் இருந்தமையால் தொல்காப்பியர் ஒரு திணைக்குரியவராய்ப் படைக்க நினைக்கவில்லை போலும் என அமைதி கொள்ளலாம்.

### சங்க இலக்கியங்களில் சிவன்

சங்க காலத்தில் சிவனைக் குறிக்கச் சிவன் என்ற சொல்லாட்சி இல்லை. சங்க இலக்கியத்திலும் அச்சொல் இடம்பெறவில்லை. சிவன் என்பது வேறுபல சொற்களால் 'ஆல்கெழு கடவுள்' (முருகு. 256),

---

1. தொல்காப்பியம், 1034

'முக்கட்செல்வர்' (புறம். 6), 'முக்கண்ணான்' (கலி. 104), 'காரியுண்டிக் கடவுள்' (மலை. 83), 'ஆலமர் செல்வன்' (சிறுபாண். 97) எனக் குறிக்கப்பட்டுள்ளன.

பெருந்தெய்வ வழிபாடாகக் சிவனைத் தமிழர் வழிபட்டதை சங்க நூல்கள் வாயிலாக அறியலாம்.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த செய்திகளைக் கூறும்போது முதற்சங்கத் தலைவனாகச் சிவன் வீற்றிருந்த கதைகள் பிற்காலத்தில் கூறப்பட்டன. எனினும் சங்க காலத்தில் சிவன், வாலியோன் (பலராமன்), மாயோன் (திருமால்), சேயோன் (முருகன்) ஆகிய நால்வரும் போற்றிப் புகழப்பட்டனர். பின்னர் சைவ சமயம் தோன்றிய பின்னர் சிவனின் பெருமை பெரிதும் பரவியது. முருகனைச் சிவனின் மகன் எனப் போற்றினர். உலகில் ஐம்பொருள்களையும் படைத்தவன் சிவன் என்றுரைத்தனர் (மதுரை. 453-55), தேவர்களின் தலைவன் என்றும் ஆதிரையில் பிறந்தவன் என்றும் வணங்கினர் (கலி. 150).

சிவன் அசுரர்களின் மூன்று எயில்களை எரித்தான் (பரி.5) காமனை எரித்தான். திரிசூலம் அவனது ஆயுதம் (அகம். கடவுள் வாழ்த்து) கையில் மண்டையோடு வைத்திருந்தான் (கலி.1). நிறம் சிவப்பு. ஆலகாலத்தை உண்டதால் அவன் கழுத்து மட்டும் கறுப்பாக இருந்தது. (புறம்.1). புரிசடையின் மீது பிறையை அணிந்திருந்தான் (புறம்.55) கங்கையைத் தாக்கினான் (பரி.9) என்ற செய்திகளைச் சங்க இலக்கியங்களில் காண முடிகிறது.

விடை சிவனது கொடியாகவும், ஊர்தியாகவும் விளங்கியது. வேத முதல்வன் எனவும் போற்றப் பெற்றான். சிவன் கோயிலை வலம்வரும்போது பாண்டியன் குடை தாழ்ந்திடுமாறு காரிகிழார் உரைப்பர்.

சிவனின் மனைவியாம் உமையும் போற்றப்பெற்றாள். முற்காலத்தில் அவளைக் கொற்றவை என்றும், மலைமகள் என்றும் பழையோள் என்றும் கூறி வணங்கினர் (அகம்.345, திருமுருகு.257-259).

சிவன் கொடுகொட்டி, காபாலி, பாண்டுரங்கம் எனும் கூத்துக்களை ஆடினான் எனப் புகழ்ந்தனர். (கலி.1)

உலகம் முழுவதும் பல பெயர்களில் பரவியிருந்த அவ்வணக்கமே சிவ வணக்கமாகத் தென்னகத்தில் வேரூன்றி நின்றது என அறிய முடிகிறது. தமிழர்க்கேயுரிய கடவுள் என்றும் துணியலாம்.

முத்தமிழ்க் காப்பியமான சிலம்பிலும் சிவபெருமானைப் பற்றிய செய்திகளை இளங்கோவடிகளார் கூறியுள்ளது இங்கு நினைக்கத்தக்கது.

## சிவபெருமானைப் பற்றிக் கூறும் பக்தி இலக்கியங்கள்

தமிழில் எந்த ஒரு இலக்கிய வகையும் குறைவறவும் பல துறை நிறைவுறவும் வளர்ந்திருப்பதைக் கண்டு தமிழர் மகிழலாம். இறைவன் மீது அன்பெய்தியவர்களாகிய பக்தர்கள் உள்ளம் உருக, வழிபாடு செய்து பாடியவை பத்திப் பாடல்கள் எனப்படும். தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் எனப்படும் இப்பாடல்கள் உணர்வாலும், அளவாலும் உலகிலுள்ள எம்மொழியிலும் காணப்படாத அளவு தமிழ் மொழியில் காணப்படுகின்றன. எனவேதான் தனி நாயக அடிகளார் தமிழைப் பக்தி மொழி என்றாலும் பொருந்தும் என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்.

பக்தி இலக்கியங்களாகிய பன்னிரு திருமுறைகளில் உள்ள பன்னிரண்டு நூல்களும், மெய்கண்ட சாத்திரங்கள் (அ) சித்தாந்த சாத்திரங்களில் உள்ள பதினான்கு நூல்களும், பண்டார சாத்திரங்களில் உள்ள பதினான்கு நூல்களும் சிவபெருமானின் பெருமைகளையும் சைவ சமயத்தின் பெருமைகளையும் முழுக்க முழுக்க எடுத்துரைப்பனவாகும். இவ்வாய்வின் எல்லைகருதி அவற்றைப் பற்றி இங்கு ஏதும் குறிப்பிடவில்லை.

இந்த சைவ சமயத்திலிருந்து சில வேறுபட்ட கோட்பாடுகளுடன் பிற் காலத்தில் கொண்டெழுந்ததே 'வீர சைவம்' என்னும் ஒப்பற்ற சிவநெறியாகும்.

## 2: 2: 4. வீர சைவம்

சிவம் என்னும் பெயரையுடைய சிவந்த மேனியினனான எம்பெருமானைப் பரம்பொருளாகக் கொண்டு வணங்கும் நெறியைச் சைவம் என்பதும், சிவபரம் பொருளை வணங்குபவர்கள் சைவர் என்பதும் நாம் அறிந்ததே.

### பெயர்க்காரணம்

சைவம் என்ற சொல்லோடு வீரத்தைச் சேர்த்துக் கூறுவதற்குரிய காரணங்களை அறிஞர் பலர் பலநோக்கில் விளக்கியுள்ளனர்.

### வீரசைவன்

வி-விகற்பம்; ர - ரகிதம். வீரசைவம் என்பது விகற்ப ரகிதமான சைவம், வேறுபாடுகளை நீக்கிய சைவம். வேறுபட்ட வேத

வாக்கியங்களை இணைத்துக் காட்டி ஏற்றுக்கொண்ட சைவம் என்பதாகும்.

இதனை,

**"அருமறை முடியும் சீர்சால்**
**ஆகம முடியும் ஒத்துப்**
**பெருமறம் இலாமல் முற்றும்**
**பொருளினை விளங்கக் காட்டித்**
**தருமுறை யதனால் வீர**
**சைவமே தலைமைத் தாம்இவ்**
**இருமறு வறுநன்னூலும்**
**இதற்பிர மாண மாகும்."[1]**

எனப் பிரபுலிங்க லீலை விளக்கம் தருகிறது. வி - ஞானம், ர - ரமிப்பவன் சிவ ஜீவர்களின் இணைப்பைத் தெரிவிக்கும் ஞானத்தில் என்றும் தன்னை மகிழ்வித்துக் கொண்டவன். சிவ ஜீவ ஞானமுள்ள சிவபக்த வீரன். இதனை

**"தீத கன்ற சிவசிவ யிக்கியமாம்**
**வீத ரும்பெரு வித்தையி னன்குறச்**
**சாதமின்றி ரமிக்குமச் சைவன்மற்**
**றோதி லன்னோன் உயர் வீர சைவனே"[2]**

என்று சித்தாந்த சிகாமணி விளக்கம் தருகிறது. இவை வீரசைவர்கள் இத்தகைய ஒழுக்கமுடையவர்கள் என்று தெரிந்து கொள்வதற்குத் துணை செய்கின்றனவேயன்றி 'வீர' என்னும் சொல் ஏன் இணைக்கப்பெற்றது என்ற வினாவிற்குப் பொருத்தமான விடையளிக்க கூடியதாக இல்லை. இதனைப்பற்றி இரத்தின சபாபதி அவர்கள் தமது நூலான 'வீர சைவம்' என்னும் நூலில் ஆய்வு செய்துள்ளார். அவர் முடிவின்படி,

"வீரம் இருவகை, லௌகீகம், அலௌகீகம் என உலகியல் வாழ்வில் வெற்றி பெறுதல் லௌகீகம். நிரதிசயமான அன்புக்கு ஆதாரமான இட்டலிங்கமே தன் உயிரினும் சிறந்தவஸ்து என நம்பி அவ்விட்ட லிங்கத்துக்காகவே தன் உயிரை நிர்மலமான பக்தியினால் அர்ப்பணம் செய்யக் கூடிய மனோவீரம் உடையவனே அலௌகீக வீரன். சுவர்க்க இன்பத்தை வெறுத்து, இட்டலிங்க வழிபாடு ஒன்றே ஆனந்தமெனக்

---

1. பிரபுலிங்கலீலை, மான்மியகதி, செய்யுள். 13
2. சித்தாந்த சிகாமணி உபதேசம், செய்யுள். 15

கொள்ளுதல் அலெளகீக வீரம். இத்தகைய அலெளகீக வீரம் உடையவன் வீர சைவன் எனப்பெற்றான்.

தடைகளினால் தடுத்து நிறுத்தப்படுபவன் வீரனாகான். சூதகம், முதலான எத்தடைகளாலும் தடுத்து நிறுத்தப்பெறாமல் இட்டலிங்கம் என்ற ஞான வாளோடு திரிபவன் வீரசைவன்.[1] எனும் கருத்துகள் ஏற்கத்தக்கனவாக உள்ளன.

## வீரசைவம்

பேராசிரியர் 'சாக்ஹோர்' அவர்கள் இலிங்கதாரண சந்திரிகா என்னும் பெயரிய வடமொழி நூலைப் பதிப்பித்துள்ளார். அந்நூலின் முன்னுரையை ஆங்கிலத்தில் எழுதிய அவர் வீர சைவத்தின் பெயர்க் காரணத்தை எழுதுகிறார்.

கி.பி. 12ஆம் நூற்றாண்டில் ஜைனமும், வைணவமும் உயர்நிலைக்கு வந்தன. சைவம் வீழ்ச்சியடைந்தது. அப்போது ஒரு தலைமகனார் தோன்றி, குறைந்த கால அளவிலேயே சைவக் கருத்துக்களைப் புரட்சியுடையதாக ஆக்கினார். அவருடைய முயற்சியானது வீரம் வாய்ந்தது. அடைந்த பயனும் விளக்கமானது. சைவம் வருனாசிரம முறைகளினால் உண்டாகிய கேடுகளைத் தகர்த்து வெற்றி கொண்டெழுந்தது. வீர சைவத்தைத் தோற்றுவித்த அத்தலைமகனார் யாரெனில் அப்போது கன்னட மாநிலத்து அரசனின் முதலமைச்சராவார். 'வீரம் நிறைந்த சைவக் கொள்கை' என்பது வீர சைவ சமயம் என்பதற்குரிய விளக்கம்.[2]

## வீர சைவத் தோற்றம்

வீர சைவத் தோற்றத்தைக் கூறும் மரபு வழிபட்ட வரலாறு ஒன்று உண்டு.

## பஞ்சாசாரியர்கள் மரபு

வீர சைவம் காலங்கடந்த தொன்மையது. இரேவணராத்யா, மருளராத்யா, பண்டிதராத்யா, ஏகோராமராத்யா, விசுவராத்யா என்ற ஐந்து ஆசாரியர்கள் (பஞ்சாசாரியர்கள்) பரமசிவனின் ஐந்து முகங்களி லிருந்து வெளிவந்தார்கள். அவர்களால் தோற்றுவிக்கப்பெற்றதே வீரசைவம்.

1. வீர சைவம், (ப.ள் 9-10)
2. வீர சைவம், (ப.1)

## பசவ மரபு

இந்த மரபு தவிர கன்னட நாட்டில் பசவ மரபு என்ற ஒன்றும் உள்ளது. பேராசிரியர் சாக்ஹேர் மேற்கூறிய கன்னட நாட்டின் பெருமகனார் வசவேசரே இம்மரபைத் தோற்றுவித்தவர்.

எந்த மரபாயினும் வர்ணாசிரம தர்மங்களை எதிர்த்தமையால் வீரசைவம் எனப் பெயர் பெற்றது என்பதை நாம் ஒத்துக் கொள்வதில் தவறில்லை. இக்கருத்துகளை வலியுறுத்தும் வகையில் 'சடத்தலம்' என்ற இந்த ஆய்வேட்டில் பல கருத்துகள் அமைந்துள்ளன என்பது வெள்ளிடைமலை.

## வீர சைவர்தம் கொள்கை

ஆரியக்கருத்துக்களை மறுத்தவர்கள் 'வீரசைவர்' எனப்பெற்றனர் என்பது மறைமலையடிகள் கருத்து.[1] வேதங்களை முற்றாக எதிர்ப்பது வீர சைவத்தின் நோக்கமன்று. சாதி, சமயக் கட்டுக்கோப்பு, உயிர்ப்பலி கொடுத்தல் போன்ற செயல்களுக்கு ஆதரவாக வேதக்கருத்துகள் கூறப்படுமானால் அவைகளை ஏற்றுக் கொள்ளாமல் எதிர்ப்பது வீர சைவத்தின் கொள்கை எனலாம்.

வேதக் கொள்கைக்கும் ஆகமக் கொள்கைக்கும் வேறுபாடு எங்கேயாவது வருமானால் வேதக் கொள்கையைவிட ஆகமக் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பது வீர சைவர்தம் கொள்கையாகும்.

சாதி வேறுபாடுகள் வீரசைவருக்கும், வீர சைவத்திற்கும் உடன்பாடன்று.

## வீர சைவமும் - இலிங்கமும்

வீர சைவம் 'இலிங்ககாயதம்' என்ற சொல்லாலும் குறிக்கப்பெறுகிறது. 'இலிங்காயதம்' என்ற சொல் இலிங்கமாக ஆதல் அல்லது ஆக முயலுதலுக்குரிய நெறி என்ற பொருளைத்தரும் இக்கொள்கையைக் கடைப்பிடிப்பவர்கள் 'இலிங்காயதர்கள்' என அழைக்கப்பெறுவர். இவர்கள் இலிங்கத்தை உடம்பில் தரித்திருப்பர். இதனைப் பற்றிய விளக்கம் சிறப்பு நிலை ஆய்வில் அமைகிறது.

## வீர சைவ நெறி

வீர சைவத்தின் நெறியாக ஐவகையொழுக்கம், எண்வகைக் காப்பு, சடுத்தலம் என்ற மூன்று நெறிகள் உள்ளன.

1. சைவசித்தாந்த ஞானபோதம், ப.86

## ஐவகையொழுக்கம்

1. இலிங்கவொழுக்கம், 2. தன்னிறுத்தவொழுக்கம், 3. சிவ ஒழுக்கம், 4. தாழ்வெனும் சைவ ஒழுக்கம், 5. கூட்டமைப்பு ஒழுக்கம் என்ற ஐந்து ஒழுக்கங்கள் கூறப்படுகின்றன.

## எண்வகை காப்பு

இதில் எண்வகைக் காப்புகளாக 1. திருநீறு, 2. உருத்திராக்கம், 3. மந்திரம், 4. குரு, 5. லிங்கம், 6. சங்கமம், 7. பாதோதகம், 8. பிரசாதம் என்பனவாகும்.

## சடுத்தலம் (அ) அறுவகையிணைப்பு

பத்தன், மகேசுவரன், பிரசாதி, பிராணலிங்கம், சரணன், ஐக்கியன் இவை இலிங்கமாக மாறும் தன்மை நெறியாகக் கொள்ளப்படுகிறது.

'சடத்தலம்' என்னும் இவ்வாய்வேட்டில் உள்ள பரமரகசிய சடத்தலம், வீராகம சடத்தலம் என்ற இரு நூல்களிலும் சடுத்தல நெறி மட்டுமே பேசப்படவில்லை. வீர சைவத்தின் ஏனைய நெறிகளான ஐவகையொழுக்கம், எண்வகைக்காப்பு இவற்றின் நெறிகளையும் இந்நூல் விரிவாக உரைக்கின்றது. எனவே, சடத்தலம் என்னும் வீர சைவ நூல்கள் விளக்கும் வீர சைவ நெறிகளில் சடுத்தல நெறியும் ஒன்று என்று தெளிவு பெறலாம்.

## வீர சைவ நூல்கள்

"தமிழ் நூல்களில் திருமூலர் செய்தருளிய திருமந்திர மாலையொன்றே வீரசைவ சமய நுண்மைகளை எடுத்தோதும் பழைய நூலாக உள்ளது. ஏனைய வீர சைவ சித்தாந்த நூல்களெல்லாம் இந்நூலுக்குப் பின்னர் எழுந்தவையாகும். அவை 'திருவாசகம், வசுவ புராணம், பிரபுலிங்க லீலை, சித்தாந்த சிகாமணி, வீர சைவதத்துவப் பிரகாசம், சிவஞான தீபம், வீராகமம், சடுத்தலம், சாந்தலிங்கர் நூல்கள் முதலியன வீர சைவ சமய உண்மைப் பொருள்களைக் கூறுகின்ற தமிழ் நூல்களாகும்.'[1] மேற்கூறிய நூல்களில் அடங்கியுள்ள 'சடுத்தலம்' என்பது ஆய்வில் விளக்கப்பட்டுள்ளது.

---

1. சிவஞானதீபம் (முன்னுரை, ப. X)

## 2:2. சடத்தலம் - ஆய்வு

### 2: 3: 1. நூற்பெயர்க் காரணம்

'பரம இரகசிய சடுத்தலம்', 'வீராகம சடுத்தலம்' என்ற இரண்டு நூல்களும் சுவடியின் நூல் தலைப்புகளாகக் குறிக்கப்பட்டுள்ளன. ஆனால் நூலின் பாடல்களில் 'சடத்தலம்' என்றே தெளிவாகக் காண முடிகிறது. இதனைக் கீழ்க் காணும் பாடலடிகள் தெளிவுறுத்தும்.

**'நீதியினால் விளங்கு சடத்தலத்தை யானும்'** (பாடல்.4)

**'சடத்தல லிங்கத்தியல்பு சாற்றுங் காலை'** (பாடல். 5)

**'உற்றசடத் தலப்பகுதி பத்த னாதி'** (பாடல். 79)

எனவே, சடுத்தலம் என்று எங்கும் நூல்களில் இடம் பெறாததினால் சடத்தலம் என்று ஏற்றுக்கொள்ளலாம். மேலும் 'சடுத்தலம்' என்பது வீரசைவத்தின் மூவகை நெறிகளில் ஒரு நெறி. இவ்விரு நூல்களும் மூவகை நெறிகளையும் தெளிவாகவும் விரிவாகவும் விளக்குகின்றன. எனவே, சடுத்தலம் என்று குறிக்கப்பட்டிருப்பது ஏடு பார்த்து எழுதியவர் செய்த பிழையாகக் கருதலாம்.

### சடத்தலம் - பெயர்ப் பொருத்தம்

'சடம்-உடல்', 'தலம்-கலப்பு' சீவனின் உடல் 'முழுவதும் மகாலிங்கம், பிரசாதலிங்கம், சிவலிங்கம், சங்கமலிங்கம், குருலிங்கம், ஆசாரலிங்கம் என்னும் ஆறு இலிங்கங்களினால் கலந்து இலிங்கமயமாகவே உள்ளதால் 'சடத்தலம்' என்று கூறுதல் பொருத்தமாக உள்ளது.

### பரம இரகசிய சடத்தலம்

ஆன்மாவின் (உயிர்) உடலும், ஐம்புலன்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றோடு இருதயமும் சேர்ந்த ஆறும், அவற்றினால் விளையும் ஊறு, சுவை, ஒளி, மணம், ஓசை, மனஅமைதி என்னும் உணர்வுகள் ஆறும் இலிங்கமாகவே ஒன்றனோடு ஒன்று கலந்துள்ளன. மேலும் சிவபெருமானின் ஐந்து முகங்களிலிருந்து தோற்றம் பெற்ற ஐம்பெரும் பூதங்களும் உயிர்களும், உயிர்களின்

புலன்கள், பொறிகள் அந்தக்கரணங்கள் ஆகிய அனைத்தும் கூட இந்த ஆறு இலிங்கங்களின் மயமாகவே உள்ளன. இந்த அண்டம், பிண்டம் அனைத்தும் ஆறு இலிங்கங்களின் கலப்பே என்னும் இரகசியத்தைத் தெரிவிப்பதால் நூலுக்குப் 'பரம இரகசிய சடத்தலம்' எனப் பெயர் அமைந்துள்ளது.

### வீராகம சடத்தலம்

'சடம்' என்பது ஆறு என்ற பொருளையும் தரும். சில நிகழ்ச்சிகள் நிகழ்வதற்கு ஆதாரமாக இருக்கின்ற அமைப்பினை அல்லது சூழலைத் தலம் என்று வீரசைவம் குறிப்பிடுகிறது.[1]

சீவன் இறைவனோடு ஐக்கியமாகக் கலக்க வேண்டும். இலிங்கமயமாக ஒன்றுதல் வேண்டும் என்பதுவே வீரசைவ நெறி. 'பத்தன், மகேசுவரன், பிரசாதி, பிராணலிங்கி, வரணன், ஐக்கியன் என்ற இந்த ஆறு அமைப்பினைக் கொண்டு இறைவனோடு ஐக்கியமாதலாலும், அல்லது கலத்தலாலும் சடத்தலம் என்று கூறலாம். இறைவன் உரைத்த ஆகமங்களின் கருத்துகளின் அடிப்படையில் மேற்கூரிய ஆறு அமைப்பினை விளக்குவதால் வீராகம சடத்தலம்' என நூலுக்குப் பெயராக அமைந்துள்ளது. மேலும் பக்தி மார்க்கத்தில் 'ஆறு' எனும் எண்ணிற்கு ஒரு தனிப்பெருமை உண்டு. அதன் விரிவு இணைப்பில் கொடுக்கப் பெற்றுள்ளது.

## 2: 3: 2. நூலின் பயன்

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பயன்களையும் வலி யுறுத்துவனவாக நூல்கள் அமைதல் வேண்டும் என்று உரைப்பர். இந்நூலில் மிகுதியும் அறமே வலியுறுத்தப்படுகிறது. அந்த அறமும் உயிர்கள் இறைவனோடு இரண்டறக் கலத்தல் வேண்டும் என்ற நோக்கில் பேசப்படுகிறது. எத்தகைய அறங்களைக் கடைபிடித்து ஒழுகுதல் வேண்டும் எனவும் மிகுதியாகப் பேசப்படுகிறது. ஆக இறைவனிடம் கலப்பதே சிறந்த அறம், பேரின்பம் என்பதே நூலின் பயனாக அமைந்துள்ளது.

## 2: 3: 3. வீரசைவ நெறி

வீரசைவ நெறியில் 'ஐவகையொழுக்கம், எண்வகைக் காப்பு, சடுத்தலம்' என்ற மூவகை நெறிகள் உள்ளன. அவற்றின் நெறிகளையும் வீரசைவம் விரிவாக விளக்குகிறது. இவைமுறையே உயிர்களை

1. வீரசைவம், ப. 189

ஆத்மனாகவும், ஆத்மனை அங்கனாகவும், அங்கனை இலிங்கமாகவும் மாறுவதற்கான நெறிகளைக் கொள்கைகளாக இவ்விரு நூல்களும் விளக்குகின்றன.

## 2: 3: 3: 1. ஐவகை ஒழுக்கம்

ஐவகையொழுக்கமாவது முறையே இலிங்கவொழுக்கம், தன்னிறுத்தலொழுக்கம், சிவவொழுக்கம், தாழ்வெனும் சைவ ஒழுக்கம், கூட்டமைப்பு ஒழுக்கம் எனப்பெறும். இதையே வடமொழியில் இலிங்காசாரம், சாதாசாரம், சிவாசாரம், பிருத்யாசாரம், கணாசாரம் எனக் குறிப்பிடுவதுண்டு.

இந்த ஒழுக்கங்களை ஒழுங்குடன் கடைபிடிக்காதவன் இறையின்பத்தின் உயர்நிலையை அடைய முடியாது. சமய ஒழுக்கம் என்பது பொதுவாகத் தனி மனிதனின் ஒழுக்கம் என்பதாகும். தனி மனித ஒழுக்கத்தை வலியுறுத்த வேண்டி வீர சைவம், அவனை ஒரு உலகப் பொதுமையாளனாக, ஒருமைப் பண்பாளனாக, ஆவதற்குரிய பயிற்சியை இந்த ஐவகை ஒழுக்கத்தில் வலியுறுத்துகிறது.

### இலிங்க ஒழுக்கம்

இலிங்க ஒழுக்கம் என்பது ஒளியுடன் ஒழுகும் ஒழுக்கம். வாழ்க்கையில் அனைத்துப் பொருள்களோடு ஒன்றி வாழ வேண்டிய நாம் உலக மயக்கம், ஆசை இவற்றின் இருளில் சிக்கிக் கொண்டுள்ளோம். அந்த இருளை அகற்றி ஒளி தரும் ஒழுக்கமே இலிங்க ஒழுக்கம் எனலாம்.

சாதி, குலம், கோத்திரம், சமயம், சடங்கு என்று குறுகிய மனப்பான்மை இல்லாத ஒரு பொது அமைப்பைக் குறிப்பதுதான் அண்டலிங்கம். வீர சைவர் பிண்டலிங்கி. தனிமை ஒளியானது பெருமை ஒளியில் இணைய வேண்டும். பிண்டலிங்கியாகிய வீர சைவன் அண்டலிங்கத்தில் இணைய வேண்டும். அனைத்துயிர்ப் பொருள்களும் இலிங்கங்களே. நம்மனைவரையும் இணைக்கும் அண்டலிங்கம் ஒன்று உண்டு. ஒளி செய்யும் இலிங்கிகளாக இருக்க வேண்டிய நாம், இருளுடைய அலிங்கியாக இருக்கிறோம். இதனை உணர்ந்து இலிங்க ஒழுக்கம் மேற்கொள்ளப் பெற வேண்டும்.

இத்தகைய இலிங்க ஒழுக்கத்தின் பெருமைகளைப் பிராணலிங்கி விதி சிறப்பாக எடுத்துரைக்கிறது. மேலும் பிற இடங்களிலும் இலிங்கத்தின் பெருமைகள் விளக்கப்படுகின்றன.

இலிங்காசாரம் என்பதற்கு நாள்தோறும் இலிங்கமே தெய்வம் என மதிக்க வேண்டும் என விளக்கம் கூறும் வீர சைவர்களும் உண்டு. அந்த நெறியை எண்வகைக் காப்பு என்பதனுள் வலியுறுத்துவர்.

## தன்னிறுத்தல் ஒழுக்கம்

தனக்குப் பிற உயிர்களால் வந்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுதலும், தான் எந்தக் காரணத்தைக் கொண்டும் பிற உயிர்களுக்கு இடையூறு செய்யாதிருத்தலும் வேண்டும்.

இழிவகையில் பிறரை ஏமாற்றிப் பொருள் சேர்த்தல், பிறர் உழைப்பை அவரறியாது தன்னுடையதாக்குதல் முதலியன சிறிதும் செய்யக் கூடாது.

சிக்கனமாக வாழ்ந்து பொருளைச் சேமித்துத் தானமாகப் பிறருக்கு வழங்க வேண்டும். அன்பளிப்புப் பொருள்கள் என்ற பெயரில் தேவையற்ற பொருள்களை வாங்கிச் சேர்த்தல் கூடாது.

## சிவவொழுக்கம்

வீரவொழுக்கம் மேற்கொள்ளுதல் வேண்டும். நாட்டுக்கும், ஊருக்கும் ஏற்படக்கூடிய பெரிய கேடு ஒன்று தோன்றுமானால் வீர சைவன் அதை நீக்கும் பணியில் தன்னை முன்னராகப் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும். திருப்பாற்கடலில் அமுதம் கடைந்தபோது ஏற்பட்ட நஞ்சினைத் தான் உண்டு பிறருக்கு அமுதத்தை வழங்கினான் சிவபெருமான். அவ்வாறே வீர சைவனும் பிறர்க்கு ஏற்படும் பெருங்கேடுகளைத் தவிர்த்தல் வேண்டும்.

தன்னைச் சேர்ந்தவர்களைத் தனக்கு அடிமைகளாகக் கருதுதல் கூடாது. தனக்கெனவே இன்பம் நாடுதலைத் தவிர்த்தல் வேண்டும். சிவவொழுக்கத்தில் தலை, உள்ளம், கை என்ற மூன்றும் இணைந்து தொண்டாற்ற வேண்டும்.

## தாழ்வு என்னும் தகவு

எல்லா உயிர்களிடத்தும் பணிந்து பழகுதல் வேண்டும். பறவை, மரம், செடி, கொடிகளாயினும் அவைகளும் உயிர்ப்பொருள்கள். அவைகளும் சிவனுடைய ஆலயங்கள் எனக் கொண்டு அவைகளிடமும் பெருந்தன்மையுடன் பழக வேண்டும். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலார், முல்லைக்கொடிக்குத் தேரீந்த பாரி ஆகியோரின் சிந்தனை இங்கு நினைக்கத்தக்கது.

வீரசைவன் உலக உயிர்களுக்குத் தான் ஒரு பணியாளன் எனக் கருதுதல் வேண்டும். உடன்பிறப்பாகக் கருதும்போது உலக உயிர்கள் அனைத்தும் சமம் என்ற எண்ணம் உண்டாகிறது. தாழ்வு என்னும் தகைமையை உலக உயிர்களின் பணியாளன் என்ற எண்ணத்தில்தான் பெற முடியும்.

### கூட்டமைப்பு ஒழுக்கம்

ஒரு நெறியில் ஈடுபடுபவர்கள் அந்நெறியில் ஈடுபடுபவர்களின் கூட்டத்தில் எப்போதும் பழகும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தான் மேற்கொள்ளும் துறையில் சிறப்பாக ஒழுகுவதற்கு அக்கூட்டம் வாய்ப்பளிக்கும். இந்நூல்கள் குருலிங்க சங்கமத்தின் பெருமைகளை விரிவாக விளக்குகின்றன. சிவனும், சிவனடியார்கள் கூடும் திருக்கூட்டமான சங்கமத்தில் ஒழுகும் ஒழுக்கங்களே கூட்டமைப்பு ஒழுக்கமாகும்.

## 2: 3: 3: 2. எண்வகைக் காப்பு

வீரசைவத் துறையில் ஐவகை ஒழுக்கமே முதற்படி. எண்வகைக் காப்பு இரண்டாம் படி. ஐவகையொழுக்கம் என்னும் முதற்படியில் நின்று வெற்றி எய்தியமையால் ஜீவன் ஆத்மன் ஆகிறான். எண்வகைக் காப்பினால் ஆத்மன் அங்கனாக மாறுகிறான்.

ஐவகை ஒழுக்கத்தில் கிரியை மட்டும் மூலமாக நின்றது. இங்கே கிரியையும் ஞானமும் இணைகின்றன. ஐவகையொழுக்கம் அனைவருக்கும் பொதுவாகலாம். எண்வகைக் காப்புதான் வீரசைவன் என்னும் தனித்தன்மை நல்கக் கூடிய சிறப்பு ஒழுக்கங்கள்.

ஆத்மன் அங்கனாக மாற வேண்டும். அதற்குரிய துணையாக அமைவது இந்த எண்வகைக் காப்பு.

உயிரானது உயர்நிலை பெறவேண்டுமானால் அதற்கு மனமும் உடலும் ஒத்துழைக்க வேண்டும். மனம் உட்கருவி; உடல் புறக்கருவி. மனம் என்ற உட்கருவியையும், உடல் என்ற புறக்கருவியையும் ஒழுங்கு செய்து தனக்குப் பயனாக ஆக்கிக் கொள்வதற்கு அமைத்துக் கொடுத்த வழி வகைகளே இந்த எண்வகைக் காப்பு.

**உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே**[1]

---

1. திருமந்திரம், செய்யுள். 724

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே[1]

மேலே கூறிய இரண்டு பாடல்களிலும் திருமூலர் உடம்பின் பெருமையை உணர்ந்து வளர்க்க வேண்டும் என்கிறார். உடம்பார் என உயர்வு கொடுத்துக் கூறுகிறார். உடம்பு இல்லையானால் உயிர் மெய்ஞ்ஞானத்தை அடைய முடியாது.

உடம்பினை வளர்த்தல் இருவகையாகும். உடம்பினுள் உள்ள தீமையை அழிக்க வேண்டும்; உடம்பினுள் இருக்கும் நன்மையை மிகுவிக்க வேண்டும். இந்த இரண்டையும் ஒருங்கே செய்வதுதான் இங்கேக் கூறப்பெறும் எண்வகைக் காப்பினுள் இருக்கும் உட்கருத்தாகும்.

எண்வகைக் காப்பு என்பன குரு, லிங்கம், சங்கமம், பாதோதகம், பிரசாதம், திருநீறு, அக்கமணி திருமந்திரம் ஆகும்.

## குரு

எண்வகைக் காப்பிலும் 'குரு'வுக்கே முதலிடம் தருதல் அனைத்துச் சைவ நெறிக்கும் உடன்பாடு ஆகும். பக்தனுக்குச் செம்பொருட் காட்சியை வழங்குபவர் குரு; அகக்கண்ணைத் திறக்கும் அருள் தந்தை குருவாவார்.

உலகை உய்விப்பதற்காக இறைவன் கொள்ளும் உருவம் அனைத்துமே குருலிங்க சங்கமத்துள் அடங்கிவிடும்.

கு - இழிவு; ரு - ஒழிப்பவன் - இழிவை ஒழிப்பவன் குரு. பிறப்பை உண்டாக்கும் அஞ்ஞான இழிவைத் தன் சிவஞானத்தால் ஒழிப்பவன் குரு.

சதாசிவத்தின் ஐம்முகங்களில் இருந்து தோன்றியவர்களே பஞ்சாசாரியர்கள் ஆவர்.

## இலிங்கம்

எண்வகைக் காப்பினுள் குறிக்கப்பெறும் இலிங்கம் இட்டலிங்கம். சிலை முதலியவைகளாற் செய்யப்பெற்று விளக்கமாக அமைந்த இலிங்கத்தை அருச்சனை செய்து மந்திரத்தாற் சுத்தி செய்து தம்முடைய தவவலத்தாலும் மந்திர வலிமையாலும் இட்டலிங்க பூசைத் திறத்தாலும்

1. திருமந்திரம், செய்யுள். 725

சிவகலையை முதலில் அதில் நிறுவுதல் வேண்டும். பின்னர், மாணாக்கனுடைய உயிரைக் கொண்டு வந்து அச்சிவலிங்கத்தில் மீளவும் இணைதல் வேண்டும். சிவகலையை மாணாக்கன் உடலில் தரிப்பர். எனவே, இட்டலிங்கம் என்பதைத் தனது உயிரும் சிவனும் கூடியிருக்கும் இணைப்பு என நினைத்தல் வேண்டும்.

மாணவன் உடம்பில் உள்ள இட்டலிங்கம் அவனுடைய ஆறு ஆதாரங்களிலும் அமைந்துள்ள ஆறு இலிங்கங்களையும் சென்று பொருத்தும் ஐம்புலன்களை அடைந்து அங்குள்ள நுகர்ச்சிகளை அறியும். எனவே, மாணாக்கன் இட்ட இலிங்கத்தின் மூலமாகத்தான் எல்லாத் தொடர்பையும் கொள்ள முடியும்.

இட்டலிங்கத்துள் உள்ள சிவகலையில் இணைபவை

1. பரம், சிவம், குரு, இலிங்கம், சங்கமம், என்னும் ஐம்பிரமம்.
2. சிவசாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கரிதரு சாதாக்கியம், கர்ம சாதாக்கியம் என்னும் பஞ்ச சாதாக்கியம்.
3. சாந்தியதீதை, சாந்தி, வித்யா, பிரதிட்டை, நிவர்த்தி என்னும் பஞ்ச கலைகள்.
4. பரா, ஆதி, இச்சை, ஞானம், கிரியை என்னும் பஞ்ச சத்திகள்.
5. ஈசானம், தற்புருடம், வாமம், சத்யோசாதம் என்னும் ஐம்முகங்கள்.

இவ்வளவும் இணைந்த இட்டலிங்கத்தில் சத்தியோசாத முகத்தின் மூலமாகவே பூசை செய்ய உரிமை பெற்றிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனைப் பரம இரகசிய சடத்தல நூல் விரிவாக விளக்குகிறது. மேலும் இவை போன்றவற்றை இணைப்பில் உள்ள அட்டவணையில் தெளிவாகக் காணலாம்.

**சங்கமம்**

சங்கமம் என்பவர்கள் வீரசைவ ஜீவன் முத்தர்கள் இவர்களைச் சரலிங்கம் என்று சொல்லும் வழக்கம் உண்டு. நூலிலும் ஆசிரியர் 'சங்கமலிங்கம், சரலிங்கம்' என்ற இரண்டையும் பயன்படுத்தியுள்ளார்.

நிகம, ஆகம என்ற சொற்களைப் போல சங்கம் உள்ள கம என்ற வேர்ச் சொல்லிலிருந்து இவர்கள் அறிவுத் தோற்றத்துக்கு இலக்கணமானவர்கள் எனலாம். வீரசைவர்கள் வழி நடத்திச் செல்லும் பணியில் ஈடுபட்டவர்கள், கடவுள் தொடர்பும், மக்கள் தொடர்பும்

ஒருங்கே பெற்றவர்கள். ஒரே இடத்தில் தங்கி இல்லாமல் பல்வேறிடங்களுக்கும் செல்பவர்கள் ஆகையால், 'சரலிங்கம்' என்றும் 'சரணர்கள்' என்றும் சொல்லப்பெற்றனர்.

வசவேசர் காலத்தில் அல்லமாப்பிரபு தேவர் சங்கமராக மதிக்கப் பெற்றார். இந்நூலில் அல்லமாப்பிரபு தேவர், வசவேசர் ஆகியோரை குருமரபிலும், வணக்கத்திலும் குறிப்பிட்டுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.

சங்கமர் வேறு, சரணர் வேறு என்ற கொள்கை உண்டு. சங்கமர்கள் கூட்டத்தவர்களாக இருப்பர்; சரணர்கள் தனித்தவர்கள். சங்கமர்கள் அவதாரப் புருடர்களைப் போன்றவர்கள். அல்லமாப்பிரபு தேவர், வசவேசர் போன்றவர்கள் சங்கமர்கள். கடவுளால் பணிக்கப் பெற்ற சில குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்றுவதற்காக வந்தவர்கள். அவர்கள் கர்மாவை வென்றவர்கள். கர்மாவினால் இவ்வுலகில் வந்து பிறந்தவர்கள் ஆகார். சீவன் முத்தர்கள். சரணர்களும் சீவன் முத்தர்களே. ஆனால் அவர்கள் இவ்வுலகில் நம்மைப் போலப் பிறந்து தம்முடைய சடத்தல நெறியில் வளர்ச்சி பெற்றுச் சீவன் முத்தர்களாக ஆனவர்கள்.

## பாதோதகம்

திருவடி நன்னீர். குருவின் திருவடிகளையும் சங்கமர்கள், திருவடிகளையும், திருமஞ்சன மாட்டிய பாதோதகம் எடுத்து வீட்டில் பாதுகாப்பாக வைக்க வேண்டும் நாள்தோறும் தேவைப்படும் தண்ணீர், சமையலுக்கு வேண்டிய தண்ணீர் ஆகியவைகளில் சிறிது பாதோதகம் சேர்த்துத்தான் செய்ய வேண்டும். பாதோதகம் சம்பந்தப்படாத எந்த ஒன்றையும் வீரசைவன் உட்கொள்ளலாகாது.

பாதோதகம் ஏனைச் சைவத்துறைகளில் இத்துணையளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பெறவில்லை. பாதோதகம் ஞானநன்னீர், வீரசைவச் சிறப்புக் கொள்கை என்று கொள்ளலாம். திருமூலர் பாதோதகச் சிறப்பை எடுத்துக் கூறுகிறார்.

**"மாத்திரை ஒன்றினில் மன்னி அமர்ந்துறை**
**ஆத்தனுக்கு ஈத்த அரும்பொரு ளானது**
**மூர்த்திகள் மூவர்க்கும் மூவேழ் குரவர்க்கும்**
**தீர்த்தம தாம்அது தேர்ந்துகொள் வீரே"[1]**

1. திருமந்திரம், செய்யுள். 1859

"அறியாப் பருவத்து அரன்அடி யாரைக்
குறியால் அறிந்துஇன்பம் கொண்டது அடிமை
குறியார் சடைமுடி கட்டி நடப்பார்
மறியார் புனல்மூழ்க மாதவ மாமே"[1]

திருமூலர் காலத்திலேயே பாதோதகம் வீர சைவத்துள் ஒரு கவசமாகக் காட்டப்பெற்றுள்ளது. இருந்தபோதிலும் பாதோதகத்தின் நுட்பம் அவ்வளவாக சிறப்பாகப் பேசப் பெறவில்லை. இந்நூலில் பாதோதகத்தின் பெருமை விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

## பிரசாதம்

குருவால் சங்கமர்களால் ஏற்றுக் கொடுத்த எல்லாம் பிரசாதமே. அருள்மலிந்த அவர்தம் திருக்கண்களால் நோக்கப்பெற்றவை. திருக்கரங்களால் தொடப்பெற்றவை. அவர்கள் உணவு கொண்டு எஞ்சிய சேடம் எல்லாம் பிரசாதம். வீர சைவர்களின் திருமாளிகை வீர சைவத் திருமடங்கள் ஆகியவற்றில் பிரசாத குண்டம் இருக்கும். உண்டு எஞ்சிய சேடம் அங்கேக் கொட்டப்பெறும். சேடம் தெய்வத் தன்மை பொருந்தியது என்று கருதுதல் வேண்டும்.

தன்னிடமிருக்கும் எந்த ஒன்றையும் குரு, இலிங்க, சங்கமர்களுக்கு காணிக்கை செய்து விடுகிறான் வீர சைவன். எதையும் இறைவனுக்கு அர்ப்பணித்து விடுகிறான். அவர்களால் தூய்மை செய்து கொடுக்கப் பெற்றவைகளையேதான் ஏற்றுக் கொள்கிறான். எந்த ஒன்றையும் அவன் என்னுடையது என்று கொள்வதே இல்லை. என்னுடையது இல்லை இது குருலிங்க சங்கமர்களாற் கொடுக்கப்பெற்ற பிரசாதம் என்று எண்ணி மகிழ்வோடு உட்கொள்ளுகிறான். என்னுடையது என்ற எண்ணம் இல்லாமையினால் மேல்வரும் வினையில்லை.

இனி எச்செயலையும் அவன் 'தான் செய்தேன்' என்று சொல்வதில்லை. தானாகச் செய்ய வேண்டிய - செய்த செயலையும் குரு, இலிங்க, சங்கமத்தின் பிரசாதம் என்று எண்ணும்போது மகிழ்வாக அனுபவிக்கவும் முடிகிறது. மேல்வரும் வினையும் அவனுக்கு இல்லை.

பாதோதகம், பிரசாதம் இரண்டுமே உலகில் மக்கள் அனுபவிக்கின்ற எல்லாப் பொருள்களுக்கும் தெய்வத்தன்மையை வழங்குகின்றன. வீர சைவ சமுதாயத்தில் தெய்வத் தன்மையோடு இணையாத எப்பொருளும் இல்லை.

---

1. திருமந்திரம், செய்யுள். 1879

1. குருலிங்க சங்கமர்களால் பிரசாதமாகக் கொடுக்கப்பெற்றது.

2. குரு, இலிங்க, சங்கமர்களுக்குப் பிரசாதமாகக் கொடுக்கப்பட வேண்டியது, இருவகையிலும் தெய்வத்தன்மை வாய்ந்தவைகளே.

மேற்கூறிய பாதோதகம், பிரசாதம் இவற்றின் வீராகம சடத்தலத்தில் பிரசாத வீதியில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

## திருநீறு

> "புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
> வாய்மையாற் காணப் படும்."[1]

என்கிறார் திருவள்ளுவர்.

தண்ணீரால் புறத்தின் அழுக்குகள் நீங்குவது போலத் திருநீற்றால் உடல், மனம், உயிர் ஆகியவற்றின் அழுக்குகள் நீங்கும் என்பது இதன் பெருமை. திருநீற்றின் பெருமையை உணர்த்துவதற்கு வந்த அவதாரமே திருஞானசம்பந்தர் அவதாரம். சிவபாதவிருதயர் ஒரு பிள்ளை வேண்டும் எனத் தவம் இருக்கிறார்.

"அரண் அடியார்பால் பூதி சாதன விளக்கம் போற்றல் பெறாது ஒழியக் கண்டு ஏதமில் சீர்ச் சிவபாத இருதயர் தாம் இடருழந்தார்"[2] என்பார்.

வீரசைவர்கள், நடுவிரல் அதற்குப் பக்கத்தே உள்ள ஆழிவிரல் என்ற இரண்டாலும் இடப்பக்கத்துக் கடைசியிலிருந்து தொடங்கி இரண்டு கோடுகள் இழுத்து வரவேண்டும். வலது பக்க எல்லை வந்தபின் வலது கட்டை விரலால் வலது எல்லை முதல் இடது எல்லை வரை இழுத்துத் தொடங்கிய இடத்திலே கொண்டுபோய் நிறுத்திவிட வேண்டும். இது வீரசைவ முறை. கட்டை விரல் இறைவனைக் குறிப்பதாதலின் அதனை இணைத்து, அவன் அருள் பெறுவதாக எண்ணி இம்மாற்றம் அமைக்கப்பெற்றுள்ளது. வீரசைவன் திருநீறு அணிவது கற்புடை மங்கை மஞ்சள் பூசுவதைப் போன்றது.

## உருத்திராக்கம்

உருத்திராக்கம் அக்கமணி என்றும் கண்டிகை என்றும் கூறப்பெறும். கற்புடை மங்கையானவள் கணவனால் விரும்பிக் கொடுத்த அணிகளை

1. திருக்குறள்
2. பெரியபுராணம், திருஞானசம்பந்தர் புராணம், செய்யுள். 18

அணிவது போன்றது. இது இறைவன் திரிபுரங்களை எரித்தபோது, அவர்களை எரித்த நெருப்பு இறைவனின் சிரிப்பொலியிலிருந்து எழுந்தது. திரிபுராதிகள் எரிந்து அழியும்போது இறைவனுடைய திருக்கண்களிலிருந்து இரக்கங் காரணமாகக் கண்ணீர் சிந்தியது. அக்கண்ணீரின் வடிவமே உருத்திராக்கம். உருத்திரனுடைய அக்கம் - கண் இதனால் அக்கமணி எனவும் வழங்குவர்.

பூதவுடல் பொன்னுடலாக மாறுவதற்குத் துணைபுரிவது உருத்திராக்கம் அணிதலாகும்.

### திருமந்திரம்

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"[1]

என்பது தொல்காப்பிய நூற்பா. இதையொட்டியெழுந்தது திருக்குறள்,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"[2]

நிறைமொழி மாந்தர் தாமாகச் சொல்லாமல், தமக்கு மேல் அமைந்துள்ள ஆணை காரணமாகச் சொன்ன மறைமொழியே மந்திரம் என்பது தொல்காப்பியர் கருத்து. திருவள்ளுவர் நிறைமொழி மாந்தர் தாங்களாகவே நேராகவே கூறும் நிலையுடையவர் என்று கூறுகிறார்.

நினைப்பவரைக் காப்பது என்பது 'மந்திரம்' என்னும் சொல்லின் பொருள்

"பேதமாம் ஏழுகோடி மந்திரங்களின் பெரிதாம்
போத ஐந்தெழுத்தாகிய புனித மந்திரம்"[3]

என்று சிவப்பிரகாச அடிகள் கூறுவர்.

நமச்சிவாயப் பதிகம் பாடிய திருநாவுக்கரசர் கல்லைத் தெப்பமாகக் கொண்டு கரையேறினார். பிறவி என்னும் கடலில் ஆணவம் என்னும் கருங்கல்லில் கன்மம், மாயை ஆகிய கயிற்றால் உயிர்களைக் கட்டிப் போட்டபோது திருவைந்தெழுத்தை ஓதினால் அது அவர்களைக் கரைசேர்க்கும் ஆற்றல் வாய்ந்தது.

---

1. தொல்காப்பியம், நூற்பா. 1434
2. குறள். 28
3. சிந்தாந்தசிகாமணி, பஞ்சாக்கர செபத்தலம், செய்யுள். 4

## 2: 3: 3: 3. சடுத்தலம்

ஐவகையொழுக்கத்தின் துணையாக வீர சைவ சீவன் ஆத்மன் ஆனது போல், எண்வகைக் காப்புப் பயிற்சியால் வீர சைவ ஆத்மன் அங்கன் ஆனதுபோல சடுத்தலப் பயிற்சி என்பது அங்கனை ஐக்கியன் ஆக்குகிறது.

வீரசைவன் முதலில் பக்தி என்ற நறும்புனலுள் மூழ்கித் தன்னைத் தூய்மையான பக்தியால் நிறைவு செய்து கொள்கிறான். பின்னர் இட்ட லிங்கத்திற்குப் பூசை செய்கிறான். என் கைத்தலத்தினுள் இருக்கும் மாமணியே பதி; யான் அவனுக்குச் சதி. என் கைத்தலத்தினுள் இருக்கும் இம்மாமணியே; என் பிராணனில் இருக்கின்ற பிராணலிங்கம் என்ற ஞானத்துடன் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டும். இந்நிலையில் அவன் பத்தி, கருமம், ஞானம் ஆகியவைகளை இணைத்து ஒத்தநிலையில் அவைகளைத் தமக்குத் துணையாக்கிக் கொண்டுள்ளவன் ஆகிறான். இந்நிலையில் அவன் தன் இட்ட லிங்கத்தை எடுத்து முகத்துக்கு நேரே நிறுத்தி அதைப் பார்த்து பல்வேறு நிலைகளில் யோகம் செய்வான்.

சடுத்தலயோகம் பாதோதகம் என்னும் ஞானநீரைத் துணையாகப் பெற்று நேரே மூலாதாரம் சென்று அங்குள்ள தாமரையில் இணைத்துள்ள ஞானவடிவாம் இலிங்கத்தைப் பற்றுகிறது. சிவகலையும், சீவகலையும் சேர்தல் என்ற ஒன்றை முதன்முதலாகச் சேர்த்துக் காட்டி அதை எப்படி இறுகப் பற்றிக்கொள்ள வேண்டும் என்ற முறையை, வீரசைவன், இலிங்காதாரணம் செய்து கொள்ளும்போது உணரவில்லையாயினும் குருவானவர் அவ்வாறு அமைத்துக்காட்ட அதன் மூலமாகவே பயிற்சி பெற வேண்டும். யோகங்களின் நிலைக்ளையெல்லாம் உணர்ந்தபின் இட்டலிங்கத்தைப் பாதோதகத்தை நினைத்தால் உண்மை புரியவரும். குருவின் பெருமையும் தெரியவரும். இவைகளையெல்லாம் குருவானவர் கர்ப்பலிங்கதாரணத்தில் இணைப்பார். அப்போதுதான் இட்டலிங்கம் போன்றவை உணர்வாக மதித்துப் பழகும் தன்மை பிறப்பிலேயே ஊறிவரும்.

இந்நெறி சென்றவர்கள் சீச ஒளியைச் சீவனுக்குள் உள்ளொளியாக இருந்த சிவஒளியைப் பெருக்கித் தம் ஒளியைச் சிவவொளிக்குள் கொண்டுபோய் இணைத்துவிடுவர். இதுவரை சிற்றொளியாக இருந்தது பேரொளியாக ஆயிற்று. சீவவொளி அதனுள் ஒடுங்கி விடுகின்றது. இதுதான் இறைவனோடு அயிக்கியமான எங்கும் பரந்திருக்கும் இலங்கொளியாகும். இதனைத் திருமூலர்,

"ஓமத்தோர் உள்ளொளிக்குள்ளே உணர்வார்கள்"[1]

இவர்களுக்கு ஆறாதாரங்களில் நிற்பது இலிங்கமே. எழுத்துகள் நகர முதல் ஓம் வரை. இவர்களுக்குப் பிற தெய்வ வணக்கம் இல்லை, இவர்கள் உயர்வையும் ஏனையோர் தாழ்வையும் இணைத்துத் திருமூலர்,

**"உள்ளுண்மை ஓரார், உணரார் பசுபாசம்
வள்ளண்ம நாதன் அருளினின் வாழ்வுறார்
தெள்ளுண்மை ஞானச் சிவயோகம் சேர்வுறார்
கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறி யாரே"[2]**

என்றார்.

இந்தச் சடுத்தல யோக நெறியைப் பரம இரகசிய சடத்தலம் விரிவாக விளக்குகிறது.

## 2: 4. தொடை நயம்

இந்நூலில் உள்ள அனைத்துப் பாடல்களும் தொடை நயத்தோடு அமைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் எழுத்து ஒன்றி வர அனைத்துப்பாடல்களும் அடியெதுகைத் தொடையாக அமைந்துள்ளன.

## 2: 5. உவமை நயம்

சமயம் சார்ந்த நூலாக இருப்பினும் பல்வேறு இடங்களில் உவமை நயங்களைப் பொருத்தமான முறையில் கையாண்டுள்ளார்.

சிவலிங்கத்தை அணிந்துள்ள உடல் சிவன் உருவமாக மாறும். இதனைப் பாம்பு தீண்டினால் உடல் முழுவதும் விடம் ஏறும் தன்மையையும், நெருப்புச் சுட்டால் உடல் முழுவதும் சூடேறி சுடுவதாகிய தன்மையையும் உவமை காட்டி விளக்குகிறார்.

**"அரவுமொரு வனைத்தீண்டி லங்க மெங்கும்
அந்தவிடம் பூரணமாந் தன்மை போலும்
பரவுமெரி பொருந்துகடத் துகந்த தன்னிற்
பாய்ந்திடுமுட் டணம்போலும் பரிக்குந் தூசில்
..... .... .... ....
..... .... .... ....
திருமருவுஞ் சிவலிங்கம் பொருந்துங் காயஞ்
சிவனுருவா மெனவருநூல் மன்றே" (பாடல். 48)**

1. திருமந்திரம், செய்யுள். 327
2. மேலது, 328

இவ்வாறு பொருத்தமான உவமைகளைக் காட்டிப் பல இடங்களில் விளக்குகிறார்.

## 2: 6. யாப்பு

நூலில் எண்சீர் விருத்தம், அறுசீர் விருத்தம், கலிவிருத்தம் போன்ற யாப்புகளில் பாடல்கள் அமைந்துள்ளன.

## 2: 7. உத்திகள்

நூல் இயற்றும் ஆசிரியர் ஒவ்வொருவரும் தனக்கென வெவ்வேறு உத்திகளைக் கையாளுவர். இந்நூலின் ஆசிரியர் சில உத்திகளைக் கையாண்டுள்ளார். ஆகமம் முதலான இறைநூல்கள் இறைவி கேட்க இறைவன் உரைத்ததாகவே பொதுவாகச் சொல்வர். ஆசிரியரும் இறைவன் இயல்புகளையும், இறை நெறிகளையும் கூறும் சடத்தலம் என்னும் இந்த இரண்டு நூலையும் இறைவி கேட்க இறைவன் உரைப்பதாகவே சிறந்த முறையில் அமைத்துள்ளார்.

இதனை,

**"சக்தியுமை யாள்வினவப் பரமன் கூறுஞ்**
**சடத்தலலிங் கத்தியல்பு சாற்றுங் காலை" (பாடல். 5)**
**எந்தைபிரான் கயிலையிடத் தேகாந் தத்தி**
**லிருக்கவுமை யடிபரவி இறைஞ்சிக் கேழ்க்கச்**
**சிந்தை மகிழ்ந்து உரைத்தவீ ராக மந்தான்"**

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. மேலும் பல இடங்களில் உமை கேட்கவும் பரமன் கூறுவதாகக் கூறுகிறார். மேலும்,

**"இந்த நல்ல சடத்தலத் திவ்விதி**
**அந்த மின்றிவீ ராகம ராகிய**
**எந்தை யாரெனை யாளும் சதாசிவர்**
**சிந்தையா யாயிறை விக்குரை செய்ததே" (பாடல். 203)**

என்ற இறுதிப் பாடலும் இதனை உறுதி செய்கிறது.

அவ்வாறு இறைவன் உரைக்கும்போது பல இடங்களில் அருநூல், மறைநூல், வேதங்கள், ஆகமங்கள் இவ்வாறு கூறுவதாகவும் கூறும் முறையில் அமைத்துள்ளார். இதனை,

**"இன்னிலையே யொன்றினுக்கொன் றுயிர தாகும்**
**இருமூன்று மெனவருனூ லியம்பு மென்றே" (பாடல். 6)**

"விரலியபல் லுயிரிவரால் மலங்கள் நீங்கி
வீடுபெறுஞ் சங்கமமென் றோது நூலே" (பாடல். 20)

"தவமுறவே தெரிசிகில் முத்தி யென்றே
சாற்றிடும்வே தாகமங்கள் தன்னிற் றானே" (பாடல். 88)

"நீடு பூசை நிலைபெறு செய்தருள்
கூடு வானெனக் கூறு மறைகளே" (பாடல். 199)

இந்தப் பாடலடிகளில் காணலாம்.

## 2: 7: 1. மையக் கருத்தை உணர்தல்

பரம இரகசிய சடத்தல நூலின் பாடல்களைப் புரிந்துகொள்வது கடினமாகவே உள்ளது. எனவே, ஒரு பாடல் முடிந்தவுடன் அதன் அடியிலோ, அல்லது பல பாடல்களைச் சேர்த்து அவற்றின் அடியிலோ, மையக் கருத்தை ஆசிரியர் உணர்த்தியுள்ளார். இதனால் பாடல் உணர்த்தும் கருத்தை எளிதில் புரிந்துகொள்ள உதவுகிறது.

'இது பஞ்சானனன் உற்பவம் உணர்த்தியது' (பாடல் 8)

"இவை ஆறுதிருவிருத்தமும் பத்தன் முதல் அயிக்கியன் ஈறாயினோர்களின் அங்கமும், கையும், சாதாக்கியமும், சக்தி பேதமும், இலிங்கமும் கலையும் முகமும் பத்தியும் உணர்த்தியது" என்று குறிப்பிட்டுள்ளதைச் சான்றாகக் காட்டலாம்.

மேற்கூறியவாறு வீராகம சடத்தலம் என்ற நூலில் கூறவில்லை. ஏனெனில் அந்நூலின் பாடல்கள் புரிந்து கொள்வதற்கு எளிமையாக இருக்கின்றன. எனவே, கூறாமல் விட்டுவிட்டார் என்று துணியலாம்.

## 2: 7: 2. நுதலிபுகுதல்

நூல் உரைக்கும் உத்திகளில் இதுவும் ஒன்றாகும். பின்வரும் பாடலில் எதனைக் கூறுகிறோம் என்பதை முன் பாடலிலேயே கூறுகிறார். இதனைப் பல பாடல்களில் அமைத்துள்ளார். சான்றாகப் பாடல் 28இல் சரணன் நிலைமையை விளக்கிய ஆசிரியர் பாடல் 29இல் அயிக்கிய நெறி உரைப்பதை முன்கூட்டியே சுட்டியுள்ளதை அறியலாம்.

"நேசமிகு மானந்த பத்தியினா லருந்து
நிலைமையோனே சரணன் அயிக்கியநெறி யுரைப்பாம்"
(பாடல். 28)

இதுபோன்ற பல உத்திகளை ஆசிரியர் கையாண்டுள்ளார்.

## 2: 8. சொல்லாய்வு

ஆசிரியர் ஒரே பொருளுக்குப் பல சொற்களைப் பல இடங்களில் கையாண்டுள்ளார். அவ்வாறு கையாளும்போது இலக்கணமுடையது, உலக வழக்குடையது, அக்கால வழக்கத்திற்குரியது, அவ்வட்டாரத்திற்குரியது, பிறமொழிச் சொல் என்ற வகைகளில் கையாளுவார்.

**"துதிப்பரிய சுவையுருவம் பரிச மோசை"**

சுவை, உருவம் என்று இப்பாடலில் குறிப்பிட்டுள்ள சொற்களுக்கு முறையே அடுத்தப் பாடலில் இரதம், ரூபம் என்று வடமொழி சொற்களைக் கையாளுகிறார்.

## 2: 9. வீர சைவம் வளராமை

வீர சைவ சமயத்தின் நூலான சடத்தலம் நல்ல ஒழுக்கங்களைப் போதிக்கின்றது. நல்ல நெறிகளைக் கூறுகிறது. தீய ஒழுக்கங்களையும், தீய நெறிகளையும் கண்டிக்கிறது. சமுதாயத்திற்கு ஏற்ற கருத்தைத் தெரிவிக்கிறது. இருப்பினும் சமுதாய ஒற்றுமைக்கு ஒவ்வாத சமயவெறியை உண்டு பண்ணக்கூடிய தீய நெறிகளையும் கூறுகின்றன. இதனை வீரசைவம் தவிர்த்தல் வேண்டும். சமயத்தில் பற்று இருக்கலாம். வெறி இருத்தல் கூடாது. அதனால் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் மாண்டு கொண்டிருப்பதை இன்றும் காண்கிறோம். இத்தகைய சமய வெறியினால் வீர சைவம் வளரவில்லை எனலாம். சான்றாக,

"அரசன் மனைவி சிவபூசைக்குரிய பூவை முகர்ந்தாள். சிவபூசைக்குரிய பூவைக் காத்தல் பொது அறம். அதை எண்ணி அவள் மூக்கை அரிந்தார் ஓர் அடியவர்"

"விசாரசருமர் சிவபூஜை செய்ய அமர்ந்தார். அங்கு வந்து சிவ பூசையைக் கலைத்து இலிங்கத்திருமேணியைக் காலால் உதைத்தவரைத் தந்தை என்று பார்க்கவில்லை. விசாரசருமர் காலைத் துண்டித்தார்"[1]

'குருலிங்க சங்கமத்தை மனிதர்கள் என்றும் இலிங்கத்தை சிலையென்றும் உரைப்பவரைக் கொலை செய்ய வேண்டுமாம். அவ்வாறு செய்பவனே பத்தனாம்:

---

வீரசைவம், ப. 156

**"மாதவச் சங்கமத்தை மனிதரென் றிலிங்கந் தன்னைத்**
**தீதுறச் சிலையென்போரைச் செறுப்பவன் பத்தனாமே"**

அனைத்துயிர்களிடத்தும் அன்பு செலுத்தி 'அன்பே சிவம்' என்று ஒழுக வேண்டிய சமயம் கொலை வெறியைப் பக்தி என்ற பெயரில் தூண்டலாமா? இது போற்றத்தக்கதன்று. அதே சமயம் கண்டிக்கத்தக்கது. இத்தகைய சமய வெறியைத் தூண்டக்கூடிய, மக்களுக்கு முரணான சில நெறிகளை வீர சைவம் கொண்டுள்ளமையால்தான் வளரவில்லை எனலாம்.

# இயல் 3

# நூலும் நுவலும் பொருளும்

1. பரம இரகசிய சடத்தலம் 1 - 74 பாடல்

2. வீராகம சடத்தலம் 75 - 203 பாடல்

# திருச்சிற்றம்பலம்

# 1. பரம இரகசிய சடத்தலம்

### விநாயகர் துதி

1. வாக்குட னினவுக் கெட்டா
வளரொளி யாகி யைந்து
பாக்கியத் தலைவி யாகும்
பராபரை யிடத்திற் தோன்றி
நீக்கருங் களிப்பி னாலே
நிலைபெற வுலகெ லாமுண்
டாக்குமும் மதத்தோ னெந்தை
யடியினைத் தலைமேற் கொள்வாம்.

**பொழிப்புரை:** மனம், மொழி, மெய், இம்மூன்றிற்கும் எட்டாவது நிலையாய் வளர்கின்ற அறிவாகி, எங்கள் புண்ணியத்தின் பயனாய் விளங்கும் பராசக்தியின் மகனாகத் தோன்றி நீக்கமில்லா உள்ளக் களிப்பினால் நிலைபெற, உலகையெல்லாம் காப்பவனான, மும்மதத்தினான யானை முகனாகிய எம் தந்தையின் திருவடிகளைத் தலைமேற்கொண்டு வணங்குவோம்.

### குருமரபு

2. தற்பரானா னன்... மீசான மாதி
சத்தியோ சாதந் தனிற்பரம குரவர்
உற்பவமா தத்திரிநற் சக்தி யோசா
தத்துவ .... ராமையாகும் மகோரத்
தற்புதமா மவதூத ரேவணசித் தய்யர்தாம்
..... ....... ....... சான்வதனத்
தெற்பரிய வல்லமாப் பிரபு தேவர்
ஒழியாமும் மலமுயிருக் கொழித்தருள் தந்திடவே.

பாடல் சிதைந்துள்ளது. அடிப்படைக் கருத்து.

பொழிப்புரை: ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்தியோ சாதம் முதலான ஐந்து முகங்களைக் கொண்ட பரம குரவனான சிவபிரானுடைய அற்புதத் தூதர் உலகப் பற்றுகள் அனைத்தையும் ஒழித்த இரேவண சித்தரையும், அல்லம தேவரையும் மும்மலக் குற்றங்களை நீக்கி அருள் தருமாறு வேண்டி வணங்குகிறோம்.

(இப்பாடல் குருமரபு ஆதலால் ஏனைய வீர சைவ குருமார்களான மருளராத்யா, பண்டிதராத்யா, ஏகோராமராத்யா, விஸ்வராத்ரா முதலியோரைப்பாடல் விடுபட்ட இடங்களில் கூறியிருக்கக்கூடும்.)

## குரு துதி

3. மருவுபுக ழிரேவணசித் தய்யர்தாள் போற்றி
மருள்சித் தய்யதேவர் ..... போற்றி
பரிவுறுசீ ரேகோரா மையாதாள் போற்றி
பண்டிதரார் திரிநற் பாதம் போற்றி
அரியகலை யுபனிட மாகமனூல் தானும்
அளப்பரிய வல்லமாப் பிரபு தேவர்
பொருவிலிணை யடிபோற்றி யிவரா லின்பம்
பொருந்தியிடுஞ் சரணர்க ளம்புயத்தாள் போற்றி.

(இவை இரண்டு திருவிருத்தமும் குருமரபும் குருதுதியும் உணர்த்தியது.)

பொழிப்புரை: புகழ்மிக்க இரேவணசித்தர், சித்தய்ய தேவர், ஏகோராமராத்யா, பண்டிதராத்யா ஆகியோரின் திருவடிகளை வணங்குவோமாக. அரிய தத்துவ நூலாக விளங்குவது வேதம். அதன் உட்பொருள் பொருந்தியது உபநிடதமாகிய வேதம். வேத சாத்திர நூலாக விளங்குவது ஆகமம். இவை அனைத்தாலும் அறிய முடியாதவர் அல்லம பிரபு தேவர். அவர்தம் ஒப்பற்ற திருவடிகளையும், அல்லமரால் இன்பத்தை அடைந்த சரணர்களின் திருவடித் தாமரைகளையும் வணங்குவோமாக.

## நூல் மரபும் அவையடக்கமும்

4. ஆதிகுரு பரனிருதா ளிதையத் தேந்தி
அரனுலகு மளிக்குமுமை யம்மை கேழ்ப்ப
ஓதியனூ லக்கூடல் சங்கமர் தாளேற்றும்
உத்தமநற் குருநடந்தா லுகந்து நல்க
நீதியினால் விளங்குசடத் தலத்தை யானும்
நிகழ்த்துவனித் தமிழ்ச்சிறுமை நெடியோ னாதி

**சோதிபயி லிமையவருஞ் சகல ராமித்**
**தொல்லுலகி லுயிருமெனச் சொல்லார் நல்லோர்**

(இது நூல் மரபும் அவையடக்கமும் உணர்த்தியது)

**பொழிப்புரை:** முதன்மை பெற்ற குருவான சிவனுடைய திருவடிகளை இதயத்தில் கொண்டுள்ளவள் உமையம்மை. அவள் எப்பொருட்கும் இறைவியாக இவ்வுலகைக் காத்து வருபவள். இவ்வம்மை கேட்க, இறைவன் அருளியவை ஆகமங்கள். இவற்றைக் கூறியருள வீரசைவர்களின் திருவடிகளை மனதில் பதித்து மேன்மை பொருந்திய நற்குருவின் வழியில் அறம் விளங்கும் சடத்தலத்தைப் பற்றிய நூலைச் செய்ய முனைகின்றேன். திருமால் முதலாக, அருகன் படைத்த உலகவர் யாரும் இந்த இயற்கையான உலகில் இந்த நூலை 'உயிர்நூல்' என்று உரைக்க மாட்டார்கள். இது என் தமிழ்ச்சிறுமையை விளக்கும் நூல் ஆகும்.

## மகாலிங்கத்தின் தன்மைகள்

5. **சத்தியுமை யாள்வினவப் பரமன் கூறுஞ்**
**சடத்தலலிங் கத்தியல்பு சாற்றுங் காலை**
**நித்தியமாய்க் குணங்குறியிற் படாத தாகி**
**நிரஞ்சனமாய் நிர்க்களமா யசல மாகி**

..... ..... ..... ..... .....
..... ..... ..... ..... .....

**வைத்தமனா தீதமா யேக மாகும்**
**மகாலிங்க மெனமுதுநூல் வகுத்த வாறே**

(இது மகாலிங்க தெரிசனம் நிரஞ்சனமாய் நிர்க்களமாகி யத்து விதானந்தமாய் உவமையின்றி கோசரமாயங்கள் உணர்த்தியது)

**பொழிப்புரை:** சத்தியுமையாள் கேட்க பரமசிவன் கூறியருளிய சடத்தல லிங்கத்தியல்பு யாது என்றால், சடத்தல லிங்கமானது எப்போதும் அழியாத ஒரு நித்திய பூசைப் பொருளாகும். அது தனக்கென ஒரு அடையாளமும், சுபாவமும், தன்மையும், வடிவமும் அற்று விளங்குவதாகும். குற்றமில்லாதது; இடமில்லாதது; வைராக்கியமானது; மனம் மொழிகளுக்கு அப்பாற்பட்டது; ஒப்பில்லாதது. இவற்றையே மகாலிங்கத்தின் தன்மைகளாகப் பழைய நூலானது கூறுகிறது.

## சடத்தல லிங்கத்தின் தோற்றம்

6. மன்னுமகா லிங்கத்திற் சிறந்து தோன்று
மருவுபிர சாதமதில் மகிழ்ந்து தோன்று
முன்னரிய சங்கமமற் றதனிற் தோன்று
முயர்சிவமாங் குருசிவத்தி லுகந்து தோன்று
மன்னிலையே குருவினிலுற் பவமா சார
மங்கியையு மொளியையும்போ லகலா தோங்கு
மின்னிலையே யொன்றினுக்குகொன் றுயிர தாகு
மிருமூன்று மெனவருனூ லியம்பு மென்றே.

**பொழிப்புரை:** என்றும் அழிவில்லாத நிலைபேறுடையது மகா லிங்கம். அதில், சிறந்ததாகிய பிரசாதலிங்கம் தோன்றும். அப்பிரசாத லிங்கத்தில் சங்கமலிங்கம் மகிழ்ந்து தோன்றும். அச்சங்கமலிங்கத்தில் உயரிய சிவலிங்கம் தோன்றும். சிவலிங்கத்தில் தோன்றுவது குருலிங்கம் எனப்படும். இந்நிலையிலேயே குருலிங்கத்தில் ஆசாரலிங்கம் தோன்றும். இவ்வகையாகத் தோன்றும் மகாலிங்கம், பிரசாதலிங்கம், சங்கமலிங்கம், குருலிங்கம், சிவலிங்கம், ஆசாரலிங்கம் ஆகிய இவையே சடத்தல லிங்கம் என்று அழைக்கப்படுகின்றன. இந்த லிங்கங்கள் தமக்குள் நெருப்பும் ஒளியும் போல் ஒன்றைவிட்டு ஒன்று அகலாதவையாகி ஒன்றினுக்கு ஒன்று உயிராகி விளங்கும்.

## சடத்தல லிங்கமும் சக்தியும்

7. பாவலிங்க மலர்பதமா லிங்க மாகும்
பரையதனி னொளிபிரசாத தந்தா னாகுந்
தாவிலருந் திரொதைசர லிங்க மிச்சா
சத்திசிவ லிங்கந் தகையா ஞானம்
நாவிரவு குருலிங்கங் கிரியா சத்தி
நன்மைமிகு மாசார லிங்க மாகி
மேவியல கிறந்தவுயி ரென்ற கன்ம
வினைநுகர்விற் றகற்றிமலம் வீட்டு மன்றே

(இவையிரண்டு திருவிருத்தமும் சடத்தல லிங்கத்தின் தோற்றம் உணர்த்தியது)

**பொழிப்புரை:** மேற்கூறிய சடத்தல லிங்கங்கள் ஒவ்வொன்றும் ஒரு சத்தியோடு அமர்ந்திருக்கும். அந்தச் சத்தி நிலைகளாவன.

பாவலிங்கத்திலிருந்து மலரும் மகாலிங்கத்திற்கு உரிய சக்தி சித்சத்தியாகும். பராசத்தி பிரசாதலிங்கத்திற்குரியதாகும். இச்சா சத்தி

சிவலிங்கத்திற்குரியதாகும். சிறப்புமிக்க திரோதான சத்தியை உறைவிடமாகக் கொண்டு விளங்குவது சரலிங்கம். அழகு பொருந்திய ஞானசத்தியில் குருலிங்கம் நாவோடு கலந்திருக்கும். கிரியாசத்தி நன்மை மிகுந்த ஆசாரலிங்கத்திற்குரியதாகும். பற்றுகொண்டுள்ள உயிர்களுக்கு இருவினைகளை நுகர்வித்து, மலங்களினால் வரும் விளைவுகளை நீக்கி உயிர்களை இவ்விலிங்கங்கள் தூய்மைப்படுத்தும்.

## பஞ்சானனின் உற்பவம்

8. சாற்றிடும் பிரசாதத் தாமீ சானந்
தற்புருடஞ் சங்கமத்தி லாம கோரந்
தோற்றிடுஞ் சிவலிங்கந் துதிக்கும் வாமம்
சொல்லரிய குருவினிற் பவமா சாரந்
தேற்றமிகுஞ் சத்தியோ சாதந் தாகு
மிவை சிருட்டி காரணமா யிசையத் தோன்று
மாற்றியபஞ் சானனத்தி னிலைக டானு
மரிச்சனையு மதநிறனு மறைய லுற்றாம்.

(இது பஞ்சானனன் உற்பவமுணர்த்தியது)

பொழிப்புரை: சிவபெருமானின் ஐந்து முகங்களும் ஐந்து இலிங்கங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. இவ்வைந்து முகங்களில் பிரசாதலிங்கம் ஈசான முகமாகும். தற்புருடம் என்னும் முகம் சங்கமலிங்கமாகும். அகோரம் என்னும் முகம் சிவலிங்கமாகும். வாமம் என்னும் முகம் குருலிங்கமாகும். ஆசாரலிங்கம் தெளிவு மிகுந்த சத்தியோசாத முகமாகும். இசை ஐந்தும் படைப்புக் காரணமாகப் பொருந்தித் தோன்றும். ஐந்து முகங்களின் வேறு நிலைகளும், பூசையும் நிறமும் கூறப்படுகின்றன.

## பஞ்சானனன் விருத்தி

9. தாரணியே சத்தியோ சாத மாகுந்
தகைமருவு வாமமிகுந்த சலம தாகுந்
சீரணியும கோரமிகுங் கனல தாகுந்
திருந்துலவை தற்புருடந் திகழீ சான
மேரணியும் வானகமாம்; புறத்து முள்ளு
மெய்துமுயிர்க் கைம்புலனா மீசா னாதி
காரணமாஞ் செவிதுவக்கு விழிநா நாசி
கருதுசதா சிவமெவையுங் கலந்து காணே.

**பொழிப்புரை:** சிவபெருமானின் ஐந்து முகங்களிலிருந்தே ஐம்பெரும் பூதங்கள் உருவாகின்றன. அவை முறையே ஐம்பூதங்களில் ஒன்றான நிலம் சத்தியோ சாதத்தினின்றும் தோன்றியதாகும். தாகத்தைத் தீர்க்கும் நீர் வாமத்தின் ஆக்கமாகும். அழகு முகமான அகோர முகத்தினின்றும் தோன்றியது நெருப்பாகும். காற்று தற்புருடத் தோற்றமாகும். ஈசான முகம் மலைகளை அணிந்து நிற்கும் ஆகாயம் ஆகும். உயிர்களுக்குப் புறத்தும் அகத்தும் ஐம்புலன்களாக விளங்குவனவும் சிவபிரானின் ஐந்து முகங்களேயாகும். அந்த நிலையில் ஈசானம் செவியாகவும், தற்புருடம் மெய் (உடல்) யாகவும், அகோரம் கண்ணாகவும், வாமம் நா(வாய்)வாகவும், சத்தியோசாதம் மூக்காகவும் கருதி, இவை அனைத்தும் சதாசிவத் தோற்றமேயாகும்.

## பஞ்சானன பூசை

**10. இந்தவகை யகம்புற மொன்றாகித் தோன்று**
**மிறைவதன மைந்தினுக்கு மிசையும் பூசை**
**மந்திரமே யீசானத் துரிய தாகு**
**மலர்கந்தந் தற்புருட மகிழ்வ தாகு**
**மனந்தகலும கோரமதிற் றீப மாகும்**
**நயந்தமுது வாமத்து கந்து சேருஞ்**
**சிந்தையுறு நறும்புகை யற்புதம தாகுந்**
**திகழ்சத்தி யோசாதந் தெரிக்குங் காலே**

**பொழிப்புரை:** இறைவனின் ஐம்முகங்களுக்குரிய பூசையில் அகப்பூசை, புறப்பூசை என்ற இரண்டு வகை உண்டு. இறைவனின் ஐம்முகங்கள் ஐம்புலன்களாக விளங்குவதால் புறப் சையில் அவற்றிற்கேற்றவாறு பொருள்கள் கையாளப்படுகின்றன. ஈசானம் செவியாதலால் அதற்கேற்ப பூசைப்பொருள் மந்திரச் சொல்லான வேதம் ஆகும். இவ்வாறே தற்புருடம் மெய்யாதலால் அதற்கு மலர், சந்தனம் பூசைப்பொருளாக மகிழ்வுடன் கொள்ளப்படுகின்றன. அகோரம் கண்ணாதலால் அதற்குத் தீபமாகும். வாமம் வாய் ஆதலால் அதற்கு விருப்பத்துடன் மகிழ்ந்து அளிக்கப்படும் அமுது உகந்து சேரும். மனத்திற்கு உற்ற சுகந்த புகை, சத்தியோசாத முகத்திற்கு அற்புதமாகும்.

## பஞ்சானனனின் திசையும் நிறமும்

**11. ஈசானம் படிகநடுக் கிழக்க தாகு**
**மிலங்கியகுங் குமநிறந்தற் புருட மென்பர்**

தேசாரு மகோரநிறங் கருமை தென்பால்
திகழ்வாம முத்தரநற் செம்மை யாகும்
நேசாருங் குடைதிசையே யாகும் வெண்மை
நிறஞ்சத்தி யோசாத நிகழா தோங்கு
மாசாரு மலமகல யாவுந் தாங்கு
வளரொளிசே ரதோமுகமிவ் வாற தாமே.

(இவை மூன்று திருவிருத்தமும் பஞ்சானனன் விருத்தியும் பூசையும் நிறமும் திசையும் உணர்த்தியது)

**பொழிப்புரை:** சிவபெருமானின் ஐந்து முகங்களுக்குரிய திசையும் நிறமும் :

1. ஈசான முகம் வடகிழக்குத் திசைக்குரியது. படிக நிறத்தைக் குறித்தது. 2. தற்புருட முகம் கிழக்குத் திசைக்குரியது. ஒளி பொருந்திய குங்கும நிறத்தைக் குறித்தது. 3. அகோர முகம் தெற்குத் திசைக்குரியது. கருமை நிறத்தது. 4. வாமமுகம் வடக்குத் திசைக்குரியது. சிவப்பு நிறத்தது. 5. சத்தியோசாத முகம் மேற்குத் திசைக்குரியது. வெண்மை நிறத்தது.

இவ்வைந்து முகங்களேயன்றி 'அதோ முகம்' என்பது ஆறாவது முகமும் ஒன்றுள்ளது. இந்த முகம் உயிர்களின் பாவங்களை எல்லாம் நீக்கவல்லது.

## பஞ்சானனத்தின் உற்சம பேதம்

12. பொற்புறுமுற் சமவிதியும் பிறவுங் கூறில்
புகழ்சத்தி யோசாதம் நிற்ற லாகுங்
கற்பமரும் வாமமுகத் திருத்த லாகுங்
கருதியதா பரமலிங்கம கோர மாகுந்
தற்புருடம் வாகனமேற் கொள்வ தாகுந்
தவிராத திருநடமீ சான மாகு
மற்புதமா மதோர்முகத்தி லுறக்க மாமென்று
அறைந்திடுவ ரிறையருநூ லுணர்ந்து ளோரே.

(இது பஞ்சானைத்தாலுற்சம பேதமும் பிறவஞ்சத்தைப் பிரேரிக்கப்படுமாறு உணர்த்தியது.)

**பொழிப்புரை:** பொன்போல விதியும், பிறவும் முன்னர் கூறியபடியே ஐந்து முகங்களின் வடிவ நிலைகளும் கூறப்படுகின்றன. இறைவனின் திருவுருவங்கள் பல நிலைகளில் காணப்படும். அவற்றுள்

1. புகழ்மிக்க சத்தியோசாத முகம் நின்ற கோலமாகும். 2. வாம முகம் இருந்த கோலம். 3. அகோர முகம் சிறந்த தாபரலிங்க வடிவமாகும். 4. தற்புருடம் வாகனத்தில் வரும் வடிவமாகும். 5. ஈசான முகம் திருநடன வடிவமாகும். 6. அரிய அதோ முகம் உறங்கும் வடிவமாகும் என்று இறையருநூல் உணர்ந்தவர்கள் கூறுவர்.

## பஞ்சானனத்தின் சமய பேதங்கள்

**13. பாசுபதஞ் சத்தியோ சாத மாகும்**
**பரிவிலுறு மாவிரதம் வாம மேவும்**
**நேசமுடன் தற்புருடத் துதிக்குஞ் சைவம்**
**நிலவியகா ளாமுகம்நீ ளகோர நேரும்**
**வாசமுறு வயிரவமீ சானந் தன்னில்**
**வாமமுடன் புறசமைய மகிழ்ந்து தோன்று**
**மாசிலதோ முகத்தினிதா யிவ்வா றீசன்**
**ஆனனத்தி னறுசமய மமருந் தானே.**

(இது பஞசானனத்தின் சமய பேதங்களுற்பவம் ஆயினவாறுணர்த்தியது.)

**பொழிப்புரை:** சைவ சமயத்தின் தத்துவக் கருத்தில் சில சில மாற்றங்களைக் கொண்ட பிரிவுகள் உள்ளன. அவற்றைச் சைவ சித்தாந்தம் அகப்புறச்சமயம் என்கிறது. சிவபிரானின் ஐந்து முகமும் அதோ முகமும் சேர்ந்து அறுவகைச் சமயங்கள் ஆகின்றன.

சத்தியோசாதம், வாமம், தற்புருடம், அகோரம், ஈசானம், அதோமுகம் ஆகிய அறுமுகங்களும் முறையே பாசுபதம், மாவிரதம், சைவம், காளாமுகம், வயிரவம், வாமம் என்ற அறுவகைச் சமய பேதங்களாகின்றன.

## பஞ்ச சதாக்கியத்தின் வடிவம்

**14. சிவம்பரம சுகந்தமல மூர்த்த மூர்த்தந்**
**திருமுகமொன் றிருகைவிழி மூன்று மேனி**
**பவளநிறங் கத்துருவம் கண்ணீ ராறு**
**மொருநாலு முகங்கர மெட்டுளவாங் கன்மத்**
**துவமருவு லிங்கம தாமொன்றி லொன்று**
**துடாந்தடைட்யு மொழிந்தடவே மூர்த்தங் கூடி**
**அவமருகத் திருமுகமைந் துங்கை யீரைந்து**
**ஐம்மூன்று விழியாங்கன் மத்துரு மிதுவே.**

(இது சிவசாதாக்கியம், அமூர்த்திசாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கத்துரு சாதாக்கியம், கன்ம சதாக்கியம் என்னும் பஞ்ச சதாக்கியத்தின் வடிவம் அவ்வடிவே ஒன்றிலொன்று நிற்குமாறு உணர்த்தியது.)

**பொழிப்புரை:** பஞ்ச சாதாக்கியம் என்று கருதப்படுவன சிவ சாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கத்துருசாதாக்கியம், கன்ம சாதாக்கியம் என்ற ஐந்துமாகும்.

இன்பத்தைத் தரும் பரமசிவம் சிவசாதாக்கியம். தழல் வடிவம் அமூர்த்தி சாதாக்கியம். திருமுகம் ஒன்று, கை இரண்டு, விழி மூன்று என அமைவது மூர்த்தி சாதாக்கியம். திருமுகம் நான்கு, திருக்கைகள் எட்டு, திருக்கண்கள் ஈறாறு என்ற நிலையில் அமைவது கத்துரு சாதாக்கியம். திருமுகம் ஐந்து, அழகிய கண்கள் ஈரைந்து, விழிகள் ஐம்மூன்று என அமைவது கன்ம சாதாக்கியம். இறைவனின் திருமேனி பவள நிறமுடையது. இது அனைத்து வடிவங்களுக்கும் பொருந்தும்.

## நவலிங்க விதி

**15. இட்டலிங்கம் பிராணலிங்கம் பாவலிங்க மெனமூன்**
**றிட்டலிங்கத் தாசார லிங்கங்குரு லிங்கஞ்**
**சிட்டமருஞ் சிவலிங்கஞ் சரலிங்க மிவைதான்**
**திருத்தமுடன் பிராணலிங்கத் தருத்தியினால் மருவு**
**நிட்டைமிகும் பிரசாத மகாலிங்க மிவைதான்**
**நித்தியமாம் பாவலிங்கத் துற்றிடுமொன் பதுவா**
**மிட்டலிங்க முதலாதி லிங்கமொரு மூன்றுக்**
**கினிதாகும் ரூபுருசி நிறைவெனவிங் கிசையே**

(நவலிங்க விதியுணர்த்தியது)

**பொழிப்புரை:** இலிங்கம் என்பது சிறப்பாக மூன்று வகைப்படும். அவை இட்டலிங்கம், பிராணலிங்கம், பாவலிங்கம் என்பன. இவை தொகை. இத்தொகையின் வகையாக அறுவகை இலிங்கங்கள் உள்ளன.

இட்டலிங்கத்திலிருந்து ஆசாரலிங்கம், குருலிங்கம் என்னும் இரண்டு வகை இலிங்கங்கள் தோன்றுகின்றன. சிவலிங்கம், சரலிங்கம் என்பன பிராணலிங்கத்தின் வகைகளாக அமைகின்றன. மனம், வாக்கு, காயம் ஆகியவை அசைவின்றி இருத்தலான பிரசாதலிங்கமும், மகாலிங்கமும் பாவலிங்கத்தின் பிரிவுகளாகின்றன.

மேலும் இட்டலிங்கம் ஆனந்த படிவமாகவும், பிராணலிங்கம் அறிவு வடிவமாகவும், பாவலிங்கம் உண்மை வடிவமாகவும் உள்ளவை.

## அங்க மிச்சரம்

16. நித்தியமாம் பாவலிங்கத் துதிக்கு ஞானம்
நின்மலஞா னத்துமன மனத்தாங் காரம்
புத்திவரு மாங்காரத் துதிக்குஞ் சித்தம்
புத்தியினா லாசாரம் பொருந்து சித்தம்
புத்திகுரு சிவலிங்க மாங்கா ரத்திற்
புரியுமனஞ் சரலிங்கந் தரிக்கு மென்ப
ஞானமெய்தும் வைத்தபிர சாதமரும் பாவலிங்கம்
மகாலிங்கந் தரிக்குமென மதிக்கும் நூலே.

(இது அங்கமிச்சிரம் உணர்த்தியது)

**பொழிப்புரை:** மனம், புத்தி, சித்தம், ஆங்காரம் என்னும் நான்கும் அந்தக் கரணங்கள் என்று வழங்கப்படும். அழியாத பாவலிங்கத்தில் உதிப்பது ஞானம்; மாசில்லாத அந்த ஞானத்திலிருந்து மனமும் மனத்திலிருந்து ஆங்காரமும், ஆங்காரத்திலிருந்து புத்தியும், புத்தியிலிருந்து சித்தமும் தோன்றும். மனம், புத்தி, சித்தம், ஆங்காரம் இவற்றைக் கருவியாகக் கொண்டு அடைவதே. ஞானமெய்தினால் பாவம் நீங்கும். இந்த அந்தக் கரணங்களும் இலிங்க மயமாகவே கருதப்படுகின்றன. சித்தத்தில் ஆசாரலிங்கமும், புத்தியில் குருலிங்கமும், ஆங்காரத்தில் சிவலிங்கமும், மனத்தில் சரலிங்கமும், ஞானத்தில் பிரசாதலிங்கமும், பாவத்தில் மகாலிங்கமும் இணைந்துள்ளன. அந்தக் கரணங்கள் அங்கத்தில் கலந்துள்ளதால் அங்கமிச்சிரம் என வழங்கப்படுகிறது

## சடத்தல லிங்கமும் குருலிங்க சங்கமமும்

17. கூறுமிரு மூவகையாம் லிங்கந் தானே
குருலிங்க சங்கமத்தி னுருவ மாகும்
வீறுபிர சாதமருஞ் செவிய தாகும்
மிக்கசர லிங்கமிருந் துவக்க தாகும்
பேறுதவுஞ் சிவலிங்கம் நயன மாகும்
பேசரிய குருலிங்கந் தாலு வாகு
மீறிலரு ளாசாரங் கிராண மாகு
மிலங்குமகா லிங்கமிறு தயம தாமே.

(இது சடத்தல இலிங்கம் குருலிங்க சங்கம லிங்கத்துக்
குறும்படியாயினவாறு உணர்த்தியது)

**பொழிப்புரை:** அறுவகை இலிங்கமும் குருலிங்க சங்கம வடிவங்களாகும். பொலிவுமிக்க பிரசாதலிங்கம் செவியென்றும், சர லிங்கம் மெய்யென்றும், புகழ்தரும் சிவலிங்கம் கண்ணென்றும், குரு லிங்கம் நாவென்றும், ஆசாரலிங்கம் மூக்கு என்றும் ஒளி பொருந்திய மகாலிங்கம் இருதயம் என்றும் கொள்ளப்படுகிறது.

முன்பு ஒன்பதாம் பாடலில் சிவபெருமானின் ஐந்து முகங்களுக்குப் பஞ்சபூதங்களையும், ஐம்புலன்களையும் இணைத்துக் கூறப்பட்டுள்ளது. இங்குக் குருலிங்க சங்கமத்திற்கு ஐம்புலன்களையும் கூறப்பட்டுள்ளது. ஆனால் இங்கு இருதயம் என்னும் ஒன்றை மகாலிங்கத்திற்குப் பொருத்திப் புதியதாகக் கூறப்பட்டுள்ளது.

## குருலிங்கத்தின் பொருள்

**18. ஓதரிய குருலிங்க சங்கமத் தினுரைத்த**
**பெயரெழுத் தடைவே யுரைக்குங் காலை**
**நீதிதருங் குருவெனுமீ ரெழுத்து நேரே**
**நிறையிருளு மவையகற்று மொளியு மாகு**
**மேதமிலா லிங்கவெழுத் திரண்டுங் கூறில்**
**இலிகார மூலகொடுக்க லுற்பவங்கா கார**
**மாதலினார் குருலிங்க மென்னும் னாம**
**மறைதருவா சங்கமத்தின் அடைவு கேளே**

**பொழிப்புரை:** சிவனடியார் கூடும் திருக்கூட்டத்தில் நீதி தரக்கூடியக் 'குரு' என்னும் ஈரெழுத்திற்கு அஞ்ஞானமாகிய இருளை நீக்கி ஒளிதருதல் என்பது பொருளாகும். குற்றமில்லா 'லிங்கம்' என்ற இரண்டெழுத்திற்கு எல்லாப் பொருளும் தோன்றும் மூலம் என்பது பொருள். ஆதலினால் அஞ்ஞானத்தைப் போக்கி எல்லாப் பொருளையும் அறிவிக்கும் மூலப்பொருளைக் 'குருலிங்கம்' என்னும் பெயரால் அழைப்பர்.

## சங்கமத்தின் பொருள்

**19. சங்கமமென் றுரைத்தபெய ரெழுத்த மூன்றுந்**
**தருசெனனங் கெமனமழி விலாமை யாகு**
**மங்கமரும் நாதவிந்துக் களையு மாகு**
**மவ்வினுட னுவ்வுமிகும் வவ்வு மாகும்**
**பொங்கெகின் றுவன்விட பத்தோ னாகும்**
**பொருந்துமிடை பிங்கலைநற் சுழினை யாகுந்**

தங்குமவ னவளதுவாய் மதியே பானு
தழலவனாய் விரியுமெனச் சாற்றும் நூலே

(இவையிரண்டு திருவிருத்தமுங் குருலிங்க சங்கமமென்று பெயராக வேண்டிய காரணமுணர்த்தியது.)

**பொழிப்புரை:** சங்கமம் என்னும் மூன்றெழுத்தும் முறையே பிறப்பு (ச), பேறு (க), அழிவின்மை (ம) என்னும் மூன்று பொருள்களைக் குறிப்பனவாகும். இம்முப்பொருளின் பெருமைக்குரிய சிவனடியார் கூடும் திருக்கூட்டமே 'சங்கமம்' என்னும் சொல்லால் குறிப்பிடப் படுகிறது. அத்திருக்கூட்டத்திலே வீற்றிருக்கும் சிவனெறியொழுகும் தூயோராகிய நாதவிந்துக்களையும் சங்கமம் என்ற சொல் சுட்டி நிற்கும் அகார, உகார, வகாரமாகிய மூன்றெழுத்துக்களைச் சுட்டுவதும் அச்சொல்லேயாகும். இவற்றுள் அகரம் இடகலையும், உகரம் பிங்கலையும், வகரம் சுழிமுனையுமாகிய நாடிகளை உணர்த்தும். மேலும் சங்கமத்தின் மூன்றெழுத்துகள் அவன், அவள், அது என்ற உயர்திணை, அஃறிணைப் பொருள்களாகவும், நிலவு, கதிரவன், தீ என்னும் இயற்கை ஒளிகளாகவும் பொருள் தந்து நிற்கும் என்பன நூலோர் கூற்றுகளாகும்.

## நவபேதமும் குருலிங்க சங்கமமும்

20. அருவமருட ருங்குருவாம் ரூபா ரூப
மழகமருஞ் சிவலிங்க மாகு மென
உருவமருஞ் சங்கமமா மியங்கா நின்ற
உயிரெவையும் சங்கமமென் றுரைக்கும் மென்னிற்
பரவுகுரு லிங்கசங் கமசம் பந்தம்
பரனுருவ மலமகற்றும் படிவை மாய்கை
விரவியபல் லுயிரிவரால் மலங்கள் நீங்கி
வீடுபெறுஞ் சங்கமமென் றோது நூலே.

(இது நவபேதமுங் குருலிங்க சங்கமமாயினவாறு உணர்த்தியது.)

**பொழிப்புரை:** அருவமாய் மட்டுமே இருந்து அருள்புரிவது குருவின் பண்பு. அருவுருவ நிலையில் நின்றே அருள் வழங்குவது இலிங்கப் பண்பு. உருவ நிலையில் நிற்பது சங்கமம் என்றால் உயிர் பெற்று இயங்கும் தன்மை பெற்றனவெல்லாவற்றையும் 'சங்கமம்' என்று கொள்ளலாமா? என்னும் வினா எழுகிறது. இது அறியான் வினா. சங்கமம் என்பது உருவநிலையுடையதாவது மட்டுமின்றி, வணங்குதற்குரிய குருவோடும், இலிங்கத்தோடும் தொடர்பு கொண்டதே சங்கமம். உருவமுடைய பிற உயிர்கள் பல வகையான மாயைகளில்

மூழ்கித் துன்புறுங்காலை அவ்வுயிர்கள் பெறும் ஆணவம், கன்மம், மாயை முதலான மலங்களை அவ்வுயிர்களிடத்திலிருந்து நீக்கவும், நீங்கவும், அருள் புரிவதும், அவ்வுயிர்கள் வீட்டுப் பேற்றினைப் பெறச் செய்வதுமாகிய அருட்தன்மைகளையுடையதாய் உருவமாகிய தாங்களும் பேறுபெறும் நிலையுடையதே சங்கமம் ஆகும் என்பது நூல் துணிவு.

## பத்தன் இயல்பு

21 பேசிலிரு மூவகையாம் பத்தன்மகே சுரனே
பிரசாதி பிராணலிங்கி சரணனயிக் கியனென்(று)
ஈசனருட் டிருவேடங் கண்டளவே தரியா
தெழுந்திரைஞ்சலக் குருலிங்க சங்கமமொன் றெனவே
தேசிகனா லறிந்துபொரு ளுடலியிரு மவர்பால்
செலுத்திடுத லுறவுசிவ பத்தரென மருவி
பாசவுற வெனுமுலக விகாரமய லகற்றல்
பத்தனியல் பாகுமெனப் பகர்ந்திடு மாகமமே.

**பொழிப்புரை:** பத்தன், மகேசுரன், பிரசாதி, பிராணலிங்கி, சரணன், அயிக்கியன் என்னும் அறுவகையாக ஈசன் அருட்திருவேடம் கொள்வதாக வீரசைவர் கூறுவர். ஈசனது அருட்திருவேடமாகி நிற்கும் இவர்களைக் கண்டவுடனேயே, கண்டவர்கள் அவர்களை அறியாமலேயே எழுந்து குனிந்து வணங்குதல் வேண்டும். குருவும் சிவமும் கூடும் திருக்கூட்டமான குருலிங்க சங்கமமும் ஒன்றே என்ற உண்மையை அறிவர். இதனால் இவர்களின் மீது தங்கள் உடல், பொருள், உயிர் அனைத்தையும் செலுத்திச் சிவபத்தரென உறவு கொண்டு விளங்குவர் மேலும் தாங்களும் சிவபத்தராகவே மருவி நிற்பர். உறவெனும் உலகமாயை, மையல் ஆகிய பிற செயல்களையும், பிற உலக மயக்கங்களையும் அகற்றி ஒழுகுவர். இவையே பத்தன் இயல்பென ஆகமங்கள் உணர்த்துகின்றன.

## மகேசுவரன் - பிரசாதி நிலை

22. பரநாரி பர்த்திரவி யத்திலுறுந் தேர்ந்தப்
பற்றாகும் நசையகற்றிச் சித்தசுத்த னாதல்
வரமகா லிங்கநிட்டை புரிதல்சிவ பத்தன்
மருவுமிட மேவிரும்பல் மகேசுரனென் றோதுந்
திரமகா லிங்கசமற் பணைனுகரும பயனைச்
செய்தனை லிங்கநினைவா லுகந்துசெலுத்த லாகும்

**விரவாக லிங்கசமற் பணையல்லா தெவையும்**
**விட்டிடுதல் பிரசாதிக் குற்றநிலை யிதுவே.**

**பொழிப்புரை:** பிறமாதரிடத்தும், பிறர்பொருளிலும் பற்றுக்கொள்ளும் விருப்பத்தை அறவே அகற்றித் தூய சிந்தையை உடையவனாதல், அதாவது முத்திபெறும் நிலையிலுள்ள ஆன்மாவாக மாறுதல், மகாலிங்கம் தரித்து சிவபத்தனாகி நிட்டை மேற்கொண்டு நன்னடையில்லொழுகுதல், மூலபதத்தை அடையும் சிவபத்தர்கள் கூடும் இடத்தையே விரும்புதல் மகேசுவரன் நிலையாகும்.

நல்வினை, தீவினைப் பயன்களாகிய சுகதுக்கங்களை மகாலிங்கத்தில் செலுத்தி, அம்மகாலிங்கத்திற் கலந்து சிவபிரானுக்கும், அவனுடைய வீரசைவ அடியார்களுக்கும் காணிக்கை செலுத்துவதைத் தவிர வேறு அனைத்தையும் அறவே விட்டு விடுதல் ஆகியவை பிரசாதிக்குற்ற நிலையாகும்.

## பிராணலிங்கி, சரணன், அயிக்கியன்

**23. ஓதுமுயிர்ச் சேயீசனை வீட்டின்ப துன்ப**
**மொழிந்துலிங்க நினைவினிற் சம்பந்த மாதல்**
**நீதிதரும் பிராணலிங்கிக் கியல்ப தாகும்**
**நித்தியமாஞ் சரணநெறி நிகழ்த்துங் காலைத்**
**தீதுறுமைம் புலனகற்றிச் சதிதான னாகித்**
**திகழ்பதியே லிங்கமென எரித லாகு**
**மாதிமல மோரைந்து மிரியநூ றியருள்**
**விரவினயிக் கியனென் றறையும் நூலே.**

**பொழிப்புரை:** ஈசனைப் போற்றித் துதிக்கும் உயிர்கள் வீட்டின்பம் துன்பம் முதலியனவற்றின்று நீங்கி இலிங்க நினைவிலேயே இணக்கமாகிவிடுவர். இதுவே நீதி நெறியில் நின்று ஒழுகக் கூடிய பிராணலிங்கியின் இயல்பாகும்.

நித்திய பூசையும், வீரசைவ நெறியும் தவறாது நிகழ்த்தி வந்தால், ஐம்புலன்களால் நிகழக்கூடிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் முதலியனவற்றால் வருகின்ற தீமைகளிலிருந்து நீங்குவர். மேலும் தாமே சதியாகவும், இலிங்கமே பதியாகவும் ஆகி இரு சுடர்களாய் விளங்குவது சரணன் இயல்பாகும்.

மும்மலங்களையும் ஐம்புலன்களின் நுகர்ச்சிகளையும் அடியோடு அறுத்து அருள் உள்ளம் நிறைய இறைத்தன்மையோடு அயிக்கியமாதல் அயிக்கியனின் இயல்பாகும் என்பது நூலோர் கூற்று.

## பத்தன் நிலை

24. தரையங்கங் கரஞ்சித்த மதிற்குக் கன்ம
சதாக்கி யங்கிரியா சத்தியதற் கென்று
முறைதருமா சாரலிங்கங் கலைநிவிர்த்தி யதனுக்கு
முகங்கி ராணமிகும் பரிமளத்தை யுகந்தே
வரைவறுசற் பத்தியினால் ரூபுரூசி நிறைவின்
வழக்கறிந்து சமற்பணையால் வருஞ்சுகந்த சேடம்
புரைவறுமன் பினிலணுகா வோன்பத்த னாகும்
பொருவில்மகே சுரனிலமை புகல லுற்றாம்.

**பொழிப்புரை:** பத்தனுக்கு ஐம்பெரும் பூதங்களில் ஒன்றான நிலமே அங்கமாகும். கரம் உள்ளமாகிய உட்கரணமாகும். சாதாக்கியம் கன்ம சாதாக்கியமாகும்; சத்தி கிரியா சத்தியாகும். இலிங்கம் ஆசாரலிங்க மாகும். கலை நிவிர்த்தியாகும். அதற்கு முகம் மூக்கு ஆகும். இந்த முகமாகிய மூக்கினால் நறுமணத்தையுகர்ந்து சத்பத்தியினால் இன்பத்தின் நிறைவையும், அதன் வழக்கையும் பிரசாதமாகக் கொடுத்துக் குற்றமற்ற அன்பில் அணுகுபவன் பத்தனாவான்.

## மகேசுவரன் நிலைமை

25. சாற்றிடுநீ ரங்கமரும் புத்திகைகர் துருவாம்
சாதாக் கியஞான சத்திகுரு லிங்க
மேற்றகலை பிரதிட்டை முகங்சிங் ஞவையா
பிரதமிசைந்த திரவியதனை யியல்புவிழா வகையே
யாற்றலுறு ரூபுருசி நிறைவதனை நயிடஷ்டை
யாகியநற் பத்தியினா லற்புதஞ்செய் தருளாம்
மாற்றரு மன்பினிலி ரசப்பிரசாத நுகர்வோன்
மகேசுரனாம் பிரசாதி வழக்கினி மேலுரைப்பாம்.

**பொழிப்புரை:** மகேசுரனுக்கு ஐம்பெரும் பூதங்களில் ஒன்றான நீரே அங்கமாகும். புத்தியே கரமாகும்; சாதாக்கியம் கர்தரு சாதாக்கியமாகும்; இலிங்கம் குருலிங்கமாகும்; இதற்கு ஏற்ற கலை பிரதிட்டையாகும். முகம் நாக்காகும். இந்த நிலையில் சுவை இசைந்த திரவியத்தின் இயல்பு வழுவாமல் கிடைக்கின்ற இன்பத்தின் நிறைவினை நைட்டிக பத்தியினால் அற்புதம் செய்தருள்பவனும், முகமான நாவின் மூலம் சுவை மிகுந்த பிரசாதம் அன்பினால் நுகர்வோன் மகேசுரனாவான்.

## பிரசாதி வழக்கு

26. சட்டகமா முதாசினூன் கைநீரா கங்கார
மூர்த்திசாத் தியமிச்சா சத்திசிவ லிங்க
மோட்டைமிகுங் கலைவித்தை நேத்திரமா னனமா
மோங்குசுரு பயனை ரூபுருசி நிறைவின்
திட்டமுட னவதான பத்தியினா லறிந்தே
செய்துசமற் பணைசுருப்ப பிரசாத மதனை
இட்டமுட னுகருமவன் பிரசாதி யெனவே
இயம்புவர்கள் பிராணலிங் கியற்கையினி யுரைப்பாம்

பொழிப்புரை: பிரசாதிக்கு ஐம்பெரும் பூதங்களில் ஒன்றான நெருப்பே உடலாகும். கைகள் அகங்காரமாகும். சாதாக்கியம் மூர்த்தி சாதாக்கியமாகும். சத்தி இச்சா சத்தியாகும். இலிங்கம் சிவலிங்கமாகும். கலை வித்தையாகும். முகம் கண்ணாகும். இந்த நிலையில் கிடைக்கும் ஒளியாகிய பயனையும் இன்பத்தின் நிறைவினையும் முகமாகிய கண்ணைக் கொண்டு திட்டமுடன் அவதான பத்தியில் அற்புதம் செய்து கிடைக்கும் பிரசாதத்தினை நுகர்வோன் பிரசாதியாவான்.

## பிராணலிங்கி இயற்கை

27. தாங்குலவை யங்கங்கை மனம மூர்த்தி
சாதாக் கியமாதி சத்திசர லிங்கம்
ஓங்குகலை சாந்திமுகங் துவக்கதனுக் கினிதாய்
ஓதுபரி சப்பயனை ரூபுருசி நிறவின்
பாங்கதனை யனுபாவ பத்தியினா லுணர்ந்தே
பரிந்துசமற் பணைப்பரிசப் பிரசாதம் நுகர்வோன்
நீங்கரிய பிராணலிங்கி யென்வுரைப்ப[1] ருணர்ந்தோர்
நிலவுவளந் திகழ்சரண னியாயம்நிகழ்த் திடுவாமே.

பொழிப்புரை: பிராணலிங்கிக்கு ஐம்பெரும் பூதங்களில் ஒன்றான காற்றாகும். கைகள் மணமாகும். சாதாக்கியம் அமூர்த்தி அமூர்த்தி சாதாக்கியம். சத்தி ஆதிசக்தி. இலிங்கம் சரலிங்கம். கலை சாந்தி. முகம் மெய்(உடல்) ஆகும். இம்மெய்யினால் தொடுதலாகிய பயனையும், இன்ப நிறைவின் பாங்கையும் அனுபாவ பத்தியினால் உணர்த்தும், ஏற்றுக்கொண்டும் அர்ப்பித்துப் பின் பிரசாதம் நுகர்வோன் பிராணலிங்கி ஆவான்.

---

சு.வே. 1. செப்புவர்

## சரண் நியாயம்

28. ஆசினியே யங்கங்கை விஞ்ஞான மதனுக்
கரஞ்சிவ சாக்கியநற் சத்திபரை யகலாத்
தேசியல்பு மருவுபிர சாதலிங்கங் கலைதான்
திகழ்சாந் தியாதீதந் திருந்தியவா னனமா
மோசைதருஞ் சோத்திரநற் சத்தமுறும் பயனை
ரூபுருசி நிறைவினுட னுகர்ந்துசமற் பணையால்
நேசமிகு மானந்த பத்தியினா லருந்து
நிலைமையானே சரணன் அயிக்கியநெறி யுரைப்பாம்.

**பொழிப்புரை:** சரணனுக்கு ஐம்பெரும் பூதங்களில் ஒன்றான ஆகாயமே அங்கமாகும். கைகள் ஞானமாகும். சாதாக்கியம் சிவசாதாக்கியமாகும். சத்தி பராசத்தியாகும். இலிங்கம் பிரசாதலிங்கமாகும். கலை சாந்தியாதீதையாகும். முகம் ஓசையைக் கேட்கும் செவியாகும். இந்த நிலையில் முகமாகிய செவியினைக் கொண்டு ஓசையின் பயனையும், இன்பத்தின் நிறைவினையும் நுகர்ந்து, நேசமிகு ஆனந்த பத்தியினால் அர்ப்பிதம் செய்து அருந்தும் நிலையை உடையவனே சரணன் ஆவான்.

## அயிக்கியன் நிலை

29. மன்னுமுயி ருருவஞ்சற் பாவமிருங் கரமா
மகவேசதாக் கியஞ்சிச் சத்திமகா லிங்க
மின்னியல்சேர் கலைசாந்தி யாதீதைதுத் திரமா
மிதற்குமுக மிருதையநற் பரினாமத் தியல்பை
உன்னரிய ரூபுருசி நிறைவதனை யுணர்ந்தே
வோதுசம ரசபத்தி யுற்றதனா லெவையு
மன்னிலையே யற்புதஞ்செய் திருந்துமவ னருள்சேர்
அயிக்கியனென் றுகந்திறைநூ லுரைக்கும் காலை.

(இவை ஆறு திருவிருத்தமும் பத்தன் முதல் அயிக்கியன் ஈறாயானோர்களின் அங்கமும், கை, சாதாக்கியமும், சத்திபேதமும், இலிங்கமும், கலையும், முகமும், பத்தியும் உணர்த்தியது.)

**பொழிப்புரை:** அயிக்கியனுக்கு அங்கம் ஆன்மாவாகும். இரு கைகள் பாவமாகும். சாதாக்கியம் மகா சாதாக்கியமாகும். இலிங்கம் மகாலிங்கமாகும். சத்தி சித்சத்தியாகும். கலை சாந்தீயாதீதை உத்தர கலையாகும். முகம் இருதயமாகும். ஒன்று பிறிதொன்றாக மாறும் இயல்பினையும் இன்பத்தின் நிறைவினையும் உணர்ந்து சமரச

பத்தியினால் எவை அந்நிலையிலேயே அற்புதம் செய்து அருந்தி அவனருள் சேர்பவன் அயிக்கியன் என்று இறைநூல்கள் உரைக்கும்.

## தற்பர சங்கமம்

30. பெற்றமிகும் பத்தனா சாரலிங்க ......
பேணுகுரு லிங்கமயே சுரனென் பாருங்
கொற்றமுறும் பிரசாதி சிவமிவ் வாறும்
கூறுவதற் பரமெனவே குறைவி லாத
நற்றவமாஞ் சரலிங்க பிராண லிங்கி
நன்னரிய பிரசாதம் சரணன் ஞான
முற்றமகா லிங்கமயிக் கியனிவ் வாறு
மோங்கியசங் கமமெனநூ லுணர்ந்து ளோரே.

(இது தற்பர சங்கமம் உணர்த்தியது)

பொழிப்புரை: பத்தன், பத்தனுக்குரிய ஆசாரலிங்கம், மகேசுரன், மகேசுரனுக்குரிய குருலிங்கம், வீமுறும் பிரசாதி, பிரசாதிக்குரிய சிவ லிங்கம் ஆகிய இவ்வாறும் தற்பரமெனக் கூறுவர். குறைவுபடாத நற்றவமான சரலிங்கம் இவ்விலங்கத்திற்குரிய பிராணலிங்கி, நல்ல பிரசாதலிங்கம், இவ்விலிங்கத்திற்குரிய சரணன், அனைத்து இலிங்கங் களும் உருவானதிற்கு அடிப்படையான மகாலிங்கம், இம் மகாலிங்கத் திற்குரிய அயிக்கியன் ஆகிய இவ்வாறும் உயர்ந்த சங்கமமென நூல் உணர்ந்தவர்கள் கூறுவர்.

## அங்கம் - தெய்வம் - இலிங்கம்

## தரிக்கும் இடம்

31. பத்தன மரேசனம் மகே சுரனால
வேதன்பகர் திருமால் பிரசாதி பிராணலிங்கி
யத்தனு ருத்திரன் சரணனகுமீ சனயிக்கி
யனாஞ் சதாசிவ னிவ்வாறு பேர்க்கு
நித்தியமாஞ் சிவலிங்கம் திரிக்குந் தான
நிரைநிரையே முன்னூன் மார்பகங் கைகண்டம்
முத்தமாஞ் சிரம்புருவ மத்தி யத்ததினுள்
தெள்ளிய நூலு ரைக்குங் காணே.

(இது இலிங்கந் தரிக்கும் இடம் உணர்த்தியது)

பொழிப்புரை: பத்தனுக்குரிய தெய்வம் அமரேசன். மகேசுரனுக்குரிய தெய்வம் திருமால். பிராணலிங்கிக்குரிய தெய்வம்

சதாசிவம். தெய்வங்களாகிய இவ்வாறு பேருக்கும் இலிங்கம் தரிக்கும் இடம் முறையே முந்நூல், மார்பகம், கை, கண்டம், சிரம் புருவ மத்தியம் என்பனவாகும் எனத் தெளிவான நூல் உரைக்கும். இதனால் அனைத்துத் தெய்வங்களும் சிவனாவான் என்பது கருத்தாகும்.

## குருலிங்க சங்கம பேதம்

32. பத்தனுட மகேசனைமும் மலவ ரேத்தும்
பகருமிரு மலவர்வழி படுவ தாகும்
வித்தகமாம் பிரசாதி பிராண லிங்கி
விஞ்ஞான கலரினிதாய் விரும்பி யேத்தும்
நித்தியமாஞ் சரணனயிக் கியன்றன் பாதம்
நின்மலனே மும்மலங்க ணீக்கி யின்ப
முத்திதருங் கரணையினா லிருமூன் றாகு
மூர்த்திகுரு லிங்கிசங் கமமா மென்றே

(இது விஞ்ஞானகலர், பிரளையர், சகலர்களென்று இம்மூன்று வகையார் மாக்களையும் இரட்சிப்பான் பொருட்டு சங்கமமாறு பேதமாய் நின்ற முறைமை உணர்த்தியது)

**பொழிப்புரை:** பத்தனை ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையுடைய சகலர்கள் வணங்குவர். மகேசனை ஆணவம், கன்மம் என்ற இரு மலங்களுடைய பிரளயாகலர் வழிபடுவர். ஞானமுடைய பிரசாதி, பிராணலிங்கி இவர்களை ஆணவம் என்ற ஒரு மலத்தையுடைய விஞ்ஞானகலர் இனிதாக விரும்பி வணங்குவர். நித்திய பூசை செய்யும் சரணன், அயிக்கியன் பாதங்கள் மும்மலங்கள் நீங்கிய நின்மலன் வழிபடுவனவாகும்.

மும்மலங்களையுடையவர்களான சகலர்களையும் இருமலங்களை யுடைய பிரளயாகலர்களையும் காத்தருளும் பொருட்டு பத்தன் மகேசுரன் இவர்கள் குருவாகவும், ஒரு மலமுடைய விஞ்ஞான கலர்களை காத்தருளும் பொருட்டு பிரசாதி, பிராணலிங்கி இவர்கள் இலி ங்க உருவாகவும், மும்மலங்களையும் விட்ட நின்மலனை காத்தருளும் பொருட்டு சரணன் அயிக்கியன் இவர்கள் சங்கமமாகவும் உள்ளார்கள். மும்மலங்களை நீக்கி இன்ப முத்தி தரும் கருணையால் குருலிங்க சங்கமம் ஆறு பேதமாய் நின்ற முறைமை இதுவேயாகும்.

## ஐம்புலன்களும் – மகாலிங்கமும்

33. மதிப்பரிய மகாலிங்க மதுதா னைந்து
வகையாக மாசார லிங்க மாதி

விதிப்படியே பிரசாத மீற தாக
விளங்கியிடு மிவையடைவே விரவு கந்தந்
துதிப்பரிய சுவையுருவம் பரிச மோசை
சொல்லியவும் பயனெவையுந் துளக்கி லாமற்
பொதுப்படநின் றிருதையமங் கிடம தாகப்
பொசிக்குமென வுரைக்குமருட் புனித நூலே

(இது கந்தாதி முதலாயினவைந்தையும் மகாலிங்கமே ஆறு பேதமாய் மனறு பொசிக்கு முறைமை உணர்த்தியது.)

**பொழிப்புரை:** பெருமைக்குரிய மகாலிங்கம் ஐந்து வகையாகும். அவை ஆசாரலிங்கம், குருலிங்கம், சிவலிங்கம், சங்கம லிங்கம், பிரசாதலிங்கம் என்பனவாகும். இவை நாற்றம், சுவை, உருவம், ஊறு, ஓசை இவற்றில் கலக்கும். இந்தப் பயன் ஐந்தையும் அசைவின்றி மகா லிங்கமே பொதுப்பட நின்று தன்னுடைய இடமான இருதயத்தைக் கொண்டு சுவைக்குமென்பது புனிதநூலின் கூற்றாகும்.

## ஓசை, ஊறு இவற்றின் பேதங்களும் இலிங்கங்களும்

34. ஓசைபரி சஞ்சுரூப மிரதங் கெந்த
மொன்றினி லைந்தைந்தா யிசைக்கு மோசை
பேசிடிலா சாரமுத லைந்துங் கஞ்சம
பிறங்கொலியாழ் நரம்பொலிதோற் கருவி யோசை
தேசமருந் துளைக்கருவி பாட லோசை
செறிந்திடுநற் கடினமுடி நிகட்சி வெம்மை
யாசில்சயித் தியமதனின் பரிச மைந்து
மாசார முதலடைவே யடையுங் காணே.

(இது முதற்சொன்ன கந்தாதி பேதமைந்தும் இருபத்தைந்து பேதமாம். இதில் சத்தபேதமைந்து பரிசபேதமைந்தும் ஆசார முதலாகிய லிங்கத் துக்கு அற்புதமாமாறு உணர்த்தியது.)

**பொழிப்புரை:** ஓசை, ஊறு, உருவம், சுவை, நாற்றம் ஆகிய ஐந்தும் ஒவ்வொன்றும் ஐந்து பேதங்களாய் இசைக்கும். ஒவ்வொன்றின் இந்த ஐந்து பேதங்களும் ஆசாரலிங்கம் முதலாக உள்ள ஐந்து இலிங்கங்களும் உரியனவாகும். அவ்வகையில் ஓசையின் ஐந்து பேதங்கள் முறையே யாழொலி ஆசாரலிங்கத்திற்கும், நரம்பொலி குருலிங்கத்திற்கும், தோற்கருவி ஓசை சிவலிங்கத்திற்கும், துளைக்கருவி ஓசை சங்கமலிங்கத்திற்கும், பாடலோசை பிரசாதலிங்கத்திற்கும்

உரியனவாகும். இவற்றைப் போன்றே ஊறுவிற்குரிய ஐந்து பேதங்களும் முறையே ஆசாரலிங்கத்திற்குச் செறிதல் (இறுகல்) குருலிங்கத்திற்குக் கடினம் (வன்மை) சிவலிங்கத்திற்கு, நெகிழ்ச்சி (தளர்ச்சி), சங்கம லிங்கத்திற்கு, வெம்மை பிரசாதலிங்கத்திற்குச் சயித்தியம் (குளிர்ச்சி) ஆகியவை உரிமையுடையவையாகின்றன.

## உருவம் - சுவை இவற்றின் பேதங்களும் இலிங்கங்களும்

35. உருவமுறு நிறமைந்தைந்தாம் பொன்மை வெண்மை
யோன்சிவப்புக் கருமைமிகுந் தூமம் மைந்துந்
திருவுமருவு மாசார முதலைம் பாலுஞ்
சேர்த்திடுமைங் கையிரதந் தெரிக்குங் காலைப்
பொருவினிலருந் தித்தித்தல் துவர்த்தல் கார்த்தல்
புளித்தலுடன் கசத்தலெனப் புகன்ற ஐந்து
மருவியிடு மாசாறு மாதி யைந்தும்
வகையுறுமை வகைக்கந்தம் வகுப்புக் கேளே.

**பொழிப்புரை:** உருவத்தின் வகைகளான நிறம் ஐந்து வகையாகும். அவை முறையே ஆசாரலிங்கத்திற்குப் பொன்மை; குருலிங்கத்திற்கு வெண்மை; சிவலிங்கத்திற்குச் சிவப்பு; சங்கமலிங்கத்திற்குக் கருமை; பிரசாதலிங்கத்திற்குத் தூமம் (புகை நிறம்) ஆகியவை பொருந்துவனவாகும். சுவையின் வகைகளான தித்தித்தல் ஆசார லிங்கம்; துவர்த்தல் குருலிங்கம்; கார்த்தல் சிவலிங்கம்; புளித்தல் சங்கமலிங்கம்; கசத்தல் பிரசாத லிங்கம் என்னும் முறையில் அமையும்.

## நாற்றத்தின்(மணம்) பேதங்களும் - இலிங்கங்களும்

36. வேர்முதலா யினகந்த மரத்தின் கந்த
மிக்கதளி ரிடைக்கந்த மலரின் கந்த
மேர்தருகாய்க் கனிக்கந்த மிவையோ ரைந்து
மெய்தியிடு மாசாரமுத லிங்க மைந்துஞ்
சீர்தருமிங் கிவையிருவத் தைந்தால் மேவுந்
திருத்திமகா லிங்கத்திற் செறியு மெல்லாஞ்
சார்தருமகா லிங்கதிறதி தானைந் தாகச்
சாற்றிடுவ ராகமனூலத் தலைவர் தாமே.

(இது கந்த பேதமை ஐந்தும் அற்புதமாமாறு உணர்த்தியது)

**பொழிப்புரை:** வேரை முதலாக உடைய கந்த மரத்தின் மணமிக்க வேர், தளிர், காய், கனி ஆகிய ஐந்தும் கந்தத்தின் வகைகளாகும். இவை முறையே ஆசாரலிங்கம், குருலிங்கம், சிவலிங்கம், சங்கமலிங்கம், பிரசாதலிங்கம் ஆகியவற்றிற்குரியனவாகும்.

மேற்கூறிய ஓசை, ஊறு, உருவம், சுவை, நாற்றம் ஆகியவற்றின் இருபத்தைந்து பேதங்களும் சேர்ந்து மகாலிங்கத்தில் கலக்கும். இவை அனைத்தும் மகாலிங்கத்தின் தன்மைதான் ஐந்தாகும் என ஆகம நூலின் தலைவர் இறைவன் கூறுவர்.

## மகாலிங்கத்தின் அற்புதம்

**37. கந்தமலி தருந்திறதி சுவையின் திறதி**
**குருதுருவ முறுந்திறதி பரிசந் திறதி**
**முந்துமொலி தருந்திறதி யிவையா சார**
**முதலாக வைந்தினுக்கு மொழிய லாகும்**
**வந்தடையு மெவையெவையு மகாலிங் கத்தே**
**மகிழுமகா லிங்கமுக மைந்தா மீரைந்**
**திந்திரிய னுகரிலத னிடம் யாவு**
**மெய்துமுயிர்க் கவதாரப் பேரியம்பக் கேளே.**

(இது முதற்சொன்ன இருபத்தைந்து வகைப் பயனும் மகா லிங்கத்திற்கே அற்புதமாமாறு உணர்த்தியது.)

**பொழிப்புரை:** நாற்றம், சுவை, உருவம், ஊறு, ஓசை இவ்வைம்புலன்களின் தன்மைகளான இருபத்தைந்தும் ஆசாரலிங்கம் முதலாக பிரசாதலிங்கம் ஈறாக உள்ள இவ்வைந்து லிங்கங்களுக்கும் உரியதாகக் கூறப்பட்டன. மேற்கூறிய இந்தத் தன்மைகள் அனைத்தும் மகாலிங்கத்தில் வந்தடைந்தே மகிழும். மேற்கூறிய ஐந்து லிங்கங்கள் மகாலிங்கத்தின் ஐந்து முகங்களாகும். மகாலிங்கம் இந்த முகங்களினால் பிற புலன்களை நுகரும்போது அப்புலனுக்கிடமாக எய்தும் உயிர்களின் அவதாரப் பெயர்களும் பலவாகும். அவை

## மகாலிங்கம் - முகம் - புலன்கள் - ஆன்மா

**38. தாங்கியவா சாரமதாய் மகாலிங் கந்தான்**
**தருகந்தம் னுகரிலுயிர் பத்த னாகுந்**
**தீங்கில்குரு லிங்கிமதாய் மகாலிங் கந்தான்**
**திகழிரத முறிற்சிவ மகேச னாகும்**

ஓங்குசிவ லிங்கமதாய் மகாலிங் கந்தான்
உருவமுறிற் பிரசாதி யுயிர்க்கு நாமம்
பாங்கினுடன் சங்கமமாய் மகாலிங் கந்தான்
பரிசமுறிற் பிராணலிங்கி பயிலான் மாவே.

**பொழிப்புரை:** மகாலிங்கம்; ஆசாரலிங்க முகமாய் இருந்து நாற்றம் நுகரில் அவ்வுயிர் பத்தனாகும். குருலிங்க முகமாய் இருந்து சுவை நுகரில் அவ்வுயிர் பிரசாதி என்னும் பெயர் பெறும். சங்கமலிங்க முகமாய் இருந்து ஊறு நுகரில் அவ்வுயிர் பிராணலிங்கி எனப்பெறும்.

## இதுவுமது

39. உற்றபிர சாதமதாய் மகாலிங் கந்தான்
ஓசையுறிற் சரணனுயிர்க் குகந்த நாமம்
பற்றியிவை யனைத்துமகா லிங்கந் தானே
பரிணாம திறதிபரிக் கிரக மாகிற்
பெற்றிமிகும யிக்கியனாம் பிறங்குஞ் சீவன்
பேணுமிரு மூவகையாம் பத்தி யாலே
முற்றவருஞ் சமற்பனைசெய் திடுவோன் சீவன்
முத்தரென நித்தியமாய் மொழியும் நூலே.

(இவையிரண்டு திருவிருத்தம் முதற்சொன் ஐவகைப் பயனாகிய இருபத்தைந்து பேதமும் மகாலிங்கந்தானே சடத்தல இலிங்கமாக நின்று பொசிக்கும் பொழுது ஆன்மாவுக்கு அவதாரப் பேர் உணர்த்தியது.)

**பொழிப்புரை:** மகாலிங்கம் பிரசாதலிங்க முகமாய் இருந்து ஓசை நுகரில் அவ்வுயிர் சரணன் என்று பெயர் பெறும். மகாலிங்கம்தான் ஒன்று பிறிதொன்றாக மாறிய தன்மை போன்று, மேற்கூறிய உயிர்கள் அனைத்தும் பத்தன் முதல் ஒன்றன் நிலை பிறிதொன்றன் நிலையாக மாறி, இறுதியில் அயிக்கியனாக மாறும். மேற்கூறிய அறுவகைப் பத்தியால் இறைவனுக்குக் காணிக்கை செலுத்திடும் உயிரே எப்போதும் முத்திக்குரியதாகுமென நூல்கள் கூறுகின்றன.

## மிச்சிர அர்ப்பணம்

40. ஒருபுலனி லியாதாமொன் றுறிலா சாரம்
உற்றுணரிற் குருலிங்கம் நிச்ச யித்தே
தெருளுமது சிவலிங்கஞ் சரலிங் கந்தான்
தெரிந்த ததனை யருந்தலதிற் பரிணா மந்தான்

**மருவுபிர சாதலிங்க மிவற்றின் திறதி**
**மகாலிங்க மாமிதுமிச் சிரமா முண்மை**
**தருமுணர்வி னுணர்ந்தகமைப் பற்றொன்றில்லாச்**
**சரணர்பர மானந்ததானந்த தறுவி னோற்கே.**

(இது மிச்சிர அர்ப்பணம் உணர்த்தியது)

**பொழிப்புரை:** புலன்களுள் யாதேனும் ஒன்றில் உறுதல் ஆசாரலி ங்கமாகும்; முற்றுணர்ந்தால் குருலிங்கம்; உறுதியாகத் தெளிதல் சிவ லிங்கம்; தெரிந்ததனை அனுபவித்தல் சரலிங்கம்; அதில் பிறிதொன்றாக மாறுதல் பிரசாதலிங்கம்; இவற்றின் தன்மையெல்லாம் மகாலிங்கத்தின் கலப்பு என்பதுதான் உண்மையாகும். இந்த உணர்வின் தன்மையில் எந்த ஒன்றிலும் பற்றில்லாத வீரசைவப் பெரியோர்கள் குழுமையில் சேர்ந்தவர்கள் பரமானந்தம் அவார்கள்.

## சுகபோசனம்

41. **ஆக்கிரண முதலிதைய மிறுதி யாக**
**வாசார மகாலிங்க மாதி யந்தம்**
**நீக்கரிய லிங்கமிரு மூன்று நேரே**
**நின்றவடை வேகந் தமிரத ரூபம்**
**ஊக்கமுறும் பரிசமருஞ் சத்தந் தன்னை**
**யுரியபரி ணாமத்தை யுகர்ந்து தானே**
**தாக்கறநின் றருந்துமென வறிந்து நீங்கல்**
**தனைசகபோ சனமெனவே சாற்றும் நூலே**

(இது சகபோசனமாமாறு உணர்த்தியது)

**பொழிப்புரை:** நாசி, நாக்கு, கண், மெய், செவி, இருதயம் என்னும் ஆறுவகைப் பொறிகளுக்கும் (இப்பொறிகளும் இலிங்க மயமானதாகும்) ஆசாரலிங்கம், குருலிங்கம், சிவலிங்கம், சங்கமலிங்கம், பிரசாதலிங்கம், மகாலிங்கம் என்னும் அறுவகை இலிங்கங்களும் புலன்களின் அடைவுகளாக நாற்றம், சுவை, உருவம், ஊறு, ஓசை என்னும் ஐந்தும் அமைகின்றன. இவை ஒன்று பிறிதொன்றை மகிழ்ந்து பற்றிநின்று புசிக்குமென அறிந்து நீங்குவதையே சகபோசனம் என்று நூல்கள் கூறும்.

## ஆத்மா இறுதியில் ஒடுங்கும் இடம்

42. **இந்தவன கலிங்கமதி லேந்தலிங் கத்தே**
**யிடுமி றுதிதனி லான்மா வென்னின்**

**முந்திய வாசார முதலைந் தாகும்**
**முகங்கடோறு மொழிந்த ......றேவ ழாமல்**
**வந்திடுமுன் னமைத்தவினைப் பயனைந்[1] தாகு**
**மணமிரத முருவமுறும் பரிச மோசை**
**ஐந்தையுமன் புடனுகரும காலிங் கத்தே**
**அடையுமுயி ரெனுமிறையா கமங்க டானே.**

(இது ஆத்மா இறுதியில் ஒடுங்கும் இடம் உணர்த்தியது)

**பொழிப்புரை:** இலிங்கத்தைத் தழுவியும், தாங்கியும் அதில் எய்திடும் ஆன்மா முன்பு கூறிய ஆசாரலிங்கம் முதலான ஐந்து இலிங்கங்களும், அவற்றிற்கு அமைந்த முகங்களின் தன்மை வழுவாமல் வந்திடும் வினைப்பயன் ஐந்தாகும். அப்பயன்கள் நாற்றம், சுவை, உருவம், பரிசம், சசை என்ற ஐந்தையும் அன்புடன் நுகரும் மக லிங்கத்தினிடத்தே வந்தடையும் உயிரே இறுதியில் இறையாகும் என ஆகமங்கள் உரைக்கின்றன.

## ஆத்மாக்களுக்குரிய பிரசாதம்

43. **இந்திரிய மாத்திரைய மீரைந் தாலே**
**இந்தவித மகிதமனைத்துமகா லிங்கந் தானே**
**பந்தமற வருந்தி லுயிற்கு திப்பிரின்றாம்**
**பரிந்துயிர்க ளறிந்தகலிற் பற்றின் றென்னில்**
**முந்தொருவன் பசிக்கொருவ னருந்தல் வேண்டு**
**முதல்வனருந் தானுயிருக் கருந்து மென்றே**
**சிந்தைதெளிந் தருநெறியி லொழுக[2] யாவுஞ்**
**சிவாற்பிதமாம் பிரசாதஞ் சீபற் காமே.**

(மகாலிங்கந்தானே யாவும் பொசிக்கும் என்பாரைப் பற்றிக் கர்த்தாப் பொசியான், ஆத்மாக்களுக்குப் பொசிப்போன் என்னும் மறைமையு மியற்றிய பூசைக்குக் கொண்டு ஆத்மாக்களுக்குப் பிரசாதங் கொடக்குமென்று முறைமை உணர்த்தியது.)

**பொழிப்புரை:** மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளால் பெறும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை எனும் ஐம்புலன்களும், இவற்றிலிருந்து தோன்றும் இருபத்தைந்து புலன் உணர்வுகளும் ஆகிய அனைத்தும் மகாலிங்கமேயாகும். வருந்தும்

---

சு.வே. 1. எந்தை
சு.வே. 2. வாழ்க

உயிர்களுக்கு மலம் அற உதிப்பதும் மகாலிங்கமாகும். இதனை அறிந்தும், ஏற்றும் ஆசைகளின்றி இருக்கும் உயிர்கள், சிவநெறியில் ஒழுகும் முதன்மை பெற்ற குருவாகும். அவ்வுயிர்கள் தம் பசிக்கு அருந்தினால் இறைவன் அருந்தாவிடினும் பிற உயிர்கள் அனைத்தும் அருந்தியதாக அமையும். இதனைச் சிந்தையில் தெளிந்து அருநெறியில் ஒழுகும் யாவும் சிவாற்பிதமாகும். இந்தப் பிரசாதம் ஆத்மாக்களுக்குரியதாகும்.

## இலிங்கி

44. தூலமுடன் சூக்கும காரணமாந் தேகஞ்
சொன்னடைவே யிட்டலிங்க முதலாய மூன்று
கோலுமிவை யொன்றிரண் டாகி யாறாங்
கூறியவா சாரமகா லிங்க மீறா
யேலவரு மிவற்றினி லீசான மாதி
யிவைமுதலாஞ் செவியாதி வாக்கா திக்குச்
சாலவிதன் பயனைவையு மகாலிங் கத்தே
சமற்பணையால் கூறுவாங் கலிங்கி யாமே.

**பொழிப்புரை:** உயிர்களின் தேகம் தூலம், சூக்குமம், காரணம் என மூன்றாகும். அவை முறையே இட்டலிங்கம், பிராணலிங்கம் பாவலிங்கம் ஆகியவற்றால் சூழ்ந்துள்ளன. இந்த இலிங்கங்கள் ஒவ்வொன்றும் இரண்டாகி ஆசாரலிங்கம் முதலாக மகாலிங்கம் ஈறாக ஆறாகும். இவற்றிலிருந்து ஈசானம் செவி, வாக்கு முதலிய பயன் யாவும் மகாலிங்கத்திலிருந்தே உருவானதாகும். எனவே, அவற்றை அம்மகாலிங்கத்தே சமற்பணை செய்பவர் இலிங்கியாவர்.

## இதயத்தில் பொருந்துவன

45. செவிவர்க்கம் பரமபூதம் தெற்கீ சானந்
திகழ்த்துவக் குப்பாதம் பூதங் காலிற்
தவிராத தற்புருடம் நயனம் பாணி
தணிற்பூத மழல்தகை கோரந் தாலு
நவையாகுங் குதம்பூத முகம்[1] வாமம்
நண்ணுமதி லாக்கி ராண முபத்தம பூதம்
புவியாகும் திறசத்தி யோசா தந்தான்
புகலிதையத் தெவையெவையும் பொருந்துங் காயே.

---

சு.வே. 1. சுகம்

(இவையிரண்டும் திருவிருத்தமும் சங்கமம் கூறுவார் இலிங்கி யென்னும் முறைமை உணர்த்தியது.)

**பொழிப்புரை:** ஐம்பொறிகளில் ஒன்றான செவியில் ஆகாயம் தோன்றும்; அதற்கு முகம் ஈசானம். மெய்யில் காற்று தோன்றும்; அதற்கு முகம் தற்புருடம். கண்ணிலிருந்து நெருப்பு தோன்றும்; அதற்கு முகம் அகோரம்; வாயிலிருந்து நீர் தோன்றும்; அதற்கு முகம் சத்தியோசாதம். செவி, மெய், கண், வாய், மூக்கு இவற்றிற்கு முறையே வாக்கு, கால், கை, சூதம், குறி என்ற கன்மேந்திரியங்கள் ஐந்தாகும். மேற்கூறிய ஐம்பொறிகள், ஐம்பூதங்கள், ஐம்முகங்கள், ஐங்கன்மேந்திரியங்கள் அனைத்தும் மகாலிங்கத்திற்குரிய இடமான இதயத்தில் பொருந்துனவாகும்.

## ஆறுசமய தாபனாசிரியன்

46. மருவுமகா லிங்கதோ முகத்தை நல்கும்
வாமமதிற் பிரசாதந் தனில் சானன்
பொருவில்வயி ரவஞ்சங்க மத்தி லேதற்
புருடமதிற் சைவமாஞ் சிவத்த கோரம்
வருவதுகா ளாமுகமாங் குருவில் வாம
விந்தமா சாரத்து திக்குஞ் சத்தி
தருவதுபா சுபதமாஞ் சங்க மந்தான்
சட்சமயா சாரியனெனச் சாற்று நூலே.

(இது சங்கமம் ஆறுசமய தாபனாசாரியனெனும் முறைமை உணர்த்தியது.)

**பொழிப்புரை:** மகாலிங்கம், பிரசாதலிங்கம், சங்கமலிங்கம், சிவலிங்கம், குருலிங்கம், ஆசாரலாங்கம் ஆகிய இலிங்கங்களிலிருந்து முறையே அதோமுகம், ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்தியோசாதம் முதலான முகங்கள் தோன்றும். இம்முகங்களிலிருந்து முறையே வாமம், வயிரவம், சைவம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம் முதலிய அறுவகையும் சைவ சமயத்தின் உட்பேதங்கள் தோன்றும். சங்கமம் ஆறுசமயத்தின் குருவென நூல்கள் கூறுகின்றன.

## சிவனுருவம்

47. அரவமொரு வளைத்தீண்டி லங்க மெங்கும்
அந்தவிடம் பூரணமாந் தன்மை போலும்
பரவுமெரி பொருந்துகடத் துகந்த தன்னிற்
பாய்ந்திடுமுட் டணம்போலும் பரிக்குந் தூசில்

மேவியவித் தகைபோலும் விசிட்ட மாகுந்
திரமருவுஞ் சிவலிங்கம் பொருந்துங் காயஞ்
சிவனுருவா மெனவருநூல் தெரிக்கு மன்றோ.

பொழிப்புரை: ஒருவனைப் பாம்பு தீண்டினால் அவனின் உடல் முழுவதும் அந்த விடம் பெருகும். அதுபோல் உடலில் தீ பட்டவுடன் அதன் வெம்மை உடல் முழுவதும் கலக்கும். புழுதி வீட்டில் நிறைந்திருக்கும்போது வீடே அசுத்தமாக இருக்கும். மேற்கூறிய வித்தகைபோல் சிவலிங்கத்தை அணிந்த மேனி சிவனுருவமாகும் தகுதியைப் பெற்றுவிடுகிறது.

## சிவானுபவம்

48. கோதனத்தில் முலையிலிங்கங் குருவா மேனி
கூறியசங் கமமுகமாங் குலவுங் கீரம்
போதமுலை பொழிந்திடுமென் தெற்கன் பாகப்
புல்லளிக்கி லருந்தியிடா துடலங் கொள்ளா
நீதியினா லருந்துமுகத் தளித்தா லெங்கும்
நிறைவாகும் முத்திசிவ லிங்கத் தேனும்
ஏதமில்சங் கமத்தின்வழி படுவார்க் கன்றி
எண்ணரிய சிவானுபவ மெய்தொ ணாதே.

(இது சங்கமத்தை யிகழ்ந்து தாபரம் அருச்சித்தால் முத்தியில்லை என்னும் முறைமையும், சங்கம பூசையே குருவுக்கும் லிங்கத்துக்கும் அற்புதமாம் என்னும் முறைமையும் உணர்த்தியது)

பொழிப்புரை: பசுவின் மடி இலிங்கம் தரித்த குருவின் மேனியாகும். சிவனடியார்களின் முகமெல்லாம் பசுவின் மடியில் உலவும் பால் ஆகும். பசுவின் மடி கன்றுக்குப் பால் பொழிந்திடுமென்று அதற்கு அன்பாகப் புல்லளிக்காமல், தான் பால் அருந்தினால் உடல் கொள்ளாது. அதற்கு அதனை மகிழ்ந்து அளித்து கன்று அருந்த உதவி புரியும் உண்மை போன்று சிவலிங்கம் தரித்து முத்தி நிறைவானாலும் குற்றமற்ற சங்கம பூசையில் வழிபடுபவார்க்கன்றி எண்ணரிய சிவானுபவம் உடலில் தோன்றாது.

## தீர்த்தப்பிரசாதத்தின் பெருமை

49. சங்கமத்தின் பாதசலஞ் சறுவ தீர்த்தஞ்
சனன்விரு ளகற்றுருந் தாகு மேனை
லிங்கமுகந் தாடுமவி டேகநீ ராடு
மெழிற்பிரசா தங்கோடி லிங்கி நேராம்

அங்கதுறை வேத்தியமற் பிதமா மன்பால்
அருந்துமவ னெமதுருவா மயன்மா லாதி
புங்கவருகக் கோசரமா மெனமுன் னீசன்
புகன்றன னிங்கிவர் பெருமை புகலொணாதே

(இது சங்கமத்தின் தீர்த்தப் பிரசாதம் இலிங்கத்துக்கு அற்புதமாகுமென்னு முறைமையும் இந்தத் தீர்த்தப் பிரசாதத்தை விரதமாகக் கொள்வார்களின் காயம் சிவகாயமென்னும் முறைமை உணர்த்தியது)

**பொழிப்புரை:** வீர சைவர்கள் கூடும் திருக்கூட்டமான சங்கமத்தின் திருவடிகளில் திருமஞ்சனம் செய்த பாததீர்த்தம் பிறப்பின் இருள் அகற்றும் மருந்தாகும். இவ்வாறே இலிங்கத்திற்கு மகிழ்ந்து திருமஞ்சனம் செய்த நீரைவிட மேற்கூறிய பாத தீர்த்தப் பிரசாதம் கோடி இலிங்க தீர்த்தத்திற்கு நிகராகும். இவ்வாறு அளிக்கும் காணிக்கையாகிய அற்பிதத் தீர்த்தப் பிரசாதத்தை அருந்துபவன் எமது உருவமாவான் என்றும் பிரமன், திருமால் முதலாக நந்தி முதலானோர் இருக்கும் இருப்பிடம் போன்று அவனுக்கு உரிய இடமும் உண்டு என்றும் சிவபெருமானே கூறியருளினார் என்றால், இவர் பெருமையை நம்மால் கூற இயலாது.

## சங்கம பூசையினால் மும்மலங்கள் நீங்கும் முறைமை

50. வாக்கதனாற் காயத்தால் மனநினைவா லகலா
வருகரும மூலமல மாயையினை யகற்றி
காக்குமிறை யெவ்வுயிர்க்கு மனுக்கிரகம் புரியுங்
கருணையினா லக்குருலிங்க சங்கம்மா மிதனி
நீக்கரிய சங்கமமா மெழுத்தொருமூன் றடைவே
நின்றுதொழி லுரைநினைவால் நிகழ்த்துமிரு வினையுண்
டாக்குமிரு வினைக்கரும மகற்றுமருள் வேடத்
தவர்பூசை மும்முதற்கு மாகுமென அறியே.

(இது கர்த்தாவே குருலிங்க சங்கமமாகி நின்ற முறைமையும் மூவகைத்தாகிய கன்ம மலங்களுஞ் சங்கம பூசையிலன்றி வேறொன்றிலும் நீங்காதென்னு முறைமை உணர்த்தியது)

**பொழிப்புரை:** மொழியாலும், மெய்யாலும், மனநினைவாலும் அகலாது வரும் மலங்களான ஆணவம் மாயையினை அகற்றிக்

காப்பவனே இறைவனாவான். அவன் எல்லா உயிர்களுக்கும் அருள்புரியும் தன்மையினால் குருலிங்க சங்கமமாகவே ஒளிருவான். மூன்றெழுத்தடைவான சங்கமத்தில் நின்று செயலாலும், மொழியாலும், நினைவாலும் பூசை நிகழ்த்தினால் நல்வினை, தீவினைகளை யுண்டாக்கும் கன்ம வினையை அகற்றலாம். இந்த சங்கமம் முக்கடவுளுக்கும் உரிய பூசையாகும். சங்கம பூசையினாலன்றி வேறொன்றினாலும் மும்மலங்கள் நீங்காது என்பதை உணர்தல் வேண்டும்.

## மும்மலங்கள் குருலிங்க சங்கமத்தால் நீங்கும் முறைமை

51. நூல்பலவு முணர்ந்திடினுஞ் சமய வாதம்
துவன்றுநிரா கரித்திடினுந் தவஞ்செய் தாலும்
மாலகலா மலமூன்று மகலாதா ராயின்
மருவார்கள் பரகதிமும் மலம்போ மாறுஞ்
சீலமிகுங் குருவருளால் மாயை நீங்குஞ்
சிவார்ச்சனையால் மூலமலஞ் சிதைந்து நீங்குங்
கோலுமிரு வினைத்துயரஞ் சங்கமத்தால் நீங்குங்
கூறுமுதல் மூன்றையும் மெய்யன்பாற் கொள்ளே.

(இது மும்மலங்களும் குருலிங்க சங்கமத்தாலே நீங்குமென்னும் முறைமை உணர்த்தியது.)

பொழிப்புரை: ஆகமம், சாத்திரம் முதலானவற்றைக் கற்று உணர்ந்தாலும், சமயம் பற்றிய தருக்கம் முதலியனவற்றில் நிறைந்து, திருநீற்றினை உடலில் தரித்தாலும், தவம் செய்தாலும், மயக்கம் அகலாமல், ஆணவம், மாயை, கன்மம் என்ற மூன்று மலங்களும் அகலாதாராயின் அவர்கள் முத்திக்குப் பகைவர்கள் ஆவார்கள். நல்லொழுக்கம் மிகுந்த குருவருளால் மாயை நீங்கும். சிவபூசையால் மூலமலமான ஆணவம் சிதைந்து நீங்கும். கன்மத்தினால் வரும் இருவினைகளின் துயரங்களும் சங்கமத்தால் நீங்கும். எனவே குருலிங்க சங்கமத்தை மெய்யன்பாற் கொள்வதே முறைமையாகும்.

## சங்கமத்தின் வடிவம் – பருனுருவம்

52. அன்னியமாய்ச் சத்தாமைம் புலாதிக் கூட்டை
அருளுரு வென்றறைந்திடு மாறிசைந் திடாதிங்

கென்னிலருஞ் சிலையதனி லிங்கந் தானு
மியம்புபல பாடையிலஞ் செழுத்து மேவி
மன்னியதா யினுமிவற்றின் வேறாய் நின்ற
வாறெனவே சங்கமத்தின் வடிவ தானு
முன்னரிய பரனருளி னுருவா மென்றே
உணர்ந்திடுநம் பவமகற்று முறுதி யாலே.

**பொழிப்புரை:** ஐம்புலன்களால் ஆனதும் துன்பங்கள் நிறைந்ததுமான உடலைச் சிவனின் அருளுருவம் என்றே கருதுதலும், இலிங்கத்தைச் சிலையென்று எண்ணாமல் தான்தான் என்று கருதுதலும், பலமொழியிலும் ஐந்தெழுத்தை மேவி நிலைபெற்றது. என்றாலும் சங்கமத்தின் வடிவாக இருப்பதுவே பரனருளின் வடிவமாகும். இதுவே நம்பாவங்களை அகற்றும் என்பது உறுதியாகும்.

## பாதகர்

53. கருமாலம் புயனுடனோ டிறையென் பாருங்
கலைமாவிந் திரையுமையோ டிணையென் போரும்
திருவாருஞ் சங்கமமா னிடரென் போருஞ்
சிவலிங்கஞ் சிலையெனவே சிந்திப் போரும்
பொருவாரு மெழுத்துடனஞ் செழுத்தென் போரும்
புலாலுணவை யருந்தவமாய்ப் புகலு வோரும்
வெருவாரு மருநரகி லகலா தாழ்வர்
விரும்புமதி பாதகரென் றியம்பும் நூலே.

(இவையிரண்டு திருவிருத்தமும் குருலிங்க சங்கமத்தை மானிட ரென்போராதி பாதகர் என்னும் முறைமையும் உணர்த்தியது.)

**பொழிப்புரை:** திருமால், பிரமன், ஆகியோருடன் சிவபிரான் இணையாவாரென்போர் உள்ர். இதேபோல் கலைமகள், இலக்குமி ஆகியவர்களை இறையுமையோடு இணையென்போரும், சங்கமத்தை மானிடர் என்போரும், சிவலிங்கத்தைச் சிலையென்போரும், ஐந்தெழுத்தையும் ஏனைய எழுத்துடன் ஒப்பாகக் கூறுவோரும் இந்நிலவுலகில் உள்ளனர். இவற்றையன்றி புலால் உணவை விரும்பி வீணாக உண்போரும் உண்டு. இவர்கள் யாவருமே பெரும்பாவங்களை விரும்பிச் செய்யும் பாதகர்களாவர் என்று நூல்கள் இயம்புகின்றன.

## வேறு குருலிங்கம் தரித்தல்

54. துட்டர்களால வாகுவினார் பிலவங் கற்றார்
சோரர்களா லிருங்கரியாற் சுழிகொ ணீரால்

இட்டமிகுஞ் சிவலிங்க மகன்ற தேனும்
எரியினிடை வெந்திடினு மியங்குந் தூரி
வட்டையினி லகன்றிடினுந் தொழிலால் விஞ்சு
மறப்பதனா லகன்றிடினு மாசி லாசான்
சிட்டமரும் பிரசாதந் தீர்த்தந் தன்னாற்
தீக்கற வேதோர் குருலிங்கந் தரிக்க லாமே.

பொழிப்புரை: தீயோர்களாலும் கள்வர்களாலும், கீழ்சாதியினராலும், திருடர்களாலும், தீயாலும், நீர்ச்சுழியாலும் சிவலிங்கம் அகன்றிடினும், தீயினால் வெந்திடினும், வழியில் அகன்றிடினும், நல்லொழுக்கமும், நல்லறிவும், பெருமையும் வாய்ந்த குருவின் ஆசியினால் தீர்த்தப் பிரசாதம் பெற்றுத் தீக்கை செய்து வேறு குரு லிங்கம் தரிக்கலாம்.

## தீக்கை செய்த வேறு குருலிங்கம் தரித்தல்

55. பீலமிலங் கணமுறிலோர் பீடி முன்னை
படிபனு திலையகன்ற பிறங்கச் சாத்து நாடு
பீலங்கண பீலிங்க முறிவன் னோரே
நாட்டுதேவப் பீடமிசை நயந்தோர் நாதம்
நீடுமரிச் சனையிலகன் றுளதோர் பாத
நிகழ்தக பிரசாதம் நிலைவ ழாமற்
சேடமரும் பஞ்சகல சங்கள் நாட்டித்
தேசிகனாற் புனறநீகன்க செய்து சாத்தே.

பொழிப்புரை: அச்சமுடையோரும், நோயுடையோரும் இலிங்கத்தைக் கழற்றிவிட்டால், பின்னர் பீடத்தின் முன்னர் வேறு ஒரு இலிங்கத்தை வைத்து, அதற்கு உணர்வு செய்து அணிதல் வேண்டும். இவர்கள் சிவனின் அன்பர் சங்கம குருவின் உதவியோடு இலிங்கத்தைப் பீடத்தில் வைத்து, அருச்சனை பாத தீர்த்தம் பிரசாதம் ஆகியவற்றின் நிலை வழுவாமல் அருச்சித்து மேலும் ஐந்து கலசங்கள் நிலைபெற வைத்துச் சங்கம குருவினால் தீக்கை செய்து வேறு குரு லிங்கம் தரிக்க வேண்டும்.

## இதுவுமது

56. அங்கமிசை லிங்கமகன் றிட்ட காலை
அருங்குகையிற் புகுவருனூ லறையா தொன்றுஞ்
சங்கமமுங் குருவுமுள வதனாற் பாத
சலம்பிரசா தத்தினிவா ரணமாம் நேயந்

தெங்குகுரு வருளதனாற் றரிக்க லாகுஞ்
சந்தான பராபரைதீக் கையினா லங்க
லிங்கமகன் றிடினுமுயிரு மகற்று நீர்மை
யெய்தரிய கற்பதுவு மிகழொ ணாதே.

(இவை மூன்று திருவிருத்தமும் லிங்கம் அவதானமானதுண்டாகிற் தீர்த்தப் பிரசாதத்தினாலே பிராயசித்தம் பண்ணிவேறே குரு லிங்கந் தரிக்கலாமென்னும் முறைமை உணர்த்தியது.)

**பொழிப்புரை:** உடலில் இருந்து இலிங்கம் அகன்று விட்டால் சமாதியறைக்குச் செல்லுதல் இயலாது. செல்வதற்கு வேறு வழிகளை அரிய நூல் ஒன்றும் கூறாவிடினும் சங்கமும், குருவும் உள்ளதனால் அவர்களின் பாத தீர்த்தமும், பிரசாதமுமே பிராயச்சித்தம் ஆகும். எனவே, அன்பு பொருந்திய குருவருளால் தீக்கை செய்து வேறு குரு லிங்கம் தரிக்கலாம். அவ்வாறு தரித்த இந்த இலிங்கமும், உடலிலிருந்து அகன்று விட்டால் உயிர்விடும் தன்மையுடைதலும் உரியதாகிவிடும்.

## பூசையின் பீடம்

57. அருள்விரவு நிட்டையு னிட்ட லிங்க
மரிச்சனை செய்திடிற்கு பீடந் தானும்
மருவுமதிற் துவாரநிலை யெனவுங் கூறில்
வாமகங்கை பிராணவந்தற் பீட மாகும்
பொருவில்விர லைந்துமெழிற் குரவ ரைந்தாம்
புனிதன்முக மந்திரமைந் தெனவும் போற்று
மிருளகல வருடனாமஞ் செழுத்து மாகு
மிலங்கநவ விதமியற்று மிறைவனாமே.

(இது பூசைக்குப் பீடமுந்துவார் விதியுணர்த்தியது)

**பொழிப்புரை:** அழகிய கங்கையைப் பீடமாக கொள்ள, குற்றமில்லா விரல்கள் ஐந்தும், எழில் நிறைந்த குருமார்களாக ஆவார்கள். சிவபெருமானின் ஐந்து முகங்களும், ஐந்து மந்திரங்களாக போற்றப்படும். அருட்பெயரான ஐந்து (ந ம சி வா ய) எழுத்தும் மன இருளை அகற்றக் கூடியவையாகும். இலிங்கத்தின் ஒன்பது பேதங்களாக இருப்பவனும் இறைவனே எனக்கொண்டு பூசையை மேற்கொள்ள வேண்டும். கருணை நிறைந்த மனம், மொழி, மெய்களால் அசைவின்றி இருந்து இட்டலிங்கத்திற்குப் பூசனை செய்வதற்குப் பீடமும் அதற்குரிய வழியும் ஆகும்.

## ஆராதனை வேளையின் விதி

58. உரியசிவ பூசையினுக் கிசையுங் காலை
உறைத்திடுவ ரிரவிநிடை யாம மூன்றிற்
புரியுமரிச் சனைதலையா மிடை யாகும்
பொருவரிய வைகைறையிற் புரியும் பூசை
திரியிரவி யெழுந்தபோ துணர்ந்த பூசை
செலுத்தலது கடையுலகச் செயலில் மாந்தி
யரிஅயனி லடுவதுகண் பதற்பின் செய்யு
மப்பூசை நிட்பலமென் றறையும் நூலே.

(இது பூசாகால விதியுணர்த்தியது.)

பொழிப்புரை: இரவு வேளையில் முதல் யாமம், நடு யாமம், இறுதி யாமம் என்னும் மூன்று வேளைகளிலும் புரிவது தலையாய அருச்சனையாகும். விடியற்காலத்தில் புரிவது இடை அருச்சனையாகும். சூரிய உதய காலத்தில் செய்வது கடையாய பூசையாகும். பொருள் தேடுவதையே குறிக்கோளாகக் கொண்டு ஒழுகும் உலகச் செயல்களில் அழுந்தி வரகும் நெல்லும் கலந்தாற் போல திருமாலுக்கும் பிரமனுக்கும் பூசை செய்து அவர்களோடு சிவபெருமானுக்குச் செய்யும் பூசையில் பலமின்மை என்று நூல்கள் கூறும் சிவபூசை மற்றும் ஆராதனைக்குரிய விதி இதுவேயாகும்.

## சடத்தல லிங்கத்தின் விசாக்கரம்

59. ஓங்கார ஞானவிதை நகார வீச
முன்னரிய வாகார மாகார வீசம்
நீங்காத குருலிங்கஞ் சிகாரந் தன்னை
நித்தயமாஞ் சிவலிங்க சித்தா மென்பார்
பாங்காருஞ் சரலிங்க விதைவ காரம்
பரிவுமிகும் பிரசாத விதைய காரம்
ஆங்கார மகற்றியரு ளடைந்தோர்க் கன்றி
அறியாரி தத்சூக்க மல்லா தோற்கே.

(இது முதற்சொன்ன சடத்தல லிங்கத்துக்கு வீசாக்கரம் உணர்த்தியது.)

பொழிப்புரை: பிரணவ மந்திரமான 'ஓம்' என்பதும் ஞானமாகி நகாரம் ஆசார லிங்கமாகும். மகாரம் குருலிங்கமாகும். உடலுடன் எப்போதும் நீங்காத உட்கரணத்தில் ஒன்றான சித்தத்தைக் குறிப்பது 'சிகார'மாகும். இது சிவலிங்கமாகும். வகாரம் அழகுடைய சிவலிங்க

மாகும். இதனை ஆங்காரம் எனும் உட்கரணத்தை அகற்றி அருளடையாதவர்கள் சிவதேகம் அடையாதார்கள் அறிய மாட்டார்கள்.

## பஞ்சாக்கரம் நிற்கும் முறைமை

60. எண்ணரிய பிரணவமைம் பூதவடி வாகு
மீரைந்தா மிந்திரியும் நகாரமென விசையுந்
திண்ணமிகு மகாரமென பஞ்சகமாஞ் சிதாரஞ்
சீவனுக்கு நாயகமாந் தெசவொலியாம் வகார
முன்னிலவுந் திரிகுணமே யாகாரமென நிறுவ
முயருமருந் தவத்தவர்க்கு முணர்வரிதா மெனவே
பண்ணமரு மதுரமொழி யிருகயல்சொல் வலியாள்
பார்வதியின் பில்வினவப் பாரனருனூல் விதியே.

(இது ஆறாம் தத்துவத்திலே பஞ்சாக்கார நிற்கு முறைமையுணர்த்தியது.)

**பொழிப்புரை:** பிரணவ மந்திரமான 'ஓம்' ஐம்பூதங்களின் வடிவமாகும். 'நகாரம்' இருபத்தைந்து இந்திரியங்களாக அமையும். மகாரம் ஐம்புலன்களின் கூட்டமாகும். உயிர்களுக்குத் தலைமை மிக்க நாயகமாக விளங்குவது 'சிகார'மாகும். உயிர்களின் பத்து வகையான ஒலிகள் 'வகார'மாகும். சத்துவம், இராசதம், தாமதம் என்னும் மூன்று குணங்களும் 'யகார'மாகும். இதனை உணருதல் உயர்ந்த தவத்தவற்கும் அரியதாகும். இசைப் பாட்டுக்களை இசைப்பதற்குரிய இனிய மொழியினை உடையவளும், மீன்களை ஒத்த கண்களையுடைய பார்வதி அன்பில் கேட்க பரமன் உரைத்த நூலான ஆகமத்தின் விதி இதுவாகும்.

## பஞ்சாக்கரம் சத்தாதுக்களின் நிற்கும் முறைமை

61. அறைதருவா பிணைவந்தோ நகாரம் நேயத்தால்
மகரந் தகைசிகர் மேதை யத்தி
உறுவகர மிகுமச்சை யகார மாறும்
ஒளிநிறுவுஞ் சுக்கிலத்து ளுகந்து மேவும்
நெறிகொளருட் டனுவினற்குப் படிவ மாக
நிகழுமவர்தமை யப்பரம னீங்கா னென்றே
செறியும் மறைமுடிவு பிறவு நீதிச்
சிவாகமமு மொழியுமெனத் தெளிந்து ளோரே.

(இது பஞ்சாக்கரம் சத்தாதுக்களிலே நிற்குமுறைமை உணர்த்தியது.)

**பொழிப்புரை:** ஓசை தரக்கூடியது பிரணவ மந்திரமாகிய 'ஓம்' என்பதாகும். இயற்கையைப் படைக்கக் கூடியது 'நகார'மாகும். அன்பு தரக்கூடியது 'மகாரம்'. அழகு தரக்கூடியது 'வகாரம்'. பிச்சை எடுக்கக்கூடியது 'வகாரம்'. பித்துப்பிடிக்கக் கூடியது 'யகார'மாகும். சங்கமத்தில் கலந்து சன்மார்க்க நெறியில் ஒழுகுபவர்களின் புலன்களில் மேற்கூறிய ஆறு மந்திரமும் கலந்து, அவர்களின் பூத உடலை ஒளி உடம்பாக மாற்றக்கூடியது. இத்தகையோரை விட்டு பரமன் நீங்க மாட்டான்.

## பஞ்சாக்கரத்தின் பேதமும் - சிவபேதமும்

62. ஆரி... வக்கரமுவ்வு. மவ்வு வவ்வு
மாமிறைவ னெழுத்தவ்வ முவ்வு மவ்வும்
பாரிலகு மூலந காரத்தி னாகும்
பண்ணுசுவா திட்டான மகார மேவுந்
தேருமணி பூரகநற் சிகார மாகுந்
நிகழும்நர கத்தூரிய வகாரஞ் சேருங்
காரிலகு விசித்தியினில் நீடுங் கருதரிய
பிரணவமாக் கினையின் காலே.

(இது சூக்கும பஞ்சாக்கரத்தின் பேதமும் சிவபேதமாய்
நிற்குமுறைமையுமுணர்த்தியது)

**பொழிப்புரை:** 'அகாரம்', 'உகாரம்', 'மகாரம்' என்னும் மூன்றும் இறையெழுத்துகளாகும். இம்மூன்றெழுத்தும் உலகிற்குத் தலைமையாக விளங்கும் 'நகார'த்தில் பொருந்தும். ஆறாதாரத்தில் ஒன்றான சுவாதிட்டானம் 'மகார'த்தில் இருக்கும். உடலும் அதில் தரித்துள்ள உத்திராக்கமும் 'சிகாரம்' ஆகும். சிவபெருமானின்மேல் தவழ்ந்திருக்கும் நாகம் 'வகார'த்தில் பொருந்தும். ஆகாயமாகிய பிரணவ மந்திரம் ஓம் ஆகும். இதில் ஆனந்தம் இணையும்.

## பஞ்சாக்கரம் பதி, பசு, பாசமாயின தன்மை

63. எந்தைதிரு நாமவெழுத் தஞ்சுங் கூறில்
ஈசனரு ளாவிதிரோ தான மாசென்று
அந்தவடை வேசிகர மிறைவகாரம் மருளா
வகார வெழுத்தாகு மென்று
அந்தயிச்சா ஞானக் கிரிகை மாயை
தன்னுமுபா தானமெல்லாம் நகார மாகுந்

சந்தமுஞ் செம்பிலுறு களிம்பு போலச்
சாருமல மகாரமெனச் சாற்றும் நூலே.

பொழிப்புரை: எம் தந்தையான சிவபெருமானைக் குறிக்கும் எழுத்துக்கள் ஐந்தையும் கூறில், ஈசனின் அருளால் திரோதான சத்தியில் சென்று அடைகின்ற அடைவுகளே இவை. 'சிகாரம்' இறையாகும். 'வகாரம்' அருளாகும். உயிர் யகாரமாகும். ஞான சக்தி, கிரியா சத்தி, இச்சா சத்தி, மாயை இவற்றால் வரும் செயல்கள் எல்லாம் 'நகார'த்தில் பொருந்தும். செப்புப் பாத்திரத்தில் பிடிக்கும் துரு போல மகாரத்தில் மலங்கள் சேரும் என நூல்கள் உரைக்கின்றன.

## பஞ்சாக்கரம் குருலிங்க சங்கமமாயின தன்மை

64. திருந்தியவஞ் செழுத்ததுவே மும்முதலா யெவையுந்
திகழுமதி லிறைவனருட் டிரோதையிது பதியாம்
பொருந்துமுயி ரொன்றுமல மொன்ற தாகும்
போற்றரியப் பிரணவத்தி ரேத முடனிறுவு
மருந்துயரசே ரகன்மல மாயையுமகலா மலமு
மகற்றுதற்குக் குருலிங்க சங்கமா மதுதான்
விரும்பியமூ வகையுயிர்க்குங் குருவருளா மிறையே
மிகுலிங்கந் திரோதைஎழிற் சங்கம்மாய் விரிந்தே.

பொழிப்புரை: மூலப்பொருட்கள் அனைத்தும் இந்த ஐந்து எழுத்துக்களில் அடங்கும். இறைவனின் அருள் கொண்ட திரோதை சத்தி பதியாகும். இதில் உயிரும் மலமும் ஒன்றியிருக்கும். திரோதை சத்தியும் பிரணவமும் சேர்ந்து குருலிங்க சங்கமமாகி அருந்துயர், கன்மவினை, மாயை, அகலா மலம் போன்றவற்றை அகற்றும். மூவுலகவுயிர்களுக்கும் குருவருளாய் இருப்பதும் இதுவே. எனவே பஞ்சாக்கரமே குருவாகவும், லிங்கமாகவும், சங்கமமாகவும் விரிந்தன.

## பஞ்சாக்கரம் மூவகை ஆத்மாக்களுக்குச் சேவிக்கும் முறை

65. திரிமலவ ரிவருக்கா றெழுத்து மெனைத்
திரோதைமுத லஞ்செழுத்துஞ் செப்ப லாகும்
இருமலவர் தமக்குமிறை முதலா யஞ்செழுத்
துடனெட்டெ ழுத்துமுகந் தியம்ப லாகு
மொருநல்வாக் கிறைமுதல்மூன் றெழுத்து மாறி
உரைப்பதுபக் குவாபக்கு வாக்கிவ் வாறே

பரவியமும் மலமகற்றுங் குருபோ தற்குப்
பரிவிலிறை யருளுபையம் பகர லாமே.

பொழிப்புரை: ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களையுடைய சகலர்கள் ஓம் ந ம சி வா ய என்ற ஆறெழுத்தையும், திரோதையை முதலாக உள்ளவர் ந ம சி வா ய என்ற ஐந்தெழுத்தையும் உரைக்கலாம். மாயை, கன்மம் என்ற இரு மலர்களையுடைய பிரளாய கலர் மேற்கூறிய ஐந்தெழுத்தையும், அதனுடன் சிவாய என்னு மூன்றெழுத்துக்கள் சேர்ந்து எட்டெழுத்து மந்திரத்தை உச்சரிக்கலாம். பக்குமவாய்ந்தவர்கள் முதல் மூன்று எழுத்துக்களை மாற்றியும் உச்சரிப்பர். இம்மந்திரம் மூன்று மலங்களையும் அகற்றும் குருவிற்கு அன்புடன் இறையருள் கிடைக்கும் என்று கூறலாம்.

## இதுவுமது

66. மன்னுதிரு வெழுத்தஞ்சும் நவிற்றுங் காலை
மருவுதிரோ தனமல மாதி யாக
உன்னுமது பவமகலாது இனிய போகம்
உறுவிக்கு மினாதபவ மொழிக்கு மாறு
நன்னெறியாம் விதியடைவே ...... முன்னாக
நாடுதிரோ தானமல மீற தாக
அன்னெறியே யோதிலது வாசி நல்கும்
அதுதனுவா யுறையுட னொன்பதுந் தானே.

(இது நான்கு திருவிருத்தமும் பஞ்சாக்கர விதியுடைவு பதி, பசு, பாசமாயினவாறுங் குருலிங்க சங்கமமாயினவாறு மது மூவகை ஆத்மாக்களுக்குச் சேவிக்கும் முறைமையுணர்த்தியது)

பொழிப்புரை: புகழ்மிக்க திருவெழுத்தான ந ம சி வா ய என்று கூறும் பொழுது திரோதன மலம், ஆணவம், மாயை, கன்மம் முதலான மலங்கள் நீங்கும். சிறிய இன்பத்தினைக் கருதி செய்த பாவங்கள் ஒழியாத பாவங்கள் இவற்றை ஒழித்து நல்வழியில் கொண்டு செல்வதற்கு விதி ஐந்தெழுத்தின் இந்த அடைவுகளாகும். எனவே உயிர்களுக்குத் திரோதன மலம் ஈறாக உள்ள அனைத்து மலங்களும் நீங்குவதற்குச் சொல்லும் மந்திர எழுத்துகள் ஒன்பதாகும்.

## செபப் பயன்

67. அங்குலியிற் பலமொன் றிறையெட் டாமென்று
அறைகுவர்புத் திரச்சீவ மணிக்கீ ரைந்தாஞ்

சங்குமணிக் கொருநூறா மிறைஞன் னூறாந்
தரும்பவளம் படிகமதிற் பத்தா முத்திற
பொங்கியனூ றாயிரமா மதிற்பத் தாகும்
புகல்முளரி மணிகனக மணிக்குக் கோடி
தங்குசைக் கையிரண்டு கோடி யாகுந்
சாற்றிலளள விலாயுமைகோன் மணிக்குத் தானே

பொழிப்புரை: உத்திராக்கத்தின் பலம் ஒன்றின் இறை எட்டாகும். புத்திர சிவ மணி ஈரைந்தாகும். சங்கு மணி ஒரு நூறாகும். பவளமணி நூறாகும். அதில் வெள்ளி மணி பத்தாகும். முத்து நூறாயிரமாகும். அதில் தாமரை மணி பத்தாகும். பொன்னாகிய மணி கோடியாகும். எனவே சிவபெருமான் அணியும் மணிகளுக்கு அளவில்லை.

## செபவிதி

68. முத்திதரு மையைந்து மணிக்குஞ் சாந்த
மூடுவரன் பதினியதனங் கலவி நாலெட்டு
ஒத்தபதி னைந்துவிசா ரத்தின் பாலாம்
உச்சாட்சிரம் பதிமூன்றிந் திராதிக் காதி
நித்தவசி யம்பிணியோம் மரணந் தீமை
நேத்தியிழைப்புச் சாடனம்நீள் சாந்த ஞான
மத்தகைய சிறுவிரல்முன் காமஞ் சாந்தி
யிருங்கனகம் பகைமரண மருள்வீ டாமே

பொழிப்புரை: முத்தி தரும் பண்டைய மணிகளாகக் கருதப் பெறுபவை இருபத்து ஐந்து மணிகளாகும். சாந்தமாகிய பொறுமைப் பண்பை வலியுறுத்துவன ஐம்பது மணிகள்; அப்பண்புகளைப் பெறுவதற்குரிய அறிவைப் புகட்டும் கல்விக்குரிய மணிகளாகக் கருதப்படுவன முப்பத்திரண்டாகும். விகாரம் எனப்பெறும் பெருந்துன்பத்தைத் தருவிப்பன பதினைந்து மணிகள் என்பர். மேலும் உயர்ந்த அட்சரங்களாகிய (பஞ்சாட்சரம், அட்டாட்சரம்) பதின்மூன்றும் இந்திரன் முதலாக தேவர்களைத் தோத்திரம் செய்து மகிழ்வித்தல், பிணி, மரணம், தீமை, நிதியிழத்தல், உச்சாடனம் செய்தல், நெடிய சாந்த ஞானம் பெறுதல் போன்றவற்றில் தீயன நீக்கி நல்லன கொள்ளவும் பயன்படுத்தப் பெறுவனவாகும். பொன்னும் பொருளும், காம இன்பமும் பகையும் என்னும் வாழ்க்கைப் பகைகளை விலக்கி வீடளிக்கப் பயன்படுவனவாகும் என்பன அறநூல் கூற்றுகளாகும்.

## செபப் பலன்கள்

69. நண்ணரிய வுழுவையின்றோல் செல்வ மாகும்
நாடிரலைத் தோலரிய ஞான மாகும்
மெண்ணரிய தருபையுயர் வீடாகும் மாகும்
இலங்கியவெண் டுகில்மிகவும் நன்மை யாகும்
முண்ணிலவுந் துயர்கற்றுங் கருமபடா ஐந்து
முத்தம்மா மரப்பலகை முனிந்த புல்லு
மண்ணினிய சிலைகழையின் பாயென் றைந்து
மறைவாசெப பலனிவையில் மருவா தென்றே

(இவை மூன்று திருவிருத்தமும் செப.... பலனும் விதியுந் திக்காசனங்களும் உணர்த்தியது)

பொழிப்புரை: புலியின் தோல் பெரும் செல்வத்தைத் தருவதாகும். கலை மானின் தோல் ஞானத்தைப் பெருக்கும்; தருப்பைப் புல்லே வீடளிப்பது; ஒளி வீசும் வெண்டுகில் (ஆடை) நன்மையைத் தரக்கூடியதாகும்; கருமவினைகளால் வரும் துயரங்களை அகற்றும் கூடாரங்களாகப் பயன்படுவது ந, ம, சி, வா, ய என்னும் ஐந்தும் ஆகும். மரப்பட்டை, பலகை, அடர்ந்தபுல், மண், கல் மூங்கில் பாய் ஆகிய ஐந்தையும் பயன்படுத்துதல் செபப் பயன்களாகும் என்று கூறுபவர் அறிவோர்.

## சங்கமருக்கும் சைவருக்கும் முத்தி எய்தும் காலம்

70. நாகமதி வேணியனை யுலக மேழும்
நயந்தருளு மலைமாது மகிழ்ந்து போற்றி
மோகமில்சங் கமந்தனக்குஞ் சைவத் தோற்கு
முத்திபெறும் பருவமொழிந் தருணீ யென்ன
ஏகசன னந்தனிலே முத்தி யாகும்
ஏதமில்சங் கமந்தனக்குச் சனன மூன்றி
லாகுமருஞ் சைவருக்கு முத்தி தானென்
றாதிசிவா கமமறைனூ லீறையுந் தானே

(இது சங்கமத்துக்குஞ் சைவருக்கு முத்திப் பக்குவ முணர்த்தியது)

பொழிப்புரை: நாகத்தையும் பிறைமதியையும் அணிந்த சிவபெருமானைப் பார்த்து ஏழு உலகங்களுக்கும் அருள்புரிகின்ற மலைமகள் மகிழ்ந்து வணங்கிப் பற்றில்லாத சங்கமர்க்கும், சைவத்தார்க்கும் முத்தி பெறும் காலம் எப்போது? என்று வினவ,

அதற்குச் சிவபெருமான் கூறுகிறார். 'சங்கமர் ஒரே பிறப்பில் முத்தி பெறுவர், சைவர் மூன்றாவது பிறப்பில் முத்தியுறுவர் என்று ஆகமங்களும், வேதங்களும் உரைக்கின்றன' என்பது இறை கூற்று.

## சைவ வேடத்தவருக்கு முத்தியில்லை

71. பற்றுமருச் சனையதனா லனேக லிங்கம்
பாவகஞ்செய் திறைஞ்சுதலால் பலவே டத்தோர்
உற்றபரி கலசேடம் பொசிக்கு மாற்றலும்
உபதேசம் பலமுறையா லுரைத்த லாலும்
பெற்றிமிகுங் காப்புணரா வேசி மைந்தன்
பிதாவுணரா னெனுந்தகமை பிறரும் பார்மேற்
சொற்றருமா தமமதனால் வேடசை வத்து
விதபா வகமகலாத் தொடர்ச்சி யாமே

(இது வேட சைவருக்கு லிங்க நிட்டையில்லையென்னு முறைமை உணர்த்தியது)

**பொழிப்புரை:** சைவர் பாவங்கள் பல செய்து விட்டுப் பல லிங்கங்களுக்குப் பூசைகள் புரிந்து வணங்குவதாலும், சைவ வேடம் பூண்டிருப்பதாலும், பிரசாத உணவை உண்பதாலும், பலமுறை மந்திரம் உரைத்தலாலும் முத்தி பெற மாட்டார்கள். தந்தையை அறியாத தன்மையுடைய வேசியின் மைந்தனைப் போல் போலிச் சைவ வேடத்தவருக்குப் பாவங்கள் நீங்காமல் என்றும் தொடர்ந்து வரும்.

## குருலிங்க சங்கமத்தின் உண்மை

72. மும்மலமா மிருள்கரும மாயை நீங்கி
முத்திபெறும் பக்குவசத் தினிபா தற்குச்
செம்மைமிகுங் குருலிங்க சங்க மந்தான்
தேனினிய பாலமுதின் சுவைபோ லாகு
மம்மாரகன் றவர்பணியி லொழுகி ஞானம்
மருவியர னிருபாத மலரைச் சேர்வர்
வெம்மைமல போதகருக் கிரவி யும்மன
விழியிருளா மதுபோல விளங்கி டாவே

(இது முத்தி பக்குவமாகிய நான்காம் சத்தியின் பாதம் பணிந்தவர் வேறொருவற்குக் குருலிங்க சங்கமத்தினுண்மை விளங்காதென்னு முறைமையுணர்த்தியது)

**பொழிப்புரை:** ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மும்மலங்களும் நீங்கி முத்தி பெறக்கூடிய பக்குவத்தை வழங்குவது சிறப்பு மிக்க குரு லிங்க சங்கமந்தான். இது தேனும் பாலும் இணைந்த உணவின் சுவை போன்றது ஆகும். எமது நான்காம் சத்தியான ஞானசக்தியை அடைந்தவர்களே இதனை உணர்வார்கள். பிறர் விழியிருந்தும் இருளில் எதனையும் அறியாத ஊமன் போல அறியமாட்டார்கள்.

## பெரும்பேறு

73. மன்னுயிர்க ளிருவினையின் றொகைவ ழாமல்
மனவாக்குக் காயமென்னு மரபா லென்று
முன்னலுரை தொழிலதனி லியன்ற கன்ம
முணர்ந்தியம னெழுதுவதா முயிர்க ளீசன்
சின்னமரும் நீறணிய வேடம் பூணத்
திகழுமரிச் சனைபுரிய சந்தித்தாலும்
அன்னவர்பா லணைகிலனி ருத்தி ராக்கம்
அணிந்துவழி படுவோர்பே ற்றையோ ணாதே

(இது சிவ வேடத்தின் மகிமை யுணர்த்தியது)

**பொழிப்புரை:** உயிர்களுக்கு மனம், மொழி, மெய் இவற்றால் இருவினைகள் வழுவாமல் நிகழும். இதற்கேற்பக் கூற்றுவன் உயிர்களைக் கவர்ந்து தண்டிப்பான். இத்தகைய தீயவினைகளில் அழுந்திய சிறியோரும் திருநீற்றை அணிந்தும், சிவ வேடம் பூண்டும், பூசனைகள் பல புரிந்தும் உருத்திராக்கம் அணிந்தும் குரு லிங்க சங்கமரை வழிபடுவார்களானால் அவர்கள் பெறும்பேற்றை உரைக்க இயலாது, அத்தகு பெரும்பயன் பெறுவர்.

## பக்தர்கள் மகிமை

74. விளங்குபிற பஞ்சமதி லயன்மே லந்த
விதிமுளரி முளரியரி யுந்தி மாலுந்
துளங்குகட லினில்முனிவன் கரத்தி லாழி
தொல்முனியுங் குடதத்துவ மண்ணிற் சின்னம்
வளங்கெழுமண் பணித்தலைமே லந்த நாக
மாதுமைகைக் காப்புமையு மிறையிற் பாகம்
உளங்கொள்ளும் பினாகிசிவ பத்த ருள்ளத்
தொடுங்குதல்நற் பத்தரியல் புரைக்கொ ணாதே

(இது பத்தர்கள் மகிமை யுணர்த்தியது.)

**பொழிப்புரை:** பலவகை உயிர்களைக் கொண்டது இப்பரந்த நிலவுலகம். இந்த நிலை உலகத்தைப் படைத்து அழித்துக் காப்பவர்களாகக் கருதப்படுவோர் மூவர். அவருள் தாமரை மலரிலே வீற்றிருப்பவரும், திருக்கரத்திலே சங்குசக்கரங்களை ஏந்தியிருப்பவரும் திருப்பாற்கடலிலே பள்ளிகொண்டிருப்பவருமாகிய திருமால் ஒருவர். அத்திருமாலின் திருஉந்தித் தாமரையிலே தோன்றி விளங்கும் பிரமன் மற்றொருவர். இவர்கள் இருவரைத் தவிர்த்த மூன்றாமவரே பத்தர் எனப்படுவோரின் உள்ளத்திலே ஒன்றும் நீங்காது வீற்றிருப்பவர். அவர் வளமை மிக்க இந்த நில உலகத்தைப் படைத்து நிற்பதோடு, நாகத்தைத் தனது அணிகலனாகக் கொண்டவர், தனது இடது பாகத்திலே கொண்ட உமையம்மையை நாகக் கங்கணத்தைக் காப்பாக ஏற்கச் செய்தவர். நாகத்தை அணிந்த காரணத்தால் 'பினாகபாணி' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றவர். இத்தகு சிறப்புகளைக் கொண்ட அவர் பத்தர் எனப்படுவோர் உள்ளத்திலே ஐக்கியமாகிவிடும் தன்மை பெற்றவர் ஆதலின் அவரைத் தம் உள்ளத்து நிறுத்தியுள்ள பத்தர்களின் பெருமை அளவிடற்கரிய தொன்றாகிறது.

(சிவம் அகண்ட பரிபூரண சத்துச் சித்தானந்த சிவசண்முக மெஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க)

# திருச்சிற்றம்பலம்

# இரேவண சித்தய வீராகம சடத்தலம்

## விநாயகர் துதி

75. வேக மானெறி சேரும் வினைகளுந்
தாக போகம் விடர்த்தள .......
சோக வாரியி னால்வரு துன்பமும்
போக வானைமு கத்தனைப் போற்றுவாம்

**பொழிப்புரை:** சிவபெருமான் உரைத்த ஆகம நெறிகளைச் சேரவும் அந்நெறிகளின்று வழுவுவதால் ஏற்படும் பொல்லாத வினைகளையும், ஆசைகளையும், விட்டொழிக்கவும் வீண் பேச்சுக்களினாலும், சோர்வினாலும் வரும் துன்பங்கள் கடல் போல் இருந்தாலும் அவை அனைத்தும் அழியவும் ஆனைமுகத்தானாகிய விநாயகரைப் வணங்கிப் போற்றுவோமாக.

## சிவபெருமான் துதி

76. ஓதுபல கலைவேத பு..ராண ........
....... மையுற வுணர்ந்து திருவருளைச்
...... ...... சாருங் கரளுத்துள்
..... ..... வாழ்வோன் கருதரி
நாதனுல கேழ்முய்ய வருள் ..... .....
..... ..... யுமைபங்கனுதுய்ய
சீதமலி பருப்பத நமல்லய் யன் பாதஞ்
சிந்தை ..... ..... சேர்ப்போம். (1)

(பாடல் சிதைந்துள்ளது. அடிப்படைக் கருத்து.)

**பொழிப்புரை:** பல கலைகளையும், சாத்திரங்களையும், புராணங்களையும் அருளக்கூடிய சிவபெருமானை ஒருமைப்பட்ட நினைவுடன் வழிபட்டு இறையருளை அடைவோம். ஏழு உலகங்களில்

உள்ள உயிர்கள் அனைத்தும் வாழவும், அவ்வுயிர்கள் பாவங்களி லிருந்து விடுபட்டு நரகத்தில் சேராமல் அருள்புரியும் சிவபெருமானைச் சிந்தையில் வைப்போமாக!

## குரு மரபு

77. அற்புத மாமல் லமாப் பிரபு
தேவாருளத் தருரேவண ..... .....
..... ..... .....மே கோராமையா
ஞானநலந் தருநற் பண்டிதரார்த் திரியா
..... ..... கிரியவுலகத் துள்ள
சீவனெல்லாங் கதிபெறவே சிறந்து வரு
..... ..... பதங்கள் மறவாமலென்று
புத்தியினாலுற வணங்கிப் போற்றுவாம் (2)

பொழிப்புரை: அற்புதம் நிறைந்த அல்லமாப் பிரபு தேவர், இரேவண சித்தர், ஏகோராமராத்யா, பண்டிதராத்யா, மருளராத்பா, விஸ்வராத்யா ஆகியவர்கள் அருள்புரியவும், உலகில் இருள் நிறைந்துள்ள உயிர்கள் அனைத்தும் முத்தி பெற்று சிறந்த தெய்வப் பதவியைப் பெறவும் அவர்களே மறவாமல் அறிவினால் முறையாக வணங்கிப் போற்றுவோமாக.

## வசவேசன் வணக்கம்

78. அத்தனுயர் கயிலாய னருளி னாலே
யவனிற்சம ணையெல்லா மழித்துகுரு லிங்கசங்க
மத்தினுய ர்ந்தபத்தி விதங்க ளெல்லா
மோங்கப் பண்ணி ..... .....
வித்தக ..... கூடலை சங்கமகேருமீசா
விரைமலர்த்தா ளதனையடைந்து முத்தி பெற்ற
நித்தமுறும் வசவேசன் பாத மேந்த
நெஞ்சகத்தில் மறவாமல் நினைதல் செய்வோம் (3)

பொழிப்புரை: உயர்ந்த குருவாகிய கயிலைநாதனான சிவபெருமானின் அருட்தன்மையால் இப்பூவுலகில் சமணமதத்தை யெல்லாம் அழித்து வெற்றி கொண்டது குருலிங்க சங்கமம். அதன் உயர்வான பத்தியின் ஆற்றலை எழுச்சி பெறச் செய்தவர்கள் ஞானமுடைய சிவனடியார்கள். அத்திருக்கூட்டத்தில் சிவபெருமானின் மலர் போன்ற திருவடிகளை யடைந்து முத்தி பெற்றவர் என்றும்

அழியாத நிலையை எய்திய வசவேசன் ஆவார். அவர்தம் திருவடிகளை மனத்தில் இருத்துவோமாக.

## நூல் மரபும் சரணர்களைப் போற்றலும்

79. குருமருவும் வீரசைவத் திறத்தா சாரச்
செய்தியுமெய்க் குருலிங்க சங்க மத்தின்
ஒருமைபெறும் வழிபாடு முணர்ந்து துய்ய
வுற்றசடத் தலப்பகுதி பத்த னாதி
மருவுமயிக் கியனீறா யும்..... பாதாரந்தம்
வழிபாடு வழுவாமல் மல்கச் செய்த
பொருவிலருள் செனைவச வேசர்முத லாய்ப்
பொருந்தியநற் சரணர்பதம் போற்றல் செய்வாம். (4)

பொழிப்புரை: குருவின் அருளால் அமைந்தது வீர சைவம். அதன் தத்துவத்தையும் வழிபாட்டையும், வழிபடும் ஒழுக்கங்களையும் இயல்புகளையும் உணர்ந்தவர்கள் வசவேசன் முதலான வீரசைவச் சான்றோர்கள். அவர்கள் குருவும் சிவமும் கூடும் திருக்கூட்டமாகிய குருலிங்க சங்கமத்தின் உறுப்பினர்கள் ஆவர். இவர்கள் அனைவரும் இறையுணர்வு பெறக்கூடிய வழிபாடுகளை உணர்ந்து உணர்த்தும் திறம் பெற்றவர்கள். மேலும் உய்வதற்கான சடத்தலப் பகுதியாகவும் விளங்குபவர்களுமாவர். அத்தகு சிறப்பு வாய்ந்த பத்தன் முதல் அயிக்கியன் இறுதியாக உள்ள அனைவரின் வழிபாடுகளையும் தவறாமல் பெருகச் செய்த செனை வசவேசர் முதலாகக் குற்றமற்ற அருள் நிறைந்தமைந்த வீரசைவப் பெரியோர்கள் ஈறாக உள்ள அடியவர் தம் பாதங்களைப் போற்றுதல் செய்வோம்.

## சிவபெருமானைப் போற்றுதல்

80. காரணமா ததிறைய விதத்தா லுண்டாங்
காரியத்தின் பகுதியெல்லாங் காட்டி நீக்கி
ஏரணமாம் திருவருளா லென்னைக் காட்டி
என்னையுந் தனின்ப வெள்ளத் திருத்தியாண்ட
வாரணமாம் பெரும்பற்றப் புலியூர் வாழும்
அம்பலத்து ளாடுகுரு நாத னெந்தை
பூரணமாந் திருவடியென் சிரமேல் வைத்துப்
புந்தியினா லுற வணங்கிப் போற்றல் செய்வாம். (5)

பொழிப்புரை: எப்பொருட்கும் இறைவனானவன் சிவபெருமான், அவனது அருளினால் உண்டான என்னுடைய கருமத்தின் இயல்புகளை

யெல்லாம் காட்டியவன் அவனே. அதிலிருந்து விடுபடச் செய்தவனும் அவனே; தருக்க நூல் போன்றவற்றில் திருவருளால் எனக்குத் தன்னைக்காட்டி என்னையும் சிவ இன்பப் பெருக்கில் இருத்தி ஆளுபவனும் அவனே; கடல் போலும் பரந்த தில்லையம்பலத்தில் ஆடும் என் குருநாதனும் அவனேயாவான். அந்த எம் தந்தையின் திருவடிகளைத் தலைமேல் வைத்து அறிவின் திறத்தாலே வணங்கிப் போற்றுதலைச் செய்வோமோக.

## ஆகமம்

81. எந்தைபிரான் கயிலையிடத் தேகாந் தத்தி
 லிருக்கவுமை யடிபரவி யிறைஞ்சிக் கேழ்க்கச்
 சிந்தைமகிழ்ந் துரைத்தவீ ராக மந்தான்
 செப்பரிய வடமொழியுண் டதிலோர் சாய்கை
 பந்தமறு வடமொழியா, யிரகோடி யுளவாம்
 பரிந்துசில வாகமத்தின் பயனை யானும்
 புந்திமகிழ்ந் தெனதுகுரு வருளா லின்று
 புகன்றிடுவன் றமிழிச்சினாற் பொருந்தும் வாறே (6)

பொழிப்புரை: என் தலைவனாகிய சிவபெருமான் கயிலையில் தனித்து யோகம் செய்திருக்கையில், அவரின் திருவடிகளை வணங்கி கேட்க, சிவபெருமான் மனம் மகிழ்ந்து உரைத்த வீராகமம், கூறுதற்கரிய வடமொழியில் தோன்றியது. அது மலங்களை அறுக்கும் பண்புடையதாகி ஆயிரங்கோடி வீராகமங்களாக வடமொழியில் வளர்ந்துள்ளது. அவற்றில் சில ஆகமத்தின் பயனை அறிந்த அடியேன் அறிவாலும் எனது குருவருளினாலும் தமிழ் மொழியில் கூறுகிறேன்.

## அவையடக்கம்

82. நன்னிலையாம் விராகமப் பயனைத் தமிழால்
 நவிற்றுமது யெழுகடலை நாழி கொண்டே
 உன்னியளப் போமென்று துணிவோன் போல
 உரைத்தபுன்சொல் தனைப்பெரியோ ருளத்தி னாலே
 அன்னைதந்தை தம்புதல்வர் மழலைச் சொல்லை
 அன்பினா லகமகிழ்ந்து கேட்குமாப் போல்
 என்னையுகந் தாளுடையா ராத லானால்
 யினிதெனவே மகிழ்ந்திடுவா ரிகழ்ந்தி டாரே (7)

(பாயிர தெய்வ வணக்கம் அவையடக்கம் முற்றும்)

பொழிப்புரை: ஏழு கடல் நீரையும் ஒரு படியினைக் கொண்டு அளப்பதற்கு முயற்சி செய்பவனைப் போல வடமொழியில் உள்ள அந்த வீராகமத்தைத் தமிழில் கூற வேண்டுமென்று நான் முயற்சி செய்கிறேன். ஆனால் அவை புன்சொல்லாய் அமைதல் கூடும். என்றாலும் பெரியோர்கள் தங்களுடைய புதல்வர்களின் மழலைமொழியை அகமகிழ்ந்து கேட்பது போல நல்லொழுக்கம் மிகுந்த வீராகமப் பயனைத் தமிழால் கூறுவதை அகமகிழ்ந்து கேட்போர் இருப்பதினால் இனிதெனவே மகிழ்ந்திடுவார்கள். மாறாக இகழ்ந்திட மாட்டார்கள்.

## சங்கம குரு

83. சங்கமருஞ் சிவனுமொன்றென் றுரைக்கு வேதஞ்
சாற்றிடுமென் றரன்சொல்லச் சங்கரிதான் சொல்வாள்
எங்குநிறை கின்றசிவன் சங்க மந்தான்
என்னவியல் பாயினதேன் மற்றிவைகே ளென்றா
அங்குமதி லிங்கம்தான் னிருக்கை யாலும்
அந்தரங்கத் தனுபூதி யுடைய ராலுந்
தங்குகுரு வவ்வார்சரலிங்க முந்தா னாவர்
தற்பரம் சிவனாவர் சாத்துங் காலே (1)

பொழிப்புரை: சங்கமத்தின் இயல்பு என்னவென்று உமையம்மை கேட்கச் சிவபெருமான் வீர சைவர்களாகிய சங்கமரும் சிவனும் ஒன்றென்று வேதம் உரைக்கும் எனக்கூறி மேலும் கூறுகிறார். இலிங்கத்தை உடலில் தரித்தும், உள்ளத்தில் நற்பண்பையும், ஒழுங்கையும் கடைபிடித்தும், விபூதி தரித்தும் ஒழுகுபவர் எவரோ அவரே சங்கம குரு ஆவார். அவரே சரலிங்கமும், மேம்பட்ட பரம் பொருளான சிவனுமாவார்.

## சங்கமரும் சிவனும்

84. அருந்தவர்சங் கமர்சித்தஞ் சிவனே யாகு
மாதலினாற் சங்கமரே குருவு மாகுந்
திருந்தியநற் குருதானே சிவனு மாகுந்
சிவன்குருவு மாகிச்சங் கமரு மாவர்
பொருந்தியநிட் களசகள மிரண்டு மாகும்
பொற்புடைய சிவன்சங் கமரா மென்றே
யிருந்திகழ்நல் லம்பிகையே யிருக்கு வேதத்
தெழில்ஞான காண்டத்தி லிசைக்குந் தானே. (2)

பொழிப்புரை: முனிவரைப் போன்று அருந்தவம் புரியக்கூடிய வீரசைவர்களின் கருணை மனமும், சித்தமும் சிவனேயாகும். ஆதலினால் வீர சைவர்களாகிய சங்கமரே குருவாக விளங்குவர். நற்குணமும், மேன்மை பொருந்திய செவ்விய தன்மையும் அடைந்த நற்குருவாகிய சிவனும் ஆவார். இவ்வாறே சிவபெருமானும் குருவும் சங்கமரும் ஆவார். உருவமில்லாதவராகவும், உருவத்திருமேனியுடையவராகவும் கலந்திருப்பவர். பொலிவுடைய சிவனே சங்கமராவார் என்று இருக்கு வேதத்தின் ஞான காண்டத்தில், துர்க்கா தேவியே கூறுகிறார்.

## சங்கமரும் சிவனும் சமம் என்ற அனுபவத்தை அறிதல்

85. இப்படி சங்கமர்க்குச் சமமா மென்னு
 மிரும்பெரிய வனுபவத்தை யாதொருவ ரறிவர்
தப்பரிய சங்கமனு மவனே யென்று
 சாற்றுமழ குடையதனி மாதே யுண்மை
செப்பரிய குருலிங்கமெனும் வசனந் தூலஞ்
 சிறந்தவிதிற் களைசிவனே இரண்டுங் கூடி
வொப்புடனா யிருப்பவன்சங் கமன்றா னென்று
 மோதுமுதல் வேதசிற்காண் டத்தி லன்றே (3)

பொழிப்புரை: குற்றமற்ற சங்கமரும் சிவனே என்று சொல்வது தனி அழகுடையது ஆகும். கூறுவதற்கரிய குருலிங்கம், வீடு பெறுவதற்குரிய சிவதேகம் மூன்றில் ஒன்றான தூலமும், அழகும் ஒளி மிகுந்த சிவனும் கூடிய தன்மையில் இருப்பவர்கள் சிவபெருமான் சங்கமர்க்குச் சமமாக உள்ளார் என்ற மிகுந்த அனுபவத்தை அறிவர். எனவே, இந்த வகையில் சங்கமரும் சிவனும் ஒன்றென்று வேதத்தின் சிற்காண்டத்தில் உரைக்கப்பட்டுள்ளது.

## குருலிங்க சங்கமம்

86. பஞ்சாக் கரங்கருத்தி லிருக்கை யாலும்
 பரவுதிரு நீறுதரித் திருக்கை யாலும்
விஞ்சாய சிவவேட மனைத்தும் பூண்டு
 வெற்றவே யிருப்பதனா லன்பர் தங்கள்
நெஞ்சாருங் குருலிங்க சங்கமம் பிகையே
 நிறைந்தசிவ னெனப்பகரு மிருக்கு வேத
மெஞ்சாமல் மனவாக்குக் காய்ந் தன்னா
 லிறைஞ்சிவழி படவினைக ளேகு மன்றே. (4)

பொழிப்புரை: ஐவகையான குற்றங்களை ஒழித்து, தூய மனத்தோடு தியானம் செய்தலும் வணங்குவதற்குரிய திருநீறு தரித்துச் சிவவேடம் பூண்டு சிவனடியார் கூட்டத்தில் பத்தர்கள் மனம் கரைய இருப்பதுதான் குருலிங்க சங்கமம் ஆகும். இந்த நிலையையே சிவநிலை என்று இருக்கு வேதம் கூறுகிறது. இந்தக் குருலிங்க சங்கமத்தை மனம், மொழி, மெய்களால் வழிபட பொல்லாத வினைகள் யாவும் அழியும்.

## சிவபிரான், குருலிங்கசங்கமம், உயிர்கள் மூன்றும் ஒன்றே

87. ஏகபரன் குருலிங்க சங்கமமும் முதலா
யிசைந்ததிரு மேனிமூ வுலகத் துள்ள
மோகவுயிர் தனக்குள்வல் வினைகள் நீக்கி
முத்திகொடுத் திடும்பொருட்டா மிம்மூன்றுக்கும்
பாகமுறு பேதமிலையம் பகமும் மொளியும்
பாவகனும் வெம்மையுமே போலு மாகு
மாகவிவை மூன்றுமொன்றென் றிருக்கு வேதத்
தருள்ஞான காண்டத்தி லறைந்திடுமம் பிகையே. (5)

பொழிப்புரை: ஒப்பில்லாதவராகிய சிவபெருமான் குருலிங்க சங்கமமாகப் பொருந்திய திருமேனியின் தோற்றம் மூன்று உலகங்களிலும் உள்ள உயிர்களின் வலிய பொல்லாத வினைகளை நீக்கி முத்தி கொடுத்திடும் பொருட்டேயாகும். சிவபெருமான், குருலிங்க சங்கமம், உயிர்கள் ஆகிய இம்மூன்றிற்கும் உற்ற பங்கில் யாதொன்றும் வேறுபாடில்லை. இவை கண்களும் ஒளியும், அக்கினி தேவனும், வெம்மையும் இணைந்திருப்பது போல் இணைந்துள்ளனர். இவை மூன்றும் ஒன்றே என்கிறது இருக்கு வேதத்தின் ஞான காண்டம்.

## முத்தி பெறுதல்

88. சிவகுருவுஞ் சிவலிங்க மிரண்டுங் கூடச்
செறிந்திருக்குஞ் சங்க மன்றான் சிவனே யாகு
மவமிலர்க ளாதலினால் வாக்கு மேலா
யானதொரு தெய்வமிலை யவர்க்குப் பூசை
பவமகலப் பண்ணினது சிவற்குத் தீர்த்தி
பார்பதியே யிவையுண்மை யவர்கள் தம்மைத்
தவமுறவே தெரிசிக்கில் முத்தி யென்றே
சாற்றிடும்வே தாகமங்கள் தன்னிற் றானே. (6)

பொழிப்புரை: சிவகுருவும், சிவலிங்கமும் ஒருங்கு சேர்ந்து கலந்திருக்கும் சங்கமந்தான் சிவன் ஆவான். அவர் தீமைகளை நினையாதவர். ஆதலினால் அவர்கள் வாக்கிற்கு மேல் வேறு வாக்கும் இல்லை; தெய்வமும் இல்லை. பிறப்பும் பாவமும் நீங்குமாறு அவர்களுக்குப் புரியும் பூசை அது சிவனுக்குரியதாகும் என்பதும் உண்மை. அவர்களை வழிபடப் புண்ணியமுற்று முத்தி பெறலாம் என்று வேதாகமங்கள் கூறுகின்றன.

## சைவ மந்திரம்

89. அரியதொரு சைவமந்திரந் தனக்கு மான
சிவன்பிரா ணனென வமரு மந்த
உரியசிவப் பிராணனே குருவு மாகு
முயர்குருவா னவருஞ்சங் கமரே யாகுந்
தெரிவரிய சங்கமரை யடிபணிவோர் எடுத்தக்
கீடமந்தப் பகர்பயில் வேட்டுவனவாகும் பான்மை தானே(7)
..... ..... ..... .....
..... ..... ..... .....

(பாடல் சிதைந்துள்ளது)

பொழிப்புரை: அரியதொரு சைவமந்திரமானது தனக்கு ஏற்க உகந்தது போல அது உயிர்களுக்கும் தீமைகளை அகற்றக் கூடியதாகும். இதனை ஓதும் சிவ ஆத்மாவே குருவும் ஆவார். உயர்ந்த குருவானவர் தாம் சங்கமரேயாவார். விளங்குவதற்கரிய சங்கமரை அடிபணிந்து வணங்குவோரே சிவனாகும் தன்மை பெறுவர்.

## சிவபூசையினால் பெறும் பேறு

90. பரவுமறைச் சிரத்தொளியாய் நின்மலமா யெங்கும்
பரந்தபரி பூரணமாம் பரனே பூசை
விரவியுறப் பண்ணுமவர் பேரடியே னறிய
விளம்புகவென் றுமைவினவ விமலனருள் புரிவான்
மருவுசிவ பூசையினாற் சிவபதத்தை யடியார்
மன்னுகுரு பூசைசிவ சத்தி யாகுந்
தெருள்விரவு சங்கரநற் பூசை முத்தி
சேருவரென் றருமறை செப்புந் தானே. (8)

பொழிப்புரை: சிவபெருமானுக்குச் செய்யும் சிவபூசையில் கலந்து கொள்பவர்கள் பெறும்பேறு என்ன என்று உமையம்மை கேட்க. அதற்கு விமலனாகிய சிவபெருமான் கூறுகிறார். புகழ்தரத்தக்க சிவபூசையில்

சிறந்த பேதமாகவும் உயர்ந்த ஒளியாகவும் விளங்குவர். மாசில்லாதவர்களாகி வாழ்வில் முழுமையான மனநிறைவை அடைவார்கள் என்று கூறுகிறார். மேலும் தானாகுதல் என்ற நால்வகை சிவபதவியையும் அவ்வடியார் சேருவர். குருபூசையினால் சிவசக்தியாகவும் விளங்குபவர். சக்கரநற்பூசை அறிந்து அதில் கலப்பவர் முத்தி சேருவர் என்று மேலான வேதங்கள் கூறுகின்றன என்று கூறினார்.

## அபிடேகம் - தீர்த்தம் இவற்றினால் பெறும்பேறு

91. உத்தமலிங்க வவிடேக நின்மலம தென்றே
உரைக்குமற்ற வருட்குருவுக் கவிடே கந்தான்
பத்தியநற் தீர்த்தமதே யெனும்போ ராக்கும்
பாங்கமர்சங் கமர்பாத தீர்த்தந் தானே
முற்றுமுள செனனத்திற் செய்த பாவ
முழுதுமறுத் தின்பமுத்தி கொடுக்கு மன்றே
கற்றுணர்மெய் யிருக்குவே தத்தில் ஞான
காண்டத்தி லுண்மையெனக் கழறு மன்றே. (9)

பொழிப்புரை: மேலும் உத்தமலிங்கத்திற்கு அபிடேகம் செய்தால் அது மாசுகளைப் போக்கும்; அருள் குருவிற்குச் செய்யும் அபிடேகமும் நல்ல தீர்த்தமும் ஒழுக்கத்தின் தன்மையாகும். நிறைந்து விளங்கும் சங்கமரின் பாததீர்த்தமும் ஒழுக்கத்தின் தன்மையாகும். நிறைந்து விளங்கும் சங்கமரின் பாததீர்த்தம், பிறப்பு முழுவதும் செய்த பாவங்களைப் போக்கி, அன்றைய தினமே முத்தி கொடுக்கும். இருக்கு வேதத்தின் ஞான காண்டத்தில் கூறியுள்ள இதனை மெய்யாகக் கற்றுணரலாம்.

## சங்கமர் பூசை - பரமனுக்கே

92. கொடியவினைப் பவமகற்றுஞ் சங்கமன் றான்
குறித்தன்பு செய்கைசிவ னென்ப தாகும்
படியிலிவற் கமுது செய் யப்பண்ணல் தானே
பரமனுக்குத் திருப்தியெனப் பகரும் வேத
மடிபரவியி வரையபி டேகம்பண் ணல்அகில
மெல்லாஞ் சுற்றிபண் ணிச்செய்த தாகும்
நெடியபவ மகலஇவர்தனை நினைதல் சினை
நினைதலி வர்தனைமறத் தல்சிவனை மறந்ததுவே (10)

**பொழிப்புரை:** சங்கமருக்குச் செய்யும் பூசையானது கொடிய பொல்லாத வினைகளையும் பாவங்களையும் அகற்றும். சங்கமத்தின் மீது அன்பு செலுத்துவது சிவன் மீது அன்பு செலுத்துவதாகும். சங்கமருக்கு அமுது செய்து படைத்தல் பரமனுக்குத்தான் சேரும் என்று வேதங்கள் கூறுகின்றன. சங்கமரின் அடிபரவி அவருக்குச் செய்யும் அபிடேகம் அது அகிலமெல்லாம் இருக்கும் சிவபெருமானுக்குச் செய்ததாகும். பெரிய பாவங்கள் அகல சங்கமரை நினைதல் சிவனை நினைத்தற்கும், இவரை மறத்தல் சிவனை மறத்தலுக்கும் ஒப்பாகும்.

## சங்கமரின் பெருமை

93. நீதிதருங் குருலிங்க மருவிய சங்கமர்தான்
 நிறைந்த சிவானந்த பராயணர்கள் சிவ னெனவே
 காதலுற வணங்கிவழி படுதல் வேண்டுங்
 கருணைதருங் குருவெனவே வணங்கல் வேண்டும்
 போதமுறு சிவஞானர்க் கேவுரியபார் வதியே
 பொருவின்மலை யரையனருள் புதல்விநம் துணையே
 எதமில்சங் கமர்சிவனா மெனவிருக்கு வேதத்
 தெழில்ஞான காண்டத்தி லிசைக்கு மென்றே (11)

**பொழிப்புரை:** பரமானந்தம் நிறைந்த மதானுசாரியர்கள் குரு லிங்கத்தைத் தரித்து நீதிதரும் ஒழுக்கத்தோடு ஒழுகும் சங்கமரைச் சிவனெனவே கருதி, அன்புற்று வணங்கி வழிபடுதல் வேண்டும். அச்சங்கமர் கருணை தரக்கூடியவர் எனக் கருதி வணங்கல் வேண்டும். இத்தகைய சிவஞானம் உற்றவர்களுக்கே நம் துணை கிடைக்கும். பர்வதராசனின் அருள் மகளான பார்வதியே! எவ்விதக் குற்றமும் இல்லாத சங்கமர் சிவனாவர் என வேதத்தின் ஞான காண்டம் உரைக்கின்றது

(சங்கமருஞ் சிவனுமொன்றென்னும் விதி முற்றும்.
ஆக விதி இரண்டுக்கும் செய்யுள் 18)

## வீரசைவப் பெரியோர்களின் அறுவகை நிலை

94. பிறைநுத லுமையே நம்மைப் பேணுமா சரண ரானோர்
 மறுவிலாப் பத்தன் மயே சுரன்பிர சாதி யுண்மை
 உறுபிராண லிங்கி சரணனு யரயிக் கியன்றா னென்றே
 அறுவகைத் தலம வற்றி னருட்பக்தன் நிலைமை கேளே (1)

பொழிப்புரை: இளஞ்சந்திரன் போல் நெற்றி பொருந்திய உமையே! நம்மை மதிக்கும் வீரசைவப் பெரியோர்களின் நிலைகள் அறுவகையாகும். அவை குற்றமற்ற பத்தன், மயேசுரன், பிரசாதி, உண்மை மிக்க பிராணலிங்கி, சரணன், உயர்வுடைய அயிக்கியன் என்பனவாகும்.

## சங்கமலிங்கத்தின் பெருமை

95. சாதமில் லிங்கத் துக்குஞ் சங்கமாலிங்கந் தமக்கு மென்றும்
பேதமிலேக மென்றே பெருகவே கொள்ளல் துய்ய
மாதவச் சங்க மத்தை மனிதரென் றிலிங்கந் தன்னை
தீதுறச் சிலையென் போரைச் செறுப்பவன் பத்த னாமே (2)

பொழிப்புரை: மேன்மையில்லாச் சாதாரண லிங்கமும், சங்கமலிங்கமும் வேறல்ல; இரண்டும் தமக்குள் ஒன்றே என்று கேடுறக் கருதுபவர்; தூய்மை வாய்ந்த மாதவம் நிறைந்த சங்கமத்தை மனிதரென்று உரைப்பவர், தீமை பயக்கும் வண்ணம் சங்கமலிங்கத்தைச் சிலையென்றுரைப்பவர் ஆகிய இவர்களை அழிப்பவன் பத்தனாவான்.

## சிவனாக மாறுந் தன்மை

96. குருடர்துன் மதியே யானோர் குட்டரோ கம்பி டித்து
அறுவினை முடவர் மொண்டி யசூசியரா யிருப்போ ரெனுந்
தருவிச லிங்கத் தோடு சங்கம ராயி ருந்தோற்
பெருகிய சிவனா மென்றே பேணுவோன் பத்த னாமே (3)

பொழிப்புரை: கண் பார்வையற்றவர்கள், தீயோர்கள், குட்டரோகம் பிடித்து அறுவினை முடவர்களானவர்கள், கை, கால் முடமானவர்கள், விலக்காகித் தீண்டத் தகாது தீட்டாக இருப்பவர்கள் முதலான இவர்களும் சிவலிங்கம் தரித்துச் சங்கமராயிருந்தால் சிவனெனப் பேணி வழிபடுவோர் பத்தனாவார்கள்.

## வீரசைவப் பெரியோர்களின் அடையாளங்கள்

97. தெண்டுகப் பரைவி பூதி திகழக்கு மாலை கந்தை
திண்டினறு லுடனிவ் வைந்துஞ் சிறந்தமுத் திரைகள் பூண்டு
கொண்டசங் கமரைக்கண் டாலக் குணத்தினால் வணங்கிக் கண்கள்
நுண்டுளி கொள்ள நிற்போன் நுவலில்நம் பத்த னாமே, (4)

பொழிப்புரை: கோலூன்றியும், பிச்சைப்பாத்திரம் ஏந்தியும், ஒளிவீசி விளங்கும் திருநீறும், உத்திராட்ச மாலையும் தரித்தும், நல்லாடையான

காவியை உடுத்தியும் இருப்பவர்கள் வீரசைவப் பெரியோர் ஆவர். இவர்களைக் கண்டால் இயல்பாக வணங்கிக் கண்ணீர் துளிர்க்க நிற்போன் பத்தனாவான்.

## பாவிகள்

98. **நலம்பெறு மிலிங்கத் துக்கு நாடியற் பியாம லுண்போன்**
**பலன்பட வியந்தி டாத பாபிகள் கோடி யானோர்**
**அலம்படு மிவர்கள் தன்னை யகற்றுதல் நினைவிற் றீண்ட**
**திலங்கிய புகழாம் பத்த னெமக்குகந் தவனா மாதே.** (5)

பொழிப்புரை: முதலில் படைத்தலின் வழி இலிங்கத்தை விரும்பி உண்பித்து அதன்பின் உண்போன் பெறும் இன்பம் பலவாகும். இதனால் பெறும் பலன்களும் மிக அதிகம். இவ்வாறு செய்யாமல் பலன்களைப் பெறாத பாவிகளே நம்மில் கோடியாவர். இவர்கள் இதனால் துன்புறவும் செய்வர். அவ்வாறு உள்ளத்தாலும் துன்பப்படுமிவர்களை நினையாது அகற்றிப் புகழால் ஒளி பெற்று விளங்கும் பத்தனே நமக்கு உகந்தவன் ஆவான்.

## முத்தி

99. **கருமல மறுத்து யிர்க்குக் கருணையா லப்பிறவா முத்தி**
**தருகுரு லிங்கந் துய்ய சங்கம மூன்று மொன்றாய்**
**பெருகிய சிவமா மென்றே பேணுமா பத்த னானோ**
**னிருவினை கடந்து முத்தி யெய்துவ தைய மன்றே.** (6)

பொழிப்புரை: மனத்தை இருளாக்கும் ஆணவம், மாயை, கன்மம் முதலிய மலங்களை நீக்கி, உயிர்களின் மீது கருணை கொண்டு மீண்டும் பிறவாத முத்தியைத் தருவதே குருலிங்கம். அந்தக் குருலிங்கம், சங்கமம் உயிர்கள் ஆகிய மூன்றையும் பெருமைக்குரிய சிவனென்றே கருதி ஒழுகுபவன் நல்வினை, தீவினைகளைக் கடந்து முத்தியைப் பெறுவது ஐயமன்றே.

## சிவபூசைச் சிறப்பு

100. **அந்தமில் சிவனுக் கன்பா யபிடேகம் பண்ணல் நல்ல**
**கந்தமா மலர்கள் சாற்றக் காதலால் நமஸ்க ரிக்க**
**நந்திலாத் தூபதீபம் நைவேத்தியம் பண்ணச் சூழ**
**வந்திட வுபசா ரத்தின் வளம்பயில் பத்த னாமே.** (7)

**பொழிப்புரை:** மரணமோ முடிவோ இல்லாத சிவபெருமானுக்கு உள்ளம் விரும்பி அன்பாக அபிடேகம் செய்தல், நல்ல மணமிக்க உயர்ந்த மலர்களைக் கொண்டு அர்ச்சித்து அன்பாக வணங்கல், மணமிக்க பொருட்களினால் நறும் புகையூட்டல், தீபம் ஏற்றல், காணிக்கையாக உணவு, நைவேத்தியம் முதலியனவற்றைப் படைத்தல், உபசார மந்திரம் சொல்லல் முதலியனவற்றைச் செய்யும் பெருமைபெற்றவன் பத்தன் ஆவான்.

## சங்கமர் தொண்டு

**101. போசன மடைக் காயாடை புனைசய ணங்கச் சட்டம்**
**வீசிட விசிறி பாத மிதியடி புலித்தோல் மான்தோ**
**லாசனம் விபூதிக் கோயி லானநற் தெண்டு மற்றுந்**
**தாசனாய்ச் சங்க மற்குத் தருபவன் பத்த னாமே.** (8)

**பொழிப்புரை:** சங்கமர்க்கு உணவு அளித்து வெற்றிலை பாக்கு தாம்பூலம் தரிக்கச் செய்து அணிவதற்கு ஆடை, படுப்பதற்குப் படுக்கை, விசிறிக் கொள்வதற்கு விசிறி, பாதத்திற்கு மிதியடி, புலித்தோலாலும், மான் தோலாலும் செய்த ஆசனமும், திருநீறும், வீரசைவர்கள் தரிக்கக் கூடிய லிங்க சம்பூடமும், கோல் முதலானவற்றைச் சங்கமற்கு வழங்கி அடிமையாக இருந்து அவர்களுக்குத் தொண்டு புரியும் தொழிலைத் தவறாது மேற்கொள்பவன் சிறந்த பத்தனாவான்.

## மகேசனின் விருப்பம்

**102. கோதானங் கன்னி தானங் குண்டலங் கமண்ட லங்கள்**
**பூதானஞ் சோறன்ன தானம் புகழுமணி முத்து மாலை**
**யேதாலு மயேசு ரன்றா னிச்சையாய்க் கேட்ட தெல்லாம்**
**நாதாவென் றடிவ ணங்கி நல்குதல் பத்த னாமே.** (9)

பொழிப்புரை: கோதானம், பூதானம், கன்னிதானம் ஆகிய தானங்களைச் செய்து குண்டலம், கமண்டலம், மலர்கள், அன்னதானம், ஒளி வீசக்கூடிய மணி, முத்துமாலை ஆகியவற்றில் மகேசன் மிகுந்த விருப்புடன் கேட்பவை அனைத்தையும் கொடுத்து சிவபெருமானே எனக் கருதி வணங்கிக் கொடுப்பவன் பத்தனாவான்.

## முத்தி பெறும் ஆன்மா

**103. மற்பயில் சங்கமற்கு வருதல்விக் கினங்கள் கண்டால்**
**பிற்படா வன்பி னாற்றன் பிராணன்விட் டவத்தை நீக்கல்**

சொற்பயில் ஞான வீர சுத்தனா மிவர்தம் நாமம்
பொற்பயி லுடைய பத்த நாயகன் புகலுங் காலே (10)

பொழிப்புரை: சங்கமர்க்கு ஏதேனும் தீங்கு ஏற்படுவதைக் கண்டால் சிறிதும் குறைவிலா அன்பினால் பொய்யானதும், பயனற்றதுமான இவ்வுடலை விட்டு உயிர் நீங்கும் நிலையை அடைபவன் ஞானவீரனாவான்; முத்திபெறும் ஆன்மாவாக மாறும் அந்த வீரசுத்தனானவனே பத்தனாவான்.

## இழிபிறப்பு

104. சிவன்குரு சங்க மத்தைச் சிந்தையால் நிந்திக் கொண்ணா
நவந்தரு மலர்கள் தங்கள் நற்பொருள் கவர லாகா
வவம்பெற விவைகள் செய்தால வத்தனாம் பாவி யாகிப்
பவம்பெறு சுணங்க னாகப் புரிடை பிறப்ப னன்றே. (11)

பொழிப்புரை: சிவன் அருள் பெற்ற குருசங்கமத்தை மனத்தினால் இகழ்தலும், அன்பை அருளக்கூடிய அவர்களின் நல்ல பொருள்களைக் கவருதலுமாகிய தீச்செயல்களைப் புரிந்தால் பல்வேறு தீமைகளை யடைந்து பயனற்ற அற்பனாகவும், தீயோனாகவும் பாவங்களைப் பெறும் நாயனைய கடைப்பட்டவனாகவும் பிறப்புறுவான்.

## செல்வமுடையோரின் துரோகங்களும் அடையும் கேடுகளும்

105. குருத்துரோ கங்கள் மற்றுங் கொடியமா சிவத் துரோ
மருத்தியாற் செய்தாற் பொல்லா ரவரவ நரகி லென்னும்
விருத்தமாய் விழுந்த ழுந்தி வெகுகால முழைத்த பின்னர்
பெருத்தமா புவியி லின்பப் பிறப்பினை யுறுவ ரன்றே (12)

பொழிப்புரை: பஞ்சமாபாதங்களில் ஒன்றாவது குருத்துரோகம், மற்றொன்று கொடுமையிலும் பெரிய கொடுமையான சிவத்துரோகம் ஆகும். இவற்றை அறிந்திருக்கும் அச்செயல்களைச் செய்பவர் பொல்லாதவராகிக் கேடுகள் அனுபவிக்கும் நரகில் வீழ்ந்து, அழுந்தி வருந்தி வெகுகாலம் துன்பம் உற்ற பின்னரே மீண்டும் மிகப் பெரிய இப்புவியில் பிறப்பர்.

## சிவத்துரோகம்

106. பத்தனாய் நிலைமை பூண்டோன் பரஸ்திரீ குருவின் றேவி
சித்தமாய்ப் பனத்தி மத்த ஸ்திரிகளைச் சேர்ந்தா னானால்

புத்தியோய்ச் சிவத்து ரோகம் பொருந்துவ னென்று மாதே
சத்தியமாய் ..... வீராக மத்தினிற் சாற்று மன்றே. (13)

பொழிப்புரை: பத்தனாக உள்ளவன் பிறர் மனைவியர் குருவின் மனைவி, பார்ப்பனப் பெண்கள் இவர்களைப் போன்ற பிறபெண்களைக் கூடுவானாகில் அறிவிழந்து சிவத்துரோகம் செய்தவன் ஆவான் என வீராகமம் உறுதியாய்க் கூறுகின்றது.

## நெடுந்தூரம் செல்வோன்

107. பிச்சமாங் கிஷங்கள் தீண்டி வருபவன் லிங்கத் துக்கு
வச்சமில் லாம லற்பித் தவமதி செய்வா னாகில்
நிச்சய மங்கி ராமல் நெடுந்தூர மகல்வோன் துய்ய
கச்சுலா முலையினாளே காணில்நம் பத்த னன்றே. (14)

பொழிப்புரை: மாமிசம் உண்பவனையும், அதனால் அச்சமில்லாமல் லிங்கத்துக்குக் காணிக்கை செய்து அவமதிப்ட வனையும் கண்டால், நிச்சயம் அந்த இடத்தில் இல்லாமல் அகன்று நெடுந்தூரம் செல்வோன் எவனோ அவனே நம் பத்தன் ஆவான்.

## பெரும்பாவம் செய்தோன்

108. தாதிகள் குட்ட ரோகி சண்டாள மாதர்க் கைம்பெண்
ஏதமாய் விலக்க மாகி யிருமவ ளிவற்பாற் கூடி
ஆதர வதனா லெச்சி லருந்துவா னாகில் மாதே
பாதகப் புலைய னாகும் பத்தனு மல்ல வென்றே. (15)

பொழிப்புரை: வேசி, குட்டரோகி, கொடும்பாதகி, விதவை, மாதவிலக்காகி இருக்கும் பெண் இவர்களுடன் கூடியும், இவர்கள் உண்ட எச்சிலை உண்பவன் பெரும்பாவம் செய்தோன் ஆவான். அவன் பத்தனும் அல்ல.

## பாவத்தில் அழுந்துவோன்

109. பல்லுயிர் செகுக்க லாகாப் பரமனே யல்லால் வேறு
புல்லிய தெய்வந் தன்னைப் போதவே தோத்தி ரங்கள்
சொல்லியே பரவ லாகா துணிந்திவை செய்யில் மாதே
யல்பயி லான்பாவத் தழுந்துவன் பத்த னன்றே. (16)

பொழிப்புரை: பல உயிர்களையும் அழியா வண்ணம் காத்தருளும் சிவபெருமானைத் தவிர வேறு கீழான தெய்வங்களைத் துதிகள் சொல்லி அறவோரும், ஞானத்தோரும் வணங்கலாகாது. துணிந்து இவ்வாறு

பிற தெய்வங்களை வணங்குவாராகில் பாவத்தில் அழுந்துவர். பத்தனல்லன்.

## சிவபிரானின் செயல்

110. திதிவாரம் யோக நட்சத் திரங் கரணம் நிமித்த
மிதிலாவ தாகா தென்றிங் கெண்ணுதல் விட்டுத் துய்ய
சதிபாகன் செயலென் றெல்லாந் தானெனப் பரவித் தேத்தும்
விதிதானே யுடைய பத்தன் மேலென விளம்பு மன்றே (17)

**பொழிப்புரை:** திதி, வாரம், யோகம், நட்சத்திரம், கரணம் ஆகிய இவற்றால் ஆவ்து ஒன்றுமே இல்லை என்று எண்ணுதலை அறவே ஒழித்து இவை அனைத்தும் சிவபிராணின் செயல்களே என்று எண்ணி அவனையே வணங்கித் துதி பாடி வழிபடுவதைத் தொழிலாகக் கொண்ட பத்தனே மேலானவன் ஆவான்.

## இதுவுமது

111. இன்றுதான் மரணம் வந்திங் கெய்தினுங் கேடி லாமல்
என்றுமே பிராண னோடிங் கிருக்கிலும் வறுமை யாவுந்
துன்றிய செல்வம் வந்து தோன்றினு மிசைவ வெல்லாங்
கொன்றையான் செயலென் றெண்ணிக் கொள்பவன்
பத்தனாமே (18)

**பொழிப்புரை:** கெடுதல்கள் பல வந்து அவற்றால் மரணம் நேர்ந்தாலும், கெடுதல் ஏதும் இல்லாமல் இங்கு உயிரோடு வாழ்ந்தாலும், வறுமை மிகுந்தாலும் வறுமை மாறி மிகுந்த செல்வம் வந்தாலும் இவ்வையெல்லாம் சிவபெருமானின் செயலென்று எண்ணி அவனையே வழிபடுபவனே பத்தனாவான்.

## முத்தி பெறும் உத்தமன்

112. தானதன் மங்கள் தீர்த்தந் தவவவிர தங்கள்
மானதின் பிறனி லிங்கந் தற்சனைக் கொவ்வா தென்று
தேனமர் மொழியி னாளே செய்யநம் பூசை பண்ணு
மூனமில் முத்தி செல்வ வுத்தம பத்தன் றானே. (19)

**பொழிப்புரை:** தான தருமங்கள், புண்ணியதீர்த்தம், தவம், விரதம் இவற்றிற்காகப் புரியும் நல்லொழுக்கம் முதலியனவற்றால் வரும் பலன்கள் லிங்க வழிபாட்டிற்குப் பொருந்தாதென்று குருலிங்க சங்கம பூசை புரிந்து அதன்வழி குறைவில்லா முத்தியைப் பெறுபவனே உத்தம பத்தன் ஆவான்.

(பத்தன் விதி முற்றும் உ ஆக விதி மூன்றுக்கும் செய்யுள் 37)

## மயேசுரன் நிலை

113. வல்வினைப் பகையை மாற்று மயேசுர னிலமை சொல்லில்
நல்சிவ மந்தி ரத்தை நவின்று நற் சிவத்தி யானம்
புல்லுதல் மயேசர் பூசை பொருந்துதல் சிவத்தைப் போற்றல்
எல்லைசீ வன்றன் கீர்த்தி யென்றும்பா ராட்டல் செய்தல் (1)

பொழிப்புரை: வலிய பொல்லாத வினைகளையும் பகைகளையும் மாற்றக்கூடிய மயேசுரன் நிலைகளாவன: சிவமந்திரத்தைக் கூறி சிவத்தியானத்தைத் தழுவுதல்; மயேசுரப் பூசையைப் பொருந்துதல்; சிவனைப் போற்றுதல்; இதனால் வரும் புகழைத் தனது உயிர் என்று பாராட்டுதல் முதலியன மயேசுர நிலைகளாகும்.

## மயேசுரன் விதி

114. பரமநற் சிவனோ டேகிப் பவித்திருப் பதுவு மென்றுங்
கரவில்சத் தியமே சொல்ல காமநிக் கிரகம் பண்ணல்
குரவநற் சேர்வை செய்தல் குணத்திற்சாத் துவித மாதல்
பரவுமா யேசு ரன்றன் விதியில மலையின் மாதே (2)

பொழிப்புரை: சிவபெருமானோடு கலந்து பரிசுத்தமாய் என்றும் இருத்தல், பொய் கூறாமல் உண்மையையே சொல்லுதல், அன்பின் மிகுதியால் ஏற்படும் உலகப் பாசபந்தங்களையும் காமத்தையும் அடியோடு விட்டொழித்தல், குருவிற்கு நல்ல சேவை செய்தல், சாத்துவ குணத்தைப் பின்பற்றுதல் முதலியன மயேசுரன் விதிகளாகும்.

## மயேசுரன் கடமை

115. பண்பினாற் சிவாக மங்கள் பலகாற்பா ராட்டல் ஞான
தெண்புக லாகார் பொல்லா ரென் மொழி யாதி ருத்தல்
நண்பினா லுயிர்க்கு ணத்தை நாடாமற் சிவகு ணத்தின்
கண்பயில் மயேசு ரன்றன் கருமமா லொழுங்கி தென்றே (3)

பொழிப்புரை: பண்பினால் சிவாகமங்களைப் பலவாறாகப் பாராட்டுதல், ஞானஅறிவில் விருப்பமில்லாதவர்கள் பொல்லாரெனக் கருதி அவர்களுக்கு ஆகமங்களைக் கூறாதிருத்தல், உயிர்கள், உறவினால் உற்ற இயல்பான குணத்தை நாடாமல் சிவ குணத்தையே விரும்பிச் சொல்லுதல் ஆகியவை மயேசுரனின் கடமைகளாகும்.

## மயேசுரனின் உணவு, உடை, உறையுள்

116. ஆகாரம் பிச்சை யன்ன மாஞ்சுகி யாயி ருக்கை
வாகாரம் விபூதித் தானம் வளரக்கு மணிகள் பூணல்
நாகார முடையோன் கோயில் நணுகியெப் போதும் வைகல்
மாகாருங் கந்தை ணல் மயேசுரன் விதிய தாமே. (4)

பொழிப்புரை: பிச்சையெடுத்த உணவையே தன் உணவாக உண்ணுதல், நீராடி சுத்தமாக இருத்தல், திருநீறு தரித்தல், தானம் வளர்த்தல், உத்திராட்ச மணிகளை அணிதல், நகாரம் உடையோனாகிய சிவபெருமானின் கோயிலை அடைந்து எப்போதும் அங்கே தங்கி இருத்தல், கந்தையான ஆடைகளை அணிதல் ஆகியன மயேசுரன் விதிகளாகும்.

## பரமன் மீது ஆசையும் நற்குணமும்

117. பரதிர வியத்தி லாசை பரனா ரிதன்மே லாசை
விரவியே பாரன ணணங்கள் விரும்பியே யோசித்தல் தொன்மை
தருகுலரா சாரம் விட்டுச் சாந்தநற் குணமுந் தூய்மை
பெருகிய பொறையு மாவோன் பேசில்மா யேசு ரன்தான் (5)

பொழிப்புரை: பரமபதத்தின் மீது ஆசை வைத்தல், பரமனின் மீது ஆசை வைத்து அவனோடு கலத்தல், பார்ப்பனர்கள் உண்ணக் கூடிய உணவுகளையே விரும்பி உண்ணுதல் கீழான மக்கள் தருகின்ற உணவை விட்டு என்றும் பொறுமைக் குணமும் அமைதியும் நிறைந்த தூய்மையைப் பெறுதல், எல்லாத்திறத்தும் பொறுமையுடையவனாதல் போல்வன மகேசுரன் பண்புகளாகும்.

## மகேசுரன் இயல்பு

118. மாங்கிஷந் நீண்ட லாகா மறுசமை யத்தோ ரோடு
பாங்கினாற் பேச லாகா பத்திடு மோசை தன்னை
நீங்கிடில் தனந்தே டாமல் நின்மல மாயி ருக்க
லாங்கரு ஞான மேவல் மயேசுரன் சரித்தி ரந்தான். (6)

பொழிப்புரை: புலாலுணவைத் தொடாது ஒழுகுதல், பிற சமயத்தாரோடு பேசாதிருத்தல், வழிபாடும், ஆராதனையும் நிறைந்து தோத்திரங்களைப் பாடும் ஓசையினின்றும் நீங்கிடாமலிருத்தல், செல்வம் தேடுவதையே குறிக்கோளாகக் கொள்ளாமல், மாசில்லா மனத்தோடு இருந்து ஞானத்தை விரும்புதல் ஆகியவை மயேசுரன் இயல்புகளாகும்.

## அகலாத அருள்

119. சடையொடு காவி வேட்டி தவழவெண் ணீறு தெண்டு
அடையுறு மாச னந்தா னாகமுத் திரைகள் ஐந்து
முடையமம யேசு ரன்றா னுகந்தவனுந மக்கு மாதே
இடைவிடாத ரெந்நா ளுமெமசும தருளடைவ ரன்றே. (7)

பொழிப்புரை: சடையோடு, காவி உடையைத் தரித்தல், வெண்மையான திருநீறு பூசுதல், கோல் உடையவனாயிருத்தல் பீடத்தில் இருத்தல் முதலான இந்த அடையாளங்களை உடையவரே மயேசுரன் ஆவார். இவர் எந்த நாளும் நம்முடைய அகலாத அருளுக்கு உரியவ்ராவார்.

## மயேசுரன் இயல்பு

120. மடங்களில் பத்தர் வீட்டில் மருவியே யமுது செய்தல்
திடம்பெறப் பத்திக் கன்பாய்ச் சென்னெறி யறிவு சொல்லத்
தடந்திகழ் பொறுமை சுத்தஞ் சத்திய வசன மிவ்வாறு
இடம்பெற வுடைய தான வியல்புமா யேசு ரன்றான். (8)

பொழிப்புரை: கோயில்களிலும், சத்திரங்களிலும், பத்தர்களின் வீடுகளிலும் விரும்பித் தேவருணவாக அமுதம் செய்தல், பத்தியில் உறுதிபெற்று அன்பாக நன்மார்க்கத்திற்குரிய அறிவைச் சொல்லுதல், பெருமையுடன் திகழ பொறுமையாகவும், தூய்மையாகவும் சத்தியத்திற்குரிய வாக்கியங்களை உரைத்தல் முதலானவற்றை உடையவனாயிருத்தலே மயேசுரன் இயல்பாகும்.

## பரிகாச நிலை

121. குண்டலங் கந்தை பாதக் குறடுநல் மூங்கில் தெண்டு
தீண்டிக முத்தி ராக்கஞ் செபமாலை யோகப் பட்டி
கண்டிகை யொட்டி யாணங் கம்பிளி குல்லா வொண்மைப்
புண்பரி காச னந்தான் புனைபவன் மயேசு ரன்றான். (9)

பொழிப்புரை: தவத்தோரின் காதணியான குண்டலம், கந்தையான ஆடை, மிதியடி, மூங்கிற்கோல், பவளக் குறிச்சி, கழுத்தில் உத்திராக்கம், செபமாலை, கம்பளி, தொப்பி முதலானவற்றை அணிந்து யோகியாகிப் பிறர் பரிகாசிக்கும் நிலையில் உள்ளவன் மயேசுரன் ஆவான்.

## மயேசுரன் இயல்பு

122. பொறையுள ராகச் சீஷன் பொருந்தியே யிருக்க வன்பாய்
நிறைகுரு பூசை செய்ய நித்தலுந் தியானம் பண்ணி
விறைசிவாற் சனையே செய்ய வியல்புடைச் சித்த மாக
வறையுமிவ் வியல்பே யுள்ளானனம யேசு ரன்றான் (10)

பொழிப்புரை: பொறுமையுடைய சீடனைப் பெற்று, அன்பால் நிறைந்து குருபூசைசெய்தல், தினமும் தியானம் செய்தல், சிவபெருமானுக்கு வழிபாடு செய்தல் ஆகிய இயல்புகளை எப்போதும் உடையவனாகி ஒழுகி வருபவன் மயேசுரன் ஆவான்.

## உத்தம உயர் குணங்கள்

123. உத்தம மயேசு ரன்றா னுயர்குண முரைக்கில் மாதே
சத்தியஞ் சொல்கை மின்னார் தமையுறு போக நீங்கல்
மித்தையாம் பாவ தனமி ரண்டுமற் றிருக்கை தீர்த்த
வத்தியாத் திரைகள் போகா மாங்கீஷந் தீண்ட லாகா. (11)

பொழிப்புரை: உண்மையே பேசுதல், பெண்ணாசை கொண்டு இன்பம் துய்ப்பதைத் தவிர்த்தல், பொய் கூறாமலிருத்தல், பாவம் நீங்கவேண்டுமெனவும் செல்வம் பெருக வேண்டுமெனவும் இழிந்த செயல்களான புண்ணிய தீர்த்தமாடுதல் தல யாத்திரைகள் போதல் ஆகியவற்றை மேற்கொள்ளாதிருத்தல் புலாலுணவை உண்ணாமல் இருத்தல் போன்றவையும் மயேசுரனின் நற்குணங்களாகும்.

## மயேசுரன் விதி

124. ஊன்பயில் குலாசா ரங்க ளுறலறப் பூரு வத்தின்
ஆன்பயில் தோத்தி ரங்க டதனில்நா மத்து ஞானந்
தேன்பயில் குருவின் பாதச் சேர்வையெந் நாளும் பண்ணல்
மான்பயில் விழியி னாளே மயேசுரன் விதிய தாமே (12)

பொழிப்புரை: புலால் உணவை உண்ணும் குலத்தின் ஒழுக்கங்கள் முதலிய தீயான குணங்கள் அனைத்தையும் விட்டு ஒழுகுதலும், தோத்திரங்களைப், பாடியும், சிவபெருமான் பெயரை ஓதியும், ஞானமாகிய தேனைப் பருகுதலும், குருவின் பாதங்களை வணங்கி எந்நாளும் அவர்க்குச் சேவை புரிதலுமாகிய இவை மயேசுரன் விதிகளாகும்.

## தேவ நற்பூசை

125. கோவணந் தரிக்க வாசை கூடிடா திருத்தல் காட்டில்
மேவிய வாசம் பண்ணல் மிகுத்தநற் பட்டி னங்கள்
ஆவதி லிருக்கச் சாந்த மாயிடக் கோப நீங்கத்
தேவநற் பூசை பண்ணுஞ் செயலுளான் மயேசு ரன்றான்.(13)

பொழிப்புரை: கோவணம் தரிப்பதையே விரும்புதல், யாவருடனும் கூடாது காட்டில் சென்று வாழ்தல் இவையன்றி நல்ல ஊர்களில் வசிப்பதெனில் பொறுமையாக இருந்து கோபம் நீங்கித் தேவர்க்கு நல்ல பூசை செய்யும் செயல்களைச் செய்பவன் மயேசுரன் ஆவான்.

(மயேசுரன் விதியதாம் முற்றும்)

ஆக விதி நான்கிற்கும் செய்யுள் 50.

## தெய்வப் பதவி

126. குருலிங்க சங்க மத்தின் குலவிய பாத தீர்த்த
மரியநற் பிரசா தந்தா னன்பினாற் பிரசாதி யானோன்
மருவியே கொண்டா லிந்த மானிலந் தன்னில் வந்து
உருவே டானம்ப தத்தி லுறுவனம் பிகையே யுண்மை (1)

பொழிப்புரை: குருலிங்க சங்கமத்தில் பொருந்தி, பாததீர்த்தம் அரிய நற்பிரசாதம் இவ்விரண்டின் அன்பினால் பிரசாதியாகி சங்கமத்தில் கலந்து கொண்டால் மீண்டும் மானிலத்தில் உருவுருவாமல் தெய்வபதவி அடைவது உறுதியாகும். அம்பிகையே! இது உண்மை.

## நரகத்தில் வீழ்தல்

127. கூறுதற் கரிய செய்ய குருலிங்க சங்க மத்தின்
பேறுடைப் பிரசா தத்தைப் புறக்கணித் தெச்சி லென்று
மானுடன் சொன்ன வந்த மாபாவி நரகில் வீழ்ந்து
ஏறவும் மாட்டா ரென்றே லிசைக்குமா கங்க டானே (2)

பொழிப்புரை: கூறுவதற்கரிய குருலிங்க சங்கமத்தின் வெகுமதியுடைய பிரசாதத்தைப் புறக்கணித்து உமிழ்நீர் பட்டதென்று வினையாகவோ விளையாட்டாகவோ கூறிய அந்த மாபாவி நரகத்தில் வீழ்ந்து உயர்வு பெறவும் மாட்டாரென்று ஆகமங்கள் கூறுகின்றன.

## முத்தி பெறுதல்

128. கோதிலா வருளே செய்யுங் குருலிங்க சங்க மத்தின்
தீதிலாச் சேடந் தன்னைச் சிறந்தவரப்பிர சாத மென்று
ஓதவே வேண்டு நாளு முகந்தந்தப் பிரசா தத்தைப்
பேதமி லருந்து வானற பிரசாதி முத்தன் றானே. (3)

பொழிப்புரை: குற்றமில்லாமல் அருகே செய்யும் குருலிங்க சங்கமத்தின், தீமையில்லா பிரசாதம் சிறந்த வரப்பிரசாதம் என்று சொல்லித் தினமும் வேண்டிக் கேட்டு. அந்தப் பிரசாதத்தை வேறுபாடின்றி மகிழ்ந்து அருந்துவோன் அறம் ஒழுகும் பிரசாதியாகி முத்தி பெற்றவனாவான்.

## கோடி லிங்கத்திற்கு அருச்சித்த பலன்

129. சங்கமர் வாயி னாலுஞ் சற்குரு வாயி னாலும்
பொங்கவே எடுத்த வந்தப் பொலிவுடைப் பிரசா தத்தைத்
தங்கிடா துகந்து கொண்டோன் றான்பிர சாதி யாவோ
னங்கையாற் கோடி லிங்க மற்சித்த பலனே யாகும் (4)

பொழிப்புரை: சங்கமரின் வாயினால், ஞான ஆசிரியரான சங்கம குருவின் வாயினால் பொலிந்த அழகுமிக்க பிரசாதத்தை எடுத்துத் தாமதிக்காமல் மகிழ்ச்சியோடு அருந்துபவன் பிரசாதியாவான். அது அவன் கையால் கோடி லிங்கத்திற்கு அர்ச்சித்த பலனைத் தருவதாகும்.

## பிரசாதத்தின் பெருமை

130. பேதமில் சங்க மத்தின் பிரசாத மிலங்கத் துக்கு
காதலா லாகு மாதே கருதிய தென்ன தென்னிற்
கோதிலா முன்ன மந்தக் குருலிங்க சங்க மத்தின்
பாதநீர் பிரசா தத்தைப் பருகுத லாத லாலே (5)

பொழிப்புரை: விகற்பமில்லா சங்கமத்தின் பிரசாதம் அங்கத்திற்கு அன்பாகும் குற்றமில்லா குருலிங்க சங்கமத்தின் பாதநீர்ப் பிரசாதத்தினைப் பருகுதலால் எண்ணிய எண்ணம் எதுவாக இருப்பினும் நிறைவேறும்.

## பாதத் தீர்த்தத்தின் பெருமை

131. அந்தநற் சங்க மத்தி னருடரும் பாத தீர்த்தம்
பந்தமில் பிரசா தந்தான் பரிவுடனி லிங்கத் துக்கு

நந்தமா ரவிடே கம்நை வேத்திய மாகு முன்யாஞ்
சிந்தையால் நவின்றோ மென்று சேலெனும் விழியி னாளே. (6)

பொழிப்புரை: நன்மைமிகு சங்கமத்தின் அருள் நிறைந்த அரிய பாதத் தீர்த்தம் பற்றுக்களையெல்லாம் அறுக்கும் தன்மையுடையது. அப்பாதத் தீர்த்தமானது இலிங்கத்திற்கு கஸ்தூரி முதலான மணமிக்க பொருட்களைக் கொண்டு அன்புடன் அபிடேகம், நைவேத்தியம் செய்வதற்கு ஒப்பாகும் என்று கயல் போன்ற விழியினாளே முன் யாம் குறிப்பால் கூறியிருக்கிறோம்.

## இதுவுமது

132. பரிகலத் தமுது கைவாய் பட்டமு துண்ணுங் காலை
பரிவுற மூன்று தன்மை பெற்றதுன் னெச்சி லென்றே
அரியதோர் குருவி லிங்க மானசங் கமர்த மக்கு
முரியதாய் பிரசாத தீர்த்த மொன்றதாய் நடக்கு மாங்கே. (7)

பொழிப்புரை: சங்கம குருவின் கைகளும், வாயும் பட்ட அவர் உண்ட கலத்தில் உண்ணும் பிரசாதம், உமையாகிய உன்னுடைய எச்சிலும் மூன்று தன்மையும் பெற்ற பிரசாதத்திற்கு இணையானது. எனவே குருலிங்கமானது சங்கமரின் பிரசாதமும், தமக்குரிய பிரசாதமும் ஒன்றாகும்.

## பிரசாதத்தினால் நீங்கும் பிணிகள்

133. மனத்தாபங் குமர கண்டன மாசுண விஷரோ கங்கள்
சினத்தாரம் கிரக மத்துஞ் செய்பல பிணிக ளான
தனைத்தும்போஞ் சங்க மத்து நம்பிர சாதத் தீர்த்தந்
தினைத்தனை கொண்டா லென்று செப்புமா கமங்க டானே (8)

பொழிப்புரை: மனத்தினால் வரும் துன்பங்கள், பேயினால் பிடிக்கப்பட்டு அதனால் வரும் துன்பங்கள், பாம்புக் கடிபட்டு அதனால் ஏற்படும் விஷநோய்கள் புண் வீங்கிச் சிவத்தல், இராகு, கேது, சனி போன்ற தீயோர்களின் பார்வையால் வரும் பிணிகள் அனைத்தும் சங்கமத்தின் பிரசாதத்தைத் தினையளவு உண்டால் கூட நீங்கி விடும்.

## பாவங்கள் நீங்குதல் - சிவலோகம் அடைதல்

134. அருநிரை யத்தில் வீழ்ந்து அழுந்திடு வோர்க்குந் துன்பந்
தருமிகு பிரம கத்தி தங்கிய பேர்க்கு மாவம்
பெருகிய பாத தீர்த்தப் பிரசாத மருந்தப் பெற்றால்
செருவுரு பாவ நீக்கிச் சிவலோகத் துய்க்கு மன்றே. (9)

**பொழிப்புரை:** கொடிய நரகத்தில் வீழ்ந்து துன்பப்படுவோர்களும், பிராமணரைக் கொன்ற தோஷம் உடையவர்களும், ஆர்வம் பெருகி தீர்த்தப்பிரசாதத்தை அருந்தினால், மேற்கூறிய பாவங்கள் நீங்கிச் சிவலோகமாகிய மோட்சத்தை அடைவர்.

## இதுவுமது

135. **மதுவிரவின் றசையு மச்ச மத்துள்ள ன்னிய போசிப்பு**
**மெதுவாலு மியன்ற பாவ மிசைந்திடா தகன்று போகுந்**
**சதுமாநான் மறைகள் போற்றத் தகும்பிர சாதத் தீர்த்த**
**மிதுதானுட் கொண்டால் மாதே யெய்துவார் சிவலோ கத்தே** (10)

**பொழிப்புரை:** மது வகைகளைக் குடித்து அதனால் ஏற்பட்ட துன்பங்களும், அச்சங்களும், அன்னிய பொருட்களை அனுபவித்தல் போன்ற எதுவாக இருப்பினும் அந்தப் பாவங்கள் அகலும்; மேலும் நான்கு வேதங்கள் போற்றத் தகுந்த பிரசாதத் தீர்த்தத்தை உட்கொண்டால் சிவலோகத்தை அடைவர்.

## ஞானமும் திண்ணியவறிவும் பெறுதல்

136. **பரபொருள் கவர்ந்த பாவம் பிறர்மனை யணைந்த பாவம்**
**விரவிடா தகன்ற பேர்கும் வித்தக ரான நந்தஞ்**
**திரமிகு சங்க மத்தின் தீர்த்தப்பிர சாதங் கொண்டால்**
**உரமிகும் மலையின் மாதே யுள்ளதின் றய்ய மின்றே** (11)

**பொழிப்புரை:** பிறருடைய பொருட்களைக் கவர்ந்த பாவமும், அயலானின் மனைவியைத் தழுவிப் புணர்ந்த பெரும்பாவமும் நீங்காத பேர்களும், அறிஞர்களும் நம்முடைய வரம் மிகுந்த சங்கமத்தின் தீர்த்தப் பிரசாதத்தை உட்கொண்டால் அவர்கள் ஞானமும், திண்ணிய அறிவும் பெறுவர். இதில் ஐயமேயில்லை.

## நரகங்களின் வேந்தன்

137. **திரமிகு சங்க மத்தின் தீர்த்தப்பிர சாதந் தன்னைக்**
**கரவுர நிந்தித் தஞ்சாக் கட்டுரை செய்த பேர்கள்**
**உரவுறு நரகங் கட்கு ளுயர்ந்திடு வேந்த னாகி**
**நிரவுர நரகில் வீழ்ந்து யிடைவிடா துறுவர் மாதே.** (12)

**பொழிப்புரை:** முத்தி தரக்கூடிய சங்கமத்தின் தீர்த்தப் பிரசாதத்தைச் சிறிதும் அச்சம் கொள்ளாமல் இகழ்வாகப் பேசி அலட்சியம் செய்து ஏற்ற சொற்களால் பொருத்தமான முறையில் பொய் உரைத்தவர்களும்

நரகங்கட்கு உயர்ந்த வேந்தனாகி, நரகங்களில் வீழ்ந்து இடைவிடாது துன்புறுவர்.

## மெய்ஞ்ஞானம் பெற்றுச் சிவலோகம் அடைதல்

138. உத்தம சங்க மத்தி னுயர்பிர சாதந் தன்னைச்
சித்தமாய்க் கொண்டா லிந்தச் செகத்தினி லுள்ள பாவ
மெத்தனை செய்தா ராலு மிவைகள்விட் டகன்று ஞானச்
சுத்தமாய் நமது லோக சுகத்தினை யுறுவ ரன்றே. (13)

பொழிப்புரை: எவற்றுள்ளும் சிறந்த சங்கமத்தின் உயர்ந்த பிரசாதத்தை நாள் தவறாது உட்கொண்டால் இந்த உலகில் உள்ள பாவங்கள் அத்தனையும் செய்தவரானாலும் அப்பாவங்கள் அகன்று மெய்ஞ்ஞானம் பெற்றுச் சுத்தமாய் நமது சிவலோக இன்பத்தினை அன்றே பெறுவர்.

## பாதத் தீர்த்தத்தின் பலன்

139. நீங்கருங் கருணை பூண்ட நித்தராஞ் சங்க மத்தின்
ஆங்கரும் பாத தீர்த்தந் தனையுகந் தருந்தப் பெற்றால்
ஓங்கிய கெங்கை யாதி யுள்பல தீர்த்த மாடும்
ஆமாங்குள பலத்திற் பற்ற வதிகமென் றறையும் வேதம் (14)

பொழிப்புரை: எப்போதும் நீங்காத கருணை நிறைந்த சிவபெருமானின் திருவருளால் சிவபெருமானாகவே வீற்றிருப்பவர் சங்கம குரு. அவரின் பாதத் தீர்த்தினை மகிழ்வோடு அருந்தினால், உயர்வு பெற்று விளங்கும் கங்கை முதலான தொன்மை வாய்ந்த புண்ணிய தீர்த்தங்களில் ஆடி அதனால் வரும் பலன்களைவிட அதிகமாகப் பலனைப் பெறலாம்.

## இறைவனோடு இரண்டறக் கலத்தல்

140. அறுபத முரல்சேர் கூந்த லழகம ருமையே நந்தம்
பிறிதிகொள் சங்க மத்தின் பிரசாத தீர்த்தங் கொண்டால்
மறுவிலா ரெவரும் போற்ற வாழ்வர்தா முன்னஞ் செய்த
சர்வபா வங்கள் விட்டுச் சாயுச்சிய மடைவர் தாமே. (15)

பொழிப்புரை: உமையே! நம்முடைய விருப்பத்தைப் பெற்றதும் நாம் பெரிதும் விரும்புவதுமான சங்கமத்தின் பிரசாதத்தை உட்கொண்டால், அவரின் பகைவர்கள் போற்றுமாறு வாழ்வர்; முன்பு தான் செய்த பாவங்கள் கூட முழுவதும் நீங்கி இறைவனோடு அயிக்கியமாகி இரண்டறக் கலக்கும் முத்தியையும் பெறுவர்.

## பிரசாத நிலை

141. போதர வுடைய செல்வப் புனிதர்சங் கமரைப் போற்றி
யாதர வதனாற் பாதம் விளக்கியா சனத்தி ருத்தித்
தீதிலா வாடை யன்னந் திகழ்கெந்த மற்று மீய்ந்து
நீதியால் வணங்கல் நந்தம் பிரசாதி நிலைய தாமே. (16)

பொழிப்புரை: பிறருக்கு ஆறுதலாகவும் உபசரனையாகவும் இருக்கும் இவற்றையே செல்வமாகப் பெற்ற புனிதராகிய சங்கமரைப் போற்றி, அவரின் பாதங்களைக் கழுவி, அவரைப் பீடத்தில் இருத்தித் தூய ஆடை அளித்து அன்னம் படைத்து மணம் வீசக் கூடிய பொருட்களைக் கொடுத்து நீதியோடு வணங்குபவன் நம் பிரசாதியாவான்.

## பிரசாதியின் தன்மை

142. தேவனே யிவனா மென்று திகழவே தோத்தி ரங்க
ளாவலாற் செய்து மன்னை யவர்களை வலமாய் வந்து
ஏவின பணிகள் செய்து எந்தையே யுய்ந்தே னென்று
தீர்விலாத் தவங்கள் செய்வோன் பிரசாதி தன்மை யாமே. (17)

பொழிப்புரை: சங்கம குருவையே இறைவனாகக் கொண்டு தோத்திரங்களை ஆர்வமுடன் பாடியும், அக்குருவையே அன்னை உமையெனக் கருதி அவரை வலமாய் வந்தும், அவர் கட்டளையிட்ட பணிகளைச் செய்தும், எந்தையே சீவித்தேன் என்று வணங்கி நீங்காத தவங்களைச் செய்வோன் பிரசாதி தன்மை பெற்றவன் ஆவான்.

## தெய்வங்களுக்கும் மேல்

143. தொழில்குலா சாரம் நாணந் தொல்லுல கியற்கை யாவுங்
கழியவிட் டகன்று துய்ய கற்புடைச் சங்க மந்தான்
எழில்பெறு மெல்லாத் தெய்வங் களுக்கெல்லாம் மேலா மென்றே
மொழியுமா கமங்க டானே முருகவிழ் குழலி னாளே. (18)

பொழிப்புரை: சங்கமம் தெய்வங்களுக்கெல்லாம் மேலாகும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. எனவே தொழிலையும், குல வழக்கினையும், மதிப்பையும் உலகத்தின் மீதுள்ள பந்த பாசங்களையும் விட்டகன்று தூய்மையுடைய, கற்பு நிறைந்த சங்கமத்தில் சேர்ந்தால் உயர்வு பெறலாம்.

## பெரியவர்

144. மனவாக்குக் காயந் தன்னால் வஞ்சனை யின்றி யன்பால்
தனைநீக்கி மறவே பூசை செய்துநற் சங்க மத்தைக்
கனமாகப் பூசப் போரைக் காணவுங் கிடையா திவ்வா
றினைநோக்கிப் பூசிப் போர்பெ ரியரவரோ யுரைப்பர் மாதே. (19)

பொழிப்புரை: மனம், மொழி, மெய் ஆகியவற்றால் வஞ்சகமின்றி, பற்றுக்களை நீக்கியும் எழுச்சியாகப் பூசை செய்தும் நல்ல சங்கமத்தை அன்பாகப் பூசிப்போரையும் காண்பது அரிது; இவ்வாறு பூசிப்போரே பெரியவராவர். அவ்வரைப் பெரியவர் என்றே உரைப்பர்.

## தீயோருக்கும் சிவலோகம்

145. சண்டாளர் மறையோர் மற்றச் சாதிக்க டனிலுள் ளோர்கள்
பண்டாய குணங்கள் நீங்கிப் பரமசங் கமாரா னோரைக்
கண்டால்நஞ் சிவனா மென்றே கழல் தொழு மதனன் மற்று
முண்டான தீவோர் தங்கட் குயர்சிவ லோக மீவோம். (20)

பொழிப்புரை: கொலை தொழில் புரிந்தோர், பார்ப்பனர்களும் மற்றும் அவரவர் சாதிக்குரிய இடனில் உள்ளவர்கள் அனைவரும் தங்களது பழைய குணங்கள் முதலியன நீங்கி பரம சங்கமரானோரைக் காணும்போது நம்முடைய சிவனாமெனக் கருதி அவர் பாதம் பணிவோன் தீயோராக இருப்பினும் அவருக்குச் சிவப்பதவி கொடுப்போமோக!

(பிரனதி விதி முற்றும்)

(ஆக விதி ஐந்துக்கும் செய்யுள் 70)

திருசிற்றம்பலம்

## பிராணலிங்கி

146. சோதிலிங் கமனோ லிங்கஞ் சொல்லுநற் பிராண லிங்கம்
நீதியுட் குருவி லிங்கம் நிறைந்தவவ விலிங்கந் தானும்
காதலாற் பிராண லிங்கங் கருதில் மாவிசிட்ட மாகு
மாதலாற் பிராண லிங்கியல் விலிங்கமே பிராண னாவான். (1)

பொழிப்புரை: சோதிலிங்கம், மனோலிங்கம், பிராணலிங்கம், குருலிங்கம் இந்த லிங்கத்திற்குள் அன்பால் நிறைந்தது பிராணலிங்கம். இது சிறந்த விசேடமுடையதாகும். எனவே பிராணலிங்கியே பிராணன் ஆவான்.

## பிராணலிங்கியின் விதி

147. உடலுயிர் பாலு நெய்யு முறுமெள்ளு மெண்ணை தானுந்
தடமிகு சத்த மத்தந் தையிரிய மனமும் போலுந்
திடமிகு பிராண லிங்கத் தேகமாய்ச் சேர்வோன் மாதே
அடல்புனை பிராண லிங்கிக் கறுகிய விதிய தென்றே (2)

பொழிப்புரை: உடலும் உயிரும், பாலும் நெய்யும், எள்ளும் எண்ணையும், பெருமைமிகு பெரியோர் மொழியும் அருள் நெறியும், மனமும் மனத்துணிவும் இணைந்திருப்பது போலவும் உறுதி மிகுந்த பிராணலிங்கமே உடலாய் நிறைபவன் பிராண லிங்கியின் அழகிய விதியாகும்.

## பிராணலிங்கியின் உயிர்

148. சீரிய குருவ தன்பின் சிவலிங்கப் பற்றி தானுந்
தேரில்நற் சமைய மான தெரிசின மினை ணான்கு
பாரிய பிராண லிங்கி யாவியாய்க் கொள்வ னென்றே
பெரியவா கமங்க ளெல்லாம் பெருமையாய் மொழியு மன்றே. (3)

பொழிப்புரை: சிறப்புமிகு குருவின்னையும், அவரிடம் பெற்ற சிவ லிங்கத்தையும், தேர்ந்த வீரசைவம் என்னும் சமயத்தையும், அவரின் தரிசனம் இந்த நான்கையும் சிறிய பிராணலிங்கி உயிராகக் கொள்வான் எனப் பெரிய ஆகமங்கள் பெருமையாய்க் கூறுகின்றன.

## தாபரலிங்கம் – சங்கமலிங்கம் *

149. மாபரன் தேசிகன்றன் வாய்க்கிய லிங்கந் தானே
தாபர லிங்க மாயுஞ் சங்கமா லிங்க மாயும்
பூபர மீதி லாரும் போற்றுதற் குளதாச் சென்றே
தேபர மறைகள் சொல்லுஞ் சேலென விழியி னாளே (4)

பொழிப்புரை: பெருமைமிகு சிவனாரின் தன்மைப் பெற்ற சங்கமகுருவின் வாக்கியம் லிங்கமாகும். அது தாபரலிங்கமாம் சங்கம லிங்கமாகவும் உள்ளது. இவை பூவுலகில் யாவரும் சென்று துதிப்பதற்கு உரியதாய் இருக்கின்றன என இறைவனின் மறைகள் கூறுகின்றன.

## பல்வேறு இலிங்கங்கள்

150. ஆனநற் பீட லிங்க மரியதா பரமே லிங்க
மானத லிங்கஞ் செய்ய வாய்த்தசீக் கிரம லிங்கம்

வாதலிங் கமேவன் னிலங்க மீனமி லுதக லிங்க
...... ......, மிரும்புலி லிங்க மற்றும். (5)

பொழிப்புரை: பீடலிங்கம், மானதலிங்கம், சீக்கிரமலிங்கம், வாத லிங்கம், வன்னிலிங்கம், தகலிங்கம், புலிலிங்கம் முதலான பல்வேறு இலிங்கங்கள் செய்யப்படுகின்றன. அவற்றை உருவாக்கும் முறைகளும் பலவாகும்.

## பல்வேறு லிங்கங்களுக்குரிய உலோகங்கள்

151. தாரகா லிங்க மாற மந்தான் தாமி லிங்கஞ்
சேரநன் மோதரு லிங்க முத்துவி ரும்புகோ மேதகந்
தரகரும் வயிர மீயம் நீலங்கா ரூடம் வெள்ளி
பேரதருங் கஞ்சஞ் செம்பு பித்தளை யின்னுஞ் சொல்வாம். (6)

பொழிப்புரை: மேற்கூறிய இலிங்கங்களுடன் தாரகா லிங்கத்தையும் சேர்த்துக் கொள்ள அவை ஒன்பது வகையாகும். இந்த லிங்கங்கள் அனைத்திலும் இறைவன் இரண்டறக் கலந்து நிற்க அந்த லிங்கங்களை முறையே முத்து, கோமேதகம், வயிரம், ஈயம், நீலமணி, வெள்ளி, வெண்கலம், செம்பு, பித்தளை ஆகிய ஒன்பது வகை உலோகங்களினால் செய்வது முறையாகிறது.

## லிங்கங்களின் நிறம் - தன்மை

152. பொன்னரி தார மஞ்சட் புகழுங்கற் பூரஞ் சந்தம்
நன்னிலஞ் செம்பு ளிச்சை நற்புன்னை மாம ரந்தான்
பின்னையு முளவி வற்றைப் பிறங்கொளி லிங்க மாக
உன்னிநின் றர்ச்சிப் போரை யுரைத்திட வுமையே கேளாய். (7)

பொழிப்புரை: பொன்னிறம், பழுப்பு நிறம், மஞ்சள் நிறம், கற்பூர நிறம் ஆகிய நான்கு வகை இலிங்கங்களைச் செய்வர். நன்செய் நிலத்தில் உள்ள செம்புளிச்சைச் செடி, நற்புன்னை மரம், மாமரம் இன்னும் பிற மரங்களும் லிங்கத்தின் தன்மை பெற்று ஒளி வீசும் லிங்கமாகக் கருதிப் பூசை செய்வோரும் உண்டு. அவர்களைப் பற்றி உரைத்திடுவேன் உமையே! கேட்பாயாக.

## லிங்கத்திற்குப் பூசை செய்வோர்

153. சித்தர்கள் யோகர் வேதஞ் செறிந்தவன் முதலாத் தேவர்
அத்தகு லிங்கந் தன்னு ளானதொன் றவற்கி சைந்த

வைத்துட னருச்சித் தார்கள் வாய்க்கும்பூ சாப லத்தை
நித்திய பரையே கேளாய் நிகழ்த்துவ முனக்கி யாமே. (8)

பொழிப்புரை: சித்தர்கள், முனிவர்கள் வேதம் செறிந்த தேவர்கள் ஆகியோர் மேற்கூறிய இலிங்கங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளனர். இத்தகு இலிங்கங்களை வைத்து வழிபடும் சித்தர்கள் வாய்க்கும் பூசையின் பலத்தை என்றும் அழியாத பரையே! கேட்பாயாக. உனக்கு நிகழ்த்துவன் யாமே.

## பூசை பலன்

## வேறு

154. பீடலிங்க பூசைநூ றாயி ரங்காற்
பிரியமுடன் பண்ணுபல நிகரொ ருக்கால்
நாடியதா பரலிங்க பூசை தானே
நவிலுமந்தத் தாபர லிங்கமி லட்சங்
கோடிசிவ பூசைபண்ணு பலநிகரா மொருக்கால்
கொண்டமா தைலிங்க பூசைக் கென்றே
நீடியமா தைலிங்க பூசைபலன் கோடி
நிகர்பயில்சீக் கிரலிங்க பூசை தானே. (9)

பொழிப்புரை: பீடலிங்கத்திற்கு விருப்பமுடனும், அன்புடனும் நூறாயிரம் முறை பூசை செய்வது தாபர லிங்கத்திற்கு ஒருமுறை செய்த பூசைக்கு ஒப்பாகும். தாபர லிங்கத்திற்கு இலட்சங்கோடி முறை சிவபூசை செய்வது மானதலிங்கத்திற்கு ஒருமுறை செய்த பூசைக்கு ஒப்பாகும். மானதலிங்கப் பூசையின் கோடிப் பலன்களுக்குச் சீக்கிர லிங்கப் பூசை நிகராகும்.

## நூறு கோடி தவம்

155. ஆதரவாற் சீக்கிரம லிங்க பூசை
யாயிரங்காற் பண்ணுபல விகரொ ருக்கால்
நீதியினா லாற்தமலிங் கத்தின் பூசை
நிறைபயிலாற் தமலிங்க பூசைப் பேறுக்
கோதவொண்ணா மற்றுமுள லிங்க பூசையுட்
யுட்பேறுபுத் திபய்க் கியம தாகுந்
தாதுலவு ரிரணலிங்க அபதே சந்தான்
சதகோடி புகுந்தவக பண்ணினவற் காமே (10)

பொழிப்புரை: சீக்கிரமலிங்க பூசை ஆயிரம் முறை செய்வது ஒருமுறை நீதியோடு தமலிங்க பூசை செய்வதற்கு ஒப்பாகும். முறையாக செய்துவரும் தமலிங்கப் பூசையில் கிடைக்கும் பலன்களில் குற்றம் ஏதும் பொருந்தாது. மற்றுமுள்ள குற்றமில்லா இலிங்க பூசையின் பலன் புத்திர பாக்கியமாகும். பிராணலிங்கத்தின் ஞானபோதனை நூறுகோடி தவம் செய்வதற்கு ஒப்பாக அமையும்.

## யுகங்களில் உபதேசங்கள்

156. பிராணலிங் காசியந்தான் பூறு வத்திற்
 பிரளயகா லங்கிரேத யுகத்திற் றானே
புராணமறை பயில்கயிலை முடிமே லன்று
 புவியளந்தோன் றனக்குபதே சித்தோம் பின்னைத்
தராதலமேற் றிரேதாயு கத்தில் மால்தான்
 சதுர்முகவன் றனக்குபதே சித்தார் நீரில்
வராவுமல ரவன்துவா பரயு கத்தில்
 வாயுதேவற்குபதே சித்தார கட்குப்பா ரன்றே. (11)

பொழிப்புரை: பூருவத்தில் பிராணலிங்கி சமநிலையாகும். கிரேதாயுகத்தில் அழிவு காலமாகும். அப்போது புராணங்களையும், வேதங்களையும் கயிலை மலையின் மேல் நின்று புவியளந்தோனாகிய திருமாலுக்கு உபதேசித்தோம். பின்னர் கீழ்ப்பகுதியில் ஏழு உலகங்களில் ஒன்றான பூமியின் மேல் நின்று திரேதா யுகத்தில் திருமால், நான்முகனாகிய பிரமனுக்கு உபதேசித்தார். நீரில் உள்ள மலருக்குரிய, மலரவனாகிய பிரமன், துவாபர யுகத்தில் வாயுதேவற்கு உபதேசித்தார். இந்தத் தன்மையெல்லாம் பெரிய இருடிகட்குப் உபதேசித்தார்.

## உபதேசங்கள் - பிராணலிங்கத்து ஒப்பு

157. வரமிகு வாயுதேவன் கலியு கத்தில்
 மகாவி ருடிகளுக்குப தேசித்
தார லாக்குந் தேவதைகள்
 பலருக்கு மிக்கா ரட்கட்கு
கரவிர்கெந் துறுவர் சித்தர் கின்னார்க்குங்
 கருடர்கள் மற்றுள பேர்க்குங் கருணையாலே
உரமுறவே யுபதேசித் திட்டார் மாதே
 உயர்ந்த பிராணலிங்கத்துக் கொன்றொப் பினன்றே, (12)

பொழிப்புரை: வரம்மிகுந்த வாயுதேவன் கலியுகத்தில் முனிவர்களுக்கு உபதேசித்தார். மேலும் உருவாக்கும் தேவதைகள்

பலருக்கும், பெரியோர்களுக்கும், அறிஞர்களுக்கும், களவு, பொய், வஞ்சகம் இல்லாத கந்தருவர்களுக்கும், சித்தர்களுக்கும், கருடர்களுக்கும், வகைவர்களுக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும் ஞானமுறவே உபதேசித்திட்டார். இது பிராணலிங்கத்துக்கு ஒப்பானதாகும்.

## பிராணலிங்கியின் பெருமை

158. இணையிலார் மூன்றுடையோர் பிராண லிங்க
மகிழ்ந்ததினா லிழந்ததிலை யிங்கா னார்
அணையுமரு ளுடையவரில் மூன்று பேர்க
ளாதரவாற் பிராணலிங்க மகத்துட் பேணித்
துணையெனவே கொண்டிருந்த படியால் நந்தந்
துய்யதிருக் கோயில்பயில் கணங்க ளானார்
பிணைக்கயல்வாள் நிகர்விழியாய் பிராண லிங்கப்
பெருமைதனக் கோரிலிங்க மிறுதி யின்றே. (13)

பொழிப்புரை: இணையில்லாத முக்கண்களையுடைய சிவபெருமானின் பிராணலிங்கத்தை இகழ்ந்தவர்கள், அவருடைய அருளையும், ஆடல்களையும் (கூத்து) காணமாட்டார்கள். சிவபெருமான், சங்கமகுரு, சங்கமர், இந்த மூவர்களின் ஆதரவினால் பிராண இலிங்கத்தை உள்ளத்தில் மதித்து, அதனைத் துணையெனவே கருதியதால் நம்முடைய தூய்மையான திருக்கோயில்களில் அமைந்திருக்கும் ஐம்பூதங்களாவார்கள். பெண்மான், கயல், வாள் இவற்றிற்கு ஒப்பான விழிகளைப் பெற்ற உமையே! பிராணலிங்கியின் பெருமைகளுக்கு முன்னால் வேறொரு இலிங்கத்தின் பெருமை அழிவுபடும்.

## அனைத்துத் தேவர்களும் சிவபெருமானே

159. அன்பனையும் பிராணலிங்க மியாதொருத்தர் தரித்தா
ரவர்தானே யீசுவரனென் றறையும் வேதங்
கொன்பயிலு நான்முகனு மவனே துய்ய
குணக்கடலா மாதவனு மவனே வானோர்
மன்சிறந்த இந்திரனு மவனே யாகும்
வான்பயிலுந் தேவர்களு மவனே தன்ம
முன்பயிலு முமையவளு மவனே யாகும்
மொழியுங்கா லவன்றனக்கோ ரொப்பொன் றின்றே. (14)

பொழிப்புரை: அன்பை ஒத்த பிராணலிங்கத்தைக் கொடுக்காது தரித்தவர் 'ஈசுவரன்' ஆவார். வேதங்களைப் பெருமையுடன் கூறிய நான்முகனாகிய பிரமனும் அவனே. தூய்மையான குணக்கடலாகிய மாதவனும் அவனே. சிறந்த இந்திரனும் அவனே. உமையவளும் அவனே. இவ்வாறு கூறும் வேளையில் சிவபெருமானுக்கு எதுவும் ஒப்பில்லை எனலாம்.

## உருத்திர மூர்த்தி - துரோகி

160. மறையவர்கள் மன்னவர்கள் வணிகர்சூத் திரர்கள்
மற்றுமதன் கீழ்ப்பட்ட சாதி யேனு
மிறையெனும் பிராண லிங்கந் தரித்த ராகி
லிவர்களுருத் திரமூர்த்தி யாகு முண்மை
அறைபயிலும் வேதியனே யானாலும் பூசை
அல்லாதான் சண்டாளன் றனக்கு நேராம்
பிறைநுதலே யந்தர சாதிகளா னாலும்
பிரானுடைமெய்ப் பத்தியுளோ னுத்தமநற் குலனே. (15)

பொழிப்புரை: பார்ப்பனர்கள், மன்னவர்கள், வணிகர்கள், நான்காம் வருணத்தோர்களான சூத்திரர்கள் இவற்றிற்கும் தாழ்ந்த சாதியைச் சார்ந்தவர்கள் ஆகிய எவரேனும் இறை என்ற பிராணலிங்கியைத் தரித்தவர்கள் உருத்திர மூர்த்தியாக (சிவனாக) மாறுவதும் உண்மை. வேதங்களைக் கூறிய பிரமனேயானாலும் பூசை இல்லாதான் துரோகிக்கு ஒப்பானவன். இளம் சந்திரன் போல நெற்றியினையுடைய உமையே! கீழான வேறு சாதிகள் சிவபெருமான் மீது உண்மையான பத்தியுள்ளவன் உத்தம உயர்ந்த நல்ல குலமாவான்.

## அற்புத பூசை

### வேறு

161. பதிதர சூத்திரர்கள் மாதர் பண்பிலா ரியாவ ரேனும்
அதிகமா மிலிங்க மங்கத் தாயினோர் குலத்துள் மிக்கார்
விதிதரும் விசேட பூசை விரதமாம் பூசை விட்டுப்
புதுமைசெய் திருத்தெப் போதும் பூசிக்கை பிராண லிங்கி (16)

பொழிப்புரை: கணவனாக உள்ள சூத்திரர்கள், பண்பில்லாத பெண்கள் எவரேனும் அங்கத்தில் இலிங்கத்தின் தன்மை அதிகமானோர், குலத்தில் உயர்ந்தவராவார்கள். செல்வம் தரக்கூடிய சிறப்பு வாய்ந்த விரதம் விட்டு அற்புதம் செய்து எப்போதும்

வழிபடுபவன் பிராணலிங்கி ஆகும். செல்வம் வேண்டி பூசை செய்தல் கூடாது என்பது கருத்தாகும்.

## தீட்டு இல்லை

162. முந்தவே லிங்க மங்கத் திருப்பவன் முன்பா சத்தில்
தந்தைதா யிலிங்க மன்றித் தானிருந் திருந்தா லோகர்
சிந்தை யாய்ச்செய் கடன்கள் செய்யொ ணாதே துடக்கு
மெந்தனாள் களிலு மில்லை யிலிங்கமாம் பிராணி கட்கே. (17)

பொழிப்புரை: முன்பே இலிங்கத்தை அங்கத்தில் கொண்டுள்ளவனின் தந்தை, தாயார் இலிங்கமின்றி இருந்தால், அவர்கள் இறந்தவுடன் அவர்களுக்குத் துக்கமாய்ச் செய்யக் கூடிய நித்திய கருமங்கள் ஒவ்வாததல்ல. அவ்வாறு செய்வதால் படும் தீட்டு எந்த நாள்களிலும் இலிங்கத்திற்கு இல்லை.

## சிவபெருமானின் செயல்

163. துக்கம்வந் துற்ற காலஞ் சுகம்பெறு வோடி சாந்தி
தக்கதாய்ச் செய்ய வொண்ணாத் தானமிழ்ந் திடவே வேண்டா
எக்கணா சுகதுக் கங்க ளிரண்டுவந் துற்ற காலை
அக்கணி செயல தென்றே யறிபவன் பிராண லிங்கி (18)

பொழிப்புரை: துன்பம் வந்துற்றபோது, அதற்குத் தக்க கழிவினைச் செய்வதன் மேலும் சுகம் பெறுவதற்கு வேண்டி நன்கொடை அறச்செயல்கள் முதலியனவற்றை மேற்கொள்ளுவதற்குச் செல்வத்தை இகழ்ந்திட வேண்டா. இன்பம், துன்பம் இவையிரண்டும் எப்போது வந்தாலும் அது சிவபெருமானின் செயல் என்றே அறிபவன் பிராண லிங்கி.

## நல்ல பூசை

164. தற்பர மிலிங்க மங்கத் தரிப்பவன் றனதங் கந்தான்
பொற்பமாஞ் சுற்ற மாகும் புகல்கெங்கை முதலா யுள்ள
மற்றவை தீர்த்த மாட லாகாது வாய்த்த லிங்கத்
துற்றநற் பூசை செய்தங் குவப்பவன் பிராண லிங்கி. (19)

பொழிப்புரை: சிவபெருமானின் இலிங்கத்தை அங்கத்தில் தரித்துள்ளவன் பரிசுத்தமானவனாவான். பொலிவு அவனின் உறவாகும். கங்கை முதலான புண்ணிய தீர்த்தங்களை ஆடல் ஆகாது. சிறந்த இலிங்கத்திற்கு உற்ற, நல்ல பூசை செய்து அங்கு மகிழ்பவன் பிராண லிங்கி.

## தீயில் தகனம் செய்தல் கூடாது

165. சங்கமா தேகம் விட்டாற் றழலினாற் றகன மாகா
மங்கவே தகனஞ் செய்தால் மாவில மதனில் மன்னன்
எங்கிலாத் துயர மெய்தி யிடுவனென் றாக மங்கள்
சங்கையாய்ச் சொல்லும் மாதே தானிதற் கைய்ய மன்றே. (20)

பொழிப்புரை: உயிர் நீங்கிய சங்கமரின் தேகத்தைத் தீயினால் எரித்தல் கூடாது. அவ்வாறு தீயில் தகனம் செய்தால் புவியில் எங்கும் இல்லாத பெருந்துன்பத்தை மன்னன் அடைவான் என்று ஆகமங்கள் கூறுகின்றன. மாதே! இதில் ஐயமில்லை.

## பெருமையால் உயிர் விடுதல்

166. அங்கமே லிருந்த லிங்க மகன்றுபோய் விட்ட தாகிற்
தங்கியிங் கிராம லெந்தை தனைபெப்பெறு மறிவி னாலே
பொங்கிய வன்பி னாற்சொற் புகழ்மா. தவர்கள் கரணத்
தங்கமாய்ப் பிராணன் றன்னைத் துணிவுடன் விடவே வேண்டு.

பொழிப்புரை: அங்கத்தில் தரித்திருந்த லிங்கம் அன்று காணாமல் போய்விட்டால், இங்கு இருப்பதற்கு விரும்பாமல் சிவபெருமானுடன் சேரும் அறிவினாலும், உயர்ந்த அன்பினாலும், முனிவர்கள் புகழும் வண்ணம் அவர்கள் காண பெருமையாய்த் துணிவுடன் உயிரை விடுதல் வேண்டும்.

## பரிசுத்தமான தெய்வநாயகன்

167. விடும்வகை சமாதி தன்னில் மேவவே குகைதான் செய்து
அடுகுகை வாசல் தன்னில் வனுப்புச் சொரிந்து கீதம்
வடுவிலா வாக்கி யங்கள் வகைவகை நிறுத்தங் கேந்தத்
தொடுபல புஷ்பந் தீபந் தூபங்கள் பலவுஞ் செய்து. (22)

பொழிப்புரை: அட்டயோகம் செய்து ஞான சமாதியில் சேர்வதற்குச் சமாதியறை செய்தும், அதன் வாயிலில் இசைப்பாட்டுக்களையும், குற்றமில்லா வாசகங்களையும் பல்வேறு விதமாக நிறுத்தி வாசிக்கவும், மலர்கள் வீச, தீப ஒளி ஏற்ற, நறும் புகை ஊட்டியும்,

168. சங்கமர் தமக்கு மிக்க தகும்பத்தர் தமக்குச் சொல்லித்
துங்கமாஞ் சதும டத்துத் தொன்மையாங் குருவின் சீடர்
அங்குள பெரியோர் மற்றுள் ளவர்களைத் திரளாய்க் கூட்டித்
தங்கையால் வேளை வைத்துச் சங்கமர் பூசை செய்து, (23)

பொழிப்புரை: சமாதியறைக்குச் செல்லும் சங்கமர், தமக்கு மிகவும் ஏற்ற பத்தர் சொல்லியும், பழமை வாய்ந்த நான்கு மடங்களில் குருவும் சீடர்களும் அங்குள்ள பெரியோர்களும் மற்றுமுள்ள அனைவர்களையும் திரளாய்க் கூட்டி, அந்த நேரத்தில் தன்கையால் சங்கமருக்குப் பூசை செய்தும்,

**169. அந்தநல் பெரியோர் கையி லன்பினால் விடைகொண் டேகிச்**
**சுந்திரத் துணிவு நேசத் தோடுபோய்க் குகையி ருந்து**
**சிந்தையால் விடுதல் பத்தித் திறத்தினை யுடைய துய்ய**
**நந்திலா முத்தி தெய்வ நாயகன் பிராண லிங்கி, (24)**

பொழிப்புரை: நல்ல பெரியோர் கைகளினாலும், அன்பினாலும் விடைபெற்று அழகுடனும், துணிவுடனும், அன்புடனும் சென்று சமாதியிருந்து தியானித்தல் மூலம் உயிர் விடுதலை மேற்கொள்ளும் அரிய பத்தித் திறத்தினை உடைய பத்தன் நம்முடைய முத்தியைப் பெறும் தெய்வ நாயகனே பிராணலிங்கி.

## தெரி பயனில்லை

**170. அரியநல் லிங்கந் தன்னை யறியாமற் கழற்றி வைத்து.**
**உரியதாய்ச் சமாதி வைத்தங் குறும்வகை செய்வா னானால்**
**தெரிபய னில்லை யென்று திவ்வியா கமங்கள் வேதங்**
**கருதிய புராண மெல்லாங் கட்டுரை செய்யு மன்றே. (25)**

பொழிப்புரை: பெருமைமிகு நல்ல லிங்கத்தை அறியாமல் கழற்றி வைத்துவிட்டு உரிய சமாதியை அடைதலினால் தோன்றும் பயன் ஒன்றுமில்லையென திவ்விய ஆகமங்கள், வேதங்கள், புராணங்கள் முதலியன உறுதியாகச் சொல்லுகின்றன.

## பாவத்திற்குச் செல்லல்

**171. குகையில்வைத் திடாம லேதான் கோலியே தகனம் பண்ணில்**
**நகையிலாக் கோடி கோயில் நண்ணிய லிங்கந் தன்னைப்**
**பகையினா லீறு பண்ணும் பாவத்திற் போவா னென்றே**
**திகழ்வினா லாக மங்கள் செப்புமம் பிகையே யுண்மை. (26)**

பொழிப்புரை: உயிர்விடும்போது சமாதியில் குகை வைத்திடாமல் தீயினால் அடக்கம் செய்தால் கோடி கோயில்களில் பொருந்திய இதழ்வில்லை லிங்கங்கள், பகையினால் மரணம் செய்யும் பாவத்திற்குச் செல்வான் என்று ஆகமங்கள் உரைக்கின்றன. அம்பிகையே! இது உண்மை.

## பிராணலிங்கியின் விதி

172. கள்ளரால் வியாதி தன்னால் கருதிய குரோதத் தானும்
விள்ளொணாச் செலத்தி னாலும் விடங்கள்மற் றுள்ள தாலும்
வள்ளலாம் பிரான லிங்கி மரணம்வந் துற்றா லங்கு
மெள்ளவே குகையில் வைத்து விடுவது விதிய தாமே (27)

பொழிப்புரை: களவு செய்வோராலும், நோய்களாலும், கோபம் மற்றும் உட்பகையினாலும், நீரினாலும் நஞ்சு முதலியனவற்றாலும், வள்ளல் தன்மை வாய்ந்த பிராணலிங்கிக்கு மரணம் வந்தபோது சடலத்தை மெதுவாகவே குகையில் வைத்து விடுவது பிராண லிங்கத்தின் விதியாகும்.

## மயேசுர பூசை விரும்புதல்

173. வைத்தபின் குகையின் மேலே மண்டபஞ் சிவாலை யங்கள்
ஊய்த்தலிங் கந்தா பித்து உயர்திரு விளக்கு மேத்தி
கைத்தல மதனால் பூசை கருதியெக் காலஞ் செய்து
மெய்த்தவ மயேசர் பூசை மேவுதல் விதிய தன்றே. (28)

பொழிப்புரை: குகையில் வைத்தபின்னர் சமாதியிலிருக்கும் சடலத்ைச் சுற்றி மண்டபமும், சிவாலயங்களும் அமைத்து அதனுள் இலிங்கத்தை நிலைத்து இருக்குமாறு அமைத்து, உயர்ந்த தெய்வத்தன்மை வாய்நத விளக்கும் ஏற்றிக் கைகளினால் பூசையை எக்காலமும் செய்து, உண்மையான தவமுடைய மயேசுர பூசையை விரும்புதல் பிராணலிங்கியின் விதியாகும்.

(பிராணலிங்கி விதி முற்றும்)

(ஆக விதி ஆறுக்கும் செய்யுள் - 98)

திருச்சிற்றம்பலம்.

## பாதங்களைப் பற்றுதல்

174. தருமமுத் திரைக ளைந்துந் தற்பர. மாகு மந்தப்
பொருவில்மெய் யிலிங்க மங்கம் பொருந்தினர் தமையும் ஞானம்
பெருமயா தமையுங் கண்டாற் பின்னிலா தெதிர்கொண் டேகிப்
பரிவுடன் வணங்கிப் பாதம் பற்றுதல் சரணன் றானே. (1)

பொழிப்புரை: நல்லொழுக்கம், நீதி, அறம், கடமை தவறாமை முதலான நற்குணங்களில் தவறாது செயல்புரியும் அடையாளங்கள்

ஐந்தாகும். அவை பத்தன், மகேசுரன், பிரசாதி, பிராணலிங்கி, சரணன் என்பனவாகும். இத்தகைய அடையாளங்கள் பொருந்தியவர்கள் மேம்பட்ட பரம்பொருளான சிவனுமாவர். குற்றமில்லாத உடலில், இலிங்கம் அங்கமாகக் கலந்தவர்களுக்கு ஞானம் அமையும். இத்தகைய மாட்சிமையுடையோரைக் காணும்போது சிறிதும் தயங்காமல், முன்னால் சென்று அன்பான பத்தியுடன் வணங்கி அவர் பாதங்களைப் பற்றுபவன் சரணன் ஆவான்.

## இலிங்கத்தின் பெருமை

175. துன்மார்க்க முடைய ரேனுந் துகளிலா சரண ரேனும்
பன்மார்க்க மகன்ற ஞானப் பராயண ரேனும் பான்மை
நன்மார்க்க மில்லா மூர்க்கராயினு நாடு மங்கச்
சன்மார்க்க லிங்கங் கண்டால் சரணஞ்செய் சரண னாமே. (2)

பொழிப்புரை: தீயநெறியுடையோர்களாயினும், குற்றமில்லா சரணர்களாயினும் பல சமயங்களைத் துறந்து வீர சைவம் என்னும் சைவ சமயத்தின் நெறி ஒன்றையே பற்றித் தெளிவு பெற்ற மதானுசாரியர்களாயினும், நன்னெறியில்லாத கீழ் மக்களாயினும், நல்லொழுக்கம், நன்னெறி, ஞான மார்க்கம் இவற்றினை அருளும் இலிங்கத்தை அணிந்திருந்தால் அவர்களின் பாதம் பற்றி வணங்குபவன் சரணன் ஆவான்.

## சிவத்துரோகி

176. மற்போல மறையோர் மன்னர் வணிகர்சூத் திரர்சண் டாளர்
அற்பல குலத்தோ ரேனு மவர்கள்சங் கமரே யானால்
அற்பராய்ச் சாதி பேத மவரவர் பண்ண லாகாச்
சிற்குல பேதம் பண்ணு மிவர்சிவத் துரோகர் மாதே. (3)

பொழிப்புரை: மாதே! பார்ப்பனர், மன்னர்கள், வணிகர்கள், நான்காம் வருணத்தார்களான சூத்திரர்கள், இழிவான கொலைத் தொழில் புரியும் சண்டாளர்கள் முதலிய பல இனத்தவர்களானாலும் சங்கமராகிவிட்டால் அவர்களின் பழைய கீழான தன்மையினைக் கருதி சாதி வேற்றுமை செய்யலாகாது. அவ்வாறு செய்பவர் சிவத்துரோகி ஆவார்.

## தருமம் செய்வோருக்குச் சமமாவார்

177. அங்கமே லிங்க மாகி யானபேர் சாதி பேதந்
தங்கிடா தேகிச் சுத்த சங்கமர் தேவ ராவர்

**அங்கதாக் குவமை யாவர் தவசினார் பாவ நீங்கித்**
**துங்கநற் பேற தாகிச் சுகத்தினுய்ப் பவர்நே ராமே. (4)**

**பொழிப்புரை:** அங்கமே இலிங்கமயமான தன்மை பெற்றோர், சாதி வேற்றுமை கருதாத சங்கமர்கள் தேவர்கள் ஆவார்கள். இவர்கள், தவத்தோராகிப் பாவம் நீங்கப் பெற்றும், உயர்வு தரக்கூடிய பெரும்பேறு பெற்றும் தரும காரியங்கள் பல செய்தும் இன்பத்தை நுகர்வோருக்குச் சமமாவர்.

## சிவபெருமானின் இனம்

**178. எங்குள வவற்று நீர்கள் யாவையும் விரைந்து கெங்கை**
**தங்கியே பெருகித் தீர்த்தந் தானான வாறு போல**
**அங்கமே வியான்பேர சுத்த ராகி சங்கம ரானால்**
**சங்கரன் குலமே யென்று சாற்றுமா மறைகள் மாதே. (5)**

**பொழிப்புரை:** எங்கெங்கேயோ உள்ள ஏரியிலிருந்து மிகுந்து வரும் தண்ணீர் விரைவாக ஓடி கங்கையாற்றில் கலந்து புண்ணிய தீர்த்தமாக மாறுவது போல் உடலாக உருவெடுத்த அனைவரும் குற்றமற்றவராகி சங்கமத்தில் சேர்ந்து சங்கமரானால் அவர்கள் சிவபெருமானின் கனம் என்று பெருமை மிகு வேதங்கள் கூறுகின்றன.

## எதிர் சென்று வணங்குதல்

**179. சாதியுங் குலமும் வித்தை சதாசார மிவைகள் பார்க்க**
**வேதினம் வேண்டா மங்கத் திலிங்கநீ ருருத்தி ராக்கம்**
**போதவே சடையில் வேட்டி புனைபவர்க் கண்டால் மாதே**
**காதலா லெதிர்கொண் டேகிக் கருத்துற வணங்கு வாயே.(6)**

**பொழிப்புரை:** இனம், குலம், கல்வி, சாதுக்களால் ஆசாரிக்கப்பட்ட நல்லொழுக்கம் இவற்றினால் வேற்றுமை பார்க்க வேண்டாம். உடலில் இலிங்கம் தரித்தும், திருநீறு பூசியும், சிவசின்னமாக உருத்திராக்கம் அளித்தும், ஞான அறிவோடும், சடையும் வேட்டியும் உள்ளவர்களைக் காண நேரிட்டால், அன்பால் எதிர் சென்று விருப்புடனும், விவேகத்துடனும் வணங்குதல் வேண்டும்.

## அங்கத்தின் நிலை

**180. இப்படி நமஸ்க ரிப்ப தேனெவி லுமையே கேளித்**
**தப்பிலா லிங்க மங்கந் தரித்திருப் பதனால் நாமஞ்**
**செப்பிலக் குளிகை மேவுந் திகழ்பஞ்ச லோகந் தானே**
**அப்படிப் பொன்ன தாச்சங் கப்படிப் பெற்ற தன்றே. (7)**

பொழிப்புரை: மேற்கூறியவாறு வீரசைவப் பெரியோர்களைச் சரணன் வணங்குவது ஏன்? என்று உமையே கேட்பாயானால், அதைக் கேட்பாயாக! குற்றமில்லா இலிங்கத்தை அங்கத்தில் தரிப்பதினால் நமக்கு இணக்கமாகிறான். இரும்பு, ஈயம், செம்பு, பொன், வெள்ளி முதலிய உலோகங்களினால் செய்து தரித்துள்ள இலிங்கம் மந்திர சக்தியுள்ள மாத்திரையைப் பெறும். இதனால் அங்கம் பிரகாசிக்கும் பொலிவு மிக்கதாக இருக்கும்.

## மகிழ்வோடு பூசை செய்பவன்

181. சத்தெனுஞ் சரண னானோன் தான்சதி சிவலிங் கந்தான்
நித்திய பதியாய்க் கொள்ளல் நிறைகுருச் சேர்வை பண்ணல்
பத்தர்கட் கன்பு சொல்லல் பரிவினாற் சங்க மற்குச்
சித்தமாய் மகிழ்ந்து பூசை செய்யுநற் சரணர் தாமே. (8)

பொழிப்புரை: நல்லொழுக்கத்திற் சிறந்து சரணனானோன், தான் சதியாகவும் சிவலிங்கத்தை எப்போதும் தன்னுடைய பதியாகவும் கருதுதல் வேண்டும். மாட்சிமை பொருந்திய சங்கம குருவிற்குச் சேவை செய்தும், பத்தர்களுக்குப் பத்தியினை விளக்கியும், அன்போடு சங்கமத்திற்கு எப்போதும் மகிழ்வோடு பூசை செய்பவன் சரணன் ஆவான்.

## சரணன் பெருமை

182. காமக் குரோதம் விட்டுக் கருத்தினாற் பிச்சை கொண்டு
ஏமமார் பொல்லார் நல்லா ரிவைசம னாகக் கொண்டு
நாமமார் பயனில் வார்த்தை நவிலுதல் விட்டுப் பொல்லா
தாமவத் தானம் வாங்கல் தவிருதல் சரண னாமே (9)

பொழிப்புரை: ஆசை, சினம் இவற்றை நீக்கி விருப்பத்துடன் பிச்சை எடுத்து உண்ட இன்பமுடையார், நற்குணமுடையோர் இவர்களைச் சமமாகத் தீயோர் பாவித்து மாயமாலங்கள் பற்றிக் கூறும் பயனில்லா வார்த்தைகளை விட்டு விட்டுத், தீமைதரும் செயலான நன்கொடை வாங்குதலைத் தவிர்த்தும் ஒழுகுபவன் சரணன் ஆவான்.

## இலிங்கத்தின் பெருமை

183. அலங்கார மில்லா ரேனு மிவ்புத்தி யுடைய ரேனும்
நலங்கான வறியா ரேனு நற்சாந்த மில்லா ரேனு
மிலங்காரு மிலிங்க மங்கத் திருக்கவே கண்டாற் றூய்ய
பலங்கான வணங்கிப் போற்றிப் பரிவுறுஞ் சரணன் றானே (10)

பொழிப்புரை: அழகு இல்லாதவராய் இருப்பினும், தீமை தரும் புத்தியுடையவராக இருப்பினும், இன்பம் காண இயலா தரித்திரம் உடையாரேனும், பொறுமை, அமைதி, இரக்கம் முதலிய நற்குணமில்லாதவராயினும், உடலில் ஒளி வீசக்கூடிய இலிங்கம் இருக்கவே கண்டால் அவற்றைப் பணிந்து வணங்கி துதிப்பவன் சரணன் ஆவான்.

## நன்மை - தீமை இவற்றைச் சமமாகக் கொள்ளல்

184. துற்சன ரிணக்கம் விட்டுத் தூயதவத் தினர்பால் மேவி
நற்குரு சேர்வை பண்ணி நாடுதீர்த் தங்கட் கேகா
நிற்பதும் வசன முண்மை நிகழ்வது நன்மை தின்மை
சற்றவை பேதமின்றிச் சமன்பயில் சரண னாமே. (11)

பொழிப்புரை: தீயோர்களுடன் சேர்ந்திராமல், தூய்மையான நல்லொழுக்கமுடைய தவத்தினருடன் சேர்ந்து, நற்குருவிற்குச் சேவை செய்து, கங்கை முதலான புண்ணிய நீர்த்துறைகளுக்குச் செல்லாமல், வீடு பெறுவதையும், ஊழ்வினைப் பெறுவதையும், நலமும், கேடும் உறுவதையும் சிறிதும் வேறுபாடு இன்றிச் சமமாகக் கொள்பவன் சரணன் ஆவான்.

## சிவபெருமானின் செயல்

185. செல்வமும் வறுமை தானுஞ் செனனமும் மரண மெல்லாம்
அல்லணி கண்ட னெந்தை யருட் செய லெனவ றிந்து
நல்லபா றயிர்தஞ் சோறு கஞ்சிகூழ் காடி நாடில்
மல்கவே சமனாய்க் கொள்வோன் மதிக்கில்நஞ் சரணன் மாதே

பொழிப்புரை: செல்வம், வறுமை, பிறப்பு, மரணம் ஆகிய அனைத்தையும் எம் தந்தையாகிய சிவபெருமானின் செயலென அறிந்து, சுவை மிகுந்த பால், தயிர், சோறு, புளித்த கஞ்சி, கூழ் இவற்றைச் சமமாகக் கொண்டு மதிப்பவன் நம் சரணன் ஆனான்.

## சிவத்தியானம் செய்பவன்

186. கந்தைநற் புடவை நீறு கருதுசொற் பரிம ளங்கள்
இந்தவை யனேக முள்ள திவைசம னாகக் கொண்டு
வந்திடுங் கோப மாற்றி மனத்தினிற் பற்று விட்டு
அந்தமில் சிவத்தி யான வானந்தச் சரணன் றானே (13)

பொழிப்புரை: கந்தையான ஆடை, நல்ல ஆடை, திருநீறு, மகிழ்ச்சியினால் வரும் சுகபோகம் போன்ற அனைத்தையும் சமமாகக்

கருதியும், கோபங்களை நீக்கி மனத்தில் அனைத்துப் பற்றுக்களையும் அறவே துறந்து, முடிவில்லா சிவத்தியானம் செய்பவன் சரணன் ஆவான்.

## உத்தமன்

187. தோத்தி ரங்களை மறந்து குலவிய மாதர் போகந்
தீத்தயில் கஞ்சா விட்டுச் சிறப்புடை சரண னானோன்
மாத்திரை கந்தை நீறு மருவுருத் திராக்கந் தெண்டு
பாத்திர மிவைகள் மேவும் பரிந்தவுத் தமன்றா னென்றே. (14)

பொழிப்புரை: இறைவனை வழிபடும் வழிபாட்டுப் பாடல்களை மறந்து, பெண்களோடு இன்பம் துய்த்து உலவி, தீமை பயக்கக்கூடிய கஞ்சா முதலானவற்றை நுகர்தலைத் தவிர்ப்பவன் சரணனாகி, மந்திர சக்தி மிக்க குளிகை, கந்தையாடை, விபூதி, உருத்திராக்கம், கோல், பிச்சைப்பாத்திரம் முதலானவற்றை ஏற்றுக் கொண்டிருப்பவன் உத்தமன் ஆவான்.

## சங்கமரே சிவன்

188. அன்னிய மருந்து கொள்ள லாகாது மறுதெய வத்தை
உன்னிட லாகா நந்த முயர்ந்தசங் கமரைக் கண்டு
மன்னியே பரசித் தேத்தி மகதேவ ரிவர்தா மென்று
நன்னிலை யதனாற் போற்றி நாடுநற் சரணன் றானே (15)

பொழிப்புரை: வேறு தெய்வத்திற்குரிய தியானத்திற்குரிய அமுதத்தையும் உண்பதாகாது. அப்பொருளை அந்தத் தெய்வத்திற்கும் படைத்தலாகாது. இவை போன்ற உயர்ந்த குணங்களுடைய நம்முடைய சங்கமரைக் கண்டவுடன் கைகளைக் கூப்பித் தொழுது இவர்தான் சிவனெனக் கருதி நல்லொழுக்கத்தால் வணங்குபவன் நல்ல சரணன் ஆவான்.

## மருந்து

189. அதிகமாய் வியாதி வந்து மடுக்கினுஞ் சரண னானோன்
மதியினா லுகந்து தெய்வ மந்திரங் குருதி யானம்
பதிபெறு முத்தி ராக்கம் பரமநற் திருவெண் ணீறு
கதிதரு மருந்தென் றுன்னிக் காண்பது கருத்தா மென்றே, (16)

பொழிப்புரை: ஒன்றன்மேல் ஒன்றாகப் பல நோய்கள் வந்தாலும், சரணனாகி அறிவினால் மகிழ்ந்து, தெய்வ மந்திரங்களை ஓதுதல், சங்கம

குருவினையே நினைத்துத் தியானம் செய்தல், திவ்விய நிலையையுடைய திருவெண்ணீறு பூசுதல், இவை நோய்களைப் போக்கி அடைக்கலம் அளிக்கும் மருந்தாகும். இதனைத் தியானித்துக் காண்பது கருத்தாகும்.

## சரணனுக்கு நிகர் எவரும் இல்லை

190. கரத்தல லிங்கம் பஞ்சாக் கரந்திகழ் திருவெண் ணீறு
வரத்துறு மிவைகள் மூன்று மணிமந்திர உருத மென்று
உரத்தினாற் கொள்வோ னல்ல வுத்தம சரணன் மாதே
திரத்தினா லிவற்கொப் பொன்று செகத்தினிற் காணா தென்றே(17)

பொழிப்புரை: ஒளி வீசக் கூடிய லிங்கம், திருவெண்ணீறு, ந ம சி வா ய என்ற பஞ்சாக்கரம், உருத்திராக்கம், இறைவனின் மந்திரம், இவையனைத்தையும் உத்தமம் என்று கருதிச் சித்தி எய்துவதில் உறுதியாக இருக்கும் சரணனுக்கு நிகராக உலகில் வேறொருவரைக் காண இயலாது.

(சரணன் விதி முற்றும்)

(ஆக விதி ஏழுக்கும் செய்யுள் 115)

திருச்சிற்றம்பலம் - குருலிங்க சங்கமர் பாதந்துணை.

# அயிக்கியன் விதி

## மகாலிங்கத்தோடு ஒன்றிக் கலத்தல்

191. அக்கினி சேர்ந்த தண்ணீ ரனலுறும் வாறு போல
மிக்கமா லிங்கத் தோடு மேவிடு மயிக்கி யன்தான்
தக்கதோர் பிறிவோ னன்றித் தான்கலந் தொன்றாய்த்துய்ய
செக்கன் லிங்கஞ் சீவன் சீவனே லிங்க மாகி. (1)

பொழிப்புரை: அனலில் வேகும் தண்ணீர் வெம்மை ஆவது போல் பெருமை மிகுந்த மகாலிங்கத்தில் சேர்ந்திடும் அயிக்கியன் அதிலிருந்து பிரியாமல், அதனுள் ஒன்றாய்க் கலந்து இலிங்கமாகி,

192. மலவிய லதனை நீங்கி மகாலிங்கத் துட்க லந்து
நிலவியத் துவித மாகி நிற்குமந் நிலைபூத் தண்ணீர்
குலவிய சந்தந் தேகங் கொள்மணந் தய வாசாம்
மூலவிடு முயிரும் போல வுறுமயிக் கியன்பே றாமே. (2)

பொழிப்புரை: ஆணவம், மாயை, கன்மம் முதலிய மூலங்களினால் வரும் குணங்களை நீக்கி மகாலிங்கத்திற்குள் கலந்து நிலைபெற்றுச் சிவமும் ஆன்மாவும் வேறுபடாமல் ஒன்றுபட்டு நிற்கும் நிலை, தண்ணீரில் மலர்ந்துள்ள மலரும் அதன் அழகும் வாசனையும் ஒன்றோடு ஒன்று இணைந்திருப்பது போல், உடலும் உடலில் உலவிடும் உயிரும்போல மகாலிங்கத்தோடு ஒன்றியிருப்பது அயிக்கியன் பெருமையாகும்.

## முத்தி பெறுவது உறுதி

193. அரியமா லிங்கத் தோடு வயிக்கிய னயிக்கி யன்தான்
உரியகண் ணுருவுங் காதா லுறுசத்த மதுவு மூக்கின்
மருவிய மணமு நாக்கி னிவருமிர தந்தான் போலும்
பிரிவிலத் துவித மாகிப் பெறுகதி யுறுதி யென்றே. (3)

பொழிப்புரை: கண்களும் உருவமும், செவியும் ஓசையும், மூக்கும் மணமும், நாக்கும் சுவையும் இணைந்திருப்பதுபோல் அருமை நிறைந்த மகாலிங்கத்தோடு கலந்த அயிக்கியன் என்றும் பிரியாமல் சிவமும் ஆன்மாவும் ஒன்றிய நிலை எய்திய அயிக்கியன் முத்தியைப் பெறுவது உறுதியாகும்.

## அகலாத இயல்பு

194. ஆகாசஞ் சாராச ரங்க ளனைத் தையுந் தனக்கு ளாக்கி
வாகார நிற்கு மாபோல் மகாலிங்க நிறைவு கண்டு
தாகாரு மன்பி னாலே தானதற் குட்க லந்து
வேகாரு நிலைமை பெற்றங் கிருப்பவ னயிக்கி யன்றான். (4)

பொழிப்புரை: ஆகாயம் முதலான அனைத்துப் பிரபஞ்சங்களையும் தனக்குள்ளே உருவாக்கி இறைவன் நிற்பது போல், மகாலிங்கத்தின் மாட்சியைக் கண்டு அகலாத அன்பில் யார் அதற்குள் கலந்து அதிலிருந்து அகலாத இயல்பு பெற்று அங்கிருப்பவன் அயிக்கியன்.

## அன்பால் அறிபவன்

195. வாக்கினால் வழுத்தான் துய்ய மனத்தினால் நினையான் செய்ய
வாக்கையாற் றொழில்கள் செய்யா னன்னிய தெய்வங் கண்டால்
நீக்கமில் குருவி லிங்க சங்கம நிலைமை யொன்றென்
றேக்கிடு மன்பாற் கண்டு தெளிபவ னயிக்கி யன்றான். (5)

பொழிப்புரை: சொற்களாலும் கூட பிற தெய்வங்களைப் பற்றிப் பேசமாட்டான். தூய்மையான மனத்தினால் நினைக்கவும் மாட்டான். அந்தத் தெய்வங்களுக்குத் தனது கைகளால் எந்தத் தொழில்களையும் செய்ய மாட்டான். ஒருவேளை பிற தெய்வங்களைக் கண்டாலும் அதனையும் பிரிவில்லா குருலிங்க சங்கம நிலைமை என்றே பெருமைமிகு அன்பால் கண்டு அறிபவன் அயிக்கியன்.

## அறிவினால் சிந்திப்பவன்

196. சத்தேனு மிலிங்க சங்கத் தயிக்கியத் தலனே யென்போன்
சித்தனொந் திடவந் தாலுந் திகைப்பிலாச் சுகம்வந் தாலும்
அத்தகு வேளை தன்னி லன்பினாற் குருவி லிங்க
வுத்தம சங்க மத்தை வுணர்வினாற் றியானிப் பானே. (6)

பொழிப்புரை: மனத்திற்குத் துன்பம் வந்தாலும், சுகம் வந்தாலும் அந்த நேரங்களில் குருலிங்க சங்கமத்தை அறிவினால் சிந்திப்பவனும் ஒழுக்கத்தில் சிறந்த இலிங்கம் பொருந்திய அயிக்கியன் என்பவனாவான்.

## அச்சமின்றி இருப்பவன்

197. பிச்சை யன்னம் பிறிதொன் றிலாசையாற்
றிச்சை யாக விருக்கை யுலோபமில்
விச்சி லாரும் விருப்பு வெறுப்புவிட்டு
அச்ச மின்றி யிருப்ப னயிக்கியன். (7)

பொழிப்புரை: எதன் மீதும் விருப்பமில்லாமல் பிச்சை எடுப்பதால் கிடைக்கும் அன்னத்தை விரும்பியும், ஆசனத்தில் இருப்பதையே விரும்பியும், எதன் மீதும் கடும் பற்றின்றி விருப்பும் வெறுப்பும் விட்டு அச்சமின்றி இருப்பவன் அயிக்கியன் ஆவான்.

## இலிங்கத்தைக் கண்டவுடன் வணங்குதல்

198. குலத்த ரேனுங் குலமிலா ராயினும்
நலத்த வாசார நன்கிலா ராயினும்
மலத்தை நீக்குமி லிங்கமங் கத்துறிற்
பலத்தை நோக்காப் பணிவ னயிக்கியன். (8)

பொழிப்புரை: உயர்ந்த குலத்தவராயினும், இல்லாதவராயினும், நலம்பயக்கும் நல்லொழுக்கமில்லாதவராயினும் ஆணவம் மாயை, கன்மம் முதலான மலங்களை நீக்கும் இலிங்கம் அவர் அங்கத்தில் இருப்பதைக் கண்டால் எவ்வித பயனையும் கருதாமல் வணங்குபவன் அயிக்கியன் ஆவான்.

## அயிக்கியன், அயிக்கியனல்லாதான் தன்மை

199. நாடு முத்தம தல்ல வயிக்கியன்
நாடு தீர்த்த மயற்பதி சென்றிடான்
நீடு பூசை நிலைபெறு செய்தருள்
கூடு வானெனக் கூறு மறைகளே. (9)

பொழிப்புரை: புண்ணிய நீர்த்துறைகள் சென்று நீராடுபவனும், வேறு தெய்வங்களின் கோயில்களுக்குச் செல்பவன் மேன்மையுடைய அயிக்கியனல்லன். மாறாக குருலிங்க சங்கமத்திற்கு நெடுநேரம் பூசையைச் சலியாது செய்து அருள் எய்துபவன் அயிக்கியன் என வேதங்கள் கூறுகின்றன.

## இறைவனின் கிருபை

200. வாக்கு தொடம வச்னியா னியாரையுந்
தீக்கொள் பாவச் சினத்தை யகற்றுவன்
தாக்கு துன்பந் தருமின்பம் வந்திடி
லாக்கு நல்லரு ளென்ப னயிக்கியன். (10)

பொழிப்புரை: சொற்களால் கூட தீமைகளையோ, கேடுகளையோ யாவருக்கும் செய்யாதவனும், தீமை தரக் கூடிய பாவமாகிய கோபத்தை அகற்றுபவனும், வருத்தப்படக்கூடிய துன்பம் வந்தாலும், மகிழக் கூடிய இன்பம் வந்தாலும் இறைவனின் கிருபை என்பவன் அயிக்கியனாவான்.

## சிவபெருமானை எப்போதும் நினைத்தல்

201. உத்த மத்தல வுண்மை யயிக்கியன்
சித்த மாய்ப்பாரன னங்கள் தீண்டிடான்
பெத்த நீக்கிப் பிறையணி வோனடி
நித்த மாக நினைவது திண்ணமே (11)

பொழிப்புரை: எவற்றுள்ளும் சிறந்த மேன்மை பொருந்திய அயிக்கியன் என்போன் பிறர் கொடுக்கும் போசனங்களை கூடத் தொடமாட்டான். பந்தம் நீக்கி, பிறையை அணிந்துள்ள சிவபெருமானை எப்போதும் நினைப்பது சத்தியமே.

## சுவர்க்கம் பெறுபவன்

202. ஞான வீர நல்வயி ராக்கிய
மான தீரன் மயக்கம் தோன்றுறான்

**ஆன காய மொழிந்தருள் கூடிடு**
**மான செல்வ வயிக்கிய னாகுமே,** (12)

**பொழிப்புரை:** ஞான அறிவாலும், நல்லொழுக்கத்தாலும் நல்ல உறுதி படைத்த திடமான மனமுள்ளவன் எதிலும் மயக்கம் அடையாதவன் கோபம் ஒழிந்து அருள் கூடி சுவர்க்கம் பெறுபவன் அயிக்கியனாவான்.

## சதாசிவர் இறைவிக்கு உரைத்த சடத்தலம்

**203. இந்த நல்ல சடத்தலத் திவ்விதி**
**அந்த மின்றிவீ ராகம ராகிய**
**எந்தை யாரெனை யாளும் சதாசிவர்**
**சிந்தை யாயிறை விக்குரை செய்ததே.** (13)

**பொழிப்புரை:** இதுகாறும் கூறிய சடத்தல விதிகள் அனைத்தும் மரணமில்லா வீராகமராகிய எம் தந்தையாகிய என்னையாளும் சதாசிவர் அறிவினால் இறைவிக்கு உரைத்தன ஆகும்.

(அயிக்கியன் விதி முற்றும்)

(ஆக விதி எட்டுக்குஞ் செய்யுள் 128)

**இரேவண சித்தய வீராகம சடத்தலம் முற்றும்.**

# துணைநூற் பட்டியல்


1. அகநானூறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1970
2. கலித்தொகை, கழகம், சென்னை, 1970
3. சித்தாந்த சிகாமணி, பொம்மைய பாளையம் பெரியமடம், சிவஞான பாலய சுவாமிகள் தர்மகர்த்துவ வெளியீடு, 1944
4. சிவஞானதீபம், பதிப்பாசிரியர் திரு. அடிகளாசிரியர், தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு, 1970
5. சிறுபாணாற்றுப்படை, கழகம், சென்னை, 1970
6. சுவடிஇயல், பூ.சுப்பிரமணியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டிசம்பர், 1991
7. சைவ சித்தாந்த ஞானபோதம், கழகப் பதிப்பு
8. சைவ தத்துவம், மொழிபெயர்ப்பு ஸ்ரீவச்சார்யா ஜீவதோயம் பிரஸ், சென்னை, 1990
9. தமிழ் இலக்கிய வரலாறு, (16ஆம் நூற்றாண்டு), மு.அருணாசலம், காந்தி வித்தியாலயம், மாயூரம், தஞ்சை, 1975
10. திருமந்திரம், திருமூலர், திருப்பனந்தாள் மடத்து வெளியீடு, 1956
11. திருமுருகாற்றுப்படை, பத்துப்பாட்டு உ.வே.சாமிநாதஐயர் பதிப்பு, சென்னை, 1974
12. திருவாசகம், மாணிக்கவாசகர், கழகம், சென்னை.
13. தொல்காப்பியம், கழக வெளியீடு, இரண்டாம் பதிப்பு, 1954
14. பரிபாடல், கழகம், சென்னை, 1970
15. பிரபுலிங்க லீலை, சிவப்பிரகாச சுவாமிகள், பொம்மையபாளையம் பெரியமடம், சிவஞானபாலய சுவாமிகள் தர்மகர்த்துவ வெளியீடு, 1944

16. புறநானூறு, உ.வே.சாமிநாதஐயர் பதிப்பு

17. பெரியபுராணம், திருப்பனந்தாள் மடத்து வெளியீடு, 1964

18. மதுரைக்காஞ்சி, பத்துப்பாட்டு உ.வே.சாமிநாதஐயர் பதிப்பு, சென்னை, 1974

19. மலைபடுகடாம், பத்துப்பாட்டு உ.வே.சாமிநாதஐயர், சென்னை, 1974

20. வீரசைவம், வை. இரத்தினசபாபதி, சென்னைப் பல்கலைக் கழகம், இரண்டாம் பதிப்பு, 1990

## அகராதிகள்

1. அபிதான சிந்தாமணி, ஏசியன் ஏடுகேஷனல் சர்வீஸ், புதுதில்லி 110 016, மறுபதிப்பு, 1981

2. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி.4, தமிழ்ப் பல்கலைக் கழகம், 1991

## செவிவழி

1. 'தாய்லாந்தில் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள்', சொற்பொழிவு, எஸ். நாகராஜன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 22.2.93

## ஆங்கில நூல்கள்


1. Analysis of Scripture History
2. Dravidian India, R. Seshs Iyengar
3. Faith of man
4. History of chronology of the myth, Mabing Age, J.R. Hewitt
5. Mohenjodaro and the Indus civilization (vol.1), Sir Marshall
6. Primitive Culture, Part.2 E.B. Tylor
7. The Hittite Empire, J. Farstang
8. The Indigenous Religion of Japan, A.C. Underwood
9. The Stone Age in India, P.T. Srinivasa Iyengar


★ ★ ★

# இணைப்பு - 1

## பாடல் முதற்குறிப்பு அகராதி


| | |
|---|---|
| அக்கினி சேர்ந்த | 191 |
| அங்கமிசை | 56 |
| அங்குலியிற் | 67 |
| அங்கமே லிங்க | 177 |
| அங்கமே லிருந்த | 166 |
| அதிகமாய் | 189 |
| அத்தனுயர் | 78 |
| அந்தநல் பெரியோர் | 189 |
| அந்தநற் சங்க | 131 |
| அந்தமில் | 100 |
| அரவமொரு | 47 |
| அரியதொடு | 89 |
| அரியநவ | 170 |
| அரியமா லிங்க | 193 |
| அருநிறை | 134 |
| அருந்தவர் | 84 |
| அருவமருட | 20 |
| அருள்விரவு | 57 |
| அலங்கார | 183 |
| அறுபத | 140 |
| அறைதருவா | 61 |
| அற்புத மாமல் | 77 |
| அன்பனையும் | 150 |
| அன்னிய | 188 |
| அன்னியமாய் | 52 |
| அகாசஞ் | 194 |
| ஆகாரம் | 116 |
| ஆக்கிரண | 41 |
| ஆசினியே | 280 |
| ஆதரவாள் | 155 |
| ஆதிகுரு | 4 |
| ஆரி | 62 |
| ஆனநற் | 150 |
| இட்டலிங்கம் | 15 |
| இந்தநல்ல | 203 |
| இந்தவகை | 10 |
| இப்படி சங்கமர் | 85 |
| இப்படி நமஸ்கரிப்ப | 180 |
| இன்றுதான் | 111 |
| உடலுயிர் | 147 |
| உத்தம சங்க | 138 |
| சத்த மத்தல | 201 |
| உத்தம யேசு | 123 |
| உத்தலிங்க | 91 |
| உருவமுறு | 35 |
| உரியசிவ | 58 |

| | |
|---|---|
| உற்றபிர | 39 |
| ஊன்பயிர் | 124 |
| எங்குளம் | 178 |
| எண்ணரிய | 60 |
| எந்தைதிரு | 63 |
| எந்தைபிரான் | 81 |
| ஏகபரன் | 87 |
| ஒருபுலனி | 40 |
| ஓங்கார | 59 |
| ஓசைபரி | 34 |
| ஓதரிய | 18 |
| ஓதுமுயர் | 23 |
| கந்தமலி | 37 |
| கந்தநற் | 186 |
| கருமல | 99 |
| கருமாலம் | 53 |
| கள்ளரால் | 172 |
| காத்தல | 190 |
| காமக் குரோதம் | 182 |
| காரணமா | 80 |
| குகையில் | 171 |
| குண்டலங் | 121 |
| குருடர்நுன் | 96 |
| குருத்துரோ | 105 |
| குருமருவும் | 79 |
| குருலிங்க | 126 |
| குலதிதரேனுங் | 198 |
| கூறுதற்கரிய | 127 |
| கூறுமிரு | 17 |
| கொடிய வினைப் | 92 |
| கோதனத்தில் | 48 |
| கோதானங்கன்னி | 102 |
| கோதிலா வருளே | 128 |
| கோவணந் தரிக்க | 125 |
| சங்கமத்தின் | 49 |
| சங்கமமென் றுரை | 19 |
| சங்கமர் தமக்கு | 168 |
| சங்கமர் வாயி | 129 |
| சங்கமருஞ் | 83 |
| சங்கமாதேகம் | 165 |
| சடையொரு | 119 |
| சட்டகமா | 26 |
| சண்டாளர் | 145 |
| சத்தியுமையாள் | 5 |
| சத்தெலு மிலிங்க | 196 |
| சத்தைனுஞ் சரண | 181 |
| சாதமில் லிங்க | 95 |
| சாதியுங் | 179 |
| சாற்றிடு | 25 |
| சாற்றிடும் | 8 |
| சித்தர்கள் | 153 |
| சிவகுருவுஞ் | 88 |
| சிவம்பர | 14 |
| சிவன்குரு | 104 |
| சீரியகுரவே | 145 |
| செல்வமும் | 185 |
| செவி வர்க்கம் | 45 |
| சோதிலிங்க | 146 |
| ஞானவீர | 202 |
| தருமமுத் | 174 |
| தரையங்கங் | 24 |
| தற்பர | 164 |
| தற்பரனா | 2 |
| தாங்கியவா | 38 |

| | | | |
|---|---|---|---|
| தாங்குலவை | 27 | பயிந்தவன் | 42 |
| தாதிகள் குஷ்ட | 108 | பரதிர | 117 |
| தாரகா லிங்க | 151 | பரபொருள் | 136 |
| தாரணியே | 9 | பரமநற் | 114 |
| தானதன் | 112 | பரவுமறைச் | 90 |
| திதிவாரம் | 110 | பரநாரி | 22 |
| திரமிகு | 137 | பரிகலத் | 132 |
| திரிமலவ | 65 | பற்றுமருச் | 71 |
| திருத்தியவஞ் | 64 | பாசுபதந் | 13 |
| துக்கம்வந்து | 163 | பாவலிங்க | 7 |
| துட்டர்களா | 54 | பிச்சமாங் | 107 |
| துற்சன | 184 | பிச்சை | 197 |
| துமைமாற் | 175 | பிராணலிங் | 156 |
| நூலமுடன் | 44 | பிறைநுத | 94 |
| தெண்டகப் | 97 | பீடலிங்க | 154 |
| தேவனே | 142 | பீலமீலங் | 55 |
| தொழில்குலா | 143 | பெற்றமிகும் | 30 |
| தோத்திரங் | 187 | பேசிலிரு | 21 |
| நண்ணரிய | 64 | பேதமில் சங்க | 130 |
| நலம்பெறு | 98 | பொறையுள | 122 |
| நன்னிலையாம் | 82 | பொற்புறு | 12 |
| நாடு | 199 | பொன்னரி | 152 |
| நித்தியாம் | 16 | போசன | 101 |
| நீங்களுங் | 139 | போதர | 141 |
| நீதிதருங் | 93 | மடங்களிலப் | 120 |
| நூல்பலவு | 51 | மதிப்பரிய | 33 |
| பஞ்சாக் | 86 | மதுவிரவின் | 135 |
| பண்பினாற் | 118 | மருவுபுக | 3 |
| பத்தர | 161 | மருவுமகா | 46 |
| பத்தன | 31 | மலவிய | 192 |
| பத்தனாய் | 106 | மல்லுயிர் | 109 |
| பத்தனுட | 32 | மறையவர்கள் | 160 |

| | | | |
|---|---|---|---|
| மற்பயில் | 103 | யிணையிலார் | 158 |
| மற்போல | 176 | யிந்திரிய | 43 |
| மனத்தாபங் | 133 | வரமிகு | 157 |
| மனவாக்குக் | 144 | வல்வினைப் | 113 |
| மன்னுதிரு | 66 | வாக்கதனாற் | 50 |
| மன்னுமகா | 6 | வாக்கினால் | 195 |
| மன்னுமுயிரு | 29 | வாக்கு | 200 |
| மன்னுயிர் | 73 | வாக்குட | 1 |
| மாங்கிச(ட)ந் | 118 | விடும்வகை | 167 |
| மாபரன் | 149 | விளங்குபிற | 74 |
| முத்திதரு | 68 | வேகமானெறி | 75 |
| முன்தவே | 162 | வேர்முதலா | 36 |
| மும்மலலா | 72 | வைத்தபின் | 173 |

# இணைப்பு - 2

# சொற்பொருளகராதி

## அ

அகங்காரம் - உட்கரணம் நான்கில் ஒன்று 27,

அகம் - அகப்பூசை 10, 58

அகிலம் - உலகம் 92

அகோரம் - சிவனின் ஐம்முகங்க ளில் ஒன்று 2, 8, 9, 10, 11, 12, 13, 45, 46

அங்கம் - உடல் 24, 25, 27, 28, 83, 166, 174, 199, 198

அச்சம் - பயம் 107

அஞ்செழுத்து - பஞ்சாக்கரம் (ந ம சி வா யா) 65

அடி - திருவடி 1, 3

அதோமுகம் - சிவனின் ஆறாவது முகம் 12, 13

அத்தன் - சிவன் 78, 63, 64

அத்திரிகை - ஓர் அப்சர பெண்

அந்தம் - மரணம் 100

அபிடேகம் - திருமஞ்சனம் (வழிபாடு) 91, 100

அமரேசன் - இந்திரன் 31

அமுது - உணவு, இனிய பொருள், நவே தனம் 10, 92, 120, 132

அமூர்த்தி - சிவசாதக்கிய தத்துவம் ஐந்திலொன்று, 27, 14

அம்பலம் - தில்லை அம்பலம் (சிதம்பரத்தில் சபை வெளி) 80

அம்பிகை - பரமேஸ்வரி 84, 86, 87, 126

அம்புயம் - தாமரை 3

அம்புயன் - பிரமன் 53

அயன் - சிவன் 76

அயற்பதி - எப்பொருட்கும் இறைவன் 119

அயிக்கியம் - ஒன்றான் தன்மை 196

அயிக்கியன் - அங்கம் (சடத்தல நிலைகளிலொன்று 21, 28, 79, 94, 191, 193, 203

அரவம் - பாம்பு 47

அருச்சனை - பூசை (வழிபாடு) 8, 9, 112

அருந்தவர் - முனிவர் 84

அருமறை - மேலான வேதம் 90

அருவம் - உருவமின்மை, 20

அருள் - கருணை 52, 87, 128

அல்லமதேவர் - வீரசைவ பஞ்ச குருமார்களில் ஒருவர் (அல்லமா பிரபு தேவர்) 2, 3

அல்லன் - துன்பம் 98

அவதாரம்- உருவாகும் நிலை

அவதானம் - இருப்பிடம் நிலை 56

அவதானபத்தி - சிவபத்தியல் ஒன்று 26

அவதூதர் - பற்றுகளை ஒழித்த சன்னியாசி 2

அனத்தம் - பொய் 103
அவமதி - அவமானம் 107
அவம் - தீமை 88, 89, 104, 105, 200
அவனி - உலகம் 78
அற்பர் - கீழ்மக்கள் 176
அற்பிதம் - காணிக்கை 98
அறுபதம் - கையாந்தகரை 140
அனம் - அன்னம் 117
அனல் - உஷ்ணம் 191
அனு - ஒழுங்கு 83
அனுபாவபத்தி - சிவபத்தியில் ஒன்று 27
அன்னதானம் - அன்னக்கொடை 192

ஆ

ஆகமங்கள் - சிவபெருமான் அருளிய நூல் (பல பாடல்களில்) 148, 170
ஆகமம் - வேத சாத்திரம் 3, 42, 81, 82, 127, 143
ஆகாரம் - உணவு 115
ஆக்கிரணம் - மூக்கு 41
ஆங்காரம் - அந்தக்கரணம் 16
ஆசனம் - இருக்கை, இராசசின்னம் 101
ஆசாரம் - ஆசாரலிங்கம் 6, 8, 16, 17, 79, 198
ஆசாரலிங்கம் - சடத்தல லிங்கங்களிலொன்று 7, 15, 24, 30
ஆசியம் - அவமதிச் சிரிப்பு 156
ஆசினி - ஆகாயம் 28
ஆகுசம் - தீட்டு 96
ஆதிகுரு - முதன்மை பெற்ற குரு 4
ஆதிசக்தி - பஞ்சத்தியில் ஒன்று 27
ஆத்மா - உயிர் 42
ஆகம நூல் - இறைவன் அருளிய நூல் 36
ஆரு - 54
ஆவி - ஆன்மா (உயிர்) 148
ஆனந்த பத்தி - சிவபத்தியில் ஒன்று 28
ஆனனம் - முகம் 26, 28
ஆன்மா - உயிர் 42

இ

இச்சா சத்தி - பஞ்சத்தியினிலொன்று (அது பஞ்சபூதமாக நின்று உயிர்க்கருணேசஞ் செய்வது) 7, 63
இசை - பொருந்து 8
இஞ்சா - கள் (மூலிகைச்சாரம்) 187
இடபத்தோன் - சிவன் 19
இட்டலிங்கம் - மூன்றுவகை சிறப்பு இலிங்கத்தில் அதுவும் ஒன்று 15, 44
இந்திரியம் - உணர்வு (ஐம்பொறி) 43, 60
இந்திரை - இலக்குமி 52
இயாசகன் - இறுப்போன் 159
இயாசி - யாசி 159
இரதம் - சுவை 34, 35, 38, 41, 42
இரலை - கலைமான் 70
இருக்குவேதம் - முதல்வேதம் 84, 86, 87, 93

இருதயம் - உள்ளம் 17

இருமலவர் - பிரளயர் (கன்மம் மாயை மலங்களை உடையவர்) 32

இருவினை - நல்வினை, தீவினை 99

இருள் - அஞ்ஞானம் 18

இரேவணசித்தர் - வீர சைவ ஐந்து குருமார்களில் ஒருவர் 2, 3

இலிங்கம் - சிவஉருவம் 18, 152, 166

இறை - இறைவன் 42, 50

இறைஞன் - வணங்குபவன் 69

இறைவன் - சிவன் 80

இறைவதனம் - இறைவனின் முகம் 10

**ஈ**

ஈசானம் - சிவனின் ஐம்முகங்களில் ஒன்று 2, 8, 9, 10, 11, 12, 13, 45, 46

ஈறு - மரணம் (முடிவு)

ஈனம் - அழிவு

**உ**

உகத்தல் - மகிழ்ச்சியோடு கொள்ளல் 81

உகந்தவன் - இணக்கமானவன் (விருப்பப்பட்டவன்) 98, 119

உகரம் - பிங்கலை 19

உடலம் - உடல் 48

உடல் - உடம்பு 21

உட்டணம் - வெம்மை 47

உத்தமம் - மேன்மை 4

உத்தரம் - வடக்குதிசை 11

உபசாரம் - உபசாரமந்திரமாகச் சொல்ல பெறும் வார்த்தை 100

உபத்தம் - குறி 45

உபநிடதம் - வேதத்தின் உட்பொருள் 3

உபயம் - காணிக்கை 65

உமை - பார்வதி 52, 81, 94

உமையம்மை - பார்வதி 4

உயிர் - உயிர்கள் (ஆன்மா) 9, 20, 21, 23, 29

உருத்திரம் - நவசத்தியிலொன்று 160

உருத்திராக்கம் - கழுத்தனி 187, 189

உருவம் - காணக்கூடிய வடிவம், 33, 42

உலகவிகாரம் - உலக மாயை 21

உலகை - காற்று 9, 27

உலோபம் - கடும் பற்றுள்ளம் 197

உழுவை - புலி 70

உளம் - ஆன்மா 82

உறவு - சுற்றம் 21

உறை - பெருமை 66

உற்பவம் - தோற்றம் 2, 6, 8, 18

**ஊ**

ஊனம் - பழி 102

ஊன் - மாமிசம் 124

**எ**

எச்சில் - உண்ட உணவு 127, 132

எந்தை - என் சுவாமி 81

எரி - நெருப்பு 4, 54

எழில் - அழகு 84, 83

ஏகம் - ஒப்பில்லாதது 5

ஏகாந்தம் - தனித்து யோக செய்கை 81

ஏகு - கழி 86

ஏதும் - குற்றம் 18, 48, 93, 108

ஏரணம் - தருக்கநூல் 80

## ஐ

ஐம்புலன் - (மெய், வாய், கண், மூக்கு, செவி) 9, 23

## ஒ

ஒட்டியாணம் - யோகப்பட்டை 121

ஒண்மை - அழகு (நல்லறிவு) 121

ஒளி -நெருப்பு, ஞானம் 6, 87

## ஓ

ஓங்காரம் - பிரணவம் 55, 69

ஓசை - செவி கேட்கும் ஒலி 39, 42

## க

கச்சு - இடைக்கட்டு 107

கட்டுரை - பொய் 137, 170

கண்டிகை - உருத்திராக்க மாலை (உருத்திராட்சம்) 121

கதி - அடைக்கலம், ஆதரவு, ஐசுவரியம் 189

கந்தம் - மணம் (சந்தனம், வாசனை) 10, 33, 37, 41, 100

கந்தமரம் - மணமிக்கமரம் 36

கந்தை - நல்லாடை 115, 121, 187

கப்பரை - பிச்சைக்கலம் 97

கமண்டலம் - தவத்தோர் பஞ்சமுத்திரையில் ஒன்று 102

கயிலாயன் - சிவன் 78

கயிலை - கயிலாயம் (கயிலாயமலை) 81

கரம் - கை

கரவு - பொய் 114

கருணை - அருள் 99

கருத்து - தியானம் 86

கருமபயன் - நல்வினை தீவினைப் பயன்களாகிய சுகதுக்கங்கள் 22

கருமால் - திருமால் 54

கருமை - கருப்பு நிறம் 11

கர்தரு சதாக்கியம் - சிவசாதாக்கிய தத்துவம் ஐந்தில் ஒன்று 25

கலை - சரித்திரம் 75

கலைமா - சரஸ்வதி 53

கழை - மூங்கில் 61

கனகம் - பொன் 66

கனல் - நெருப்பு 9

கன்டம் - கழுத்து 31

கன்ம சாதாக்கியம் - சிவசாதாக்கிய ஐந்தில் ஒன்று, (ஈசான மூர்த்தந்தை அடையக்கிரியாரித்தியுடன் சேர்ந்த பாவம்) 24

கன்னிகாதானம் - கன்னியை மணமுடித்துக் கொடுத்தல் 102

காமம் - ஆசை 114

காயம் - உடல் 47, 50, 86, 202

காயல் - உடல் 144

காரணம் - சிவதேகமூன்றிலொன்று 44

காரியம் - சரீரம் 80

காலை - பொழுது 58

கிராணம் - மூக்கு 17, 24

கிரியா சத்தி - பஞ்ச சத்தியிலொன்று 7, 24, 63

கிரேதாயுகம் - முதல் யுகம் (17, 21, 000 ஆண்டுகள்) 156

கீரம் - பால் 48

கீர்த்தி - புகழ் 113

குகை - சமாதி அறை 167, 169, 171, 172

குடதிசை - மேற்கு 11

குணங்குறி - அடையாளமும், சுபாவமும் 5

குணம் - இயல் 97

குண்டலம் - ஆகாயம் (தவத்தோர் காதணி) 102, 121

கும்ர்கண்டன - ஒரு பேய் 133

குரவர் - குரு 2, 57

குரு - குருலிங்கம் 6, 8, 15, 18, 84, 89, 124, 148, 181

குருசங்கமம் - பலன் 104

குருத்துரோகம் - ஆசிரியனுக்குச் செய்யுந் துரோகம் (பஞ்ச பாதகத்திலொன்று) 105

குருபூசை - சமாதியடைந்த குருவின் வருஷத் திரு நஷத்திரந்தோறும் சைவ மடங்களில் மகேசுர பூசையுடன் அக்குருவிற்குச் செய்யும் ஆராதனை (குரு வணக்கம்) 90

குருலிங்க சங்கமம் - குருவும் சிவமும் கூடும் திருக்கூட்டம் 17, 18, 21, 78, 79, 86, 87, 126, 132

குருலிங்கம் - சடத்தல லிங்கத்தில் ஒன்று (இட்டலிங்கத்துக்கு இரண்டு வகையில் ஒன்று) 7, 15, 17, 30, 85, 93, 99, 146

குரோதம் - உட்பகை (ஆறில் ஒன்று) 182

குலஆசாரம் - குல ஒழுக்கம் 124, 143

குலம் - சாதி 179

குள - மனைவி 66

குல்லா - தலைக்கோலம் 121

குளிகை - மாத்திரை 180

செங்கை - கங்கை 139, 164, 178

கெந்தம் (கந்தம்) - வாசனை 141

கைம்பெண் - விதவை 103

கொற்றம் - வீரம் 30

கொன் - அச்சம் 159

கொன்றையான் - சிவன் 111

## ச

சகளம் - உருவம் 84

சங்கம பூசை - குருவிற்கு செய்யும் பூசை 48

சங்கமாலிங்கம் - சடத்தல நிலைகளில் ஒன்று 144

சங்கரன் - சிவன் 178

சஞ்சாரம் - சஞ்சரித்தல் 194

சடத்தலம் - வீரசைவ நூல் 203

சடத்தலலிங்கம் - மகாலிங்கம் 5

சடம் - உடல் 79

சட்டகம் - உடல் 26

சண்டாளர் - கொலைஞர் 145

கண்டா(ளி)ள் - மாதர் 108

சதகோடி - 100 கோடி 155

சதாசாரம் - சாதுக்ளாலாசரிக் கப்பட்ட நன்னடை 179

சதாசிவம் - சதாசிவன் சிவபெருமான் 9, 203

சத்தம் - ஓசை 41

சத்தி - பார்வதி 5

சத்தியம் - உண்மை (மெய்) 106, 114, 120, 123

சத்தியோசாதம் - சிவனின் ஐம் முகங்களில் ஒன்று 2, 8, 9, 10, 11, 12, 13, 45

சத்து - ஒழுக்கத்தில் சிறந்தவன் 181

சத்பத்தி - சிவபக்தர்களில் ஒன்று 24

சந்தம் - அழகு 132, 142

சமயம் - மார்க்கம் 148

சமரசபத்தி - சிவபத்தியில் ஒன்று 29

சமற்பனை - காணிக்கை 22, 39, 44

சமன் - சமண்மதம் 78

சயித்தியம் - குளுமை 34

சரணநெறி - வீரசைவ நெறி 23

சரணர் - வீரசைவப்பெரியோர் 79, 94

சரணர்கள் - வீரசைவர்கள் 3

சரணன் - சடத்தல நிலைகளில் ஒன்று 2, 21, 28, 94, 174, 181, 182, 187, 190

சலம் - வைராக்கியம் 5

சலம் - நீர் 9

சற்குரு - ஞானசாரியன் 129

சனனம் - பிறப்பு 49

சன்மார்க்கம் - நன்னெறி 175

### சா

சாடன் - நம்பிக்கைபேறு 67, 68, 69

சாதிபேதம் - சாதிவேறுபாடு 177

சாத்துவி - சத்துவ ரூபமாயுள்ள சிவபெருமான் 114

சாத்துவிகம் - சத்துவ குணம்

சாந்தம் - அமைதி 125, 183

சாந்தி - பஞ்ச கலைகளில் ஒன்று 27, 163

சாந்தியாதீதைகலை பஞ்சகலைகளில் ஒன்று 28

சாயூச்சியம் - ஒரு பதவி (கலத்தல், மோட்சம்) 140

### சி

சிங்நு - நா 25

சிட்டம் - ஒழுக்கம் (பெருமை) 54

சித்சத்தி - சிவசத்தியில் ஒன்று 29

சித்தம் - உட்கரண நான்கில் ஒன்று 16, 24, 69, 84, 106, 122

சித்தர்கள் - அனிமா முதலியவை சிந்திக்க பெற்றவர்கள் 153

சித்தன் - சத்திபெற்றோன் 196

சிந்தை - மனம் 76, 81, 104, 131, 162, 203

சிரம் - தலை 31, 80

சிருட்டி - படைப்பு 8

சிலை - கல்லில் செதுக்கிய உருவம் 95

சிவசாதாக்கியம் - சிவசாதாக்கி

யத்துவத்தில் ஒன்று 28

சிவஞானம் - தெய்வஞானம் 93

சிவத்துரோகம் சிவ புண்ணியத்துக்கு இடையூறு செய்தல் 106, 176

சிவபதம் - சிவபதவி 90

சிவம் - சிவலிங்கம் 6, 30, 99, 114

சிவலோகம் - மோட்சம் (கைலாசம்) 35

சிவன்குரு - குருலிங்க சங்கமகுரு 104

சிவாகமம் - பதிநூல் 61, 116

சிவார்ச்சனை - சிவார்ச்சரும் 122

சிவாலையம் - சிவனுடைய கோயில் 173

சிவானந்தம் - பரமானந்தம் 93

சினன் - நெருப்பு

## சீ

சீதம் - ஒரு நரகம் 76

சீரணி - அழகு முகம் 9

சீலம் - நல்லொழுக்கம் 112

சீவன் - உயிர் 17, 113, 122

## சு

சுக்கிலம் - இந்திரியம் 61

சுணாங்கன் - நாய்

சுத்தன் - முத்திபெறும் நிலையிலுள்ள ஆன்மா பெற்றவன் 22, 103

சுவாதிட்டான் - ஆறு ஆதாரத்தில் ஒன்று 62

சுவை - நாவின் உணர்வு 31, 33

சுற்றம் - உறவு 164

## சூ

சூக்குமம் - சீவதேகம் 44, 54, 69

சூதகம் - தீட்டு

சூத்திரர் - நான்காம் வருணத்திரர் 161, 176

## செ

செகம் - உலகம் 138, 190

செக்கம் - மரணம் 191

செபமாலை - செபமென்னுமாலை 121

செவி - சாது 9, 17

செம்மை - சிவப்பு 11

செய்கடன்கள் - நித்திய கருமம் 162

செறுப்பு - கொலை 95

செனனம் - பிறப்பு 19, 79, 185

சேடம் - பிரசாதம் (குருலிங்க சங்கம குரு உண்ட உணவு) (இறைவனின் உணவு) 24, 25, 55,72

சேர்வை - சேவை 114, 124

சேல் - விழி 131, 149

சைவம் - உட்சமய ஆறினில் ஒன்று 13, 46

## சோ

சோத்திரம் - செவி 28

சோரர் - திருடர் 54

## ஞா

ஞானகாண்டம் - இருக்கு வேதத்தில் ஒரு பகுதி 84, 87, 91, 93

ஞானசத்தி - பஞ்சசத்திகளுள் ஒன்று 25

ஞானம் - ஞானசத்தி (அறிவு) 7, 16, 28, 59, 63, 69, 77, 103, 124, 136, 174, 202

த

தகம் - உட்டணம் 150

தடம் - ஓமகுண்டம் 120

தமலி - அழிவு 155

தமை - ஞானேந்திரியம், கன்மேந்திரியம் 123

தரு - சந்தம் 117

தரை - நிலம் 24

தலம் - நிலை 79

தவசி - தவத்தோன் 177

தவத்தவர் - முனிவர் 60

தவம் - நன்னிலை 88

தழல் - நெருப்பு 19, 165

தளிர் - தழை 36

தற்பரம் - பரம்பொருள் அதற்கு மேலானது 30, 174

தற்பரன் - சிவன் 2

தற்புருடம் - சிவனின் ஐம்முகங்களில் ஒன்று 8, 9, 10, 11, 12, 13, 75

தனம் - செல்வம் 188

தனு - உடல் 66

தன்மம் - அறம் 122

தா

தாதி - வேலைக்காரி 108 (கடவுள்) 144

தாபரம் - உடல் 30, 50, 154

தாபரலிங்கம் - கடவுள் வடிவம் 12

தாபரன் - ஆகாரம் 151

தாரணி - நிலம் 9

தாள் - திருவடி 3

தி

திகழ் - ஒளி 84

திடம் - சத்தியம் 120

தின்மை - சத்தியம் 201

திரம் - முத்தி 136

தியானம் - வேதசிந்தனை 122

திரவியம் - மூலபதம் 117

திரிமலவர் - மும்மலவர் 65

திருநீறு - விபூதி 86

திருமேனி - திவ்வியதேகம் 87

திருவடி - திவ்வியபாதம் 80

திருவெண்ணீறு - நீறு 184, 190

திருவேடம் - சைவக்கோலம் (சிவனடியார்கள்) 21

திரேதாயுகம் - 12,96,000 ஆண்டுகள் 156

திரோதனம் - திரோதனசத்தி 63

திரோதை - திரோதனசத்தி 7, 63

திறதி - தன்மை 37, 39, 40, 60, 74

தீ

தீக்கை - விரதநியமம்

தீதி(திது) - தீமை 128

தீரன் - மனத்திடமுள்ளவன் 202

தீர்த்தம் - புண்ணிய தீர்த்தம், 134, 178

### து

துகள் - குற்றம் 175

துகில் - ஆடை 70

துட்டர் - தீயோன் 54

துவக்கு - மெய் (உடல்) 9, 17, 27, 45

துற்சனர் - தீயோன் 184

### தூ

தூபம் - நறும்புகை 100

தூமம் - புகை நிறம் 35

தூயம் - தூய்மை 184

### தெ

தெசம் - பத்து

தெண்டு - கோல் 119, 121, 187

தெரிசு - தரிசி 88

தெருள் - அறிவு 90

தேகம் - உடல் 165

தேசிகன் - குருவேதமோதுவிப் போன் 21, 55, 149

தேவநற்பூசை - இறைவனுக்குச் செய்யும் பூசை 125

தேற்றம் - தெளிவு 8

### தோ

தோத்திரங்கள் - துதி, வணக்கம் துதி 109, 142, 187

### ந

நகராம் - ஐந்தெழுத்து மந்திரத்தில் ஒன்று 60

நசை - விருப்பம் 22

நண்பு - அன்பு 116

நமஸ்கரித்தல் - வணங்குதல் 100

நயணம் - கண் 17

நயிட்டை - சிவ பத்தியில் ஒன்று 25

நரகம் - பாவ உலகம் 105, 137

நலம் - இன்பம் 98

நறும்புகை - சுகந்த புகை 10

நற்புண்ணை - புண்ணைமரம் 152

நற்பூசை - நல்லபூசை 164, 198

நன்மார்க்கம் - நன்னெறி 175

நன்னிலை - நல்லொழுக்கம் 82, 188

நன்னெறி - நல்வழி 66

### நா

நா - வாய் 9

நாசி - மூக்கு 9

நாதன் - சிவன் 76, 102

நாமம் - பெயர் 18, 39

நாயகன் - சிவபெருமான் 103

நாழி - ஒருபடி 82

நான்மறை - நான்கு வேதம் 135

### நி

நிச்சியம் - உறுதி 107

நிட்களம் - உருவமின்மை 84

நிட்டை - மனம், மொழி, மெய், அசைவின்றிருத்தல் 15, 22, 57

நிந்தித்தல் - இகழ்தல் 104, 137

நிரஞ்சனம் - குற்றமில்லாதது 5

நிரம்பரன் - சிவபிரான் 2

நிர்க்குளம் - இடமின்மை 5

நிவிர்த்தி - நிவிர்த்திகனல் 24

நினைவு - எண்ணம் 1

நின்மலம் - சுத்தன் 16, 32, 90, 91, 118

## நீ

நீதி - அறம் 4

நீர் - ஐம்பெரும் பூதங்களில் ஒன்று 25

## நு

நுதல் - நெற்றி 94

## நெ

நெடியோன் - திருமால் 4

நெறி - ஒழுங்கு 61

## நே

நேத்திரம் - கண் 26

## நை

நைவேத்தியம் - கடவுளுக்குப் படைக்கும் உணவு 49, 100

## ப

பகம் - ஈசுவரத்தன்மை 87

பங்கன் - பாகங்கொண்டவன் 76

பஞ்சலோகம் - இரும்பு, ஈயம், செம்பு, பொன், வெள்ளி, 180

பஞ்சாக்கரம் - பஞ்சாட்கரம் (ந ம சி வா ய) 86, 190

பஞ்சானனன் - சிவபெருமான் 8

படாம் - திரைச்சீலை 72

படிகம் - வெற்றி 66

படிகம் - படிக நிறம் 11

படிவம் - உடல் 61

பண்டிதராத்யா வீரசைவசமயத்தின் ஐந்து குருமார்களின் ஒருவர் 3

பதம் - தெய்வ பதவி 77, 126

பதி - விளக்கு, ஒளி 23

பதி - இறைவன் 64, 181

பத்தன் - அங்கம் (சிவனின் அருட்திரு வேடம்) 21, 30, 95, 98, 99, 100, 103, 106, 109, 120

பத்தி - அன்பு ஒழுக்கம் 78, 120

பரமசிவம் - சிவசாதாக்கியம் 14

பரதிவியம் - பிறர்பொருள் 22

பரநாரி - பிற மாதர் 22

பரமன் - சிவன் 5, 92, 109

பரன் - சிவன் 4, 90, 149

பரஸ்த்ரி - பிறர்க்குரிய மனைவி 106

பராபரை - சிவசக்தி, 55, 56

பரான்னம் - பிறர் கொடுத்த போசனம் 201

பரிகலம் - குரு முதலியோர் உண்ட கலம் 132

பரிசம் - தொடல், உற்றறிவு 27, 33, 38, 41

பரிமளம் - நறுமணம் 24, 40, 186

பரிவு - அன்பு 132, 174

பறை - பராசத்தி 7, 28

பவம் - பாவம் 66, 88, 92

பவளம் - நிறம் 14

பவித்திரம் - தூய்மை 114

பற்று - பாசம் 186

பனத்தி - பார்ப்பனத்தி 106

### பா

பாங்கு - தகைமை 59

பாக்கியம் - புண்ணியம் 1

பாசம் - மாயை 21

பாசுபதம் - சைவ உட்சமயம் ஆறிலொன்று 13, 46

பாணி - கை 45

பாதகம் - பாவம் 108

பாதகர் - பெரும்பாவங்களைச் செய்பவர்

பாதக்குறடு - மிதியடி 121

பாததீர்த்தம் - குருவின் பாதங் களை கழுவிய நீர் 131, 134

பாதம் - கால் 3, 45, 55, 124

பாபிகள் - பாவிகள் 98

பாயுரு - குதும் 45

பார் - தேசம் 104

பாவகன் - அக்னிதேவன் 87

பாவம் - இயக்கம் 29, 109, 134, 156, 177

பாவலிங்கம் - மூவகை சிறப்பு லிங்கத்தில் அதுவும் ஒன்று 15, 16

பாவி - தீயோன்

பானு - கதிரவன் 19

### பி

பிணிகள் - துன்பம் நோய் 133

பிரசாதத்தீர்த்தம் - சங்கமகுரு உண்ட உணவு, வின்மீதமும் அவர் பாதம் கழுவிய நீரும் 54

பிரசாதம் - பிரசாதலிங்கம் 6, 7, 8, 30, 126, 128 (சடத்தல லிங்கங்களில் ஒன்று)

பிரசாதலிங்கம் - பாவலிங்கத்தின் ஒருவகை லிங்கமாகும் 15

பிரசாதி - சடத்தல நிலைகளில் ஒன்று 21, 22, 25, 26, 31, 94, 126, 128

பிரணவம் - ஓம் 51, 60, 61, 64

பிரதிட்டை - சிவகலைகளில் ஒன்று 25

பிரளயம் - அழிவுகாலம் 156

பிராணலிங்கம் - சடத்தல நிலை களில் ஒன்று, மூன்று வகை சிறப்பு லிங்கங்களில் இதுவும் ஒன்று 15, 21, 23, 26, 27, 158

பிராணனம் - சீவன் 89 (உயிர்) 103, 111

பிராயாணர் - நாதனுசாரியர் 93, 175

பிரான் - சிவபிரான் 81

பலவம் - கீழ்சாதி 54

பிறர்மனை - பிறத்தியான் மனைவி 136

பிறை - இளஞ்சந்திரன் 94

பிறையணிவோன் - சிவன் 201

### பீ

பீடம் - ஆசனம் 55, 57, 150

### பு

புத்தி - அந்தக்கரணம் (உட்கரணம்) (அறிவு) 16, 25, 77, 80, 81

புராணம் - சைவம் 156, 170

புருவம் - நெற்றிப்புருவம் 31

புலன் - இந்திரிய உணர்வு 40

புலியூர் - சிதம்பரம் 80

புலையன் - கீழ்மகன் 109

புல்லியர் - கீழ்மக்கள் 109

புறம் - புறப் பூசை 10

## பூ

பூசாகாலம் - ஆராதனை வேளை 58

பூசாபலம் - பூசையின் பலம் 153

பூசை - வழிபாடு 154

பூசை - ஆராதனை 10

பூசை - மறை 199

பூதானம் - மலர்க்கொடை 102

பூதி - மகத்துவம் 83

பூரகம் - பிண்டம்

பூருவம் - ஆதி 124, 156

## ம

மகாசாதாக்கியம் - சாதாக்கிய சிவ தத்துவத்தில் ஒன்று 29

மகாரம் - சிவமந்திரத்தில் ஐந்தெழுத்துகளில் ஒன்று 60

மகாலிங்கம் - சடத்தலிங்கங்களில் தலைமையான லிங்கம் 5, 6, 7, 16, 17, 21, 22, 29, 192

மகேசுரன் - சடத்தல நிலைகளில் ஒன்று 22, 24, 25

மடம் - கோயில் (முனிவர் வாசம்) 120

மணி - உருத்திராக்கம் 62

மதம் - யானை மதம் 1

மதி - நிலவு 19

மந்திரம் - வேதம் 10, 51

மயல் - மயக்கம் 21

மயேசுரன் - சிவப்பிரான் 30, 94, 114, 116, 124, 123

மரணம் - இறப்பு 172, 185

மருந்து - அமுதம் 188

மருளராத்யா - வீரசைவ ஐந்து குருமார்களுள் ஒருவர் 3

மலையரையன் - பர்வதராசன் 93

மலர் - பூ 10

மறு - குற்றம் 94

மறுவிலார் - குற்றமில்லார் 140

மறை - இரகசியம் 90

மறை - வேதம் 61, 156

மறையவர்கள் - பார்ப்பனர்கள் வேதியர்கள் 146, 160, 176

மனதாபம் - மனதுன்பம் 133

மனம் - சிந்தை 16, 27, 86, 144

மனை - வீடு

மன்னவர்கள் - அரசர்கள் 160

## மா

மா - அழகு 191, 192

மாங்கிசம் - மாமிசம் 107, 118

மாசனம் - பிராமணர் 119

மாதர் - பெண்கள் 187

மாதவம் - தவம் 95

மாதவர் - முனிவர் 166

மால் - திருமால் 49

மாவிரதம் - சைவ உட்சமையங் களில் ஆறு 13

## மி

மிச்சரம் - கலப்பு 16, 40

மித்தை - பொய் 123

மின்னார் - பெண்கள் 123

## மு

முத்தர் - முத்திக்குரியோர் 39

முத்தன் - முத்திபெற்றோன் 128

முத்தி - பிறப்பு (நீங்குகை) 32, 78, 87, 88, 90, 99

முத்திரைகள் - அடையாளம் 97, 119, 174

மும்மலங்கள் - ஆணவம், மாயை, கன்மம் 23, 32, 65

முருகு - அழகு, இளமை 143

முளரி - தாமரை 66, 74

## மூ

மூங்கில் - ஆம்பல், மிகிரி 121

மூர்க்கர் - கீழ்மக்கள் 175

மூர்த்தம் - மூர்த்திசாதா 14, 26

## மே

மேரு - மலை 9

மேவு - பற்று 7

மேனி - உடல் 14

## யா

யாமம் - வேளை 58

## யோ

யோகர் - முனிவர்

## ரு

ருபுருசி - இன்பம் 24, 25, 26, 27, 28

## ரூ

ரூபம் - உருவம் 20

## ரோ

ரோகம் - நோய் 133

## வ

வகரம் - சுழுமுனை 19

வசனம் - அரைப்பட்புகை

வஞ்சனை - பொய், மாயம் 144

வணிகர் 176

வதனம் - முகம் 2

வளம் - மாட்சியம் 100

## வா

வாக்கு - மொழி 1, 50, 86, 195, 200

வாமம் - சிவனின் ஐந்து முகங்களில் ஒன்று 8, 9, 10, 11, 12, 13, 45, 46

வாமம் - சைவ சமய உட்சமயங்கள் ஆறில் ஒன்று 13, 46

வாரணம் - கடல்

வாரணம் - கவசம் 56

வானகம் - ஆகாயம் 9

## வெ

வெம்மை - உஷ்ணம் 34, 87

வெற்றம் - கூட்டம் 86

## வே

வேதம் - அறிவு 76, 92

வேதன் - பிரமன்

வேதியன் - பிரம்மன் 160

# இணைப்பு -3

## அட்டவணைகள்

### 1. சடத்தல லிங்கமும் சத்தியும்

| சடத்தல லிங்கம் | சத்தி |
|---|---|
| மகாலிங்கம் | சிற்சத்தி |
| பிரசாதலிங்கம் | பராசத்தி |
| சிவலிங்கம் | இச்சா சத்தி |
| சரலிங்கம் | திரோதான சத்தி |
| குருலிங்கம் | ஞானசத்தி |
| ஆசாரலிங்கம் | கிரியா சத்தி |

### 2. பஞ்சானனின் உற்பவம்

| சிவபெருமானின் முகம் | இலிங்கம் |
|---|---|
| ஈசானம் | பிரசாத லிங்கம் |
| தற்புருடம் | சங்கமலிங்கம் |
| அகோரம் | சிவலிங்கம் |
| வாமம் | குருலிங்கம் |
| சத்தியோசாதம் | ஆசாரலிங்கம் |

## 3. பஞ்சானன் விருத்தி

| ஐம்பூதம் | முகம் |
|---|---|
| நிலம் | சத்தியோராதம் |
| நீர் | வாமம் |
| நெருப்பு | அகோரம் |
| காற்று | தற்புருடம் |
| ஆகாயம் | ஈசானம் |

## 4. பஞ்சானன பூசை

| முகம் | புலன் | பூசைபொருள் |
|---|---|---|
| ஈசானம் | செவி | மந்திரச்சொல் (வேதம்) |
| தற்புருடம் | மெய் | மலர், சந்தனம் |
| அகோரம் | கண் | தீபம் |
| வாமம் | வாய் | அமுது |
| சத்தியோசாதம் | மூக்கு | நறும்புகை |

## 5. பஞ்சானனின் திசையும் நிறமும்

| முகம் | திசை | நிறம் |
|---|---|---|
| ஈசானம் | வடகிழக்கு | படிக நிறம் |
| தற்புருடம் | கிழக்கு | குங்கும நிறம் |
| அகோரம் | தெற்கு | கருமை |
| வாமம் | வடக்கு | சிவப்பு |
| சத்தியோராதம் | மேற்கு | வெண்மை |

## 6. பஞ்சானனத்தின் உற்சவ பேதம்

| முகம் | வடிவம் |
|---|---|
| சத்தியோசாதம் | நின்றகோலம் |
| வாமம் | இருந்தகோலம் |
| அகோரம் | தாபரலிங்க வடிவம் |
| தற்புருடம் | வாகனத்தில் மேல்வரும் வடிவம் |
| ஈசானமுகம் | நடன வடிவம் |
| அதோமுகம் | உறங்கும் வடிவம் |

## 7. பஞ்சானத்தின் சமய பேதங்கள்

| முகம் | வடிவம் |
|---|---|
| சத்தியோராதம் | பாசுபதம் |
| வாமம் | மாவிரதம் |
| தற்புருடம் | சைவம் |
| அகோரம் | காளாமுகம் |
| ஈசானம் | வயிரவம் |
| அதோமுகம் | வாமம் |

## 8. அங்க மிச்சரம் (கலப்பு)

| அந்தக்கரணம் | இலிங்கம் |
|---|---|
| சித்தம் | ஆசாரலிங்கம் |
| புத்தி | குருலிங்கம் |
| ஆங்காரம் | சிவலிங்கம் |
| மனம் | சரலிங்கம் (சங்கமலிங்கம்) |
| ஞானம் | பிரசாத லிங்கம் |
| பாவம் | மகாலிங்கம் |

# 9. சடத்தல இலிங்கமும் குருலிங்க சங்கமும்

| இலிங்கம் | ஐம்புலன்கள் |
|---|---|
| விரசாதலாங்கம் | செவி |
| சரலிங்கம் | மெய் |
| சிவலிங்கம் | கண் |
| குருலிங்கம் | நாக்கு |
| ஆசாரலிங்கம் | மூக்கு |
| மகாலிங்கம் | இருதயம் |

# 10. சடத்தல நிலைகள்

| சடத்தல நிலைகள் அங்கம் | அங்கம் உடல் | கரம் | சாதாக்கியம் | சத்தி | இலிங்கம் | கலை | முகம் | பத்தி |
|---|---|---|---|---|---|---|---|---|
| பத்தன் | நிலம் | சித்தம் | கன்மசாதாக்கியம் | கிரியா | ஆசாரலிங்கம் | நிவர்தி கலை | மூக்கு | சத்பத்தி |
| மகேசுரன் | நீர் | புத்தி | கர்தருசாதாக்கியம் | ஞான சக்தி | குருலிங்கம் | பிரதிட்டை கலை | நாக்கு | நைட்டிக பத்தி |
| பிரசாதி | நெருப்பு | அகங் காரம் | மூர்த்திசாதக்கியம் | இச்சா சக்தி | சிவலிங்கம் | வத்தை கலை | கண் | அவதான பத்தி |
| பிராண லிங்கி | காற்று | மனம் | அமூர்த்திசாதக்கியம் | ஆதி சக்தி | சரலிங்கம் | சாந்தி கலை | மெய் | அனுபாவ பத்தி |
| சரணன் | ஆகாயம் | ஞானம் | சிவசாதக்கியம் | பரா சக்தி | பிரசாதலிங்கம் | சாந்தீயாதிதை கலை | செவி | அனந்த பத்தி |
| அயிக்கியன் | ஆன்மா | பாவம் | மகாசாதாக்கியம் | சித்சக்தி | மகாலிங்கம் | சாந்தீயாதிதை உத்தரகலை | இரு தயம் | சமரச பத்தி |

## 11. அங்கம் - தெய்வம் - இலிங்கம் தரிக்கும் இடம்

| அங்கம் | இடம் | இலிங்கம் தரிக்கும் இடம் |
|---|---|---|
| பத்தன் | அமரேசன் | முந்நூல் |
| மகேசுரன் | பிரமன் | மார்பகம் |
| பிரசாதி | திருமால் | கை |
| பிராணலிங்கி | உருத்திரன் | கண்டம் |
| சரணன் | ஈசன் | சிரம் |
| அயிக்கியன் | சதாசிவம் | புருவ மத்தியம் |

## 12. ஐம்புலன்களும் - இலிங்கமும்

| மகாலிங்கம் | ஓசை | ஊறு | உருவம் | சுவை | நாற்றம் |
|---|---|---|---|---|---|
| ஆசாரலிங்கம் | யாழொலி | செறிதல் | பொன்மை | தித்தித்தல் | வேர் |
| குருலிங்கம் | நரம்பொலி | கழனம் | வெண்மை | குருலிங்கம் | தளிர் |
| சிவலிங்கம் | தோற்கருவி ஓசை | நெகிழ்ச்சி | சிவப்பு | கார்த்தல் | மலர் |
| சங்கமலிங்கம் | துளைக்கருவி ஓசை | வெம்மை | கருமை | புளித்தல் | காய் |
| பிரசாதலிங்கம் | பாடலோசை | சயித்தியம் | தூமம் | கசத்தல் | கனி |

## 13. சக போசனம்

| பொறி | இலிங்கம் | புலன்களின் அடைவு |
|---|---|---|
| நாசி | ஆசாரலிங்கம் | நாற்றம் |
| நாக்கு | குருலிங்கம் | சுவை |
| கண் | சிவலிங்கம் | உருவம் |
| மெய் | சங்கமலிங்கம் | ஊறு |
| செவி | பிரசாதலிங்கம் | ஓசை |
| இருதயம் | மகாலிங்கம் | மனஅமைதி |

## 14. மகாலிங்கத்தின் இடமான இதயத்தில் பொருந்துவன

| ஐம்பொறி | ஐம்பூதம் | முகம் | கன்மேந்திரியங்கள் |
|---|---|---|---|
| செவி | ஆகாயம் | ஈசானம் | வாக்கு |
| மெய் | காற்று | தற்புருடம் | கால் |
| கல் | நெருப்பு | அகோரம் | கை |
| வான் | நீர் | வாமம் | பாயுரு |
| மூக்கு | நிலம் | சத்தியோசாதம் | உபத்தம் |

## 15. அறு சமய குரு

| இலிங்கம் | முகம் | சமயம் |
|---|---|---|
| மகாலிங்கம் | அதோமுகம் | வாமம் |
| பிரசாதலிங்கம் | ஈசானம் | வயிரவம் |
| சங்கமலிங்கம் | தற்புருடம் | சைவம் |
| சிவலிங்கம் | அகோரம் | காளாமுகம் |
| குருலிங்கம் | வாமம் | மாவிரதம் |
| ஆசாரலிங்கம் | சத்தியோசாதம் | பாசுபதம் |

# இணைப்பு -4

## பத்தி நெறியில் ஆறு (6)

1. எங்கும் நிறைந்துள்ள மகாவிஷ்ணுவிடம் ஞானம், ஐசுவரியம், பலம், சத்தி, வீரியம், தேஜஸ் ஆகிய அறுகுணங்கள் நிறைந்திருக்கின்றன.

பகவான் என்னும் சொல்லுக்குச் சற்குண சம்பன்னன் என்று பொருள். ஆறுவிதமான தெய்வ சம்பத்துக்கள் அவரிடம் இருக்கின்றன.

2. மகான்களையும் முனிவர்களையும் பகவான் என்று குறிப்பிடுவதுண்டு. அதற்கு ஞானம், வைராக்கியம், பூரணமான ஐசுவரியம், அட்டமா சித்தி கைகூடி வருவது, தார்மிகமான பெருமை, புகழ் ஆகிய ஆறு பண்புகளும் நிறைந்தவர் என்பது பொருள்.

மற்றபடி அவர்கள் கடவுளின் அவதாரம் அல்லது வடிவம் என்பது பொருள் அல்ல.

3. சிவபெருமானுக்கு ஐந்து முகங்கள் என்பார்கள்.

உலகத்தில் அதர்மம் மிகுதியாகிற பொழுது தர்மத்தை நிலைநாட்ட, ஆறாவதாக ஒரு திருமுகத்தை எடுத்துக் கொள்கிறார். அந்த முகத்திற்கு- 'அதோமுகம்' என்று பெயர்.

சுக்லவர்ணா சடாநானா என்று இலலிதா ஸஹஸ்ரநாமத்தில் சொல்லப்படுகிறது.

ஐந்துமுக சிவமானது, யோகிகளுக்கான அதோமுகம் கொண்டு ஆறுமுகமாகத் திகழ்ந்து நிற்பதுதான் ஆறுமுக சிவம்.

4. சிவமூர்த்திக்கே உரிய அருட் குணங்களும், முருகவேளுக்கு ஆறு திருமுகங்களாக வந்தன என்று கூறுவர்.

முற்றறிவு, வரம்பியல் இன்பமுடைமை, இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்குதல், முடிவில் ஆற்றலுடமை, பேரருளுடைமை, தம்வயமுடமை, இவை ஆறும் அருட்குணங்கள்.

5. முருகக் கடவுள் கார்த்திகைப் பெண்டிர் என்று சொல்கிற சஷ்டிப் பெண்களுக்குப் பாலனானார். இவர்கள் அவருக்குச் சண்மாதாக்கள். அதனால் அவருக்குச் சாண்மாதுரர் என்று ஒரு பெயர்.

நட்சத்திரங்களில் ஆறாக இருப்பது கிருத்திகை; திதியில் ஆறாவது சஷ்டி; ஆறு அக்ஷரம் கொண்ட 'விடஷரி' இவருடைய மந்திரம்.

காமம், குரோதம், மோகம், இலோபம், மதம், மாச்சாரியம் என்று அறு பகைவர்களைக் கொன்று ஞானம் அருளும் அறுபடை வீரர் அவரே.

6. பராசத்தியிலிருந்து கடைசியில் குடிலாசத்தி வரையில் ஆறு சத்திகள் உள்ளன. இந்தச் சத்திகள் ஆறும் முருகப் பெருமானது ஆறு முகங்கள் – இப்படி ஒரு விளக்கம்.

ஆதியோடுமந்தமாகியே நலன்கள் ஆறுமுகமென்று தெரியனே' என்று அருணகிரியார் பாடுவது இதனைத்தான்.

7. 'ஆறுசமய சாத்திரப் பொருளானே' என்ற அருணகிரியார வாக்குக்கும் விளக்கமாக இருப்பவன் ஆறுமுகம்.

8. ஆறுமுகங்கள் உள்ள உருத்திராட்சம் சுப்ரமணிய ஸ்வரூபம்.

9. மனிதனுடைய சரீரத்திற்குள் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூர்கம், அனாஹதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு சக்கரங்கள் தேவியினுடைய வாசஸ்தானமாக மந்திர சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

மூலாதாரத்தில் ப்ருத்வீதத்துவமும், சுவாதிட்டானத்தில் அக்கினி தத்துவமும், மணிபூரகத்தில் சல தத்துவமும், அனாஹதத்தில் வாயு தத்துவமும், விசுத்தியில் ஆகாச தத்துவமும், ஆக்ஞையில் மனஸ்தத்துவமும் விளங்கி வருகின்றன.

இந்த ஆறுவிதமான சக்ர ஸ்ரூபம்தான் ஸ்ரீசக்கரம் என்பதே.

10. ஒரு மனிதனுடைய உடலமைப்பை' ஆதாரமாகக் கொண்டே திருக்கோயில்கள் கட்டப்படுவதால், ஆறு கோவில் மண்டபங்களும் சரீரத்திற்குள் விளங்கி வருகிற ஆறு சக்கரங்களைக் குறிக்கின்றன.

1. மூலாதாரம் – கர்ப்பக்கிருகம், 2. ஸ்வாதிட்டானம் – அர்த்த மண்டபம், 3. மணிபூரகம் – மகாமண்டபம், 4. அநாஹதம் – ஸ்பன மண்டபம், 5. விசுத்தி – அலங்கார மண்டபம், 6. ஆக்ஞை – சபா மண்டபம்.

11. விநாயகர் உச்சிஷ்ட கணபதி என்ற ரூபத்தில் இடக்கையில் வீணையும், வலக்கையில் உருத்திராட்சமும் மற்றும் குவளை மலர், மாதுளம் பழம், நெற்கதிர், பாசம் ஆகியவற்றை ஏந்திய ஆறு கைகளை உடையவராக விளங்குவார்.

12. காசி மாநகருக்கு நிகரான புண்ணியத் தலங்கள் ஆறு. அவை முறையே சுவேதாரண்யம் எனப்படும் திருவெண்காடு, திருவையாறு, திருமயிலாடுதுறை, திருவிடைமருதூர், திருச்சாய்க்காடு, திருவாஞ்சியம் ஆகியன.

13. ஆதித்தியன், அம்பிகை, விஷ்ணு, கணநாதன், மகேசுரன், ஸ்ரீசுப்பிரமணியன் ஆகிய ஆறு விதமான தெற்வ வழிபாடுகளையும் சரியான முறையில் அமைத்து ஆதிசங்கரர் அருள் புரிந்துள்ளார். அந்தக் காரணத்தினால்தான் அவருக்குச் சண்மத ஸ்தாபனாசாரியார் என்ற சிறப்புப் பெயர் அமைந்துள்ளது.

14. வண்டுக்குத் தமிழில் ‘ஆறு கால்’ என்ற பெயர் உண்டு. அதேபோல் யோக நூலில் மனிதனுக்கும் ஆறுகால் என்றே பெயர்.

மலர்களில் ஆறுகால் வண்டுகள், உள்பாகத்தில் நுழைந்து இரசத்தை அபகரிப்பது போல் தேவியினுடைய சரணங்களும் சௌந்தர்யம் என்ற இரசத்தால் நிரப்பப்பட்ட மலர் விசேஷமாகத் திகழ்வதால், அந்தச் சரணங்களில் தானும் ஆறுகால் வண்டுபோல் பிரவேசித்து முத்திக்கு அந்தரங்கச் சாதனமான இரசத்தை அனுபவிக்க ஆதிசங்கரர் சௌந்தர்யலஹரீயில் ஒரு சுலோகத்தில் பிரார்த்திக்கிறார்.

15. ஆறுவகை தோத்திர இலட்சணங்களான நமஸ்கரித்தல், ஆசி கூறுதல், சித்தாந்தத்தை எடுத்துரைத்தல், பராக்கிரமத்தைப் புகழ்தல், பெருமைகளை விளக்குதல், பிரார்த்தனை செய்தல் என்பவை முழுமையான பரிமாணத்துடன் சௌந்தர்யலஹரீயில் இருப்பதால், தோத்திரங்களிலேயே இது தலைசிறந்து விளங்கிறது.

16. சரணாகதி என்பது ஆறு விதம். ‘ஷடவிதா சரணாகதி என்று இதனை வைணவம் குறிப்பிடுகிறது.

1. ஆநுகூல்ய சங்கல்பம், 2. ப்ராதிகூல்யவர்சனம், 3. பகவான் இரட்சிப்பான் என்ற திட நம்பிக்கை, 4. இரட்சிக்க வேண்டும் என்ற பகவானை வேண்டிக் கொள்ளுதல், 5. தன்னைச் சேர்ந்தவற்றைப் பகவானுக்கு அர்ப்பணம் செய்தல், 6. தனக்கு வேறு கதி இல்லை என்று பகவானிடம் முறையிடுதல்.

17. திருமாலுடன் என்றென்றும் இணைந்திருப்பவைதாம் ஆழ்வார்களாகத் திருஅவதாரம் செய்தன என்பது வைணவர்களின் நம்பிக்கை.

இதன்படி கதாயுதம் பூதத்தாழ்வார், வாள் பேயாழ்வார், சுதர்சனச் சக்கரம் திருமழிசை ஆழ்வார், சங்கு பொய்கை ஆழ்வார், திருமாலின்

வாகனமாகிய கருடன் பொய்யாழ்வார், திருமால் பள்ளிகொள்ளும் ஆதிசேடன் ராமாநுசர் என்று திருஅவதாரங்களைச் சொல்லுவர்.

18. சைவத்தின் தத்துவப் பிரிவுகள் ஆறு. இவை பாசுபத சைவம், வீரசைவம், காஷ்மீர் சைவம், சைவ சித்தாந்தம், கோரக்நாத் சைவம், சிவ அத்வைதம்.

19. நம்பியாண்டார் நம்பிகள் பாடியது திருத்தொண்டர் திருவந்தாதி. அதில் அவர் திருஞானசம்பந்தரைப் போற்றி ஆறு பிரபந்தங்களை அருளியிருக்கிறார்.

ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி, ஆளுடையப் பிள்ளையார் திருச்சபைவிருத்தம், ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை, ஆளுடையப் பிள்ளையார் திருவுலாமாலை, ஆளுடையப்பிள்ளையார் திருக்கலம்பகம், ஆளுடையப் பிள்ளையார் திருத்தொகை என்பவை அவை.

20. அறிவுப்பூர்வமாக வேதப்பொருளை விளக்கமுறப்பட்ட முயற்சிகளே தரிசனங்கள் எனப்படும். இவை ஆறு. ஆறு தரிசனங்களும் அவற்றின் கர்த்தாக்களும் வருமாறு

1. நியாயம் - கௌதமர், 2. வைசேஷிகம் - கணாதர், 3. சாங்க்யம் - கபிலர், 4. யோகம் - பதஞ்சலி, 5. பூர்வமீமாம்சை - ஜைமினி, 6. வேதாந்தம் - வியாசர்.

21. வேதாந்தத்தில், உலகப் பொருளுக்கு ஆறுவிதமான மாறுபாடுகள் விளக்கப்படுகின்றன.

இவை ஜாயதி (புதிதாய் உண்டாகுதல்), அஸ்தி (இப்பொழுது இருத்தல்), வர்த்ததே (வளர்தல்), பரிணமதி (மாறுதல்), அபக்ஷீயதே (தேய்தல்), நசீயதி (அழிதல்) எனப்படும்.

22. புறச்சமயங்கள் ஆறு. அவை சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறித்துவம், இஸ்லாமியம்.

அகச்சமயங்கள் ஆறு. அவை சைவம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சாக்கதம், சௌமாரம்.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113.

## வெள்ளிவிழா ஆண்டு வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | Mysticism of love in Saiva Thirumurais | 50.00 |
| 2. | ஆய்வுச் சிக்கல்களும் தீர்வுகளும் | 85.00 |
| 3. | தமிழர் காசு இயல் | 45.00 |
| 4. | திருமுறை இலக்கியம் | 50.00 |
| 5. | அழகியல் சிந்தனைகள் | 30.00 |
| 6. | இலக்கியத்தின் நோக்கமும் பயனும் - தொகுதி 1 | 65.00 |
| 7. | இலக்கியத்தின் நோக்கமும் பயனும் - தொகுதி 2 | 60.00 |
| 8. | சென்னை - 1639க்கு முன் பின் | 35.00 |
| 9. | பெ.நா. அப்புசாமியின் அறிவியல் கட்டுரைகள் | 75.00 |
| 10. | Collected Papers of Thaninayagam Adigal | 100.00 |
| 11. | Silver Jubilee Special Lectures | 60.00 |
| 12. | முத்தாரம்மன் கதை | 85.00 |
| 13. | சந்திரபதன் கதை | 40.00 |
| 14. | கன்னிவாடி நரசிம்ம நாயக்கன் வளமடல் | 20.00 |
| 15. | கருணையம்மன் அந்தாதி | 22.00 |
| 16. | ஒப்பிலக்கியம் - கொள்கைகளும் செயல்முறைகளும் | 15.00 |
| 17. | இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள் | 30.00 |
| 18. | Work Book - Written Tamil | 50.00 |
| 19. | திருக்கோயில்களில் தொழில் - சமுதாய உறவுகள் | 25.00 |
| 20. | விடுதலைக்கு முன் தமிழ் நாவல்களில் பெண்கள் | 30.00 |
| 21. | தமிழ்க் காட்சி நெறியியல் | 46.00 |
| 22. | கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சுவடிகள் அட்டவணை | 85.00 |
| 23. | அமிர்த மதன கூத்து நாடகம் | 90.00 |
| 24. | மூலிகைக் கற்பங்கள் | 80.00 |
| 25. | தொல்காப்பியம் புறத்திணையியல் - பகுதி-1 | 50.00 |
| 26. | தொல்காப்பியம் புறத்திணையியல் - பகுதி-2 | 65.00 |
| 27. | சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் | 80.00 |
| 28. | சித்த மருத்துவ மணிகள் | 75.00 |
| 29. | காத்தவராய நாடகம் | 30.00 |